# அத்தை

லக்ஷ்மி



பூங்கொடி பதிப்பகம்

# நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அத்தை |
| நூலாசிரியர் | : | "லக்ஷ்மி" |
| நூல் வகை | : | நாவல் |
| நூல் உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| மொழி | : | தமிழ் |
| நூல் வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம் மேற்குவீதி<br>மயிலாப்பூர், சென்னை - 4. |
| பதிப்பு ஆண்டு | : | 1-ம் பதிப்பு டிசம்பர் 1976<br>2-ம் பதிப்பு மே 1984<br>3-ம் பதிப்பு நவம்பர் 1986<br>4-ம் பதிப்பு செப்டம்பர் 1993<br>5-ம் பதிப்பு ஏப்ரல் 1995<br>6-ம் பதிப்பு அக்டோபர் 2005<br>7-ம் பதிப்பு டிசம்பர் 2010 |
| நூல் அளவு | : | 1 X 8கிரவுன் |
| பக்கங்கள் | : | 192 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| லேசர் வடிவம் | : | ஸ்ரீ டிசைன்ஸ், மயிலை -4. |
| அச்சிட்டோர் | : | அமர் ஆப்செட், சென்னை-5 |
| விலை | : | ரூ.75.00 |

# அத்தை

## 1. பன்னீர்ப் பூவின் மணம்

திருமதி ஜோஷி தனது கைக்கடியாரத்தை உற்றுப் பார்த்தாள். மறுகணம் ஏர் ஹோஸ்டஸின் இனியகுரல் விமானம் எழுப்பிய ஓசையையும் மீறி ஒலித்தது ''இன்னும் சில நிமிடங்களில் விமானம் மீனம்பாக்கம்.....''

தொடர்ந்து ஒலித்த செய்தியைக் காதில் போட்டுக் கொள்ளாமல் திருமதி ஜோஷி என்னைப் பார்த்துப் புன்முறு வலித்தாள். ஸீட் பெல்டுகளை இடுப்பைச் சுற்றி இறுக்கிக் கொண்டிருந்த எனது கரங்கள் நடுங்கின. கட்டு மீறிய துக்கம் தொண்டையை அடைத்தது.

''நான் ரொம்பச் சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமா?'' என்று இன்பப் பெருமூச்சு விட்டாள் திருமதி. ஜோஷி.

கொலையாளி போன்று குற்ற உணர்விலே என் இதயம் படபடத்தது. இருபத்துநான்கு வருடங்களுக்குப் பின்னர்... அந்த அஞ்ஞாத வாசம்.... இல்லை, ஆயுள் தண்டனைக்குப் பிறகு நான் மறுபடி தமிழகத்து மண்ணை மிதிக்கப் போகிறேன் என்ற நினைவில் இன்பமும் துன்பமும் தாங்காது தவித்துத் தடுமாறிப் போனேன். விழிக்கடையிலே பெருகிய கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு திருமதி ஜோஷியைப் பார்த்து பதிலுக்கு லேசாக சிரிக்க முயன்றேன்.

''ஒரு நிமிஷங்கூடத் தாமதமாகவில்லை. கரெக்ட் டைம்'' என்று திருமதி ஜோஷி அன்று பம்பாயிலிருந்து புறப்பட்டு, காலை பத்து மணி நாற்பத்தைந்து நிமிஷத்திற்குச் சென்னை மண்ணைத் தொட்ட அந்த விமானத்திற்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கி முடிப்பதற்குள் விமானம் ஆர்ப்பாட்டத்துடன் ஓடி ஓய்ந்து நின்றது. கையை வீசிக் கொண்டு குதிகால் உயரச் செருப்பில் குமரிப் பெண்போல வேக நடை போட்டுக்கொண்டு நிலையத்து வாயிலுக்கு விரைந்து கொண்டிருந்தாள் திருமதி ஜோஷி. அவள் பின்னால் அவளது கைப்பைகள் இரண்டையும் சுமந்து கொண்டு வயதை மதிக்காது பெருமூச்சு விட்டபடி நானும் ஓடினேன். தோளில் அழுத்திய பையின் கனத்தை விட மனத்தைப் பெரும் வேதனை அழுத்தியது.

பம்பாய் நகரத்தில் பிரபலமான வைர வியாபாரக் கடைகளில் ஜோஷி பிரதர்ஸ் என்பதும் ஒன்று. அதனுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்த பல வியாபாரிகள் சென்னையிலும் இருந்தனர். கேட்பானேன்? அவர்களில் சிலர் திருமதி ஜோஷி அம்மாளை நேரில் வரவேற்க மனைவி மக்களுடன் விமான நிலையத்தில் காத்திருந்தனர்.

வெள்ளித் தட்டு ஒன்றில் நிறைய மகஜ் வில்லைகளை நிரப்பிக் கையில் தாங்கிக்கொண்டு வந்த குஜராத்திய இளம் பெண் ஒருத்தி அதைத் திருமதி ஜோஷி முன்பு நீட்டினாள். ''உங்கள் வரவு இதைப்போல் மிக்க இனிமையானது'' என்று குஜராத்தி மொழியில் இனிப்பாகக் கூறி வரவேற்றாள். ஆனந்தத்தில் திளைத்த திருமதி ஜோஷி என்னை ஓரக் கண்ணால் பெருமையுடன் பார்த்தாள். மகஜ் வில்லைகளில் ஒன்றை எடுத்து வாயில் திணித்துக் கொண்டு புன்சிரிப்புடன் முன்னே நடந்தாள். பல்லாயிரம் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழகத்திலே ஒரு தமிழ்ப் பெண் நான்...

வாவென்று அழைக்க ஆளின்றி அனாதையாக செயலற்று நின்றேன். எனது தனிமை கோர வடிவிலே எனக்கு விசுவரூப தரிசனம் தந்து கொண்டிருந்தது. கன்னங்களில் வழிந்தோடப் பயமுறுத்திய கண்ணீரை அடக்கிக் கொண்டு திருமதி ஜோஷியின் நிழலாக பின்னால் நடந்தேன்.

மௌபரீஸ் சாலை பஸ் பாதையிலிருந்து இடது பக்கம் திரும்பிய கார் புதிதாக உருவாகியிருந்த வீடுகள் கூட்டம் நிறைந்த ஒரு பகுதிக்குள் விரைந்தது. 'மோகன் காலனி' மிகவும் அமைதியான இடம், வாகனங்களின் இரைச்சலுடன் மனிதர்களின் கூச்சலும் எட்டாத தொலைவில் உள்ள இடம். ''பீஸ்ஃபுல் ப்ளேஸ்....!'' என என் காதருகில் கிசுகிசுத்தாள் திருமதி ஜோஷி.

காதம்பரி எங்களது சென்னை வீட்டிற்குத் திருமதி ஜோஷி கொடுத்த பெயர். வந்தவுடன் அதைப் புனிதப்படுத்த ஒரு பெரிய ஹோமத்திற்கு ஏற்பாடு செய்திருந்தாள். தொடர்ந்து வரவேற்க வந்திருந்த நண்பர்களுக்கு விருந்து கொடுக்கவும் ஏற்பாடாகியிருந்தது. அன்றைய தினம் வந்தவர்கள் பேசிய பேச்சும், சிரிப்பும் குழந்தைகளின் கும்மாளமும் கொட்டமும் என் தலையைப் பிளந்தன. எல்லாம் முடிந்தபின் எனக்கு வீட்டைப் பார்க்க சகிக்க வில்லை. புயலடித்து ஓய்ந்ததைப் போன்று ஒரு பயங்கரத் தோற்றம். என் திகைப்பு மறையுமுன் பம்பாயிலிருந்து வீட்டுக்கு வேண்டிய சாமான்களை சுமந்து வந்த லாரி வாசலில் வந்து நின்றது. வாயைத் திறக்குமுன் கூடவந்த ஆட்கள் சாமான்களை இறக்கி வீடு முழுவதும் பரப்பி விட்டுப் போய் விட்டனர்.

எனக்கு அழ மாட்டாக் குறை. திருமதி ஜோஷி ஒரு பிஸினஸ் பெண்மணி. நகப்பூச்சில் மின்னிய விரல்களால்

அவள் ஒரு சிறு கரண்டியைக் கூட நகர்த்தி வைக்கமாட்டாள். கணவனுக்குப் பின் அவர் நடத்தி வந்த வைர வியாபாரத்தை மிகத் திறமையுடன் நடத்தித் தனது நான்கு பிள்ளைகளையும் அதில் ஈடுபடுத்தி விட்டு ஓய்வு பெற்றுக் கொண்ட போதிலும் தூரத்திலிருந்தே அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த வீரங்கனை அவள். ஐம்பத்து நான்கு வயதையும் ஒப்பனைக்குள் அடக்கி முப்பதே வயது மிடுக்குடன் உலாவிக் கொண்டிருந்த அவளுடன் நான் போட்டிபோட முடியுமா? அவள் எஜமானி. நான் வேலைக்காரி. குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே அவள் ஏவ ஓடி ஓடி வேலை செய்து ஒரு வார காலத்தில் காதம்பரியை ஒரு தினுசாக ஒழுங்குப்படுத்தி விட்டேன்.

அந்த வீட்டை கட்டியவருக்கும் தோட்டக்கலை மீது ஆர்வம் இருந்திருக்க வேண்டும். வீட்டின் முன்னாலும் பக்கவாட்டிலும் பல பூச்செடிகளை வைத்து பயிரிட்டு அழகு செய்திருந்தார். அனுபவிக்கக் கொடுத்து வைக்காத அப்பாவி! ஒரு வருஷ காலத்திற்கு முன்பே வீட்டை வாங்கி விட்டிருந்த என் எஜமானி தோட்டத்தை அப்படியே விட்டு விட்டு உட்புறத்தைத் தனது இஷ்டப்படியெல்லாம் மாற்றி அமைத்து விட்டிருந்தாள். பூஜை செய்ய அவளுக்கு என்றுமே நேரம் இருந்ததில்லை.

ஆனால் வரவேற்பு அறையை நோக்கி அமைந்திருந்த அந்த வீட்டின் பூஜை அறையைப் பார்த்துதான் அப்படியே சொக்கிப் போய் விட்டேன். வைரக் கற்களை விற்று வந்த தனது லாபம் முழுவதையும் சலவைக் கற்களைக் கொண்டு பூஜை அறையின் உட்புறத்தை இழைத்து விட்டிருந்தாற் போல் அத்தனை அழகாக இருந்தது.

அன்று மாலைதான் முதன்முதலாக எனக்கு கொஞ்சம் நின்று பார்க்க நேரம் கிடைத்தது. பூஜை அறையின் சுவரில் எனது யோசனைப்படி ஆட்கள் மாட்டி விட்டுப் போயிருந்த தெய்வத் திருவுருவப் படங்களை ஒருமுறை ஆராய்ந்து விட்டு மீதிருந்த குத்துவிளக்கை எடுத்துத் துடைத்தேன். அந்திப்பொழுது நெருங்குவதை உணர்ந்து அதில் எண்ணெயை வார்த்துத் திரியிட்டு ஏற்றி வைத்தேன். வாயிற்படி அருகில் இடுப்பில் கைவைத்துக் கொண்டு நின்ற திருமதி ஜோஷி என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். அன்று காலை முழுவதும் அவள் தனது ஒப்பனையிலேயே கவனமாகப் பொழுதைக் கழித்து விட்டிருந்தாள். கறுப்பு ஷாம்பு பூசி முழுகிவிட்டிருந்த அவளது கூந்தல் கன்னங்கரே லென்று விளக்கொளியில் பளபளத்து மின்னித் தோள்வரை புரண்டு கொண்டிருந்தது. மைதீட்டிய விழிகள் மின்னின. உதட்டுச் சாயப்பூச்சு ஒளிவிட்டது. பல வருடங்களுக்கு முன்பு எனக்குத் தெரிந்த அதே திருமதி ஜோஷிதான். அன்று அவள் உண்மையிலேயே ஓர் அழகி...இன்று? வயதை மறைக்க ஒப்பனைக்குள் ஒளிந்து கொள்ள அவள் படும் பாட்டை எண்ணி என் உள்ளம் பரிதாபப்பட்டது.

''இந்த பூஜை புனஸ்காரங்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது என்பது உனக்குத் தெரியுமே. வீட்டைக் கட்டியவன் இங்கே ஒரு பூஜை அறையைக் கட்டி இருந்தான். அதை மாற்றி அமைக்க மனம் இல்லை. உனக்கு இதெல்லாம் பிடிக்குமே என்று கொஞ்சம் சீர்திருத்திவிட்டு அப்படியே விட்டுவிட்டேன்.''

''நன்றி''. என்று சொல்லி விட்டு நான் மௌன மானேன். திருமதி ஜோஷி எதைச் செய்தாலும் எனக்காகச் செய்ததாகச் சில சமயங்களில் சொல்லி விடுவதுண்டு. ஓரளவு அவளுக்கு என்மீது பரிவு இருந்தது. ஆனால்

பெரும்பாலும் அவளது செய்கைகளில் பகட்டு அதிகம் இருந்தது. அவள் தன் சினேகிதிகளிடம் பேசும் பொழுது அனேக தடவைகள் நான் கேட்டிருக்கிறேன்.

''நீலு எங்கள் வீட்டு வேலைக்காரி. ஆனால் அவளை நாங்கள் அப்படி நடத்துவதில்லை. அவளை எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக மதிக்கிறோம்.''இந்தப் பரிவினால் அவள் என்னை உயர்த்தி விட்டதாக நினைத்தாள். ஆனால் அவள் அப்படிப் பேசும் பொழுது என் உடல் கூசிக் குறுகி அவமானத்தினால் துடித்தது எனக்குத்தானே தெரியும்?

அன்று காலை வெளியே போயிருந்த திருமதி ஜோஷி பிற்பகல் இரண்டு மணிக்குத்தான் வீடு திரும்பினாள். 'மெட்ராஸ் ஹீட் டெரிபிள்' என்று பெருமூச்சு விட்ட வண்ணம் முன்னறை சோபாவில் காலை நீட்டிக்கொண்டு சாய்ந்து கொண்டாள். ஓடிச் சென்று மின்விசிறியைச் சுழலவிட்டேன். தயாராக வைத்திருந்த சாத்துக்குடி சாற்றை டம்ளரில் நிறைத்து அருகில் கொண்டு வந்து வைத்தேன். குளிர்ந்த பானத்தை உறிஞ்சிக் குடித்துக்கொண்டே அவள் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ''நீ இல்லாவிட்டால் நான் என்ன செய்வேனோ தெரியாது நீலு! என் மூட்களை நீ அறிந்து வைத்திருக்கிறாய். உண்மையைச் சொல்'' நீ இங்கே வந்தது பற்றி ரொம்பச் சந்தோஷப்படுகிறாய் அல்லவா?''

என்னால் பதில் சொல்ல முடியவில்லை. துக்கம் தொண்டையை இறுக்கியது. 'உணர்ச்சிக்கு அடிமையாகாதே தைரியமாக இரு' என்று உள் மனம் உலுக்கிக் கொண்டிருந்தது. ''தாங்க் யூ, நான் சந்தோஷமாக இருக்கிறேன்,'' என்றேன் மெல்லிய குரலில்.

''அத்துடன் போதாது. தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறோம். நாம் இருவருமே தமிழராக வாழ முயற்சிக்க

வேண்டும். என்ன இருந்தாலும் மெட்ராஸ் வாழ்க்கையில் அமைதி அதிகம் இருக்கிறது. ஆனால் ஒரு குறை. நாம் குடியேறி ஒரு வாரத்திற்கு மேலாகி விட்டது. சுற்றுப்புறமுள்ள வீட்டிலிருப்பவர்கள் ஒருவர் கூட ஹல்லோ என்று சொல்லவில்லை. வெரி அன்ஃப்ரெண்ட்லி பீப்பிள். நெருங்கிப் பழக ஏன் இந்தப் பயம்?''

''பயமில்லை. அது அவர்களுடைய பண்பாடு. அனாவசியமாகப் பிறர் விஷயத்தில் தலையிடுவதில்லை. அவ்வளவுதான்.''

''நீ கெட்டிக்காரி...! உங்கள் மனிதர்களை நீ விட்டுக் கொடுக்க மாட்டாய்...'' திருமதி ஜோஷி வாய்விட்டுச் சிரித்தாள் ஆனந்தமாக.

சென்னைக்கு நாங்கள் வந்து குடியேறி ஒரு மாத காலம் சென்று விட்டது. வீட்டின் உட்புறத்தையும் பொது நிர்வாகத்தையும் ஒரு வழியாக ஒழுங்குபடுத்தி விட்டிருந்த எனக்கு இப்போது தோட்டத்தை கவனிக்க அவகாசம் அதிகம் கிடைத்தது. பூச்செடிகளுக்கு எருப்போட்டுத் தண்ணீர் விட்டுக் கருத்துடன் கவனிக்கத் தொடங்கியதும் தோட்டம் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக மாறி விட்டிருந்தது. தோட்டக்காரனுடன் ஒரு முறை வளைய வந்து விட்டுக் களைப்புடன் நான் உள்ளே திரும்பும் சமயம் காரிலிருந்து இறங்கிப் பரபரப்புடன் திருமதி ஜோஷி உள்ளே நுழைந்தாள்.

''நீலு, உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ் கொண்டு வந்திருக்கிறேன்'' அவள் முடிக்குமுன் பின்தொடர்ந்த கார் டிரைவர் தான் அணைத்துக் கொண்டு வந்த நாய்க்குட்டி யைத் தரையில் இறக்கி ஓடவிட்டான். வெள்ளை வெளே ரென்று பந்துபோல் குதித்தோடிய பொமரேனியன் நாய்க்

குட்டி யொன்று ஒரே பாய்ச்சலில் என் காலடியில் வந்து நின்றது. முன்னால் பழக்கப்பட்டதுபோல் வாலை ஆட்டிக் கொண்டு தலையை நிமிர்த்தி என்னை ஆசையுடன் பார்த்தது.

திருமதி ஜோஷிக்கு ஒரே சந்தோஷம். ''பார் எனக்குத் தெரியும், உனக்குப் பிடிக்கும் என்று. நாம் இரண்டு பெண்கள் இங்கே தனியே இத்தனை பெரிய வீட்டில் இருக்கிறோம். துணைக்கு அவசியம் ஒரு நாய் தேவை. எனக்குத் தெரிந்தவர் மூலம் முன்னூறு ரூபாய்க்கு இதை வாங்கிக் கொண்டு வந்தேன். உண்மையைச் சொல். உனக்குப் பிடித்திருக்கிறதல்லவா?''

திருமதி ஜோஷியின் இந்தச் செய்கை எனக்குப் புதிதல்ல. பம்பாயில் மலபார் ஹில்சில் தனது வீட்டிலிருந்த போதும் சரி, தாதரில் தன் மூத்த மகனுடன் வசித்த போதும் சரி, குழந்தைகளைக் கவனிக்கும் பொறுப்பை என் தலையில் கட்டுவதுடன் போதாதென்று அந்தந்த வீடுகளில் இருந்த நாய்கள், பூனைகள் முதலியவற்றைப் பராமரித்துப் பாது காக்கும் பொறுப்பையும் எனக்குக் கொடுத்து விடுவது வழக்கம். என் வேலைகளை எண்ணிக் குமுறிய உள்ளம் ஆயிரம் புரட்சித் திட்டங்களைத் தீட்டும். ஆனால் வெளியே வாயைத் திறந்து எதுவும் சொன்னதேயில்லை. அதற்குத் துணிவு இருக்கவில்லை. நான் கோழையல்ல. வேறு வழி யில்லாத கொடுமைதான். இருக்க நிழலும், உடுக்க உடை யும், உணவும் செலவுக்குப் பணமும், நிமிர்ந்து வாழ வழியும் கொடுத்தாள் திருமதி ஜோஷி. அத்துடன் ஒரு சுமை தாங்கி யாக்கிப் பொறுப்புகளையும் கொடுத்தாள். என்ன செய்வது?

''நீலு! மௌனமாக இருக்கிறாயே, உனக்கு இவனைப் பிடித்திருக்கிறதா?'' மூன்றாம் முறையாகத் திருமதி ஜோஷி கேட்டாள்.

''ஓ!'' என்று தலையை அசைத்துவிட்டுக் காலை முத்தமிட்டுக்கொண்டு நின்ற அந்த நாய்க்குட்டியை வாரி எடுத்து அணைத்துக் கொண்டேன்.

ஸீஸர் என்ற பெயருடன் வீட்டிற்குள் எங்களுடன் வாழவந்த அந்த பொமரேனியன் நாய்க்குட்டி பகல்பொழுது முழுவதும் என் காலைச் சுற்றிக்கொண்டு வீட்டிற்குள் வளைய வந்து கொண்டிருந்தான். இரவுகளில் எஜமானிக்குத் துணையாக மாடியறையில் திருமதி ஜோஷியின் படுக்கை அருகே தரையில் படுத்து உறங்குவான்.

வீட்டையும் தோட்டத்தையும் நாயை கவனிக்கும் வேலைகளைத் தவிர எனக்கு வெளியே செல்ல வேண்டிய நிர்பந்தம் எதுவும் இருக்கவில்லை. தேவையான சாமான் களை போன் மூலம் அழைத்து வீட்டிற்குள் அவ்வப்போது குவித்துக் கொண்டிருந்தாள் திருமதி ஜோஷி. காலையில் உணவருந்திய பின்பு காரை எடுத்துக்கொண்டு புறப் பட்டால், உச்சி பொழுதிற்குத்தான் வீடு திரும்புவாள். மாலை வேளைகளில் மாடியறையிலே படித்துக்கொண்டு இருப்பாள். இப்படிப்பட்ட வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பம்பாயில் இருந்ததுபோல் இல்லாமல் எனக்கு இப்பொழுது ஓய்வு அதிகம் கிடைத்தது. பூஜை யறையைக் கவனிப்பதிலிருந்து டெலிவிஷன் பார்ப்பது வரை வீட்டிற்குள்ளேயே எனது பொழுது நிம்மதியாகக் கழிந்தது. ஆனால் இரவில் என் அறையில் போய்ப் படுத்தவுடன் நித்திரை வருவது குறைந்துவிட்டது. பற்பல எண்ணிச் சஞ்சலத்துடன் புரண்டு கொண்டிருப்பது பெரும் வழக்கமாகி விட்டது.

அன்று இரவு எஜமானி மாடியறைக்குப் படுக்க வழக்கத்திற்கு மீறிச் சற்று முன்னதாகவே சென்றுவிட்டாள்.

வேலைகள் முடிந்ததும் விளக்குகளை அணைத்துவிட்டு வரவேற்பறையை ஒட்டியிருந்த எனது அறைக்குள் சென்று படுக்கை மீது உட்கார்ந்து கொண்டேன். இருபது வருட வாழ்க்கையில் திருமதி ஜோஷி எனது சௌகரியங்களில் எந்தக் குறையும் வைக்கவில்லை. தனக்கு டன்லப் மெத்தை வாங்கிப் போட்டுக் கொண்டால் எனக்குக் கட்டிலும் பஞ்சு மெத்தையுமாவது வாங்கிக் கொடுத்து கவனித்துக் கொள்ளத் தவறுவதில்லை. எழுந்து ஜன்னல்களைத் திறந்து விட்டு மின்விசிறியைச் சுழல விட்டு விட்டு மறுபடி வந்து படுக்கை மீது சாய்ந்து கொண்டேன். குப்பென்று வீசிய காற்று அருகிலிருந்த பன்னீர் மரத்தில் மலர்ந்த பூக்களின் வாசத்தை அள்ளிக்கொண்டு வீசியது. வந்த நாளிலிருந்து அந்தப் பூவின் வாசனை என் நினைவை எங்கேயோ இழுத்துக் கொண்டு போய் என் உணர்ச்சிகளை அலைமோதச் செய்து கொண்டிருந்தது. ஆனால் இன்று என்னவோ.... என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

பல வருடங்களுக்கு முன் இதே மாதிரியான ஒரு வீட்டில் முன் பக்கத்துத் தோட்டத்திலிருந்து பன்னீர் மரத்தில் பூப் பறிக்க ஏறி விழுந்து உடம்பைக் காயப்படுத்திக் கொண்ட ஒரு சிறுமியின் ஞாபகம் பலமாக வந்து நெஞ்சை அழுத்தவே கண்ணீர் தாரையாக வழிய நான் நெஞ்சு குமுற அழத் தொடங்கி விட்டேன்.

'கிர்.... கிர்...' என்று வரவேற்பு அறையிலிருந்த டெலிபோன் மணி இரவின் அந்த வேளையில் ஒலிக்கத் தொடங்கியது. திடுக்கிட்டு எழுந்தேன். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விளக்கைப் போட்டுவிட்டு ஓடினேன். மாடியில் ஸீஸர் உரக்கக் குரைக்கத் தொடங்கி விட்டான்.

''ஹலோ..... நீலுவா? அம்மாவைக் கூப்பிட முடியுமா?'' பம்பாயிலிருந்து திருமதி ஜோஷியின் மூத்த

மகன் பிரான்லால் அழைத்தான். 'நடு இரவில் அழைப்பு வந்தது என்றால் காரணம் இருக்க வேண்டுமே?' என்று கலங்கியது என் உள்ளம். மாடியறைக்கு ஃபோனைத் திருப்பி விட்டேன்.

''ஹலோ....'' என்றாள் திருமதி ஜோஷி தூக்கத்தில் கனத்த குரலில்.

''பம்பாயிலிருந்து உங்கள் மகன் பிரான்லால் பேசுகிறார்,'' என்று கூறிவிட்டு நான் நிறுத்திக் கொண்டேன். சிறிது நேரத்தில் இரவு உடைகளில் தள்ளாடிக் கொண்ட கீழே இறங்கி வந்தாள் அவள். ''நீலு! நான் நாளை பகல் பிளேனுக்குப் பம்பாய் போயாக வேண்டும்.''

''கனடாவிலிருக்கிற பேத்தி ரூபா கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டு விட்டாளாம். அவள் இன்னும் மூன்று மாதங்களில் தாயாகப் போகிறாள். இது சமயம் என் உதவி வேண்டுமாம். அர்ஜெண்டாக நான் பம்பாய் போய், கனடா புறப்பட ஆவன செய்ய வேண்டும்....''

எனக்குத் தலை சுற்றியது. வழக்கமாக நடக்கும் காரியங்களில் இதுவும் ஒன்று. திருமதி ஜோஷிக்கு நான்கு பிள்ளைகள், மூன்று பெண்கள், ஏழுக்கு மேற்பட்ட பேரக்குழந்தைகள் அமெரிக்காவில் ஒரு பேத்தி, ஆப்ரிக்காவில் ஒரு பேரன், ஆஸ்திரியாவில் ஒரு பெண், கனடாவில் ஒரு பேத்தி என்று உலக முழுவதும் அவள் குடும்பம் பரவிக் கிடந்தது. ஏதோ காரணத்தை வைத்துக் கொண்டு அவள் இந்த வயதில் உலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள். அதற்கு மேல் அன்று நான் தூங்கவே யில்லை. திருமதி ஜோஷியின் பம்பாய் பயணத்திற்கு மூட்டை கட்டுவதற்குள் விடிந்து விட்டது. புயல்போல் புறப்பட்டு வந்த வேகத்திலேயே திரும்பி பம்பாய்க்குப்

பறந்து விட்டாள் என் எஜமானி. கானடாவிலிருந்து தான் திரும்பி வரும் வரை வீட்டையும் நாயையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற உத்திரவுடன் அவள் நிம்மதியாக ஊர் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

அவள் இல்லாத வீடு வெறிச்சென்றிருந்தது. இரவு சீக்கிரமே உணவை முடித்துக்கொண்டு ஸீஸருடன் அறைக்குள் வந்து படுத்துக் கொண்டேன். தனியே ஒரு வீட்டிற்குள் வசிப்பது எனக்குப் புதிய அனுபவமல்ல. எத்தனையோ நாட்கள் பம்பாய் மலபார் ஹில்ஸிலிருந்த அந்த பெரிய வீட்டில் நான் தன்னந்தனியே படுத்து உறங்கி யிருக்கிறேன். சூரத்திலிருந்த அவர்களது குடும்ப வீட்டைக் கூட எத்தனையோ நாட்கள் தனியே கட்டிக் காத்தி ருக்கிறேன். ஆனால் நான் பிறந்து வளர்ந்த தமிழகத்திலே ஒரு வீட்டில் தனியே இருக்க அன்று எனக்கு மிகவும் பயமாக இருந்தது. பழைய கசப்பான துன்ப நினைவுகள் திரண்டு ராட்சத வடிவிலே எனது எதிரியாக வந்து நிற்கவே தனிமை எனக்கு பயங்கரமாக இருந்தது.

'படீர்' என்று எங்கேயோ ஒரு ஜன்னல் கதவு காற்றில் அடித்துக் கொண்டதும் நடுநடுங்கி எழுந்து உட்கார்ந்து விட்டேன்.

## 2. "அம்மா! அடிபட்டதா?"

விடியற்காலை வேளையில் தூக்க மயக்கத்தில் வெகு நேரம் உறங்கி விட்டேன். ஜன்னல் வழியே உள்ளே வீசிய சூரியனின் சுடு கிரணங்கள் விழிப்பைக் கொடுக்கவே திடுக்கிட்டெழுந்தேன். பரபரப்பாக ஓடி வாயிற் கதவைத் திறந்தேன். வேலைக்காரப் பெண் பூமா பால் புட்டிகளுடன்

வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் கடுகடுப்பு. ''எத்தனை வாட்டி மணி அடிக்கிறேன். பதிலே இல்லை'' ஏமாற்றமும் கோபமுமாகக் கூறிவிட்டு அவள் விடுக்கென எழுந்து உள்ளே வந்தாள். வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்தவும் மற்ற காரியங்களைக் கவனிக்கவும் நர்மதாதான் (திருமதி ஜோஷி) அவளை ஏற்படுத்தி விட்டுப் போயிருந்தாள்.

சூரத்தருகே போடா கிராமத்தில்தான் ஜோஷி குடும்பத்தினர் ஆரம்பத்தில் வசித்துக் கொண்டிருந்தனர். திருமதி ஜோஷியின் மாமியார் பத்திரபாலா அம்மாள் மிகவும் கடுமையான குணம் படைத்தவள். முதலில் அந்த வீட்டில்தான் வேலைக்காரியாக நான் அமர்த்தப்பட்டேன். அந்த அம்மாளிடம் நான் பட்ட கஷ்டம் கொங்சம் நஞ்சமல்ல. முன்கட்டு பின்கட்டு என்று பெரிதாகக் கட்டப்பட்டிருந்த அந்த வீட்டைப் பெருக்கிக் கழுவிச் சுத்தம் செய்வதிலிருந்து சமையல் செய்வதுவரை சகல வேலைகளையும் என்னிடம் கொடுத்துவிட்டிருந்தாள். நாள் முழுவதும் உழைத்து நான் விரைவில் சோர்ந்து களைத்து விட்டேன். கடினமான உழைப்பை அறியாது மிகவும் செல்லமாக வளர்ந்தவள் நான். மாவிடித்துச் சிவந்து கொப்பளித்துப் புண்ணாகிவிட்ட உள்ளங் கைகளைப் பார்த்து என் விதியை நொந்து கொண்டு நான் கண்ணீர் வடித்து அழுத நாட்கள் எத்தனையோ! ஒரு சமயம் மாமியாருடன் தங்குவதற்குக் கிராமத்திற்கு வந்திருந்த திருமதி ஜோஷி, நான் படும் கஷ்டங்களைப் பார்த்து விட்டாள். சுபாவத்தில் அவள் இளகிய மனம் படைத்தவள். நீடித்து நான் கடும் உழைப்பால் துன்பம் அடைந்து கொண்டிருப்பதைக் காண அவளுக்குப் பொறுக்கவில்லை. 'ஒரு படித்த பெண். எப்படியெல்லாமோ வாழ வேண்டிய இளம் பருவத்துப் பெண், வறுமையின் கொடுமையால்

மாடுபோல் ஏன் உழைத்து சாக வேண்டும்? இளம் வயதில் கணவனை இழந்து விட்டாள் என்று இப்படியா வாட்டி வதைத்து வேலை வாங்குவது?' என்று மிகவும் வெகுண்டாள். பம்பாய்க்கு மீண்டும் தன் கணவனுடன் திரும்பிய பொழுது தன்னுடைய வீட்டில் வேலை செய்ய நீலுதான் வேண்டும் என்று பிடிவாதம் செய்து என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டு வந்தாள். அப்படித்தான் எனக்கு திருமதி ஜோஷியின் குடும்பத்துடன் பிரிக்க முடியாத இந்தத் தொடர்பு ஏற்பட்டது.

குழந்தைகளைப் பராமரிப்பது, கடிதங்களை டைப் அடிப்பது, சமைப்பது, வீட்டை நிர்வகிப்பது போன்ற வேலைகளை என் வசம் ஒப்பித்துவிட்டு அவள் நிம்மதியாக இருந்தாள். ஆரம்பத்தில் வெறும் வேலைக்காரியாக இருந்த நான் நாளாவட்டத்தில் என் நாணயத்தினாலும், உண்மையான உழைப்பாலும் அவளது அந்தரங்க காரியதரிசியாகவும் உயர்ந்துவிட்டிருந்தேன். சம்பளமும் அதற்குத் தக்கப்படி உயர்ந்துவிட்டிருந்தது உணவு, உடை, எல்லாச் செலவுகளும் போக ஒரு கணிசமான தொகையை அவள் மாதாமாதம் என் பெயரில் பாங்கியில் கட்டிக் கொண்டிருந்தாள். எனக்கும் கையில் கொஞ்சம் ஏதோ இருக்கிறது. வயோதிக காலத்தில் எப்படியோ பிழைத்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையில் நன்றியுடன் திருமதி ஜோஷி இட்ட வேலைகளைத் தலை வணங்கி முடிக்க நான் கடமைப்பட்டிருந்தேன்.

வேலைக்காரப் பெண் பூமா வீட்டை அவசரமாகப் பெருக்கிவிட்டுப் பாத்திரங்களைத் துலக்க பின்பக்கமிருந்த வராந்தாவிற்குப் போகத் திரும்பினாள். சேர்ந்தாற்போல் நான்கு வீடுகளுக்கு வேலை செய்து கொண்டிருந்ததனால்

அவளுக்கு நேரம் ஆகி விட்டதே என்று எரிச்சல், இருந்த போதிலும் பேசாமலிருக்க முடியவில்லை.

''ஆமாம்! அம்மாவைக் காணவில்லையே? அவங்க எங்கே?'' என்று ஒரு கேள்வியை எழுப்பினாள்.

''அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள்'' என்றேன் சுருக்கமாக. காலைவேளை ஒருமுறை மட்டும் வந்து வேலை செய்ததினால் பூமாவுக்கு சங்கதி தெரிந்திருக்கவில்லை.

''அப்படின்னா நீங்க தனியாகவா இந்த பெரிய வூட்டிலே இருக்கிறீங்க? அவள் கேள்வியில் பயம் தொனித்தது, பதிலளிக்கு முன் அவள் தொடர்ந்து சொன்னாள். ''காலம் கெட்டுக் கிடக்குது. அந்த மூணாவது வூட்டிலே நாலு மாசத்துக்கு முந்தி திருடன் பூந்துவிட்டான். அடுத்த தெருவிலே நான் வேலை செய்யற வூட்டிலே கொடியிலே போட்டிருந்த துணி ஜாடாவையும் கொத்திக் கிட்டு போயிட்டான்!'' என்று கூறிவிட்டு என்னை ஒருமுறை மேலும் கீழும் பார்த்தாள். பிறகு வேலையைக் கவனிக்க விரைந்துவிட்டாள்.

முதல்நாள் இரவு அதிகம் தூங்காததனால் ஏற்பட்ட அலுப்பு என் உடலை வருத்திக் கொண்டிருந்தது. மூட்டு களில் ஒரே வலி. கண்களில் எரிச்சல். திருமதி ஜோஷி இல்லாத அந்த வீட்டில் நேரம் என் முன்னே நீண்டு கிடந்தது. குளியலறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டேன். நேரம் போவதையே கவனிக்காது ஆனந்தமாக வென்னீரில் ஸ்நானம் செய்துவிட்டு மெல்ல உடுத்திக் கொண்டு வெளியே வந்தேன். வேலைகளை முடித்து விட்டிருந்த பூமா எனக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அவளை அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு பூஜையறையில் வந்து உட்கார்ந்தேன். அதுவரை அலை

பாய்ந்து கொண்டிருந்த என் சிந்தனைகளை ஒருமுகமாக இருத்தி ஒரு நிலையில் வைத்துக் கொஞ்சம் தியானம் செய்ய முயற்சித்தேன். வழக்கமாக நான் எடுதது்ப் படிக்கும் தோத்திரப் புத்தகத்தைக் கையில் எடுத்தவுடன் அதிலிருந்த ஒரு புகைப்படம் கீழே விழுந்தது. கைகளும் உள்ளமும் சேர்ந்து நடுங்க அதைக் கையில் எடுத்தேன். கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த காலத்திய வாழ்க்கை பெரிய நீர் வீழ்ச்சி போல் வேகமாக என் மனக்கண்முன் கோஷமிட்டுக் கொண்டு விரிந்தோடி வந்தது.

திருமணமான புதிதில் என் கணவருடன் நான் எடுத்துக் கொண்ட புகைப்படம் அது. சுருண்ட கிராப்பு தலையும் புன்னகை பூத்த முகமுமாகப் புகைப்படத்தி லிருந்ததுபோல் என் உள்ளத்திலும் நிரந்தரமாக அந்த இளவயதிலேயே அவர் அமர்ந்திருந்தார். அந்தப் போட்டோவைக் கையில் கொண்டு வந்து காட்டிய அன்று அவர் சொன்னவை எல்லாம் நினைவுக்கு வரவே கண்களில் மேலும் பெருகிய கண்ணீரைப் கட்டுப் படுத்தவே முடியவில்லை. துன்பச் சுமையினால் இதயம் வெடித்துவிடும் போல் கனத்தது.

''நீலு இந்தப் படத்தில் எப்படிச் சிரித்துக் கொண்டி ருக்கிறாயோ, அதுபோல் என்றுமே நீ இருக்கும்படி குறைகள் ஏதும் இல்லாமல் உன்னைப் பாதுகாப்பேன். கவலைப்படாதே, சத்தியம்'' என்றார் உணர்ச்சி வசப்பட்ட உற்சாகமான குரலில். என் வாழ்க்கையை நிறைவிக்கச் செய்ய வேண்டும் என்று அவருக்கு இருந்த ஆசை விதிக்கு இருக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, நோய் என்று ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் புகுந்து எங்களது வாழ்க்கையின் புதுமையில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டன. முடிவில்

மரணம் அவரை என்னிடமிருந்து பிரித்தும் விட்டது. இரண்டு ஆண்டுகள் மண வாழ்க்கைக்குப் பின் விதவையாகி, அனாதையாகி, நான் திக்குத் தெரியாது தத்தளித்துக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தேன். அப்பப்பா! அந்த நாட்களை நினைக்கவும் பயங்கரமாக இருந்தது. திருமதி ஜோஷியின் மாமியார் மட்டும் என்னை வேலைக்காரி யாகவாவது ஏற்றுக் கொள்ளாதிருந்து விட்டிருந்தால் இப்போது நான் எங்கிருந்திருப்பேனோ எனக்கே தெரியாது.

போட்டோவின் மீது தெறித்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கண்களையும் துடைத்துக் கொண்டேன். படத்தைப் புத்தகத்திற்குள் மறுபடி வைத்துவிட்டு எனக்கு மிகவும் பிடித்தமான திருவாசகப் பகுதியின் அந்த அடிகளை மெல்லப் படித்தேன்.

''பிணக்கில்லாத பெருந்துறைப் பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்கு....'' தாளமுடியாத துக்கத்தினால் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, சுவரிலே தொங்கிய தெய்வத்தின் திருவுருவப் படங்களைச் சற்று வெறித்துப் பார்த்தேன். என் கணவருக்கு இனிய குரல் இருந்தது. எனக்கும் கொஞ்சம் பாட வரும். கல்லூரி நாடகங்களில் பங்கு கொண்டு அந்த நாட்களில் நான் பாடி நடித்துப் பரிசு பெற்றதைக் குறித்து என் குடும்பத்தார் கொண்ட ஆனந்தம் எவ்வளவு! அதே குடும்பத்தவர்கள் என்னைப் பற்றிப் பின்னர் கொண்ட வெறுப்பு எவ்வளவு! 'கணக்கில்லாததோ இன்பமே வரும் துன்பமே துடைத்த என்பிரான்' என்று தொடர்ந்து எனது கணவனின் குரல் கணீரென்று என் ஞாபகத்தில் ஒலிக்கவே திடுக்கிட்டுப் போனேன். எனது கடந்த வாழ்க்கை துன்பமயமானது தான். ஸாடி லைட் வேகத்தில் வாழ்ந்த திருமதி ஜோஷியின் குடும்பத்துடன் ஒட்டிக்கொண்டு

வெளியூரில் வாழ்ந்து கொண்டிருந்த நான் ஓரளவு பழைய சம்பவங்களை மறந்து விட்டிருந்தேன். சென்னைக்கு வந்ததிலிருந்து, ஏன், நான் பிறந்த மண்ணை மீண்டும் மிதித்ததிலிருந்து கடந்துபோன கசப்பான நினைவுகள் என்னை ஏன் இப்படி ஆட்டிப் படைக்கின்றன? எனக்கென்ன வந்துவிட்டது? புத்தகத்தை மூடி விட்டு அறையினின்று வெளியே வந்தேன். வாயிற் கதவின் மணி கிணுகிணுத்தது.

கதவைத் திறந்தபொழுது தோட்டக்கார முருகேசன் நின்று கொண்டிருந்தான். வாரத்திற்கு இரண்டுமுறை அவன் வரவேண்டும் என்பதும் திருமதி ஜோஷியின் ஏற்பாடு. இன்று அவனது முறை நாள்.

‘ஷெட் சாவியைக் கொடுங்க தோட்ட வேலை சாமான்களை எடுக்கணும்’ என்றான் அவன்.

நானும் கூடவே அவனுடன் வெளியே வந்தேன். காலை மணி ஒன்பதுக்குமேல் ஆகிவிட்டிருந்தது. பளிச்சென்று வெளியே காய்ந்த வெய்யில் என் உடலை சுரீர் எனத் தாக்கியது. கழுத்தின்மீது நழுவிய சேலையை இழுத்துத் தலையை மூடிக்கொண்டு வராந்தாவைத் தாண்டித் தோட்டத்திற்குள் இறங்கினேன். கூடவே உற்சாகமாகக் குறைத்தபடி ஸீஸர் உள்ளிருந்து என் பின்னால் ஓடி வந்தது. வராந்தாவின் ஓரத்தில் பயிரிட்டு வளர்ந்திருந்த ஆரஞ்சு நிற போகன்வில்லா கொடியாகப் படர்ந்து கட்டடத்தின் ஓரத்தைத் தழுவிக் கொண்டு மாடிக் குளியல் அறை ஜன்னல்வரை எட்டிக் கொண்டிருந்தது. முடிவில் இலை தெரியாத நெருப்புப் பிழம்புபோல் பூத்துக் குலுங்கிய அந்தக் கொடி பார்க்க மிகவும் அழகாகவே இருந்தது.

சாமான்களை எடுத்துக் கொண்டு ஷெட் கதவை மூடிய முருகேசன் முணுமுணுத்தான். “போன வருஷம் இங்கே

தண்ணி கஷ்டம் எக்கச்சக்கமாயிடுச்சி. செடியெல்லாம் காஞ்சி கருவாடாகிடுச்சு. ஏதோ மவுராசன் புண்ணியத்திலே இந்த வாட்டி கிணத்திலே தண்ணீ நெறைய ஊறியிருக்கு. செடிகளும் பார்க்க நல்லா இருக்கு'' என்று ஏதோ பேசிக் கொண்டே போனவன் திடீரென்று என் பக்கம் திரும்பி, ''ஆமாம்! கார் எங்கே? அம்மா வெளியே போயிருக் காங்களா?'' என்று கேட்டான்.

அவனது கவனத்திற்கும் திருமதி ஜோஷி தப்பவில்லை.

''ஊருக்குப் போயிருக்காங்க.''

''அப்படீன்னா எப்போ திரும்புவாங்க?''

''மூணுமாசம் பிடிக்கும்''

''அப்படியா'' ஆச்சரியப்பட்ட முருகேசன் முண்டாசை நன்றாகச் சுற்றிகட்டிக்கொண்டு என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''சொல்றேன்னு குத்தமா நினைச்சுக்காதீங்க. நீங்க இத்தனை பெரிய வீட்டிலே தனியா இருக்கிறது நல்ல தில்லீங்க. இப்படித்தான் ஒரு அம்மா தனியா இருந்தாங்க. புள்ளங்க எல்லாம் வேலைக்குப் போயிட்டாங்க. அடுப்புகிட்ட வேலை பாத்துக்கிட்டிருந்த அம்மா அப்படியே மயக்கம் போட்டுக் கீழே விழுந்து டணார்னு தலையிலே அடிப்பட்டுப் போச்சு. நல்லவேளையா வீடு கூட்டிக் கிட்டிருந்த தாயி ஓடியாந்து தூக்கிச்சு. அன்னிக்கு ஒரே கலாட்டா போங்க.''

''கவலைப்படாதே முருகேஷ்! அம்மா போகும்போது துணைக்கு ஆள் ஏற்பாடு பண்ணிட்டு போயிருக்காங்க.''

''அதானே பார்த்தேன்'' என்று முணுமுணுத்த முருகேசன் மேலே வேலையைக் கவனிக்கப் புறப்பட்டு

விட்டான். லொள்லொள் என்று பிரமாதமாகக் குறைத்துக் கொண்டு ஸீஸர் தோட்டத்து முல்லைச்செடி மீது உட்கார்ந்த சிட்டுக்குருவி யொன்றை துரத்தியபடி தோட்டத்திற்குள்ளே இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தது. மனிதர் பேச்சுக்குரல், நாய் குறைக்கும் சப்தம் இரண்டும் பக்கத்து வீட்டு மாடி யறையின் ஜன்னல் திரையைச் சற்று ஒதுங்கச் செய்தது. விலகிய இடைவெளியில் தெரிந்தது ஒரு குமரிப்பெண்ணின் முகம். அப்பக்கம் திரும்பிய நான் என்னையும் மீறி அவளைப் பார்த்துப் புன்முறுவலித்து விட்டேன். 'நீ யார்? உன் பெயர் என்ன? ஊர் என்ன?' என்று கொஞ்சம் பழகிவிட்டாலும் குத்தி விவரம் கேட்பார்கள். பதில் சொல்ல அவசியம் ஏற்பட்டுவிடும். மறந்துவிட்ட பழைய கதைகளை, குழியிட்டுப் புதைத்து விட்ட எனது கடந்த வாழ்க்கையைத் தோண்டியெடுத்துச் சொல்லவேண்டிய தேவை இல்லை என்றெல்லாம் எண்ணி நானே அக்கம் பக்கத்தாரிடம் நட்புரிமை பாராட்டாது இருக்க முயன்று கொண்டிருந்தேன். மனிதன் கூட்டத்துடன் வாழ விரும்பும் விலங்கு. இந்த உண்மை அன்று என்னையும் ஆட்டி விட்டது. பக்கத்து வீட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த அந்தப் பெண்ணிடம் என்னையறியாமல் நட்புரிமை பாராட்டிப் புன்னகைத்து விட்டேன். பதிலுக்கு அவள் விலக்கிய திரையை இழுத்து மூடிக்கொண்டு வேகமாக உள்ளே போய் விட்டாள். படீரென்று கன்னத்தில் யாரோ அறைந்து விட்டதுபோன்ற அவமான உணர்ச்சியால் என் உள்ளம் துடித்தது. நான் வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன். நழுவிய முக்காட்டை இன்னும் சற்று இழுத்துவிட்டுக் கொண்டேன்.

தோட்டக்காரன் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பி விட்டான். உள்ளே ஸீஸருடன் திரும்பிய நான்

கதவைத் தாளிட்டுக் கொண்டேன். நாய்க்குட்டிக்கு ஆகாரம் அளித்துச் சமாதானப்படுத்திவிட்டு நான் என்னைப் பற்றிக் கவனிக்கத் தொடங்கினேன். வியாழக்கிழமை எனது விரத நாள். கொஞ்சம் பாலைக் காய்ச்சி பருகிவிட்டு பகல் உணவைச் சுருக்கமாக முடித்துக் கொண்டு என் அறைக் குள் வந்து உட்கார்ந்துகொண்டேன். ஒருவார காலமாகப் படிக்காது அடுக்கி வைத்திருந்த பத்திரிகைகள் போராக ஒரு மூலையில் குவிந்து கிடந்தன. அவைகளை எடுத்துப் புரட்டத் தொடங்கினேன். அப்பொழுதும் நேரம் மிகவும் மெதுவாக ஊர்ந்தது. மூன்று படுக்கை அறைகள் அத்துடன் ஒட்டிய குளியலறைகள், சாப்பாட்டறை, பூஜை அறை, சமையலறை, ஆபீஸ் அறை என்று பல அறைகள் கொண்ட பெரிய வீடு எனினும் எனக்கு அது ஒரு சிறைச்சாலை போல் அமைதியில்லாதிருந்தது. எழுந்து முன்னும் பின்னும் உலாவினேன். எப்படியோ மாலை ஐந்து மணி வரை பொழுதை ஓட்டிவிட்டேன். சூரியன் அஸ்தமித்தபின் வரப்போகும் இரவு நேரத்தை எண்ணி உள்ளம் சஞ்சலத்தில் தவித்தது. ''சீச்சி! நான் என்ன கைதியா? எங்கேயாவது வெளியில் போகக்கூடாது என்று ஏதாவது சட்டமா? தெரியாத ஊரா? என்று என்னையே கடிந்துகொண்டு பிளாஸ்டிக் கூடையொன்றை தேடி எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். கூடவருவேன் என்று சண்டித்தனம் பண்ணிய் ஸீஸரைக் குளியலறையில் போட்டு அடைத்தேன்.'' தேவையான பணத்தை எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டிக்கொண்டு புடவைத் தலைப்பால் தலையில் முக்காடிட்டுக் கொண்டு தைரியமாக வெளியே கிளம்பி விட்டேன். மௌபரீஸ் பஸ் ஸ்டாப்பில் வந்து நின்ற சற்று நேரத்திற்கெல்லாம் பஸ் வந்துவிட்டது. அதில் ஏறிக்கொண்டு குளத்தருகில் வந்து இறங்கினேன். எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் பார்க்கும் மாடவீதிகளும் குளமும் அப்படியொன்றும்

பெரிதாக அடையாளம் தெரியாது மாறியிருக்கவில்லை. ஆனால் எதிரே நடந்து சென்ற மனிதர்கள்தான் மாறியிருந்தார்கள். எனக்குத் தெரிந்வதர்கள் யாரையுமே நான் காணவில்லை.

காய்கறி கடைகளிலிருந்து வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு திரும்பியபொழுது நன்றாக அஸ்தமித்து விட்டிருந்தது. தெருவிலிருந்த குழல் விளக்குகள் இங்குமங்கும் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன. சாலையிலிருந்த மோகன் காலனிக்குத் திரும்பிய குறுக்குத் தெருவுக்குள் புகுந்து மெல்ல நடந்து கொண்டிருந்தேன். கால் செருப்பு என்னவோ வழவழவென்றிருந்த ஒரு பொருளை மிதித்த ஞாபகம். மறுகணம் கூடை ஒருபுறம் நான் ஒருபுறம் என்று சரிந்து தெருவிலே ஓரத்தில் விழுந்துவிட்டேன்.

"ரொம்ப அடிபட்டு விட்டதா?" கனிவாகக் கேட்டது ஓர் இளைஞனின் குரல். சுற்றிலும் ஒரு சிறு கூட்டமே சேர்ந்துவிடவே எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. சிரமப்பட்டு எழுந்து நின்றேன். "இல்லை, இல்லை!" என்று மறுத்துவிட்டு அழுக்காகிவிட்ட புடவையைத் தட்டிச் சரிப்படுத்திக்கொண்டு முந்தானையை இழுத்துத் தலையை மூடிக்கொண்டேன். கூடையிலிருந்து வெளியே உருண்டோடிய தக்காளிப் பழங்கள், உருளைக் கிழங்குகள் முதலிவயற்றை ஓடிப் பொறுக்கிச் சேர்த்து கூடையில் நிரப்பி, கையில் எடுத்துக் கொண்டான் அந்த வாலிபன். "அம்மா உங்களுக்கு ஆட்சேபணையில்லை யென்றால் வீடுவரை வந்து உங்களைக் கொண்டு விடுகிறேன்" என்றான்.

"நன்றி தம்பி! நானே போய்விடுகிறேன்" என்று மறுத்தும் அவன் விடவில்லை. பிளாஸ்டிக் கூடையை

சைக்கிள் கைப்பிடியில் மாட்டிக்கொண்டு சைக்கிளைத் தள்ளியபடி அவன் கூடவே நடந்து வந்தான்.

விதி மட்டும் என் வாழ்க்கையில் குறுக்கிடாதிருந்தால், மரணம் என் கணவனைப் பறித்துக்கொண்டு போகாதிருந்தால் "அம்மா! அடிபட்டுடுத்தா?" என அனுதாபத்துடன் கேட்டு ஓடோடி வந்து தூக்கிவிட எனக்கும் இவன் வயதில் ஒரு மகன் இருந்திருப்பான் அல்லவா? துக்கம் தொண்டையை இறுக்க, கண்களில் நீர் மல்க மெல்லத் தடுமாறிக் கொண்டு அவன் பின்னே நடந்தேன்.

## 3. நானா! எஜமானியா!

**ம**றுநாட் காலை வேலைக்காரி பூமா வழக்கம்போல் விரைவாகக் கிளம்பி விட்டாள். நான் அப்பொழுதுதான் சமையலறைக்குள் நுழைந்தேன். வாசல் கேட்டை யாரோ திறக்கும் சப்தம் கேட்டது. துள்ளிக்கொண்டு ஸீஸர் குரைத்தபடி கதவருகே ஓடித் தயாராக நின்றுகொண்டது. தொடர்ந்து வாசல் மணி கிணுகிணுக்கவே நான் மெல்ல நொண்டிக் கொண்டு கதவைத் திறக்க நடந்தேன்.

முதல் நாள் விழுந்து எழுந்தபின்னர் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, அவமானம் என்ற இரண்டு உணர்ச்சிகளில் வலி எதுவுமே தெரியவில்லை. இரவு தலைவலி மாத்திரை ஒன்றை விழுங்கிவிட்டு நன்றாகத் தூங்கிவிட்டேன். விடிந்த பின்னர்தான் கீழே விழுந்ததன் விளைவு பூரணமாகத் தெரிந்தது. இடது பக்கத்து இடுப்பும், முதுகும் புண்ணாக நொந்தன. குதிகாலைக் கீழே ஊன்றி வேகமாக நடக்க இயலவில்லை. முழங்கை, முழங்கால் முதலிய இடங்களில் லேசான சிராய்ப்புக் காயங்கள் இருந்தன.

கதவைத் திறந்தேன். வாசலில் ஆபத்திற்கு உதவிய அந்த வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

''உள்ளே வா தம்பி உட்கார்'' என்று உபசரித்து விட்டு, குறைத்து ரகளை செய்த ஸீஸரைத் தூக்கிக் கொண்டு பின் வராந்தாவிலே கட்டிவிட்டு வந்தேன். வரவேற்பறையில் உட்கார்ந்திருந்த அவனைக் காண எனக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது.

''நான் ஆபீஸிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். போகும் வழியில் உங்களைப் பார்த்து விசாரித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். உள்காயம் ஏதும் இல்லையே?'' பரிவுடன் அவன் கேட்டான்.

''கடவுள் புண்ணியத்தில் தப்பி விட்டேன். எங்களுக் கெல்லாம் கீழே விழுந்தெழும் வயசா இது? எலும்பு முறிந்து விட்டிருந்தால் என்பாடு பெரிய திண்டாட்டமாகி விட்டிருக்கும்'' என்று மெல்லச் சிரித்தேன் நான்.

''அப்படி என்ன உங்களுக்கு வயதாகிவிட்டது? என் தாயார் உங்கள் வயதில் இருப்பார்கள்'' அவர்களை நான் மிகவும் வயதானவர்கள் என்று ஒரு பொழுதும் நினைக்க மாட்டேன் என்றான் அவன்.

''அப்படியென்றால் உன் தாய்?'' நான் கேட்டு முடிப்பதற்குள் அவன் சொன்னான்.

''சின்ன வயதிலேயே நான் தாயும் தந்தையும் இழந்தவன். என்னை என் சித்தப்பாதான் எடுத்து வளர்த்தார்'' என்று பெருமூச்செறிந்தான். அவனது குரலில் தொனித்த தனிமை என் இதயத்தின் எதிரொலி போலிருந்தது என் மனவெழுச்சியை அடக்கிக்கொண்டு, ''இரு தம்பி!'' இதோ வருகிறேன்'' என்று உள்ளே சென்றுவிட்டேன். சுமந்து

கொண்டு வந்த மரத்தட்டை மேஜை மீது வைத்துவிட்டு "தம்பி! உன் பெயர்கூட எனக்கு இன்னமும் தெரியாது. வந்து இங்கே உட்கார். இவைகளைச் சாப்பிடு. பிறகு பேசலாம்" என்றேன்.

"இதெல்லாம் எதற்கு அம்மா! உங்களைச் சும்மா பார்த்துவிட்டு விசாரித்து உதவி தேவையா என்று அறிந்து போக வந்தேன்" அரை மனதுடன் மேஜை அருகே வந்தமர்ந்தான்.

பீங்கான் கெட்டிலிலிருந்து தேநீரைக் கோப்பையில் வார்த்து அவன் முன்னே வைத்தேன். சிறு பீங்கான் தட்டில் சில பூரிகளும் பர்த்தாவையும் அடுக்கி அருகே நகர்த்தி, "தம்பி! சாப்பிடு, பெயரை இன்னமும் சொல்லவில்லையே!" என்று உபசரித்தேன்.

"ஏற்கனவே சாப்பிட்டுவிட்டேன். இதெல்லாம் அதிகம். டீ மட்டும் போதும் - என் பெயர் தினகரன். ஆனால் கல்லூரி, ஆபீஸ் நண்பர்கள் வீடு இங்கெல்லாம் தினேஷ் ஆகிவிட்டேன்" என்று சிரித்தான். வரிசை பற்கள் தெரிய அவன் நன்றாகச் சிரித்தபொழுது அவனது முகம் எத்தனை கவர்ச்சிகரமாக இருந்தது! நல்ல சிவந்த நிறம். வாட்ட சாட்டமான தோற்றம். காதுகளிலிருந்து கன்னம் வரை படர்ந்த கிருதாக்கள். உதட்டின் மீது அரும்பி நின்ற அழகான அரும்பு மீசை. கூரிய கண்கள். எடுப்பான மூக்கு. இடது காதைச் சிறிதே மூடி அழகாக வாரி விடப்பட்டு, கழுத்துவரை புரண்ட சுருண்ட முடி. சுத்தமான வெள்ளை ஷர்ட், நீலநிற பாண்ட். பாராதது போல் அவனை எனது கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. தேநீரைச் சுவைத்துப் பருகிவிட்டுக் கோப்பையைக் கீழே வைத்தான் அவன், "நீங்கள் உண்மையில் ஒரு குஜராத்தி பெண்மணியா? நம்பவே

முடியவில்லை. இத்தனை அழகாகத் தமிழ் பேசுகிறீர்களே!'' என்றான் வியப்புடன். நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன். கலவரத்தில் என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. ''சகவாசதோஷம் தம்பி! ஆர்வம் இருந்தால் எந்த மொழியையும் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாமே'' என்றேன். நழுவி விழுந்த எனது முக்காட்டை மெல்ல இழுத்துத் தலையை மூடிக் கொண்டேன்.

கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்துவிட்டு ''நேர மாகிறது'' என்று அவன் எழுந்திருந்தான்.

''இந்த வீடு சில காலமாக விற்பனைக்கு இருந்தது. அழகான வீடு. நல்ல தோட்டம். இதை வாங்கி அனுபவிக்க யாருக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ என்று இந்தப் பக்கம் போகும்போதெல்லாம் நான் எண்ணிக் கொள்வதுண்டு. நீங்கள் இதற்கு எஜமானியானது பற்றி எனக்கு மகிழ்ச்சி,'' என்று பேசியபடி அவன் கதவை நோக்கி நடந்தான்.

''ஐயா தம்பி!'' இது என் வீடல்ல. இதனுடைய எஜமானி பம்பாய்க்குப் போயிருக்கிறார்கள். நான் இந்த வீட்டின் வேலைக்காரி'' துயரம் மேலே பேச முடியாது உருண்டையாகத் தொண்டையை அடைத்தது.

இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு அசந்து போய் அப்படியே நின்றுவிட்டான் அவன். ''நம்ப முடிய வில்லையே உங்க உடை, தோற்றம், பேச்சு இவையெல்லாம் பார்த்தால் நீங்கள் படித்தவர்போல் காண்கிறதே!''

''அந்தக் காலத்து இண்டர்மீடியட் பெயில்!'' என்றேன் பதிலுக்கு நான்.

''அத்தனை படித்துவிட்டும் வீட்டு வேலை பார்க்கும் ஒரு சாதாரண வேலைக்காரியாக நீங்கள் ஏன் உழைக்க

வேண்டும்?''

''நான் ஒரு அனாதை. சின்ன வயதில் கணவனை இழந்துவிட்டேன். உன்னைப்போல் இளவயதாக இருந்த அந்தக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிய பட்டதாரிகளையே ரொம்ப பாதித்துக் கொண்டிருந்தது. இண்டர்பெயிலுக்கு என்ன வேலை கிடைக்கும்? மானத்தோடு பிழைத்தால் போதும் என்று இந்த ஜோஷி குடும்பத்தில் வந்து ஒட்டிக் கொண்டேன். பெக்கர்ஸ் காண்ட் பி சூசர்ஸ்!'' என்றேன். ஒருவராவது என் குறையைக் கேட்கக் கூடாதா என்று உள் மனதிலே குடிகொண்டிருந்த ஏக்கம் என் குரலைக் கரகரக்கச் செய்தது.

தினேஷ் என்னை ஒருகணம் இரக்கத்துடன் பார்த்தான். சட்டென்று வாயிற்பக்கம் திரும்பினான். ''மேலும் தூண்டிக் கேட்கின்றேன் என்று நினைத்தால் மன்னிக்கவும். இத்தனை பெரிய வீட்டில் நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்?''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இப்படிக் கேட்பது இவன் மூன்றாவது ஆள்?

''துணைக்கு ஸீஸர் இருக்கிறான்'' என்று தடுமாறினேன்.

சுருண்ட முடி நெற்றியில் புரள, தலையை அசைத்துக் கொண்டு வாய்விட்டு மீண்டும் ஒருமுறை அவன் சிரித்தான். அந்த முகத்தில்தான் எத்தனை களை! அழகாக வளர்ந்து நிற்கின்ற இந்த அன்பான பிள்ளையைப் பார்க்கக் கொடுத்து வைக்காமல் கண்ணை மூடிவிட்டாயே அம்மா! என்று அவனது தாயை எண்ணி என் உள்ளம் ஒரு கணம் வேதனைப்பட்டது.

''நீங்கள் மிகவும் தைரியசாலியாக இருக்கலாம். ஆரோக்கியமுடையவராகவும் இருக்கலாம். அதனால் தனியாக இருக்கப் பயமேன்?'' என்று விவாதிக்கலாம். முன்பின் தெரியாத இந்தப் பிள்ளை என்னவோ உளறு கிறானே என்று நினைத்தால் மன்னிக்கவும். உங்களைப் பார்த்ததுமே எனக்குச் சொந்தமான ஒருத்தர் போல் தோன்றுவதால் சொல்கிறேன். தனிமை மனிதனின் முதல் எதிரி. மிக்க மனோதிடமுடையவர்களையும் தனிமை தவிடு பொடியாக்கி விடும். ஸாலிடரி கன்ஃபைன்மெண்ட் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? மிக முரடனான கைதி கூடத் தனிச்சிறையில் அடைக்கப்பட்டால் சில தினங்களில் திடம் குறைந்து போய்விடுகிறான். அது கிடக்கட்டும். நீங்கள் இந்த வீட்டில் வேலைக்காரியே ஒழிய, கைதியல்லவே?'' என்று கேட்டுவிட்டு இள நகையுடன். என்னை உற்றுப் பார்த்தான்.

என்னிடம் அவன் காட்டிய பரிவு என் மனத்தைக் கனியச் செய்தது. ''இவ்வளவு பேசுகிறாயே அப்பா! உன் விலாசம் கூட எனக்குத் தெரிவிக்கவில்லையே?'' என்று பேச்சை மாற்றினேன்.

''அடுத்த தெருவின் கடைசியில் உள்ள சௌந்தரி கார்டனில் ஒரு வீட்டு அவுட்ஹவுஸில் குடியிருக்கிறேன். ஹோட்டல் சாப்பாடு என் உடலுக்கும் என் சம்பளத்திற்கும் ஒத்துவருவதில்லை. அதனால் சமைக்கவும் கற்றுக் கொண்டிருக்கிறேன். பிறகு உங்களை வந்து பார்க்கிறேன்.'' என்று பதிலளித்துவிட்டு அவன் கேட்டை நோக்கி நகர்ந்தான்.

அவன் வெளியே சென்று சைக்கிளில் ஏறிக்கொள்ளு முன் குதிகாலில் ஏற்பட்ட நோவையும் பொருட்படுத்தாது

நான் வேகமாக வெளியே வந்தேன். ''தம்பி! சாயங்காலம் வீட்டுக்கு போகும்முன் இங்கே வந்து ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப் போயேன்'' என்று கேட்டேன் குழைவான குரலில். ''வேண்டாம், உங்களுக்கு ஏன் இந்த சிரமம்?'' என்று மறுத்தான் அவன். நான் விடவில்லை.

''தம்பி நான் உனக்கென்று தனியே எதுவும் தயாரிக்கப் போவதில்லை. நான் சாப்பிடப்போகும் கஞ்சியோ கூழோ அதில்தான் உனக்குப் பாதி தருவதாக அழைக்கிறேன். நீ உத்தியோகம் பார்க்கிறவன். என் போன்ற வேலைக்காரியுடன் சாப்பிடத் தயக்கமோ?'' என்று கேட்டேன்.

விருக்கென்று என்னைத் திரும்பிப் பார்த்தான். சாட்டையால் அடிபட்டது போன்ற துன்ப உணர்விலே அவனது கண்கள் மின்னின.

''அந்தஸ்திலே உங்களைவிட நான் கீழானவன் அம்மா. ஏன் இந்த விவாதம்?'' நான் சாயங்காலம் உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு சைக்கிளில் ஏறிக் கொண்டு விரைந்து விட்டான்.

அன்று மாலை அவனது வரவிற்காக எவ்வளவு தடவைகள் வாயிற்பக்கம் எட்டிப் பார்த்திருப்பேன் என்று எனக்கே தெரியாது. எங்கேயாவது வராது போய்விடப் போகிறானே என்று ஒரு கலக்கம். முடிவில் சைக்கிள் மணி ஓசை கேட்டதும் ஓடிச் சென்று கதவைத் திறந்தேன். வழக்கம்போல் குரைத்துக் கொண்டோடி வந்த ஸீஸரைப் பின் வராந்தாவில் கட்டிவிட்டு, ''வா தம்பி வா! உட்கார்'' என்று உள்ளே வந்தவனை முகமும் உள்ளமும் மலர வரவேற்றேன்.

''இந்தாருங்கள் முதலில் என் காணிக்கை'' என்று சிரித்துக்கொண்டு தனது கையிலிருந்த இரண்டு ஆப்பிள்

பழங்களை என் கரங்களில் வைத்தான் தினேஷ். அவனது அன்பு என் உடலைப் புல்லரிக்கச் செய்தது.

"நன்றி தம்பி!" எனக் கூறிவிட்டுப் பூஜையறைக்குள் சென்றேன், புவனேஸ்வரி படத்திற்கு முன் அவைகளை வைத்தேன். "தாயே! யார் பெற்ற பிள்ளையோ, இவன் உருவில் வந்து எனக்கு ஆறுதல் செய்கிறாயே, உன் கிருபையே கிருபை!" என்று உள்ளம் உருக முனகினேன்.

தினேஷை அமரச் செய்து சாப்பாட்டு மேஜை மீது பெரிய வாழை இலையைப் பரப்பினேன். நான் சமைத்த பதார்த்தங்களை அன்புடன் பரிமாறினேன். எனக்குத்தான் அன்று எத்தனை மகிழ்ச்சி.

அனூப், நவீன், மனோஜ், அரவிந்த் என்று திருமதி ஜோஷியின் பேரன்கள் என் மனக்கண்முன் க்யூ வரிசையில் வந்து நின்றார்கள். ஏறக்குறைய அவர்களும் வயதில் தினேஷ் போன்றவர்கள்தான். என் கையில் சாப்பிட்டு, என் மடியில் தூங்கி இன்று மீசையும் தாடியுமாக வளர்ந்து பாட்டியுடன் உலக முழுவதையும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தனுக்குக்கூட நான் மனிதப் பிறவியாகத் தோன்றியதே இல்லை. ஏவிய வேலைகளையெல்லாம் செய்துகொண்டு அவர்கள் இஷ்டப்படியே ஆடிய ஒரு யந்திரம் நான் என அவர்கள் மதித்தனர். ஆஸ்திரேலியா விலிருந்தோ அமெரிக்கா விலிருந்தோ திரும்பி வந்ததும், "ஹாய்! நீலு ஆண்டி!" என்று என்னைப் பார்த்துச் கூச்சலிட்டுவிட்டு, கால் பூட்ஸ், மேல் சட்டை, கொண்டு வந்த அழுக்கு மூட்டை இவைகளை என் பக்கம் வீசிவிட்டு, எடுத்து வைக்க உத்திரவிட்டு விட்டு போவார்களே ஒழிய, "நீலு ஆண்டி! இதை உனக்காகக் கொண்டு வந்தேன்" என்று ஒரு காதறுந்த ஊசியைக்கூட அவர்கள் எடுத்து வந்த

தில்லை. திருமதி ஜோஷி கூட அடிக்கடி வருத்தப்படுவது வழக்கம். 'இந்த யங்கர் ஜெனரேஷன் சுத்தமோசம். எவனுக்காவது பாட்டி மேலே பாசமிருக்கிறதா? பாட்டி பணத்தை வாரிக்கொடுக்கும் ஒரு யந்திரம் என்ற நினைப்பு. தாங்களும் ஏதாவது திரும்பச் செய்ய வேண்டும் என்ற உணர்வே கிடையாது. எனக்கு இவர்கள் என்ன கொண்டு வந்து தரவேண்டும்? ஒரு அன்பான வார்த்தை உண்டா? இளையபாரதம் என்கிறார்களே இவர்களை! நாம் கொடுத்த அதீதமான சலுகைகளினால் உருவாகிக் கொண்டு, ஜெனரேஷன் காப்பாம் காப் என்று இடைவெளியைத் தானே உண்டாக்கிக் கொண்டு கோஷமிட்டுத திரியும் ஒரு கும்பல்....'' என்று நறநறவென்று பல்லைக் கடிப்பாள். அந்த வீட்டில் பேரன் பேத்திகளுக்கும் திருமதி ஜோஷி அம்மாளுக்கும் என்றைக்குமே சண்டை தான். இளைய பாரதத்துடன் முதிய பாரதம் மோதிக் கொள்ளும் போது அங்கே ஒரு பாரதப்போரே உருவாகி விடும். இடையே சுவர்ச்சித்திரமாக நான் வேடிக்கை பார்ப்பது வழக்கம். ''பார்த்தாயா இந்த பிசாசுகளை? இதுகளுடன் இந்த வீட்டில் என்னால் வாழ முடியாது. அதற்காகத்தான் சென்னையிலே வீட்டை வாங்கிப் போட்டிருக்கிறேன். நீலு! என் தலை பிளக்கிறது இவர்களுடன் பேசி!'' என்று அடிக்கடி அவள் அலறுவாள். ''நோ கமாண்ட்ஸ்!'' என்று பத்திரிகை நிருபர் களிடம் தட்டிக் கழிக்கும் பெரிய அரசியல்வாதி போல் நான் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்து விடுவேன்.

''ஆமாம்! இதுதான் நீங்கள் சாப்பிடும் கஞ்சியும் கூழுமா? பருப்பு, மோர்க்குழம்பு, வடை, பாயாசம்! பெரிய விருந்து. அதுவும் தமிழ் நாட்டுச் சாப்பாடு வகைகள்! உங்களுக்குத் தமிழ் பேச மட்டுமே தெரியும் என்று நினைத்தேன். எங்களைப்போல் சமைக்கவும் தெரிந்தி

ருக்கிறதே!'' என்ற தினேஷின் ஆச்சரிய மிகுந்த குரல் எனது சிந்தனையைக் கலைத்தது.

''மைசூர் ரசம்கூட வைத்திருக்கிறேன். நிதானமாகச் சாப்பிடு. அவசரமில்லை.'' என்றேன் மகிழ்ச்சியுடன்.

''நீங்கள் வீணாகச் சிரமப்படுத்திக் கொண்டிருக் கிறீர்கள்'' என்று அன்புடன் கடிந்து கொண்டான் அவன்.

உணவிற்குப் பிறகு இருவரும் உட்கார்ந்து டெலி விஷனைப் பார்த்தோம். மணி ஒன்பதரைக்குமேல் ஆகி விட்டது. அவன் வீட்டிற்குப் போவதற்குத் தயாராக எழுந்திருந்தான். வரவேற்பு அறையில் சுவரையொட்டிப் போடப்பட்டிருந்த பெரிய ரேடியோகிராம் அருகில் வந்து சற்றுத் தயங்கி நின்றான். காலை வேளையில் எழுந்ததும் போட்டுக் கேட்டு மகிழும் அபிராமி அந்தாதி ரிக்கார்டை மேலே வைத்திருந்தேன். அதை எடுத்து என் முன் நீட்டினான். ரேடியோ கிராமைப் போட்டு அதைத் தட்டின் மீது சுழலவிட்டேன். பக்திப் பரவசக் குரலில் சீர்காழி உருக்கமாகப் பாடத் தொடங்கினார். தினேஷ் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பாராததுபோல் பார்த்த எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கீழே அலமாரிக்குள் திருமதி ஜோஷி சேர்த்து வைத்திருந்த ரிக்கார்டு குவியல்களிலிருந்து இரண்டைப் பொறுக்கி எடுத்தேன். அதில் எனக்குப் பிடித்தமான ரிக்கார்டை எடுத்து முதலில் பாடவிட்டேன்.

'லோன்லி டேபிள் ஜஸ்ட் ஃபர் ஒன்' என்று துன்பம் நிறைந்த குரலில் உருகிப் பாடினான் என்கின்பர்ட். அது முடிந்தவுடன் ''குட் அண்ட் பாட் அண்ட் அக்லி'' என்ற பிரபல ஆர்கெஸ்டிராவை இசைக்க வைத்தேன்.

நிதானமாகக் கேட்டுக்கொண்டு நின்ற தினேஷின்

முகத்திலே வியப்பும் ஆனந்தமும் தாண்டவமாடின. இசை முடிந்ததும் அவன் இன்பப் பெருமூச்சுவிட்டான். பரவா யில்லையே நீங்கள்கூட இந்தப் பாட்டுகளை ரசிக்கிறீர்களே! நம்ப முடியவில்லையே!'' என்றான்.

''நீ 'மாட்' உலகத்தைச் சேர்ந்தவனாயிற்றே. நீ அபிராமி அந்தாதியை ரசிப்பதை நான் நம்ப முடியுமா!'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தேன்.

''யூ ஆர் எ வெரி இண்டலிஜெண்ட் வுமன்'' என்று பாராட்டினான் அவன். எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. பாராட்டுதல்கள் கேட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டனவே! பதிலளிக்க முடியாது அசடு வழிந்தேன் நான்.

''குட்நைட் - பத்திரமாகக் கதவைத் தாளிட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு அவன் புறப்பட்டான். இருளில் அவனது சைக்கிள் மறைந்தும் வெகுநேரம் நான் அப்படியே செயலற்று நின்றேன். திடீரென்று ஒரு முடிவு எனக்குள் ஏற்பட்டது. கதவைத் தாளிட்டுவிட்டு வராந்தா விலிருந்து ஸீஸரை அவிழ்த்து உள்ளே விட்டேன். வேகமாக ஓடிவந்து டெலிபோனைக் கையில் எடுத்து பம்பாயிலிருந்த திருமதி ஜோஷியுடன் பேச எண்களை அவசரமாகச் சுழற்றினேன். நான் விடுக்கப்போகும் வேண்டுகோளுக்கு என்ன பதில் கிடைக்குமோ என்ற கலவரத்தில் என் நெஞ்சு படபடத்தது.

## 4. ஸீஸர்! ஸீஸர்!

அடுத்த மூன்று தினங்கள் மழை விடாது கொட்டிக் கொண்டிருந்தது. தினேஷ் வரவில்லை. நான்காவது நாள் காலை பளிச்சென்று சூரியன்காய்ந்து கொண்டிருந்தான். முழங்கால் வரை தெருவில் தேங்கி நின்று கொண்டிருந்த நீர்

மாயமாக மறைந்துபோய், தெரு துடைத்து விட்டது போல் சுத்தமாகக் காணப்பட்டது.

ஆபீசுக்குப் போகுமுன் தினேஷ் வரக்கூடும் என்று வாசல் வராந்தாவில் வெகுநேரம் ஆவலுடன் நின்று கொண்டிருந்தேன். அவன் வரவில்லை. எனக்கு ஒரே ஏமாற்றம். மழையைச் சாக்குக் காட்டிவிட்டு வேலைக்காரி யும், தோட்டக்காரனும் மட்டம் போட்டு விட்டார்கள். நான் தனியே விடப்பட்டுவிட்டேன். அந்த நாட்கள் யுகமாக நீண்டு மெல்ல நகர்ந்தன. ஸீஸரும், பொழுதைக் கழிக்க பத்திரிகைகள், ரேடியோ, டெலிவிஷன் இவையும் இல்லாதிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும். இதைத் தவிர, பகல்பொழுதைக் கழிக்க நான் எத்தனையோ முயற்சிகளைக் கையாண்டேன்.

திருமதி ஜோஷிமீதும் தினேஷ் மீதும் கோபம் வந்தது. புது வீட்டில் வந்து குடியேறியவுடன் திருமதி ஜோஷி இப்படிப் பம்பாய்க்குப் பறந்திருக்க வேண்டாம். கனடா போக ஏற்பாடுகள் செய்தபின் போயிருக்கலாம். காலில் சக்கரம் கட்டிக்கொண்டு எங்கேயாவது சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்ற பிறவி அவள். இந்தப் பையன் தினேஷ் ஒருமுறையாவது வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போயி ருக்கலாம். ஒரு சமயம் அவனுக்கு உடம்புக்கு? ....எனக்குக் கவலை தாங்க முடியவில்லை.

அன்று மாலைப் பொழுது மறையும் வரை வாசல் வராந்தாவில் நின்று கொண்டு அடிக்கொரு தடவை எட்டிப் பார்த்து என் கழுத்து வலிக்கவே தொடங்கி விட்டது. தினேஷைக் காணவில்லை. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தேன். தோட்டத்திற்குள் உற்சாகமாகக் குரைத்துக் கொண்டு ஓடி விளையாடிக் கொண்டிருந்த ஸீஸரைப்

பிடித்துக் குளியலறைக்குள் போட்டு மூடினேன். விளக்கை ஏற்றி விட்டு வீட்டைப் பத்திரமாகப் பூட்டிக் கொண்டு தைரியமாக இருளில் வெளியே கிளம்பிவிட்டேன்.

திருமதி ஜோஷி சுபாவத்தில் இளகிய மனம் உடையவள்தான். ஆனால் நிமிஷத்திற்கு நிமிஷம் அவள் குணம் மாறுதலையடையும். மகிழ்ச்சியான மன நிலையிலிருந்தால் 'உலகத்தையே எடுத்துக்கொள்' என்று தத்தம் செய்து விடுவாள். மூட் கொஞ்சம் கோளாறாகி விட்டிருந்தால் செல்லாத நயா பைசாவையும் கணக்கிட்டுப பார்ப்பாள். அன்று என் ஜாதகப்படி நல்ல நாளாக இருந்திருக்க வேண்டும். தூக்கத்திலிருந்து எழுந்து வந்து டெலிபோனில் பேசிய திருமதி ஜோஷி என் குரலைக் கேட்டதும் மகிழ்ச்சி யடைந்து போனாள்.

''நீலு, உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' ஆதங்கத்துடன் விசாரித்தாள். விரைவாக எனது சிரமங்களை எடுத்துச் சொல்லி அவளிடம் உத்தரவு வாங்கி விட்டேன்.

போனைக் கீழே வைக்குமுன் திருமதி ஜோஷி தயக்கமான குரலில் கேட்டாள். ''அந்தப் பையனை உனக்கு முன் பின் தெரியாது என்கிறாய். பேச்சில் மயங்கி விடாதே. கான்பிடன்ஸ் டிரிக்ஸ்டராக இருக்கப் போகிறான்'' என்றாள். எப்பொழுதுமே அவள் சந்தேகப் பிரகிருதி, வியாபாரி எச்சரிக்கையுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தமுடையவள்.

''வாசல் பக்கம் உள்ள ஆபீஸ் அறையை மட்டும் உபயோகிக்கக் கொடுக்கப் போகிறேன். சாப்பாட்டுச் செலவு என்னுடையது'' என்றேன்.

திருமதி ஜோஷி சிணுங்கினாள். ''ஸில்லி கேர்ள், நான் சாப்பாட்டுச் செலவையோ மற்றதையோ சொல்லவில்லை. வீடும் நிர்வாகமும் உன் பொறுப்பு. அதனால் ஏற்படும்

செலவுகள் என் பொறுப்பு. நான் கவலைப்படுவது உன்னுடைய ஸேஃப்டியைப் பற்றித் தான். புரிந்ததா?'' அதட்டினாள் செல்லமாக.

''என்னைக் காத்துக் கொள்ளவும், உங்கள் பொருள் களைப் பாதுகாக்கவும் எனக்குத் தெரியும். உங்களுக்கு என்மேல் நம்பிக்கை உண்டு. அதனால் கவலைப்படாதீர்கள். நான் வீணான தொந்தரவுகளில் தலையிட்டுக் கொள்ள மாட்டேன்.''

திருமதி ஜோஷி பதிலுக்குச் சிரித்தாள். ''ஓ. கே. 'குட்லக்' ஏதாவது அவசரமென்றால் போனில் கூப்பிடு. ஒருசமயம் அடுத்த வாரம் கானடாவுக்குப் புறப்பட்டு விடுவேன். குட் நைட்.'

எஜமானி எனது ஏற்பாட்டிற்கு உத்தரவு கொடுத்து விட்டாள். இனி தினேஷ் ஒப்புக்கொள்ள வேண்டியது தான் என்று உள்ளத்திலே கணக்கிட்டு உற்சாகத்தில் மகிழ்ந்து கொண்டிருந்தேன். என் உற்சாகத்தில் மழை குறுக்கிட்டது.

தினேஷ் முதல்நாள் என்னிடம் பேசிக் கொண்டிருக் கையில் லேசாகச் சொல்லியிருந்த அடையாளங்களை வைத்து அடுத்த தெருவிலிருந்த அவனது வீட்டைத் தேடிக் கொண்டு புறப்பட்டேன். இருட்டும், சுற்றுப் புறத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாத குழப்பமும் என்னைத் தடுமாறச் செய்தன. அடுத்த தெருவில் நுழைந்து முன்னும் பின்னுமாக வீடுகளை உற்றுப் பார்த்துக் கொண்டு இரு முறை அலைந்தேன். முடிவில் தெருவில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களின் உதவியை நாடினேன். ''தினேஷ் என்கிற பையனை உங்களுக்குத் தெரியுமா?''

இருவரும் ஏககாலத்தில், ''ஓ! தெரியுமே'' என்றார்கள்

உற்சாகமாக. ''அதோ அந்தப் பெரிய வீடு தெரியுது பாருங்க - அதுக்குள்ளே தோட்டத்திலே ஒரு அவுட் ஹவுஸ் இருக்கு - அதில் தான் தினேஷ் மாமா குடியிருக்கிறார்.''

அவர்கள் கொடுத்த அடையாளத்தைப் பிடித்துக் கொண்டு அந்த வீட்டின் இரும்புக் கேட்டை மெல்லத் திறந்தேன். சட்டென்று உள்ளே செல்லப் பயமாக இருந்தது. பெரிய வீடு. காவலுக்குப் பெரிய நாய்கள் இருக்கலாம். நல்ல வேளையாக அப்படி ஒன்றும் இருக்கவில்லை. தோட்டம் கவனிப்பாரின்றிப் புல் மண்டிக் கிடந்தது. தரை இடையே தெரிந்த சிமெண்டு பாதையில் மெல்ல நடந்தேன்.

கராஜை ஒட்டிய ஒரு சிறு அறைதான் அந்தச் சிறுவர்கள் காட்டிய அவுட்ஹவுஸ். கதவு பின்புறமாக அடைக்கப்பட்டி ருந்ததனால் தினேஷ் உள்ளே இருக்கிறானா என்று எனக்கு முதலில் சந்தேகமாக இருந்தது. முடிவில் கதவைத் தட்டினேன். திறந்தவுடன் திகைத்து நின்றுவிட்டான் அவன். ''நீங்களே வந்து விட்டீர்களே! அடடா!'' என்று ஆச்சர்யப்பட்டான். ''வாருங்கள்'' என உபசரித்த வண்ணம் ஒரு பழைய பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டான்.

மங்கலாக எரிந்து கொண்டிருந்தது மின் விளக்கு. அறையைச் சுற்றிக் கண்களை ஓடவிட்டேன். ஒரு பழைய மர பீரோ, ஒரு கயிற்றுக் கட்டில், அதன் மீது சுருட்டி வைக்கப்பட்ட படுக்கை, மூலையில் ஒரு சிறு தோல் பெட்டி, ஒரு மர ஷெல்பில் சில டம்ளர்கள், அலுமினிய பாத்திரங்கள். ஒரு பழைய மேஜை மீது மண்ணெண்ணெய் ஸ்டவ்வும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் வைக்கப் பட்டிருந்தது.

''உங்களுக்கு முதலில் சாப்பிடக் கொஞ்சம் டீ போடட்டுமா?'' என்று கேட்டான்.

''டீயும் வேண்டாம். தொடர்ந்து சமைக்கவும் வேண்டாம். மூட்டையைக் கட்டிக் கொண்டு என்னுடன் உடனே நீ புறப்பட வேண்டும்'' என்று உரிமையுடன் அதட்டினேன்.

''நீங்கள் கோபமாக இருக்கிறீர்கள்போல் தோன்று கிறது. மூன்று நாட்களாக மழை, வரமுடியவில்லை. இன்று ஆபீசில் வேலை அதிகம். நாளை காலை வந்து பார்த்து விட்டுப் போவது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்'' சமாதானம் சொன்னான்.

''தம்பி, நீ என்னுடன் வந்து கூடத் துணையாகத் தங்கியிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறேன்?''

பதிலுக்கு அவன் வேடிக்கையாகச் சிரித்தான். 'காலையும் மாலையும் ஒருமுறை உங்களை வந்து பார்த்துவிட்டுப் போகிறேன். இந்த வீட்டை இப்பொழுது விட்டால் என் பாடு கஷ்டமாகிவிடுமே'' என்றான்.

''தினேஷ், என் எஜமானியிடம் டெலிபோனில் பேசி விட்டேன். அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். எனக்கு இந்த ஊரில் உன்னைத் தவிர யாரும் தெரியாது. எங்கள் தெருவில் அடிக்கடி திருட்டு நடக்கிறது. எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. எனக்கு வயதாகிக் கொண்டு வருகிறது. அதனால் ஆரோக்கிய நலிவு ஏற்பட்டிருக்கிறது. இரவில் உடம்புக்கு ஏதாவது ஏற்பட்டால் டாக்டர் வீட்டுக்குக் கூடப் போக ஆள் இல்லையே என்ற கவலை வேறு. பேச்சுத் துணைக்கு யாருமில்லாது தன்னந்தனியாகத் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். அன்று நீ சொன்னாயே ஞாபகம் இருக்கிறதா? உன் தாயார் இருந்தால் ஏறக்குறைய என் வயதுடையவர்களாக இருப்பார்கள் என்று. அவர்கள்

உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டால் நீ மறுப்பாயா?'' கடைசி அஸ்திரத்தைப் போட்டு விட்டு நான் துயரத்துடன் தரையைப் பார்த்தேன். நமக்கென்று யாரும் இல்லையே என்ற தனிமை உணர்வு என்னை உலுக்கவே துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டு ஓவென்று வாய்விட்டு அழ வேண்டுமென்று பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன்.

தினேஷ் அருகில் ஓடி வந்து முழந்தாளிட்டுத் தரையில் உட்கார்ந்து கொண்டான். ''அம்மா, வருத்தப் படாதீர்கள். உங்களைப்போல் தாயன்பு காட்டி என்னுடன் பேச எனக்குக்கூட யாருமில்லை. உங்களுடன் வந்து இருக்க ஒப்புக் கொள்கிறேன். ஆனால்....'' என்றான்.

அவன் கூற வந்ததை நொடியில் ஊகித்துக் கொண்டு விட்டேன். ''தம்பி, இந்த ஏற்பாட்டில் ஒரு நிபந்தனை இருக்கிறது. என் எஜமானி திரும்பி வரும் வரை வாசல் ஆபீஸ் அறையை உனக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டி ருக்கிறார்கள். அத்துடன் நீ செய்யும் இந்த உதவிக்கு ஈடாகச் சாப்பாடும் மற்ற சௌகரியமும் கொடுத்து உதவும்படி சொல்லி இருக்கிறார்கள்'' என்றேன் சாமர்த்தியமாக.

தினேஷ் கையைக் கொட்டிச் சிரித்தான். ''அம்மா, இதை நான் நம்பமாட்டேன். பூரணமாக ஒப்புக்கொள்ளவும் மாட்டேன். இது உங்களது சொந்த நிபந்தனை. உங்களோடு விவாதிக்கப் பிரியமில்லை. ஆனால் இந்த வீட்டை ஒரே யடியாக நான் காலி செய்துகொண்டு வர முடியாது. ஒரு சமயம் திடீரென்று நீங்கள் கல்கத்தாவுக்கோ டெல்லிக்கோ புறப்பட்டுப் போய்விட்டால் என்பாடு ஆபத்தாகிவிடும். உங்கள் வீட்டு அம்மா வரும்வரை தற்காலிகமாக என் குடியிருப்பை மாற்றிக் கொள்கிறேன்'' என்றான்.

நான் மேலே விவாதிக்கவில்லை. ''இந்த உதவிக்கு மிக்க நன்றி. புறப்படு உடனே'' என்று உத்தரவிட்டு, அறையிலிருந்த சாமான்களை எடுத்து ஒழுங்கு செய்யத் தொடங்கினேன்.

தினேஷின் நட்பு என் வாழ்க்கையிலே பெரிய திருப்பமாக அமைந்துவிட்டது. முதல் நாள் ஓயாது மழையில் தெருவில் ஓடிக்கொண்டிருந்த நீரோட்டத்திலே ஒரு சிறுவன் காகிதக் கப்பல் ஒன்றை ஓடவிட்டிருந்தான். பொழுதைக் கழிக்க வகையின்றி ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்த நான் வெகு நேரம் அந்தக் கப்பலின் போக்கைச் சுவாரசியமாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். கல் அல்லது குச்சி ஏதேனும் தட்டுப்பட்டவுடன் மேலே நீரோட்டத்துடன் போகாது அங்கங்கே அது தயங்கியது. பின்னர் அலை மோதிக் கொண்டு வந்த புதிய பிரபாகத்தின் வேகத்தை தாளாது அத்துடன் மோதிக் கொண்டு நகர்ந்து மிதந்தோடியது. என் வாழ்க்கையின் தவிப்பை அந்தக் காகிதக் கப்பல் அப்படியே பிரதிபலிப்பதைக் கண்டு நான் வியப்படைந்து போனேன்.

திருமதி ஜோஷியுடன் எனது வாழ்க்கை அந்தக் காகிதக் கப்பலை ஒத்ததாகத் தானிருந்தது. எனது அந்தரங்கங்கள் அனைத்தையும் அவளிடம் கூறி ஆறுதல் பெறலாமா என்று உணர்ச்சி வேகத்தில் எனது சிந்தனை ஓடும். 'நீ எனது வேலைக்காரி - நான் உன் எஜமானி' என்று அவ்வப்போது சொல்லாமலே சொல்லும் அவளது போக்கு பெரும் முட்டுக்கட்டை போட்டுவிடும். அப்பப்பா நான் எப்படித்தான் என் எண்ணங்களுடன் புழுங்கிக் கொண்டு வாழ்ந்தேன்! அதை நான் ஒருத்திதான் அறிவேன்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் எனது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த புதிய மாறுதல் -எனக்கு வாழ்க்கை மீது ஒரு

பிடிப்பைக் கொடுத்தது. மகிழ்ச்சியுடன் எனக்குள்ளாகவே பாடிக் கொண்டு தினேஷிற்குப் பிடித்தமான உணவு வகைகளைத் தயாரித்தேன். அன்றாடம் வேலைக்காரி துவைத்துக் காயவைத்து எடுத்துக் கொடுத்துப் போன அவனது உடைகளை இஸ்திரி போட்டு பத்திரமாக அவனது அறையில் வைத்துத் திருப்தியடைந்தேன் கடந்த ஜன்மத்தில் நான் விட்டு வந்த என் மகன் இப்போது ஓடோடி வந்து என்னுடன் உறவாட வந்து விட்டானோ என அடிக்கடி எனக்குள் ஒரு பிரமிப்பு. அதனால் ஒரு ஆனந்தம்.

பெற்ற பிள்ளைக்கும் மேலாகவே தினேஷும் என்னை மதித்தான். வந்த சில தினங்களில் அதை எனக்குப் புரியவும் வைத்துவிட்டான். அன்று காலை அவன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டான். அவன் பின்னால் நான் கேட் வரை சென்றேன். திடீரென்று திரும்பிய அவன், ''இனிமேல் உங்களை நான் பெரியம்மா என்று கூப்பிடப் போகிறேன், தடையில்லையே?' என்று புன்னகைத்தான். நான் எதுவும் பேசுமுன் அவன் சொன்னான். ''என்னைப் பெற்ற என் அம்மா என்னை தவிக்க விட்டு இறந்து போய்விட்டார்கள். வளர்த்த சிற்றன்னைக்கு என்னைப் பற்றிக் கவலையே கிடையாது. எந்தவித உறவும் இல்லாத நீங்கள் என் மீது காட்டும் பாசம் அவர்களுடையதை விட அதிகமாக இருக்கிறது. அத்னால் நீங்கள் அவர்களை விடப் பெரியவர். என் பெரியம்மா! போதுமா விளக்கம்?'' உணர்ச்சி மிக்க குரலில் பேசிவிட்டு அவன் வேகமாகச் சைக்கிளில் போய்விட்டான்.

கேட்டைப் பிடித்துக்கொண்டு அவனது உருவம் தெருவினின்று மறையும்வரை கண்களில் நீர் வழிய நின்றேன். அன்றிலிருந்து அவன் என்னை ''பெரியம்மா'' என்றுதான் அழைத்தான். எனக்கும் அந்த உறவு நிலை

மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அன்பும் மரியாதையும் காட்டிக் கபடமற்ற முறையில்தான் தினேஷ் பழகினான். ஆனால் நாளடைவில் அவனிடம் ஒரு சிறு மாறுதலை நான் கவனிக்கத் தொடங்கினேன். ஆரம்பத்தில் காணப்பட்ட சிரிப்பும் உற்சாகமும் அவனிடம் குறைந்துகொண்டு வருவதை உணர்ந்தேன். ஏதோ கவலை ஒன்று அவனை உள்ளூர வருத்திக் கொண்டிருந்தது என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஒரு நாள் இரவு உணவுக்குப் பிறகு டெலிவிஷன் பார்க்க உட்கார்ந்தோம். என்னால் பேசாது இருக்க முடியவில்லை. ''தினேஷ், நீ சதா எனக்குத் துணையாக இங்கு உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. நண்பர்களுடன் வெளியே சினிமா, டிராமா பார்க்கப் பிரியமிருந்தால் போய்விட்டு வரலாம்' என்று பொதுவாகச் சொன்னேன்.

''நண்பர்கள் என்று எனக்கு நெருங்கியவர்கள் யாரும் கிடையாது'' என்றான் வெறுப்பாக. என் மனம் வருந்தியது. 'உன் கவலைகளை என்னிடம் சொல். முடிந்தவரை ஆறுதல் சொல்கிறேன்' என்று கேட்க வேண்டும் என்று உள்ளம் பதைத்தது. ஆனால் உரிமை இருக்கவில்லை. வேதனையுடன் மௌனமாகி விட்டேன்.

ஒரு சில நாட்களுக்குப் பின்னர் தினேஷ் அவசரமாக கிராமத்துக்குச் செல்ல வேண்டி வந்துவிட்டது. ''சித்தப்பா வுக்கு உடம்புக்குச் சுகமில்லையாம். வந்துபோகும்படி கடிதம் போட்டிருக்கிறார்கள். ஆபீஸில் இரண்டு வாரம், லீவு எடுத்துக் கொண்டு விட்டேன். இரவு வண்டிக்கு டிக்கெட் வாங்கி விட் டேன்'' என்று புறப்பட்டான்.

திேனஷ் இன்றி வீடு எனக்கு வெறிச்சென்றிருந்தது. நாட்கள் மறுபடி நத்தை வேகத்தில் ஊர்ந்தன. அவனுடன் இதற்குள் பழகி விட்டிருந்த ஸீஸர் தோட்டத்திற்குள் பாய்ச்சல் காட்டி ஓடிக் கொண்டிருந்தது. களைத்த பின் தானே வரட்டும் என்று உள்ளே சென்று எனது காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

மோகன் காலனி மிகவும் அமைதியான ஓர் இடம். சாதாரணமாக நாள் முழுவதும் அந்த வழியில் போக்கு வரத்து குறைவு. அதனால் சப்தமும் குறைவு. திடீரென்று வேகமாகச் சென்ற ஒரு கார் 'கிரீச்' என்ற ஓசையுடன் நின்ற சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு வெளியே ஓடி வந்தேன். தொடர்ந்து சற்றுத் தொலைவில் வாள், வாள் என வேதனை யால் ஊளையிட்ட நாயின் அழுகை என் உடலைப் பதறச் செய்தது. கதவைப் பூட்டிக் கொண்டு வேகமாகத் தெருவுக்குச் சென்றேன்.

காலனியின் முகப்பைக் கடந்து பெரிய தெருவுக்குள் நுழைந்த நான் செயலற்றுப் போய் விட்டேன். நடைபாதை அருகே சுருண்டு பந்தாகக் கிடந்தது ஸீஸர். வெள்ளை வெளேரென்ற அதன் உடல்மீது ரத்தக்கறை! அதனைத் தூக்கி அணைத்துக் கொண்டேன். அதற்குள் ஒரு சிறு கூட்டம் சேர்ந்துவிட்டது.

''ஸீஸர்! உன்னை எந்தப் பாவியடா கொல்லப் பார்த்தான்? ஐயோ ஸீஸர்-'' என் கண்களில் கண்ணீர் கரை புரண்டோடியது.

# 5. மறக்கமுடியாத இருபத்து மூன்று

ஆயிரம் தடவைகள் என்னையே நான் சபித்துக் கொண்டேன். நான் மட்டும் எச்சரிக்கையுடன் இருந்திருந்தால் ஸீஸருக்கு விபத்து நேர்ந்திருக்குமா? நடந்த பின் எல்லோருமே இப்படித்தான் நினைப்பார்கள். நானும் என்னை நொந்து கொண்டு கண்ணீர் விட்டேன். பழகிய காரணத்தினால், வாயில்லாத ஓர் உயிர் வலியினால் துடிப்பதைக் காண என் உள்ளம் வேதனைப் பட்டது. இன்று மட்டும் திருமதி ஜோஷி இங்கிருந்தால்! இந்தக் கவனக் குறைவை அவள் மன்னிக்கப் பல தினங்கள் ஆகுமே! பயத்தில் உடல் வியர்த்துப் போனேன்.

என் கரங்களின்மேல் சூடாக விழுந்த என் கண்ணீரை சட்டென்று நக்கித் துடைத்துவிட்டது ஸீஸர். அதற்குத் தான் எத்தனை அன்பு! எவ்வளவு அறிவு! 'அழாதே நீலு' என்று எனக்கு ஆறுதல் சொல்வது போலிருந்தது அச்செய்கை. சுற்றிலும் நின்றவர்களைக் கவனிக்காது அதை என் மடிமேல் போட்டுக் கொண்டு நடைபாதைமீது உட்கார்ந்துவிட்டேன். அழுது கொண்டே மெல்லக் காயத்தை ஆராயத் தொடங்கினேன்.

''ஸாரி ஆன்ட்டி!'' என்று குழைந்து ஒலித்தது ஓர் இளம் பெண்ணின் குரல். நிமிர்ந்து பார்த்தேன். மஞ்சள் நிறப் பாண்ட்டும் பச்சை வண்ண டாப்பும் இடைவரை அவிழ்ந்து புரண்ட கூந்தலுமாக நின்று கொண்டிருந்தாள். லேசாகச் சாயம் பூசியிருந்த கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு நின்ற கோலம் அவள்தான் குற்றவாளி என்று எனக்குப் புரிய வைத்தது. இடையைச் சுற்றிச் சற்று இறுக்கமாக அவள் அணிந்திருந்த கிளியோபாட்ரா

பெல்டிலிருந்து தொங்கிய காரின் சாவிக் கொத்து, என் சந்தேகத்தைப் பூராவும் நிவர்த்தி செய்துவிட்டது. சற்றுத் தொலைவில் நின்ற பாசிப் பச்சை நிற பென்ஸ் காரைக் குரோதமாக உற்றுப் பார்த்தேன்.

இவளும் திருமதி ஜோஷியின் கூட்டத்தைச் சேர்ந்தவள் தான். தேவைக்கு மீறிய செல்வம், அதனால் சுகம். போதாதற்கு அழகும் இளமையும், கேட்பானேன்? தெருவில் மனிதர்கள் நடமாடினாலே கண்களில் படமாட்டார்கள். கேவலம் ஒரு நாய்க் குட்டியையா இவள் மதிக்கப் போகிறாள்? சினம் தாங்க முடியாது அவளை வெறித்துப் பார்த்தேன். ''ஸாரி ஆன்ட்டி! நான் தூக்கிக் கொள்கிறேன்'' கரங்களை நீட்டினாள். வேலை செய்தறியாத பொன்நிற விரல்கள் - நீண்ட நகங்கள் நகப்பூச்சுடன் மின்னின.

''தொடாதே! பழக்கமில்லாதவர்கள் தொட்டால் நோவு தாளாமல் நாய் கடித்துவிடும்'' என்று கோபத்துடன் எச்சரித்தேன்.

''நான் அப்படியொன்றும் வேகமாக ஓட்டிக்கொண்டு போகவில்லை. இதுதான் பாய்ந்து குறுக்கே ஓடி வந்தது ஆன்ட்டி!''

காயத்தை ஆராய்ந்தபொழுது தொடைமீது லேசாகச் சதை பிய்ந்து ரத்தம் கசிவதைக் கண்டேன். மனம் சற்று நிம்மதியடைந்தது என்றாலும் அந்தப் பெண்மீது ஏற்பட்ட சினம் குறையவில்லை.

''உன்னைச் சொல்லி குற்றம் இல்லையம்மா. உன் கையில் இது மாதிரி பெரிய காரைக் கொடுத்தனுப்பியிருக்கிறார்களே அவர்களைச் சொல்ல வேண்டும்.''

களுக்கென்று அருகில் நின்ற இரண்டு ஆண்கள் சிரித்தார்கள். அந்த பெண் அவமானத்தில் முகம் சிவந்து போனாள். ஏதோ சொல்ல நினைத்தாள். பேச முடியாது உதடுகள் துடித்தன. மெல்ல ஸீஸரைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றேன்.

''ஆன்ட்டி! என்னுடன் இதை எடுத்து வாருங்கள். எங்கள் வீட்டு நாய்களை கவனிக்கும் 'வெட்'டிடம் அழைத்துப் போகிறேன்'' என்றாள் தயங்கிய குரலில். அதுவும் ஒரு நல்ல யோசனை. வாகன வசதியில்லாது உதவி செய்ய ஆளில்லாது நான் வேறு என்ன செய்வேன்?

காரின் கதவைத் திறந்து விட்டுப் பின் ஆசனத்தில் என்னை அமரச் செய்தாள். ஸீஸர் வலி பொறுக்க முடியாது சீறிக்கொண்டு என் மடியில் படுத்துக் கொண்டது. வேகமாக அவள் காரை ஓட்டிக் கொண்டு சென்றாள். வழி முழுவதும் நான் கோபத்தில் மௌனமாக இருந்தேன். அவளும் பேச முயலவில்லை.

வைத்தியர் ஸீஸரைப் பரிசோதித்துப் பார்த்தார். ''காலில் லேசாக அடி - அதிசயமாக தப்பி விட்டான்'' என்று அவர் கூறும்வரை என்னால் கவலையைத் தாங்க முடியவில்லை. காயத்தைச் சுத்தப்படுத்தி மருந்து போட்டுக் கட்டினார். நான் நிம்மதியாக மூச்சுவிட்டேன்.

அன்று நாங்கள் வீடு திரும்பும் பொழுது பிற்பகல் மூன்று மணியாகிவிட்டது. கேட் அருகே வண்டியை நிறுத்தி விட்டு அவளும் என்னுடன் கூட உள்ளே வந்தாள். என் அறையில் தரைமீது ஒரு கம்பளியை மடித்துப்போட்டு ஸீஸரை முதலில் சௌகர்யமாகப் படுக்க வைத்து விட்டுத் திரும்பினேன். எதிர் சுவரில் பதித்திருந்த கண்ணாடி காட்டிய உருவத்தைக் கண்டு துணுக்குற்றேன். ஸீஸரின்

காயத்திலிருந்து வழிந்த இரத்தம் பட்டு என் புடவை, பார்க்க அவலட்சணமாக இருந்தது. ''கொஞ்சம் இரு'' என்று அந்தப் பெண்ணுக்கு உத்தரவிட்டு நான் குளியலறைக்குள் மறைந்து கொண்டேன்.

நிதானமாகக் குளித்துவிட்டு உடுத்திக்கொண்டு வெளியில் வந்தேன். எனது கோபம் ஆறிவிட்டிருந்தது. அது வரை மௌனமாக மேஜையில் கிடந்த பத்திரிகை ஒன்றைப் புரட்டிப் பார்த்த வண்ணம் அவள் உட்கார்ந்திருந்தாள்.

அவளைக் காலோடு தலைவரை கூர்ந்து பார்த்தேன். நல்ல பொன் நிறம். சற்று நீண்ட முகம். ஒளிமிக்க கண்கள். இயற்கையிலே நல்ல அழகி. ஒப்பனையில் இன்னும் கவர்ச்சியாகத் தோன்றினாள்.

என்னையும் அவள் அதே சமயத்தில் எடைபோட்டுக் கொண்டிருந்தாள் எனப் புரிந்து கொண்டேன்.

''ஆன்ட்டி! நீங்கள் நல்ல தமிழ் பேசுகிறீர்களே?''

''சின்ன வயதில் தமிழ்நாட்டில் வளர்ந்தவள். ஆனால் குஜராத்தைச் சேர்ந்தவள்'' இதற்குள் என் கோபம் பூராவும் ஆறிவிட்டது. ''கொஞ்சம் இரு'' தாகத்திற்கு ஏதாவது சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' உபசரித்தேன்.

''வேண்டாம் ஆன்ட்டி! நான் நினைத்தபொழுது எதையும் சாப்பிடுவதில்லை. என்னுடைய ஃபிகரைப் பாதுகாத்து கொள்ளவேண்டும்'' பரிகாசமாகக் கூறிவிட்டுப் புன்னகையுடன் சொன்னாள். பொல்லாதவள்! கார் சாவியை பெல்ட்டிலிருந்து கையில் எடுத்துக்கொண்டு, சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். ''இந்த வீடு ரொம்ப மாடர்னாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதை அழகாக பர்னிஷ் பண்ணியிருக்கிறீர்கள். உங்களுக்கு நல்ல டேஸ்ட் இருக்கு. ஆன்ட்டி!''

''இந்த வீடு என்னுடையதல்ல அம்மா. இதன் எஜமானி பம்பாயிலிருக்கிறாள்'' என்றேன் சுருக்கமாக.

''அப்படியானால் நீங்கள்!''

''நான் இந்த வீட்டின் வேலைக்காரி'' அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தைக் கவனிக்க எனக்கு மனம் இருக்கவில்லை.

''நம்ப முடியவில்லை ஆன்ட்டி! உங்களைப் பற்றி இரண்டு விஷயங்களை என்னால் நம்ப முடியவில்லை. நன்றாகப் படித்தவர்போல் தோன்றுகிறீர்கள். நீங்கள் பேசுவதைக் கேட்டால் தமிழ்ப் பெண் போல் இருக்கிறது'' அதிசயித்து நின்றாள்.

''நீ யார் என்று சொல்லவேயில்லையே, உன் பெயர்?'' பேச்சை மாற்றினேன் நான்.

''பெரியவர்கள் பெயர் வைக்கும்போது இந்தக் காலத்தில் கூட தம் இஷ்டப்படி லாரிலோட் அளவிற்குப் பெயர்களை வைத்து விடுகிறார்கள். சிறியவர்கள் நாங்கள் எங்களிஷ்டப்படி சுருக்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது. எங்கள் வீட்டிற்கு என் தம்பியைத் தவிர நான் ஒரே ஒரு செல்லப்பெண். என் தாயார் என்னைத் தவமிருந்து பெற்றார்களாம். அதனால் அந்த தேவியின் பெயரை அப்படியே நீளமாக வைத்துவிட்டார்கள். கன்யாகுமரி என்பது அவர்கள் வைத்த பெயர். காலேஜுக்காகக் கன்யா என்று சுருக்கிக் கொண்டு விட்டேன். நீங்களும் என்னை அப்படியே கூப்பிடலாம்'' என்று கூறிவிட்டு வரவேற்பறையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். ''நேரமாகிவிட்டது. அம்மா தேடுவார்கள். பிறகு பார்க்கிறேன். குட் பை'' எனக் கூறி சிட்டாகப் பறந்து விட்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு தினேஷ் கடிதம் போட்டிருந்தான். ''சித்தப்பாவிற்கு 'நியுமோனியா' காய்ச்சல். மிகவும் பலவீனமாக இருக்கிறார்.வர இன்னும் ஒரு வாரம் பிடிக்கும். தாமதத்திற்கு மன்னிக்கவும்'' எனக்கு ஒரே ஏமாற்றம். மீண்டும் தனிமையா?

அன்று திருமதி ஜோஷி டெலிபோனில் என்னிடம் பேசினாள். ''நீலு! நாளை காலை நான் கனடாவுக்குப் பறக்கிறேன். ஒருகால் வர மூன்று மாதங்களுக்கு மேல் ஆகலாம். உன் செலவுகளைக் கவனித்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறேன். கவலைப்படாதே. ஸீஸர் எப்படியிருக்கிறான்!''

கார் விபத்தின் விபரம் ஒன்றுமே நான் சொல்ல விரும்பவில்லை. ''நன்றாக இருக்கிறான்'' என்றேன் சுருக்கமாக.

''பை! பை! கீப் வெல். ச்சீரியோ.''

நாட்கள் மெல்ல ஊர்ந்தன. அதற்குப் பின் கன்யா ஒருமுறை கூட வரவில்லை. கெட்டிக்காரி தனது விலாசத்தை வேண்டுமென்றே கூறாது ஓடிவிட்டாள். எனக்கு அவள்மீது சற்று மனத்தாங்கல். நல்ல வேளையாக ஸீஸர் விரைவில் குணமடைந்து விட்டது. தினேஷ் இல்லாதது மட்டும் பெரும் குறையாக எனக்குத் தோன்றியது.

வீட்டிலேயே சதா அடைபட்டிருக்க மனமின்றி ஒரு நாள் மாலை புறப்பட்டேன். மாடவீதிக் கடைகளைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் மெல்ல நடந்தேன். பின்னர் கற்பகவல்லி கபாலீசுவரரை தரிசித்துவிட்டு காய்கறிக் கடைகளின் பக்கம் சென்றேன். காய்களை வாங்கிக் கொண்டு கொடுக்க வேண்டிய சில்லறையைப் பர்சிலே துளாவிக் கொண்டிருந்த நான், ''காரட் கிலோ என்ன தம்பி விலை?''

என்ற முதியவரின் குரலைக்கேட்டு நிமிர்ந்தேன். ஒரு சிறு கிழங்கைக் கையில் எடுத்து ஆராய்ந்து கொண்டிருந்த அந்தக் கிழவரது வலது கரம் வெளிச்சத்தில் என் கண் களுக்கு நன்றாகத் தெரிந்தது. அதன்மீது பச்சையினால் குத்தப்பட்ட 'முத்துசாமி' என்ற பெயரை நன்றாக விளக்கொளியில் படிக்க முடிந்தது. மின்விசை தாக்கியது போன்ற ஓர் அதிர்ச்சி எனக்கு. படபடவென்று நெஞ்சு திகிலில் அடித்துக் கொண்டது. என்னையுமறியாது என் கை தோள்மீது நழுவிக் கிடந்த சேலைத் தலைப்பை இழுத்துத் தலையை முக்காடிட்டது. ஆனால் ஆவலை என்னால் தடுக்க முடியவில்லை.

பணத்தை எண்ணிக் கடைக்காரருக்குக் கொடுத்து விட்டுக் கடைக்கண்ணால் அருகில் நின்று கொண்டிருந்த அந்தக் கிழவரை கூர்ந்து கவனித்தேன். அதற்குள் யாரோ ஒருவர் பேசினார்.

''முத்து! நீ எங்கே இந்தப் பக்கம் வந்தாய்?'' கேட்டவரும் வயதானவர்தான்.

''அய்யாவுக்குக் கொஞ்ச நாளா உடம்புக்கு சொக மில்லை. இன்னிக்கு அவர் பொறந்த நாள்.''

''திடுக்கிட்டுப் போய் நின்றேன். ஆமாம். டிசம்பர் இருபத்து மூன்று அன்று! மறக்க முடியாத நாள்.''

''கோவிலில் ஒரு அர்ச்சனை பண்ணிவிட்டு அப்படியே காய்களையும் வாங்கிட்டு போக வந்தேன்'' என்றார் முத்துசாமி.

''வயசாகியும் ஏன் இன்னும் அந்த வீட்டோடேயே கிடக்கிறே? என்னைப் பார். ரிடயர் ஆகிச் சுகமா இருக்கிறேன்!''

''இல்லேப்பா. அந்த வீட்டை என் சொந்த வீடாக நினைச்சுகிட்டு ஓட்டிக்கிட்டிருக்கேன். எனக்கு மட்டும் மனுஷங்க யார் இருக்காங்க? இப்போ எனக்கு அங்கே ரொம்ப வேலை கிடையாது. இருக்கிற ஆட்களை மேல் பார்வை செய்கிறேன்.''

''பெரிய பிரமோஷன் கிடைச்சிருக்கு. பலே பலே! சரி. நான் வரேன்!''

எனக்கு மயக்கம் வந்துவிடும் போல் திகில். இதயம் துடித்தது. நெற்றியில் வியர்வை வழிந்தோடியது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டேன். முத்துசாமி என்னை வெறித்துப் பார்ப்பது போல் பிரமை ஏற்பட்டது. வேகமாகக் கடையினின்று திரும்பி இருளில் கூட்டத்திற்குள் நானும் மறைந்து கொண்டேன். பஸ் நிலையத்தை நோக்கிக் கால்கள் வேகமாக நடந்தன. ஆனால் சிந்தனை அதைவிடப் பன்மடங்கு வேகத்தில் பின்நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

நெற்றியில் பட்டையாக விபூதி -இடையில் வெள்ளை கதர் வேஷ்டி, ஜிப்பா, அதன் மீது இறுக்கமாக மடித்துக் கட்டிய கதர் துண்டு - இந்தக் கோலத்தில் வீட்டையும் தோட்டத்தையும் சுற்றிக் கொண்டு பொறுப்பு முழுவதையும் நிர்வகித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்து முத்துசாமி என் மனக் கண்முன் தோன்றி மறைந்து கொண்டிருந்தார். அவரா இவர்? வருஷங்கள் எப்படித்தான் இவரது ஆரோக்கியத்தைக் குடித்துவிட்டன! கன்னங்கள் ஒட்டி, உடல் மெலிந்து நடை தளர்ந்து முதுமை எப்படியெல்லாம் இவரிடம் விளையாடியிருக்கிறது? பாவம் முத்துசாமி. விசுவாச மிக்க உழைப்பாளி.

வீட்டிற்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு விளக்கைப் போட்டேன். கால்களைக் கழுவிக்கொண்டு பூஜையறை எதிரே தரைமீது உட்கார்ந்து கொண்டேன். என் உள்ளத்துப் போராட்டங்களை உணர்ந்து கொண்டது போல் ஸீஸர் பாய்ந்து ஓடிவந்து என் கால்கள் மீது புரண்டு படுத்துக் கொண்டது.

"நீலு! நீ ஒரு முட்டாள். முக்காட்டிற்குள்ளும் வருஷங் களுக்குள்ளும் புகுந்து தப்பிக்கொள்ளப் பார்க்கிறாய். நீ ஏன் சென்னைக்கு வந்தாய்? திரும்பி பார்க்க மாட்டேன் என்று வைராக்கியமாகப் புறப்பட்டுப் போனாயே? அந்த மனோதிடம் இப்பொழுது எங்கே?"

என்னால் தாங்க முடியவில்லை. ஓவென்று வாய் விட்டு அழுதேன். திகைப்படைந்துபோன ஸீஸர் நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்தது. பின்னர் வாலை ஆட்டிக் கொண்டு என் கால்களைப் பன்முறை முத்தமிட்டு என்னை சமாதானப்படுத்த முயன்றது.

## 6. அவளுக்கு என்ன துணிச்சல்

மறுநாள் காலை வெய்யில் பளிச்சென்று காய்ந்து கொண்டிருந்தது. ஸ்நானம் செய்தபின் கூந்தலை உலரும்படி தொங்க விட்டுக் கொண்டு வராந்தா மீது நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். தோட்டக்காரனைக் கண்டு ஸீஸருக்கு ஒரே குஷி. பூரண குணமடைந்துவிட்டதால் தோட்டத் திற்குள் இங்கும் அங்கும் ஓடத் தொடங்கிவிட்டது. திருமதி ஜோஷி வந்து ஏற்றுக்கொள்ளும் வரை அதை மிகவும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள நான் மிகவும் கடமைப்பட்டிருந்ததனால் மிகவும் எச்சரிக்கையுடன் உட்கார்ந்திருந்தேன்.

பக்கத்து வீட்டு மாடி ஜன்னல் திரை விலகியது. அந்த பெண் வெளியே எட்டிப் பார்த்தாள். இம்முறை என்னைக் கண்டதும் தயங்கியபடி நின்றாள். பிறகு ஏதோ யோசித்து விட்டு மெல்ல புன்முறுவலித்தாள். பதிலுக்கு மண்டையில் அடித்தாற் போல் நானும் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் அது என்னுடைய இயல்பல்ல. எனவே, பதிலுக்கு நானும் புன்னகைத்தேன். அதற்குமேல் நானும் பேசவில்லை. சிறிதுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற அவள் உள்ளே போய்விட்டாள். தலையை விரலால் கோதிக் கொண்டு உட்கார்ந்திருந்த எனக்குச் சிரிப்பு வந்தது. அக்கம் பக்கத்தவர்கள் இந்தச் சில நாட்களில் என்னைக் கவனித்துக் கொண்டு இருந்திருப்பார்கள். தன்னந்தனியே இந்தப் பங்களாவில் வசிக்கும் இவள் எப்படிப்பட்டவள் என்று ஆராய்ந்து கொண்டு இருந்திருப் பார்கள். கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்திருப்பார்கள். 'பாவம்! பொறுப்பான வேலைக்காரி, பார்த்தால் சாதுவாகக் காணப்படுகிறாள்'. இப்படி நற்சாட்சிப் பத்திரங்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கும். போனால் போகிறது என்று என்னை அவர்களது வட்டத்திற்குள் சிறிதே நுழைய அனுமதித்ததற்கு அடையாளம்தான் அந்தப் பெண்ணின் புன்னகை.

கண்களில் நீர் வருமளவு நான் வாய்விட்டு உரக்கச் சிரித்தேன். இதேபோல், நம்முடன் சேர்த்துக் கொள்ள இவர்கள் தகுதியானவர்களா மாட்டார்களா என்று பிறரை மனத்திலே கணக்கிட்டுக் கொண்டு கர்வத்துடன் திரிந்த பெரிய பங்களாவாசிதான் நானும் ஒரு காலத்தில். தோட்டக்கார முருகேசன் ''கூப்பிட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டு வந்து நின்றான்.

''இல்லையப்பா, ஸீஸர் விளையாடுவதைப் பார்த்து சந்தோஷப்பட்டேன்'' என்று சமாளித்தேன்.

அவன் நம்பவில்லை. தானே சிரிப்பது பேசுவது இவையெல்லாம் ஆரோக்கியத்தின் அறிகுறிகள் அல்லவே என்று எண்ணினான் போலும். ஒரு மாதிரி சந்தேகத்துடன் என்னைப் பார்த்துவிட்டுக் கார் ஷெட் கதவைப் பூட்டிச் சாவியை என் அருகில் வைத்துவிட்டுப் போய்விட்டான். வெய்யில் கடுமையாவதைக் கண்டு நானும் இடத்தைவிட்டு எழுந்திருந்து உள்ளே போகத் திரும்பினேன்.

''போஸ்ட்! என்று குரல் கொடுத்த தபால்காரர் ஒரு கடிதத்தை என் முன் வீசிவிட்டு நகர்ந்தார்.

திருமதி ஜோஷி கனடாவிலிருந்து எழுதிய கடிதம் அது. வழக்கம்போல கைக்கு மிகவும் கனமாக இருந்தது. எந்த நாட்டிற்குப் போன போதிலும் உடனே அவள் தான் கண்டு களித்த விஷயங்களைப்பற்றி எனக்குப் பத்தி பத்தியா எழுதாதிருக்கமாட்டாள். ஆரம்பத்தில் பேரன் பேத்திகளுக் கெல்லாம் தான் சென்ற நாடுகளைப் பற்றி விரிவாகக் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள். 'கிரான்னி ஒரு பெரிய ப்ளாப்பா' என்று பாட்டியிடமிருந்து வந்த கடிதங்களை இளைய வட்டாரத்தினர் மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு வீசி எறிந்து விடுவார்கள். இது எப்படியோ அவளுக்குப் புரிந்து விட்டது.

''நீலு! இந்த மனோஜ், லீனா இவர்களுக்கெல்லாம் கடிதம் போடுவது என் காசுக்குத்தான் வீண் செலவு. காணாத அதிசயங்களை நான் எடுத்துச் சொன்னால் கூடக் கேட்க பொறுமை கிடையாது. அதனால் உனக்குத்தான் நான் எழுதுவேன்'' என்று அவள் சொல்வது வழக்கம்.

மாண்டிரியலிலிருந்து அவள் கடிதம் போட்டிருந்தாள். தான் வசிக்கும் வீடு, சீதோஷ்ண நிலை, கண்ட வினோதக் காட்சிகள் எல்லாவற்றையும் வருணித்துவிட்டு முடிவில்,

'நீலு, உனக்கு என் மீது உள்ள அன்பு, உனக்கு என் பொருள்களைப் பாதுகாப்பதில் உள்ள அக்கறை, இவை என் குடும்பத்தவர்கள் ஒருத்தருக்கும் கிடையாது. அலுத்து சலித்து உட்காரும்போது, 'அம்மா!' என்று ஆசையுடன் அழைத்துவிட்டு சூடான டீ கொண்டு வந்து உபசரிப்பாயே அதை நினைத்துக் கொண்டேன். எனக்கு அழுகையே வந்துவிட்டது. உன் உடம்பைப் பார்த்துக்கொள். ஜாக்கிரதை யாக இரு. பணம் போதாவிட்டால் பெரியவனுக்கு பம்பாய்க்கு டெலிபோன் பண்ணு அனுப்புவான்...."

திருமதி ஜோஷியின் கடிதம் என் நெஞ்சை தொட்டது. உடனே பதில் கடிதம் போடவேண்டும் என்று யோசனை தோன்றவே நான் வேகமாக பகல் உணவை முடித்துக் கொண்டு அவசரமாகக் கடிதத்தை எழுதி உறையிலிட்டு, கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். அண்ணாசாலை தபாலாபீசிற்குச் சென்று முதலில் நர்மதாவின் கடிதத்தை தபாலில் சேர்த்து விட்டு வெளியே வந்தேன். வெயில் கொடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. என்னால் இங்கு அதிக நேரம் நடக்க முடியவில்லை.

ஒரு துன்ப நினைவு வேறு உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

"கோயிலுக்கு அருகாமையில் குடியிருப்பு. ஆனால் கடவுளுக்கு வெகு தொலைவில் மனம் மூடி விட்டது என்று ஒரு பழமொழி கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப்போல் என்னைச் சேர்ந்தவர்கள், என் மனிதர்கள் என்று சொல்லி உறவு பாராட்டிக் கொள்ளும் என் உறவினர்கள் மிகவும் அருகிலேயே சென்னையில் வசித்தனர். நான் அறிவேன். ஆனால் நான் மட்டும் அவர்களது நினைவில் எவ்வளவு தொலைவில் இருந்தேன்! இரவும் பகலும் வாட்டிய இந்தத்

துன்ப நினைவு முதல்நாள் அந்திப்பொழுது முத்துசாமியைக் கண்ட பின்பு இன்னமும் பன்மடங்காகப் பெருகி விட்டது.

'எங்கே போகிறாய்? ஏன் போகிறாய்?' என்று கேட்க வீட்டில் எஜமானியில்லை. வீட்டிற்குச் சீக்கிரம் திரும்ப வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கவில்லை. எனவே, இங்குமங்கும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஒரு பைத்தியக் கார எண்ணம் உந்தவே, 'டாக்ஸி!' என்று சாலையில் ஓடிய வண்டியைக் கையைத் தட்டி நிறுத்தினேன். ஏறி உட்கார்ந்து கொண்டு, "நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்குப் போ" என்று உத்தரவிட்டேன்.

என் நிலைக்கு டாக்ஸி கட்டுப்படியாகாத வாகனம். மீட்டரில் டக்டக் என்று பணம் ஏறிக் கொண்டு போவதைக் கடைக்கண்ணால் பார்த்தபடியே திகைக்கும் நெஞ்சோடு சாலையில் இரு மருங்கையும் வெறித்துப் பார்த்தேன். எனக்குத்தான் எத்தனை பழக்கமான நெடுஞ்சாலை அது! எத்தனை இன்பமான நினைவுகளைக் கொண்டது.

கிருஷ்ணமாச்சாரி சாலை நெருங்கியதும் டாக்ஸியை நிறுத்தினேன். பணத்தை எண்ணிக்கொடுத்து விட்டுக் கையில் பிடித்த சிறு பிளாஸ்டிக் கூடையுடன் சாலையின் ஓரமாக மெல்ல நடந்தேன். என்னையுமறியாது கால்கள் நடந்தன.பல வருஷங்கள் பார்த்துப் பழகிய பாதை, சற்றுத் தொலைவில் வலது புறம் இருந்த பெரும் சாலைக்குள் நுழைந்தேன். அதற்குள் சற்றுத் தூரம் சென்று இடது புறம் திரும்பி மிகவும் பழக்கமான விக்டோரியா அவென்யூவுக்குள் நுழைந்தேன்.

அந்தக் காலத்தில் சாலையின் இருமருங்கிலும் கொன்றை மரங்கள் இருந்தன. இலை தெரியாது கிளைகள் முழுவதும் சிவந்த பூக்கள். அங்கு வசித்த செல்வச்

சீமான்களை இயற்கை மரியாதை செய்ததுபோல் கொன்றை மலர்கள் காற்றில் பறந்து சாலை முழுவதும் பரவிக் கிடக்கும். அந்த ஆனந்தக் காட்சி இப்போதிருக்கவில்லை. என்ன ஏமாற்றம்! தெருவை அகலப்படுத்தும் பணிக்கு மரங்கள் பலியாகி விட்டிருந்தன. அடையாளம் தெரியாமல் பல புதிய வீடுகள், புதிய பாணியில் கட்டப்பட்டு உருவாகியிருந்தன. பத்து பன்னிரண்டு என்று எண்களைக் கணக்கிட்டுக் கொண்டு நடந்தேன்.

''யாரைத் தேடுகிறாய்?'' என்று கேட்டான் அழகான பங்களா ஒன்றின் வாயிலில் நின்று கொண்டிருந்த கூர்க்கா இந்தி மொழியில்.

''மயூரவாகன வீடு இதுதானே?'' என்று மெல்லிய குரலில் இந்தியில் கேட்டேன்.அதை முடிப்பதற்குள் இருதயம் நின்று விடும்போல் பயத்தில் துடிதுடித்தது.

''இது இல்லை. அதோ தெரிகிறதே அந்த வீடு'' என்று மூன்று வீடுகளுக்கப்பால் தெரிந்த ஒரு கட்டடத்தைச் சுட்டிக் காட்டினான். எனக்கு ஒரே திகைப்பு. எங்களது பங்களா விற்குப் பக்கத்தில் கேட்பாரற்றுக் கிடந்த பெரிய நிலப் பரப்பில் புதிய கட்டடங்கள் உருவாகியிருந்ததனால் தான் இந்தக் குழப்பம். மேலே நடந்தேன். அந்தக் கட்டடத்தின் முன்னால் வந்து நின்ற பொழுது எனக்கேற்பட்ட ஏமாற்றம் கொஞ்சநஞ்சமல்ல. நான் பிறந்து வளர்ந்து இன்பமாக இளமைப் பருவத்தைக் கழித்துவிட்டிருந்த வீடு அங்கே இருக்கவில்லை. முன் பக்கத்தோட்டத்திலே அந்தப் பன்னீர் மரத்தைக் காணவில்லை. புல்லாங்குழல் ஊதிக் கொண்டு நின்ற கிருஷ்ணன் சிலை, அதைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த சிறு தாமரைக்குளம் இவை ஒன்றும் காணவில்லை. எனது இன்பக் கனவுகள் எல்லாவற்றையும் குரூரமாகக்

கலைத்துவிட்டு ஓங்கி நின்று கொண்டிருந்தது புத்தம் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஸ்பானிஷ் ஸ்டைல் வீடு ஒன்று!

காலத்தை ஒட்டி வீட்டை மாற்றிக் கொண்டு விட்டார் என் அண்ணன். அதுபோல் தமது கருத்துக்களையும் காலத்தை யொட்டி மாற்றிக் கொண்டிருப்பாரா?

துக்கம் தாளாது கண்களிலிருந்து நீர் கன்னங்கள் மீது வழிந்தோடியது. மேலே சிந்திப்பதற்குள் பின்னால் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன்.

''நான் இல்லாதபோது இங்கு யாராவது ஐயாவைத் தேடிக்கிட்டு வந்தாங்களா?'' என்று வாயில் கூர்க்காவைக் கேட்டுக் கொண்டே மிகவும் சுதந்திரமாக உள்ளே நுழைந்தார் கிழவர் முத்துசாமி. அவர் அந்த வீட்டில் பலகாலம் உழைத்து வந்த விசுவாசமிக்க வேலைக்காரர். நான்? -

நழுவி விழுந்த முக்காட்டை இழுத்து மூடிக்கொண்டு பதைபதைத்த நெஞ்சோடு நான் வேகமாக நெடுஞ்சாலையை நோக்கி திரும்பினேன். முத்துசாமியை நேருக்கு நேர் சந்திக்க நான் விரும்பவில்லை. பயத்தில் கால்கள் பின்னின.

நான் சிறுமியாக இருந்தபோது ஒரு சமயம் காரில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன். தெருச்சாக்கடை ஒன்றின் அருகே கேட்பாரற்றுப் படுத்துக் கிடந்தது ஒரு பூனைக்குட்டி. இரக்கப்பட்டு அதைத் தூக்கிக் காரில் வைத்துக் கொண்டு வீட்டிற்குள் சேர்த்து விட்டேன். பெடிகிரி நாய்கள், பூனைகள் இவைகளை வளர்க்கத்தான் அண்ணனுக்குப் பிரியம். நோயுற்ற சோனிப் பூனைக் குட்டியை வைத்துக்கொண்டு நான் கொஞ்சுவதைக் கண்டு அவர் கடும் கோபம் கொண்டார். ஒரு சில தினங்கள் சென்றன. எங்கள் வீட்டு வேலைக்காரன் ஒருவன்

அதைப்பிடித்து ஒரு சாக்குப்பையில் போட்டுக் கட்டி எடுத்துச் சென்று பல மைல்களுக்குப்பால் அவிழ்த்து விட்டு வந்தான். ஒழிந்தது சனியன் என்று எல்லோரும் நிம்மதியாக இருந்தனர். ஆனால் ஒரு நாள் அது எப்படியோ வீட்டைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு மியாவ்,மியாவ் என்று எங்கள் அண்ணன் அறைக்குள்ளே வந்து நின்று விட்டது. பழகின இடத்தைத் தேடிக் கொண்டு அலையும் அந்த அடிப்படை உணர்வு, மிருகங்களிடம் குடி கொண்டிருக்கும் தனிப்பட்ட அந்த குணம், என்னிடமும் இருந்திருக்க வேண்டும். எத்தனைதான் முயற்சித்தும் அந்த ஆவலை தடுக்க முடியாமல் பழகிய அந்த வீட்டைப் பார்க்க சோனி பூனையைப் போல் நான் புறப்பட்டேனல்லவா? வேண்டும் எனக்கு இந்தத் துன்பம்....

வீட்டுக்குத் திரும்பி விட்டேன். வாசலில் ஒரு கறுப்பு வண்ண அம்பாசிடர் கார் நின்று கொண்டிருந்தது. கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே அவசரமாகத் தோட்டத்திற்குள் நுழைந்தேன். வாசல் வராந்தா மீது கன்யாகுமரி உட்கார்ந்து கொண்டிருப்பதைக் காண எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சோம்பல் முறித்துக் கொண்டு அவள் எழுந்து நின்றாள். ''கடைக்கு நடந்தா போயிருந்தீர்கள்?'' புன்னகையுடன் கேட்டாள்.

இடையே சிவப்புநிற ராப்பான் மாக்ஸி பாவாடை! அதற்கு ஜோடியாகக் கறுப்பு ஜாக்கெட். கழுத்திலே ஜபமாலைபோல் கொட்டையான சிவப்புமணி மாலை, காதுகளில் பெரிய தங்க வளையங்கள். உதட்டிலே எப்பொழுதும போல் லேசான சாயப்பூச்சு. அழகான பெண். இந்த வேஷம் என்னத்திற்கு? எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. அவளை முறைத்துப் பார்த்தேன். ''என் போன்றவர்கள் கால்களைத்தானே நம்பி வாழவேண்டும்?

காருக்கு எங்கே போவோம்?'' கொஞ்சம் ஆத்திரமாகச் சொல்லி விட்டேன்.

எனது ஏமாற்றம், என் துக்கம் எல்லாம் அந்த பெண் மீது கோபமாக உருவெடுத்தது. ஆனால் அவள் அதை லட்சியம் செய்ததாகத் தோன்றவில்லை. பின்னாலேயே சரசரவென்று நடந்து வந்து வரவேற்பறை சோபாவிலே உட்கார்ந்து கொண்டாள். எனது ஆத்திரத்தை அடக்க மாட்டாமல் சாத்தியிருந்த ஜன்னல்களை நான் வேகமாக திறந்து விட்டேன். ''அன்றைக்கு ஒரு கார், இன்றைக்கு ஒரு கார், உங்கள் வீட்டில் எத்தனை கார்கள் உள்ளனவோ?'' ஏளனமாக நான் அவளைக் கேட்டேன்.

அவள் பதிலுக்கு கலகலவென்று சிரித்தாள்.''ஆன்ட்டி, நீங்கள் இன்று கோபமாக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது. வெளியே சென்றுவிட்டு வந்த அலுப்பு. அதனால் இப்படி பேசுகிறீர்கள். எக்கப்பாவுக்குக் கார்மோகம் அதிகம். அவர் நினைத்தால் உடனே வாங்கி விடுவார். அதற்கு நானா பொறுப்பாளி? வசதி உள்ளவர்கள் வீட்டில் பிறந்தது என் குற்றமா?''

யாரோ முகத்தில் அறைந்தது போலிருந்தது அவளது கேள்வி.

''அதுசரி, வந்து ரொம்ப நாழியாகக் காத்துக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. கொஞ்சம் சூடாக டீ தயாரிக்கிறேன். சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று உபசரித்தேன் எனது தவற்றை மறைக்க.

''ஆன்ட்டி! அதெல்லாம் தேவையில்லை. உங்கள் ஸீஸர் எப்படியிருக்கிறது என்று விசாரித்துவிட்டுப் போக வந்தேன். ரொம்ப நாழியாகி விட்டது. எனக்கு வீணை

வாத்தியார் வரும் நேரம்'' என்று கூறிவிட்டு என் பதிலுக்குக் காத்திராமல் சாப்பாட்டு அறைக்கு விரைந்தாள். அங்கிருந்த பிரிஜ்ஜைத் திறந்து குளிர்ந்த தண்ணீர்ப் பாட்டிலைக் கையில் எடுத்தாள். அருகில் டிவைடர்மீது வைத்திருந்த கண்ணாடி டம்ளரை எடுத்து நிரப்பினாள். ''ரொம்ப தாகம்! உங்களுக்குச் சிரமம் கொடுக்க விரும்பவில்லை'' என்று கூறிவிட்டுக் கள்ளச் சிரிப்புச் சிரித்தாள். வேகமாக ஒரே மூச்சில் தண்ணீரை உறிஞ்சிக் குடித்து விட்டு டம்ளரை மேஜைமீது வைத்தாள். ''உங்களைப் பிறகு பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு வேகமாகக் கிளம்பினாள்.

அவளுக்கு என்ன துணிச்சல்! தன் சொந்த வீடுபோல வந்து சாமான்களை இஷ்டப்படி கையாண்ட அவளது தைரியம் என்னைத் திகைக்கச் செய்தது.

''உண்மையில் நீ வீணை வாசிப்பாயா? நம்ப முடிய வில்லையே!'' என்று கேட்டேன். அந்தப் பொல்லாத பெண்ணைக் கொஞ்சம் மட்டம் தட்டிப் பேச விரும்பினேன்.

''ஒரு நாளைக்கு உங்கள் முன்னால் வீணை வாசித்துக் காட்டுகிறேன். பிறகு ஒப்புக் கொள்வீர்கள். பீ சியர்ஃபுல் டோன்ட் பி கிராஸ்'' என்று கூறிவிட்டு செல்லமாக எனது வலது கன்னத்தைத் தட்டிவிட்டுப பறந்தோடினாள்.

இந்தப் பெண் யார்? எங்கிருந்து வருகிறாள்? ஏன் விலாசம் கொடுக்காமல் ஓடி விடுகிறாள்.

# 7. தினேஷ் வந்து விடுவான்

அன்று இரவு நான் தூங்கவேயில்லை. என் நிலையில் திருமதி ஜோஷி இருந்திருந்தால் ஆறு தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாவது படுத்திருப்பாள். எனக்கு மருந்துகள் மீது அத்தனை பிடித்தம் இல்லை. எனவே முன்னறையில் வெகுநேரம் உட்கார்ந்திருந்தேன். அலுப்பு ஏற்பட்டு நித்திரை வர என் எஜமானியின் கடிதத்தை பன்முறை படித்தேன். எழுந்து உலாவினேன். ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை அந்தத் தூக்கம்.

நித்திரை இல்லாத அவஸ்தை ஒருபுறம். அமைதியில்லாமல் தவித்த உள்ளக் கொதிப்பு மற்றொரு புறம் என்று இரண்டும் என்னை வதைத்தன. இந்நிலையை ஏற்படுத்திக் கொண்டது நானே என்பது உண்மை. எனினும் என் கூடப் பிறந்த அண்ணன் என்னை ஒரேயடியாக வெறுத்து உதறிவிட்ட கொடுமை. அவர் என்பால் காட்டிய துவேஷம் எல்லாம் என் உள்ளத்திலே ஈட்டிகளாகப் பாய்ந்து வேதனை செய்தன.

என் தாய் மட்டும் உயிருடன் இருந்திருந்தால்... அவளைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் என் கண்கள் நீரை வடித்தன. நான் இந்த இழி நிலைமை அடைய அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா? பாராமுகம் இருக்கத்தான் அந்தத் தாய் உள்ளம் சம்மதிக்குமா? என்ன இருந்தாலுமம பெற்ற தாயின் அன்புக்கு ஈடே கிடையாது. எத்தனை முயன்றாலும் என் கண்முன் அந்த ஸ்பானிஷ் ஸ்டைல் வீடு மட்டும் வந்து நின்றது. என் இளமைப் பருவத்துக் கதைகளையெல்லாம் சிதைத்துவிட்டுத் தலை நிமிர்ந்து நின்று கொண்டிருந்த அந்த வீடு என் அண்ணனின் தற்போதைய

செல்வ நிலையின் அளவுகோல். ஆங்காரத்தின் உருவம். அந்தஸ்து மோகத்தின் சிறப்புச் சின்னம் என்பதை உணர்ந்து கொண்டேன்.

சிலர் எக்காலத்திலும் எந்த நிலையிலும் மாறுவதில்லை. அந்த ரகத்தைச் சேர்ந்தவர் என் அண்ணன். பிள்ளை பாக்கியம் இல்லாத அண்ணி என் மீது பாசம் வைத்திருந்தாள். ஆனால் அந்தஸ்து மோகத்தில் அவள் அண்ணனுக்கு சளைத்தவள் அல்ல. தங்கையென்றும் பிள்ளையென்றும் இருவரும் அன்று என்னைக் கொண்டாடினார்கள். இன்று? என் மீது அவர்களுக்கு எத்தனை அசட்டை! இதுபோன்ற கொடுமை யாருக்குமே ஏற்படக்கூடாது. துயரத்தை என்னால் தாளவே முடியவில்லை. தலையணை மீது முகத்தைப் பதித்துக்கொண்டு வெகுநேரம் அழுது கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை வேலைக்கு வந்த பூமா என்னை இரக்கமாகப் பார்த்தாள். ''உடம்புக்கு என்னம்மா? முகமெல்லாம் ஊதிக் கிடக்குது?'' கனிவுடன் விசாரித்தாள்.

''ஒன்றுமில்லை'' என்று மழுப்பிவிட்டு எனது காரியங்களைக் கவனிக்கலுற்றேன்.

இரவில் உள்ளத்தில் ஏற்படும் சிந்தனைக்கும் பகலில் உதிக்கும் எண்ணங்களுக்கும் இடையேதான் எத்தனை வித்தியாசம்! முதல்நாள் உறக்கம்இன்றி என் உள்ளத்தை வேதனை செய்த அந்த அழுத்தமான எண்ணங்கள் அனைத்தும் மறுநாள் காலை பளிச்சென்று வீசிய சூரிய கிரணங்கள் முன்னால் நிழலாகத் தேய்ந்து நினைவிற்குள் மறைந்தன.

அன்று பகல் தபாலில், தினேஷிடமிருந்து கடிதம் வந்தது. ''சித்தப்பாவின் உடம்பு பூரண குணமாகிவிட்டது.

நான் நாளை மறுநாள் வண்டியில் திரும்புகிறேன். என் வேலையைப் பற்றியும் உங்களைப் பற்றியும் மிகவும் கவலைப்படுகிறேன். என் கடமை மட்டும் என்னை அழைத்திராவிடில் நான் உங்களைத் தனியாகத் தவிக்க விட்டு வந்திருக்கமாட்டேன்....''

பலமுறை அக்கடிதத்தைப் படித்தேன். மனத்திற்கு உற்சாகமாக இருந்தது. தினேஷ் வந்து விடுவான். பைத்தியக்காரி போல் கடந்த சம்பவங்களை நினைத்துக் கொண்டு இங்குமங்கும் சுற்றிக் கொண்டிருக்க மாட்டேன். தினேஷைக் கவனிக்கவும், அவனுடன் பேசவும் அளவளாவவுமே பொழுது போதாது என்று பலவாறு கணக்கிட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

அன்று மாலைப்பொழுது வேளை வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. சமையலறையிலிருந்து நான் வெளிப்படுவதற்குள் வாசல் மணி கிணுகிணுத்தது. கதவைத் திறந்தேன். கன்யாகுமாரி நின்று கொண்டிருந்தாள். அவள் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அரக்குக் கரை போட்ட மயில் கழுத்து வண்ணக் காஞ்சிபுரம் பட்டுச் சேலையை உடுத்தியி ருந்தாள். அதற்கு ஏற்றதாக அவள் உடலைப் பற்றி இறுக்கமாக அவள் அணிந்திருந்த அரக்கு நிற ரவிக்கை அவள் பொன்நிற மேனியைப் பளபளக்கச் செய்தது. அவள் கழுத்தைச் சுற்றிக் கிடந்த சிவப்புக் கல் அட்டிகையையும், நெற்றியில் பளிச்சிட்ட குங்குமப் பொட்டையும் உற்றுக் கவனித்தேன். அந்த அலங்காரத்தில் அந்தப் பெண் மிகவும் அழகாக இருப்பதைக் கண்டு நானே சொக்கிவிட்டேன்.

''என்ன ஆண்ட்டி, அப்படிப் பார்க்குறீங்க?'' என்று பரிகாசமாகக் கேட்ட வண்ணம் அவள் கையிலிருந்த சிறு

பிரம்புக் கூடையுடன் உள்ளே நுழைந்தாள். இடைவரை தொங்கிக் கொண்டிருந்த பின்னலைத் தழுவியபடி அவள் அணிந்து கொண்டிருந்த ஜாதி மல்லிகையின் மணம் அவளை முந்திக் கொண்டு அறை முழுவதும் வீசியது.

''உட்காரம்மா, இதோ வந்து விட்டேன்'' என்று உபசரித்துவிட்டுச் சமையலறைக்குள் புகுந்தேன். சூடான தேநீரைப் பீங்கான் கெட்டிலில் நிரப்பிக் கொண்டு சில நிமிடங்களில் வெளிவந்தேன். ''நீ வரும் போதெல்லாம் எதுவுமே சாப்பிட மறுக்கிறாய். இன்று உன்னை விட மாட்டேன்'' என்று வேடிக்கையாகக் கடிந்து கொண்டு தேநீரைக் கோப்பைகளில் வார்த்து மேஜை மீது வைத்தேன்.

''இது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா ஆண்ட்டி?'' என்று தன் புடவையைத் தொட்டுக் காட்டி அவள் கேட்டாள் ஆவலுடன்.

''நீ போட்டுக்கொண்டு வந்த உடுப்புகளைவிடப் புடவையில்தான் நீ ரொம்ப அழகாக இருக்கிறாய். உன் அம்மாகூட அப்படித்தான் சொல்லியிருப்பாங்க. ஆமாம், இன்றைக்கு இன்னொரு காரா! ஏனம்மா,இந்தப் பெட்ரோல் விற்கும் விலைக்கு உங்கள் வீட்டில் இத்தனை கார்களா?'' வியப்புடன் விசாரித்தேன்.

''இல்லை ஆண்ட்டி, அம்மாவுக்கு ஒன்று, அப்பாவின் ஆபீஸ்கார் ஒன்று, எனக்கு காலேஜ் போய்வர ஒன்று அவ்வளவுதான். ஏதாவது ஒன்று ரிப்பேர் ஆகிவிட்டால் தான் நிலை எக்கச்சக்கமாகி விடுகிறது. அன்று ஸீஸர் வந்து விழுந்ததே, அது என்னுடைய அப்பாவின் கார். அவருக்குத் தெரியாமல் அதை எடுத்துக் கொண்டு வந்தேன். அதனால்தான் சீக்கிரம் போக வேண்டும் என்று அவசரப்பட்டேன். நேற்றுக்கூட அம்மாவின் காரை எடுத்து வந்திருந்தேன்'' என்று கூறிவிட்டு அவள் சிரித்தாள்.

''காரும் கையுமாகச் சின்னஞ்சிறு பெண் இந்த ஊரைச் சுற்றிக் கொண்டிருக்க உனக்கு அப்படி வெளியில் என்ன வேலை? உன் அம்மா கோபிக்க மாட்டார்கள்?'' என்று வினவினேன்.

அவள் சிரித்துக்கொண்டே மேஜையருகே வந்து அமர்ந்தாள். கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு டீயைச் சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினாள். சிரிப்பினால் ஒளியிட்ட அந்தக் கண்களில் திடீரெனக் கவலை திரையிடு வதைக் கண்ணுற்றேன். நெஞ்சம் துணுக்குற்றது.

''அயாம் வெரி ரெஸ்ட்லெஸ்'' என்றாள் அவள்.

''பணம், அந்தஸ்து, பெற்றோர்கள் இத்தனையும் இருந்தும் என்னம்மா உனக்குக் குறை? நீயேன் அமைதி யில்லாமல் தவிக்க வேண்டும்?'' என்று கேட்டேன்.

''பணமும அந்தஸ்து இருந்துவிட்டால் போதுமா? புரிந்து கொள்ளும் தாராள மனம் உள்ள பெற்றோர்கள் தேவையில்லையா? ஏனோ தெரியவில்லை என்னை யாரும் சரியாகப் புரிந்து கொள்வதில்லை ஆண்ட்டி! அதுதான் என் குறை. உதாரணத்திற்குப் பாருங்கள். நேற்று நான் என்ன பிசகு செய்தேன்? நீங்கள் என்மீது கோபமாக இருந்தீர்கள்!'' என்று முடித்தாள்.

படீர் என்று யாரோ என் கன்னத்தில் அடித்தது போன்ற அவமான உணர்வினால் ஒரு கணம் நான் செயலற்றுப் போய்விட்டேன். ''அயாம் ஸாரி! உன்மேல் எனக்கென்னம்மா கோபம்? யார் பெற்ற குழந்தையோ நீ. உன்னைக் கோபித்துக் கொள்ள எனக்கென்ன உரிமை இருக்கிறது?'' என் குரல் இரக்கத்தில் குழைந்தது.

தேநீரைப் பருகிவிட்டு அவள் எழுந்தாள். மீண்டும் அந்தக் கலகலப்பான பாவத்தை முகத்தில் ஒரு நொடியில் வரவழைத்துக் கொண்டு விட்டாள். சாமர்த்தியக்காரி.

முன்னறைக்குள் வந்து உட்கார்ந்த கன்யா மேஜை மீது கிடந்த நர்மதாவின் கடிதத்தைக் கூர்ந்து கவனித்தாள். "ஆன்ட்டி! உங்களுடைய கடிதங்களை மரியாதையின்றி படிப்பதாகத் தப்பாக நினைக்காதீர்கள். கடிதம் இங்கிலீஷில் ஆரம்பித்து இந்தியில் முடிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்" என்று சிரித்தாள்.

நானும் அவள் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டேன். கொஞ்ச நேரம் அந்தக் குறும்புக்காரப் பெண்ணிடம் பேச வேண்டும் என்ற ஓர் ஆவல் எனக்கு ஏற்பட்டது.

"என் எஜமானி கானடாவிலிருந்து எழுதியிருக்கும் கடிதம் ஆங்கிலத்தில் ஆரம்பித்து உணர்ச்சி வசத்தில் வார்த்தை வளம் போதாமல் இந்தியில் எழுதிவிட்டார்கள். நடுநடுவே குஜராத்தியிலும் எழுதியிருக்கிறார்கள்" என்றேன் வேடிக்கையாக.

"அப்படியென்றால்...?" அவள் வியப்புடன் கேட்டு முடிக்குமுன், எனக்கு ஆட்கிலம், இந்தி, குஜராத்தி, தமிழ் எல்லாம் எழுத, படிக்க, பேச வரும்" என்றேன்.

அவள் தலையை வேகமாக ஆட்டினாள். "நம்பமுடிய வில்லை. இவ்வளவு படித்திருக்கிறீர்கள். திறமைசாலியாக வும் தோன்றுகிறீர்கள். இந்த வேலைக்காரி பதவியைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லையா?" அனுதாபத்துடன் கேட்டாள். "திறமைகள் இருக்கலாம். அதிர்ஷ்டம், வாய்ப்பு, இவையெல்லாம் இருக்க வேண்டாமா?" பெருமூச் செறிந்தேன்.

“ஆண்ட்டி, மறுபடியும் சொல்கிறேன். என்னால் நம்ப முடியவில்லை. உங்கள் தோற்றம், படிப்பு இவற்றைக் கணக்கிட்டால் நீங்கள் ஒரு சாதாரண வேலைக்காரி என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை. நீங்கள் பேசும் தமிழைக் கேட்டால் நீங்கள் வேறு மொழியைச் சேர்ந்தவர் என்று நம்ப முடியவில்லை. உண்மையில் நீங்கள் ஒரு மிஸ்டிரியாக இருக்கிறீர்கள். அதனாலேயே என்னவோ எனக்கு உங்களை ரொம்பப். பிடித்திருக்கிறது. உங்கள் முகம் எங்கேயோ கனவில் பார்த்தது போன்ற உணர்வைக் கொடுக்கிறது” என்று விவரித்தாள்.

நெருப்பை மிதித்துவிட்டது போன்ற திகைப்பில் சில வினாடிகள் நான் மவுனமாக இருந்தேன். இந்தப் பொல்லாத குட்டி என்னை இப்படிப் பல வழிகளிலும் மடக்குகிறாளே” என்ற வியப்பில் நான் உடனே பேசவில்லை.

வரவேற்பறையில் மேஜைமீது நான் பிரித்து வைத்திருந்த புத்தகங்களை எடுத்துப் பார்த்துவிட்டு அவள் லேசாகச் சீட்டி அடித்தாள். “ஆஸ்கார் ஒயில்டு எழுதியவை - எனக்கு ரொம்பப் படிக்கும். உங்களுக்கு அவரது எழுத்து ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறதே”! ஆச்சரியப்பட்டாள்.

“ஏதோ பொழுது போக எதையாவது படித்துக் கொண்டிருப்பேன்” என்றேன் நான்.

“ஒரே எழுத்தாளரின் எழுத்தை விரும்புகிறோம் என்றால் நமக்குள் அபிப்ராய பேதங்கள் இருக்க முடியாது. அதனால் இப்பொழுது ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். ‘ஜெனரேஷன் காப்’ என்று ஒரு வார்த்தை அடிபடுகிறதே அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?’

உரையாடல் ஒன்றுக்குள் சிக்கிவிட்ட பிரமையைக் கொடுத்தது அந்தக் கேள்வி. தயங்கினேன் பின்னர்,

''உன்னைப்போல் சின்னவளாக இருந்தபோது கேட்டிராத ஒரு வார்த்தை, இந்தக் காலத்து இளைய தலைமுறையினர் கூறும் சமாதானங்களைச் சுமக்கும் ஒரு புதிய வார்த்தை வளம்''.

என் பதிலைக் கேட்ட அவள் கைகொட்டிச் சிரித்தாள். அவளது கன்னம் குழிந்தது- கண்கள் மினுக்கிடுவதை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தக் கொஞ்சல் காரி என்னை மயக்கிக் கொண்டிருந்தாள். ''இவள் பார்வை யில் ஓர் இளைஞன் அகப்பட்டுக் கொண்டால்.....?'' என்று வேறு கோணத்தில் அவளைப் பற்றி மனதிற்குள் ஆராய்ந்து கொண்டிருந்தேன்.

''நான் சொல்லட்டுமா?'' அவளது கேள்வி எனது சிந்தனையைக் கலைத்தது. ''வயதில் பெரியவர்களான நீங்கள் எங்களைப் புரிந்து கொள்ளாததனால் உங்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட இடைவெளிதான் ஜெனரேஷன் காப் என்பது'' என்றாள் அழுத்தமாக.

''இதோ பார் கன்யா! என் எஜமானி வீட்டில் உன்னையொத்த பேரன் பேத்திகள் ஏழுபேர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் நான் சிறு வயதிலிருந்தே அறிவேன். ஆனால் ஒருவரையும் என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஏன், அவர்களது பாட்டியே அவர்களைத் தெரிந்து கொண்டதில்லை. நீங்கள் எல்லோரும் வாழ்க்கை யில் என்ன விரும்புகிறீர்கள். என்னத்தைத் தேடிக் கொண்டு அலைகிறீர்கள். உங்கள் குறிக்கோள் என்ன? ஒன்றுமே எங்களுக்குப் புரிவதில்லை. உதாரணமாக, எஜமானியின் பேரன் ஒருத்தன், பதினெட்டு வயதுப் பையன். படிப்பில் கெட்டிக்காரன். சகல சௌகரியங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தவன், வாழ்க்கையில் அவனுக்கு என்ன குறை என்றே தெரியாது. திடீரென்று ஒருநாள் இரவு பாட்டியின்

அலமாரியிலிருந்து இரண்டாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு எங்கேயோ மறைந்து விட்டான். அவனைத் தேடாத இடம் இல்லை. கேட்காத ஆளில்லை. பத்திரிகை களில், நவீன்! நீ எங்கே போய் விட்டாய்? உன் பாட்டியும் பெற்றோர்களும் கவலையில், துடிக்கிறோம். கோபத்தை மறந்து வீடு வந்து சேர் - என்று பலவிதமான விளம்பரங்கள் செய்து அலுத்துப் போனோம். கவலையில் பாட்டி உடல் நலிந்து போனாள். போகாத கோயில் இல்லை என்று அலைந்து கொண்டிருந்த அவனது தாய் நோயிலே படுத்துவிட்டாள். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பணம் முழுவதையும் கரைத்து விட்டு இளைத்துத் துரும்பாகி, தானே வீட்டைத் தேடிக் கொண்டு வந்தான். இன்று வரை அவன் எதற்காக வீட்டை விட்டு ஓடினான் என்பது யாருக்கும் புரியாத ஒரு மர்மம்'' என்றேன் சிறிது கோபத்துடன்.

''அவனுக்கு வாழ்க்கையில் எக்ஸைட்மெண்ட் தேவைப்பட்டிருக்கும். கிளம்பி விட்டான்'' என்றாள்.

''இப்படித்தான் உன்னைப்போல் சட்டென்று பதிலளிக்கும் பேத்தி ஒருத்தி என் எஜமானிக்குகூட இருக்கிறாள். சாப்பாட்டு வேளையில் மேஜையில் பாட்டி எதிரே உட்கார்ந்து அவளை நிம்மதியாகச் சாப்பிட விடாது வம்பு செய்து கொண்டிருப்பாள். 'இன்று குழம்பு நன்றாகவே இல்லை' என்று என் எஜமானி அலுத்துக் கொண்டால், 'நாம் சொல்லிக் கொடுத்தபடி சமையற்காரி சமைத்தி ருக்கிறாள். தப்பு நம்முடையது' என்று பட்டென்று பதிலளிப்பாள் பேத்தி. என் எஜமானி கோபத்துடன் பாதிச் சாப்பாட்டில் எழுந்துபோய் விடுவாள். இப்படி அடிக்கடி எங்கள் வீட்டில் பெரிய யுத்தம் நடப்பது வழக்கம். வேண்டுமென்றே குறுக்கே பேசிப் பெரியவர்களிடம்

தர்க்கம் செய்ய வேண்டும் என்று ஆசைப்படும் இளம் உள்ளங்களை எங்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.''

''நீங்கள் சொல்வதிலும் ஒரு பாயிண்ட் இருக்கிறது. வயதானவர்கள் இளைஞர்கள் இருவர் இடையே உள்ள இடைவெளி நெருங்கிச் சிறிதாக வேண்டுமென்றால் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முயலவேண்டும். இதையாவதது ஒப்புக் கொள்கிறீர்களா?'' முடிவில் அவள் கேள்வி விடுத்தாள்.

''ஒருவரையொருவர் புரிந்து கொள்ள வேண்டு மென்றால் நமது எண்ணங்களை ஒளிவு மறைவின்றிப் பரிமாறிக்கொள்ள வேண்டும். அபிப்ராயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் எத்தனையோ துன்பங்கள், வீணான கஷ்டங்கள் இவற்றைத் தவிர்க்க முடியும்'' பெருமூச்சு விட்டேன் நான்.

கடியாரத்தை உற்றுப் பார்த்துவிட்டு அவள் எழுந்திருந்தாள். ''உங்களை அறிந்து கொள்ள முயல்கிறோம். அதற்கு முன் கூட்டியே எனது காணிக்கை'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு மேஜைமீது அவள் வைத்திருந்த பிரம்புக் கூடையை எடுத்து என் முன் நீட்டினாள். ''உங்களைப் பார்த்தால் ரொம்ப ஆசார சீலராகத் தோன்றுவதால் ஒரு சமயம் எங்கள் வீட்டில் தயாரித்த. பலகாரங்களைச் சாப்பிட மாட்டீர்களோ என பயந்து தான் பழங்களை எடுத்து வந்தேன்'' குறும்புத்தனமாகச் சிரித்தாள்.

இப்போது அந்தப் பெண்ணை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. துணிச்சல்காரி, வாயாடி, பெரிய மினுக்கி. ஆனால் கபடமற்ற சுபாவம். கையை நீட்டி அவள் தந்த பரிசைப் பெற்றுக் கொண்டேன். அவள் தனது கைப்பையைத் திறந்து ஒரு துண்டுக் கடிதத்தில் எங்கள் வீட்டு டெலிபோன் நம்பரைக் குறித்து கொண்டாள்.

''மறுபடி சமயம் கிடைக்கும்போது பார்க்கிறேன்'' அவள் வேகமாக வெளியே புறப்பட்டாள்.

''ஏய்! மின்னல் மோகினி! உன் விலாசத்தை எனக்குத் தெரிவிக்கக்கூடாதா'' அன்புடன் அதட்டினேன்.

பையிலிருந்து இன்னொரு துண்டுக் காகிதத்தில் எழுதி நீட்டினாள். ''ஆன்ட்டி, மன்னித்துக் கொள்ளுங்கள். இனி தாமதிக்க முடியாது. அப்பாவிற்கு உடம்பிற்கு சுகமில்லை. வீட்டில் இருக்கிறார். என் தாயார் மீட்டிங்கி லிருந்து சீக்கிரம் திரும்பினாலும் திரும்பி விடுவார். என்னைக் காணா விட்டால் கோபிப்பார்கள். வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே பறந்தோடினாள்.

தெரு முகப்பிலே அவளது கார் மறையும்வரை நின்று கவனித்துவிட்டு உள்ளே வந்தேன். அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. மின்விளக்கைப் பொறுத்தி விட்டுக் கை கால்களைக் கழுவிக் கொண்டு வந்தேன். பூஜையறை குத்துவிளக்கை ஏற்றி வைத்துக் கொஞ்ச நேரம் தியானம் செய்தேன். பிறகு முன் அறையில் வந்து உட்கார்ந்து கொண்டேன். வழக்கம்போல் ஸீஸர் ஓடிவந்து என் கால் அருகே தரையில் படுத்துக் கொண்டது.

விர் என்று ஜன்னல் வழியே வீசிய காற்று அவள் வைத்துவிட்டுப்போன கடிதத் துண்டைப் பறக்கவிட்டது. அருகே தரையில் விழுந்த அதை எடுத்துப் பார்த்தேன். தலைப்பில் மயூரா பிரிண்டிங் ஒர்க்ஸ், ஹோட்டல் மையூரா, மயூரா சூப்பர் மார்க்கெட் என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பெயர்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன. தொலைபேசி எண் களும் அத்துடன் வரிசையாகக் கொடுக்கப் பட்டிருந்தன. அதன் கீழே அவள் மணியான கையெழுத்தில் எழுதியிருந்த அவள் வீட்டு விலாசத்தைப் பார்த்தேன். மயூரவாகன்,

கனகவிலாஸ், நம்பர் 20 விக்டோரியா அவென்யூ, நுங்கம்பாக்கம். என் தலை சுற்றியது, உடல் பதறியது, இவள் இந்தக் கன்யாகுமரி மயூரவாகன் மகளா? என் அண்ணன் மகளா? இதென்ன சோதனை... நெஞ்சு படபடக்க சோபாவிலே அப்படியே சாய்ந்துகொண்டு விட்டேன். கண்கள் தாமே அழுதன.

## 8. கன்யாவின் ஏக்கம்

**க**னகவிலாஸ் அண்ணன் அந்தப் பெயரை மட்டும் அழிக்கவில்லை. அந்தக் காலத்தில் அப்பா உச்சநிலையில் இருந்த சமயம் அம்மாவின் பெயர் வைத்துக் கட்டிய பங்களா தான் கனகவிலாஸ். அவர்கள் காலம் முடிந்து விட்டது. அவர்கள் பெற்ற செல்வமகள் அவ்விடத்திலிருந்து போய் விட்டாள். அவர்கள் கட்டிய பங்களா தரைமட்டமாகி அதனிடத்தை அண்ணன் கட்டிய அழகு மாளிகை எடுத்துக் கொண்டுவிட்டது. இப்படி எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் கனகவிலாஸ் என்ற பெயர் மட்டும் மாறவில்லை.

சில சமயம் எனக்கு அண்ணனது மன இயல்பே புரிவதில்லை. அம்மா மீது அத்தனை பக்தி, அன்பு, அதனால் அவர் பெயரை மறக்க இஷ்டப்படாமல் அதைத் தமது புதிய பங்களாவுக்குச் சூட்டியிருக்கிறார். ஆனால் அந்த அம்மா பெற்ற தங்கை? அவள் எக்கேடு கெட்டுப் போகட்டும் என்று எவ்வளவு சுலபமாக மறந்து ஒதுக்கி விட்டார்! அந்தஸ்திற்கும் கௌரவத்திற்கும் முன்னால் கூடப்பிறந்த தங்கை துச்சமாகி விட்டாள் அல்லவா?

வெகுநேரம் என்னை மறந்து உட்கார்ந்திருந்த நான் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். மறுபடியும்

எண்ணங்கள் ஓடின. என் அண்ணனுக்கு அப்போது பிள்ளையில்லாதிருந்தது. அப்படியென்றால் இந்தக் கன்யாகுமரி.

நான் அவர்களை விட்டு வெளியேறிய பின்னர் பிறந்த பெண்ணாக இருக்க வேண்டும். ஆமாம் அன்று அவள் சொன்னாளே தேவி கன்யாகுமரியை வேண்டி அவர்கள் தவமிருந்ததனால் அப்பெயரை வைத்தார்கள் என்று....

அந்தப் பெண்ணின் தோற்றத்தை மறுபடி நினைவில் நிறுத்தி ஆராய்ந்து பார்த்தேன்.... சந்தேகமில்லை. அவள் என் அண்ணன் மயூரவாகன் மகள்தான். எடுப்பான அந்த மூக்கு காதளவு ஓடிய அந்தக் கண்களின் பொலிவு, பேசும் போது தன்னையுமறியாது இடது தோள் பட்டையைச் சிறிது குலுக்கிய அந்தப் பழக்கம். எல்லாம் மயூரவாகனது மகள் என்று பறைசாற்றின. உற்றுப் பார்த்தால் என் அண்ணி ரேவதியின் சாயலும் அவளிடம் இருந்தது புலனாகியது. அந்த முகவாய், கள்ளச் சிரிப்பு எல்லாம் அப்படியே ரேவதி வந்து நிற்பது போல் அல்லவா இருக்கிறது, என்ன ஆச்சரியம்! இந்த உருவ ஒற்றுமை அவள் சொன்ன பிறகு தானே எனக்குப் பளிச்சென்று விளங்குகிறது? எனக்கிருந்த மனக் குழப்பத்தில் ஆரம்பத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

என் அண்ணன் என்மீது கொண்டிருந்த அன்பை அபகரித்துக்கொண்டு நானிருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்ட அந்தப் பெண்ணை மீண்டும் ஒரு முறை நினைத்துப் பார்த்தேன். ஒரு சின்ன பொறாமை. இவள் என் அண்ணன் மகள். என்னுடைய நெருங்கிய உறவுப் பெண், எங்கள் குடும்ப சங்கிலியில் புதிதாக ஏற்பட்ட ஒரு பிணைப்பு என்று பெருமையில் பூரித்தேன். இன்பமும் துன்பமும் கலந்த ஒரு விசித்திர உணர்விலே நான்

தவித்துப்போனேன். இன்னொரு இரவும் தூக்கமின்றிக் கழிந்தது.

மறுநாள் காலை வெள்ளிக்கிழமை. காலையில் எழுந்து ஸ்நானத்தை முடித்துக்கொண்டு பூஜையறையில் வேலையில் ஈடுபட்டேன். வெள்ளிக்கிழமை வந்துவிட்டால் பூஜையறை, குத்துவிளக்கைத் தங்கம்போல் மின்னத் தேய்த்துக் கழுவி சுத்தப்படுத்தி ஏற்றிவைத்துப் பார்க்கா விட்டால் என் மனம் சமாதானமடைவதில்லை.

பூமா வேலையை முடித்துக்கொண்டு வெளியே போகத் தயாரானதைக் கண்டதும்தான் எனக்கு ஞாபகம் வந்தது. கன்யா விட்டுப்போன அந்தப் பழக்கூடை அப்படியே மேஜைமீது இருந்தது. என்ன கஷ்டம் வந்தபோதும் என் அண்ணன் வீட்டில் நான் கை நனைப்பதில்லை. அவர்கள் வீட்டிலிருந்து துரும்பைக்கூட ஏற்றுக் கொள்வதில்லை என்று என் கணவர் மரணமடையுமுன் நான் எனக்குள் ஒரு சத்தியம் செய்து கொண்டிருந்தேன். அந்தத் திட விரதத்தை இப்பொழுது கைவிட முடியுமா? இந்தப் பெண் கொண்டு வந்து கொடுத்த இந்தக் காணிக்கையை நான் எப்படி ஏற்க முடியும்? முதலில் ஆத்திரத்தில் அந்தப் பழங்களை அப்படியே குப்பைத் தொட்டியில் வீசிவிட வேண்டும் என்று எண்ணினேன். எத்தனையோ மக்கள் ஒரு வேளை சாப்பாட்டிற்கு இல்லாது பட்டினியால் வாடும் போது நல்ல பழங்களை வீணாக எறிவது மகாபாவம் என்று மனச்சாட்சி உறுத்தியது. வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த வேலைக்காரியைக் கை தட்டி அழைத்தேன். ‘நேற்று பூஜையில் வைத்த பிரசாதம். உன் குழந்தைகளுக்குக் கொடு’ என்று பழங்களை அவளிடம் கொடுத்தேன். அவளுக்கு ஒரே திகைப்பு.

தினேஷ் மறுநாள் காலை வரப்போகிறான் என்று நினைத்துக் கொண்டதும் எனக்குச் சிறிது மன ஆறுதல் ஏற்பட்டது. வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. கதவைத் திறப்பதற்குள் பொறுமையற்று வாயில்மணி கிணுகிணுத்தது.

''நமஸ்தே ஆண்ட்டி!'' என்று கூறிய வண்ணம் வாசலில் வந்து நின்றாள் கன்யாகுமரி. இன்றைக்கு அவள் வேறு ஒரு அலங்காரத்தில் புறப்பட்டிருந்தாள்.

நீலப்புள்ளி வைத்த வெள்ளை வாயில் சேலை - தரையைப் பெருக்கிய முந்தானையில் அம்பாரியிட்ட யானைகள் ஊர்வலமாகச் செல்லும் காட்சி. கழுத்தில் ஒற்றைச் சரமுத்துமாலை, காதுகளில் முத்தணி இந்த அலங்காரத்திற்குச் சிகரம் போல் தலையில் பெரிய கொண்டை. அதிலே வெள்ளை ரோஜாப்பூ. நெற்றியில் கறுப்பு சாந்துப் பொட்டு. கண்களில் மை, உதட்டில் சாயம். அந்த மாயச் சிரிப்பு. கைகளில் ஒரு அடுக்குப் புத்தகங்கள் - அசைந்து ஆடிக்கொண்டு உள்ளே வந்தாள் அவள்.

''நீ என்ன ஏதாவது மாடல் பண்ணப் புறப்பட்டி ருக்கிறாயா? தினமும் ஒருவித அலங்காரத்தில் வருகிறாய்?'' கேட்டுக் கொண்டே அவள் அழகைப் பார்த்துப் பரவச மானேன். இந்த மோகினி எனக்குச் சொந்தமானவள். என் அண்ணன் மகள் என்று என் இதயம் ஆனந்த தாளமிட்டது. எனது கோபமெல்லாம் மறந்து அந்தக் கண்ணாடிக் கன்னங்களில் முத்தமிட வேண்டும் போன்ற ஒரு வேகம் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு ''உட்கார்!'' என்று உபசரித்தேன்.

''ரெஸ்ட்டாக இருக்கும்போது என்னென்னவோ செய்கி றோம் இல்லையா? விதவிதமாக உடுத்திக் கொண்டாலாவது

மனதிற்கு உற்சாகமாக இருக்காதா என்று முயற்சிக்கிறேன்'' அவள் புத்தகங்களை மேஜைமீது வைத்து விட்டு ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

''பெரிய மனவியல் நிபுணர்போல் பேசுகிறாய். கெட்டிக்காரி. ஆமாம் இதெல்லாம் என்ன?'' என்று புத்தகங்களைச் சுட்டிக் காட்டினேன்.

''இன்னொரு காணிக்கை. எனக்குப் பிடித்தமான புத்தகங்களை நான் விலைக்கு வாங்கிப்படித்தபின் சிநேகிதிகள் யாருக்காவது படிக்கக் கொடுத்து விடுவது வழக்கம். இந்த முறை இவைகளை உங்களுக்குக் கொண்டு வந்தேன்'' என்றாள்.

''என்னத்திற்கு நீ இந்தச் சிரமம் எடுத்துக் கொள்கிறாய்? உன்னிடமிருந்து பெற்றுக் கொண்டேயி ருந்தால் நன்றாக இருக்குமா? நானும் ஏதாவது திருப்பிக் கொடுக்க வேண்டும். உன்னைப் போல் என்னால் பரிசுகள் வாங்கிக் கொடுக்கக் கட்டுப்படியாகாதே'' என்றேன் மனத்தாங்கலுடன்.

''உங்களால் கொடுக்க முடியும் ஆண்ட்டி! காசு பணம் செலவழிக்கத் தேவையில்லை. மனம் மட்டும் இருந்தால் போதும்'' என்று கூறிவிட்டு எழுந்து என் அருகில் வந்தாள். ''அன்பை அள்ளிக் கொடுக்க முடியாதா? சொல்லுங்க'' சவால் விடுத்தாள். ''அடிக்கடி இங்கே ஓடி வந்து ஏன் உபத்திரவப் படுத்துகிறேன் என்று கேட்கமாட்டேன் என்கிறீர்களே?'' அவள் கேட்டாள்.

''எங்கள் ஸீஸரைக் காயப்படுத்தினாய். அது குண மடைந்துவிட்டதா என்று தெரிந்து கொள்ள வேண்டியது உன் பொறுப்பு - அதனால் வருகிறாய்''.

''உண்மையில் ஆண்ட்டி,அதற்காக நான் வருவதில்லை. எனக்கு ஏனோ உங்களுடன் பேசவேண்டும் என்று ஒரு ஆவல் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் முகம் எங்கேயோ பார்த்த முகம் போல் என் நினைவில் சதா நிழலாடுகிறது. இன்னும் சொல்லப்போனால் உங்களைப் பார்த்தால் எனது அப்பாவைப்போல் ஜாடையிருப்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறது.''

நெஞ்சம் பதைபதைத்து. நான் வார்த்தைகள் தடுமாற நின்றேன். 'தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் முடிச்சுப் போடுகிறாயே?'' என்று குழறினேன் கலவரத்தில்.

இன்னும் அருகில் நெருங்கி வந்து நின்றாள். ''உண்மையாகவே சொல்கிறேன் ஆண்ட்டி. அத்தை இப்போது இருந்தால் ஏறக்குறைய உங்கள் வயதுடையவளாக இருப்பாள். அத்தையின் போட்டோ ஒன்றை என் அறையில் மேஜைமீது வைத்துக் கொண்டிருக்கிறேன். சாயலில் நீங்கள் அந்தப் படத்தில் உள்ள பெண்ணைப்போல் இருக்கிறீர்கள்.''

உணர்ச்சி வசத்தில் அவள் உதடுகள் துடிப்பதைக் கண்ணுற்றேன். ''ஆமாம், இப்போது உன் அத்தை எங்கே?'' மெல்ல வினவினேன்.

''என் அப்பாவுக்கும் அத்தைக்கும் மனஸ்தாபமாம். அதனால் எங்களை விட்டுத் தன் கணவருடன் வட நாட்டிற்குப்போய் விட்டாளாம். ஒருசில வருடங்களில் அவள் கணவர் இறந்துவிட்டாராம். அத்தையும் சில மாதங்களில் அவரைத் தொடர்ந்து காலமாகிவிட்டார்களாம். இதெல்லாம் அப்பா சொல்லத்தான் எனக்குத் தெரியும்.''

படார் என்று மண்டையில் அடித்தாற்போல் வேதனையில் துடித்தேன். என் அண்ணன் என்னை

வெறுத்ததோடல்லாமல் நான் உயிரோடு இருப்பதைக் கூடக் கேட்க விரும்பாமல் என்னைச் சாகடித்துக் குழி தோண்டிப் புதைத்தும் விட்டாரா?

''ஐயோ பாவம்,'' என்று பெருமூச்சு விட்டேன். கட்டுப்படுத்த முடியாது புரண்ட கண்ணீரை அடக்கச் சமையலறைக்குள் வேகமாக நுழைந்தேன். நான் கண் களைத் துடைத்துக் கொண்டு தேநீர்க் கோப்பைகளை எடுத்துத் தட்டில் அடுக்குவதற்கு அவள் சமையலறைக்குள் சுவாதீனமாக நுழைந்தாள்.

''என் சிநேகிதி ஒருத்தியைப் பார்க்கப் புறப்பட்டேன். வழியில் இப்படியே உங்களையும் பார்க்கலாம் என்று வந்தேன். எனக்கு டீ இதெல்லாம் தேவையில்லை. ஆண்ட்டி, எனக்கு உங்களிடம் சில விஷயங்கள் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. ந்ான் யாரோ நீங்கள் யாரோ என்று அசட்டை செய்யாமல் நான் சொல்ல வந்த விவரங்களைக் கேட்டு எனக்கு ஆலோசனை சொல்ல வேண்டும்'' அவள் குரல் கெஞ்சியது. அந்த நீண்ட கருவிழிகள் கண்ணீரில் மின்னின. எனக்கு துக்கம் தாள முடியவில்லை.

''அம்மா கன்யா! நீ எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு திண்டாடுகிறாய். வருந்துகிறாய். நான் அமைதி யாக உன்னுடன் உட்கார்ந்து வார்த்தையாடி ஆலோசனை சொல்லக்கூடிய அந்தஸ்தில் இல்லையே. உன் மனத்தில் ஏதாவது குறை இருந்தால் அதை உன் தாயாரிடம் மனம் விட்டுப் பேசி அவள் புத்திமதியைக் கேட்பது தான் முறை'' என்றேன்.

''ஆண்ட்டி! அப்படி முடிந்தால் இங்கே ஓடி வந்திருக்க மாட்டேன். எனக்கு எல்லாச் சுமைகளும் இருக்கின்றன.

ஆனால் என்னைப் புரிந்து கொண்டு அன்பைக் காட்டத்தான் வீட்டில் யாரும் இல்லை. என் அப்பாவுக்கு பிசினஸ்தான் உயிராக இருந்தது. அதை மேலே பெருக்கும் முயற்சியில் அவருக்கு வீட்டைப் பற்றிய அக்கறை இல்லை. குழந்தை களைப் பற்றி நினைப்பு இல்லை. இப்பொழுது நோயாளியாக வேதனையுடன் படுத்துக்கிடக்கிறார். தன்னையே கவனித்துக் கொள்ளமுடியாத இந்நிலையில் எங்களைப் பற்றிச் சிந்திக்க அவரிடம் உடலில் வலு இல்லை. உள்ளத்தில் உற்சாக மில்லை. அம்மாவோ என்றால் அவளுக்கும் எங்களைக் கவனிக்கப் பொழுது இல்லை. அப்பாவின் பிசினசை மேற்பார்வை இடுவது, கிளப்பிற்கு போவது கூட்டங்களில் பேசுவது என்று சதா வெளியே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். வேலைக்காரர்கள், கவனிப்பில் நானும் தம்பியும் எப்படியோ வளர்ந்து விட்டோம். ஆனால் உள்ளத்தில் உள்ள குறை என்னவோ பெரிய குறைதான். அதற்குத்தான் நான் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு இந்த அத்தை மட்டும் உயிரோடு இருந்தால் சிறுவயதில் விதவையாகி விட்டவள் எங்களுடன் தானே இருந்திருப்பாள்? வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு இழப்பை எங்கள் மூலம் பூர்த்தி செய்து கொள்ள முயற்சித்திருப்பாள் அல்லவா? எங்கள்மீது பரிபூரண அன்பு வைத்திருப்பாள் அல்லவா?''

அவள் குரல் துக்கத்தில் தடைப்பட்டது.கண்களில் பெருகிய கண்ணீரை அவளும் சாமர்த்தியமாகக் கட்டுப் படுத்திக் கொண்டு கள்ளச் சிரிப்புடன் என்னைப் பரிதாப மாகப் பார்த்தாள் ''இதையெல்லாம் கேட்க எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்றேன் நான் இரக்கமாக.

''என்ன காரணமோ தெரியவில்லை. என்னையறி யாமலே உங்கள் மீது எனக்கு ஒரு பற்றுதல் ஏற்படுகிறது. ஐ லைக் யு வெரிமச் ஆண்ட்டி'' என்று கூறிக் கொண்டே

என்னை இறுகப் பிடித்து மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

உணர்ச்சி வசத்தில் என்னால் சில வினாடிகள் பேசவே முடியவில்லை. ''அப்படியென்றால் என்னை அத்தை யென்றே இனிமேல் அழையேன்? இந்த ஆண்ட்டி என்னும் உறவுமுறை எனக்குப் பிடிக்கவில்லை'' என்றேன் ஆனந்தத்துடன்.

''அஃப்கோர்ஸ்! இனி உங்களை அப்படித்தான் அழைப்பது என்று முடிவு செய்து விட்டேன்.அத்தை போய்விட்டு வரட்டுமா?'' என்று கொஞ்சலாகக் கேட்டு என் கன்னங்களைத் தன் பொன்விரல்களால் வருடினாள். மறுகணம் பறந்தோடி விட்டாள்.

எனக்கு இப்போது புரிந்தது. இந்தத் துணிச்சலான போக்கு, கள்ளச் சிரிப்பு அட்டகாசமான பேச்சு இவை அனைத்தும் இந்தப் பெண் ஏற்றுக் கொண்டுள்ள வெளிவேஷங்கள். உண்மையில் இவள் அன்பைத்தேடி அமைதியின்றி அலையும் ஒரு பேதைச் சிறுமி.

துக்கத்தில் என் கண்கள் கலங்கின. வெகுநேரம் அவள் போன திக்கையே நோக்கி வெறித்துப்பார்த்துக் கொண்டு நின்றேன்.

## 9. ஆயிரம் கண்கள்

அன்று மாலை, எனது பூஜையை முடித்துக் கொண்டு வரவேற்பறை விளக்கை ஏற்றினேன். சற்று ஓய்வாக இருக்கும் நிமித்தம் கன்யா கொண்டு வந்து கொடுத்த புத்தகங்களுடன் வந்து தரையில் உட்கார்ந்து கொண்டேன்.

ஸீஸர் ஓடிவந்து என்மீது இடித்துக் கொண்டு அருகே காலடியில் படுத்துக்கொண்டது. நான் எங்கிருந்தாலும் கூட என்னுடன் நெருங்கி இருப்பதில் அதற்கு ஒரு திருப்தி. இந்தப் பெண் எனக்குப் படிக்க என்னவிதமான புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறாள் என்று ஆவலுடன் அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். டெலிபோன் மணி அடித்தது. பம்பாயிலிருந்து ஏதாவது செய்தியா? கவலையுடன் எழுந்திருந்த போனைக் கையில் எடுத்தேன்.

''ஹலோ அத்தை!'' தேனாகக் காதில் பாய்ந்தது மறுபுறமிருந்து கன்யாவின் குரல்.

உடலும் உள்ளமும் பூரிக்க, ''ஏன் அம்மா, என்ன விசேஷம்?'' என்றேன் ஆவலுடன்.

''உங்களிடம் பேச வேண்டும் என்று தோன்றியது அதனால் அழைத்தேன். கைவேலையாக இருக்கிறீர்களா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை,பேசு'' என்று உற்சாகப் படுத்தினேன். என் அண்ணன் மகளுடன் போன் மூலம் உறவாடுவதில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, எனக்கே ஆச்சரியமாக இருந்தது.''

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததனால் அம்மா அவரை மெடிகல் செக்கப்பிற்கு ஸ்பெஷலிஸ்ட்டிடம் அழைத்துப் போயிருக்கிறார்கள். வர நேரமாகும். அதனால் உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேசலாம் என்றுதான் போனை எடுத்தேன்'' என்றாள்.

''என்னம்மா அந்த முக்கிய விஷயம்? சொல்லு கேட்கிறேன்'' என்றேன் சற்றுக் கலவரத்துடன்.

“காலையில் நான் வெளியிலிருந்து திரும்பும்போது அம்மா வீட்டில் இருந்தார்கள். நீங்கள் சொன்னது போல் அவர்கள் என்னை மிகவும் கோபித்துக் கொண்டார்கள். அம்மா என்னை இப்படிக் கோபித்துக் கொள்வது இதுதான் முதல் தடவை. ‘எங்கே இப்படிக் காரை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றுகிறாய்? லீவு நாட்களில் வீட்டில் இருப்பதற் கென்ன?” என்று இரைந்தார்கள். அவர்கள் ஏன் கோபித்துக் கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியுமாதலால் ரொம்பக் கவலையாக இருக்கிறது அத்தை” அவள் குரல் கரகரத்தது.

என் மனம் வேதனைப்பட்டது. “பெரியவர்கள் நல்லதுக்குத்தான் சொல்லுவார்கள். சொன்னதைக் கேட்டால் உனக்குத்தானே நன்மை?” என்றேன் பரிவுடன்.

“இல்லை அத்தை. விஷயம் முழுவதும் உங்களுடன் ஒளிவு மறைவு இன்றிப் பேசி விடுகிறேன். பிறகு நீங்கள் ஒரு முடிவு சொல்லுங்கள். அந்த விஷயத்தை இன்று இப்போது பேச முடியாது. நான் சில நாட்கள் அந்தப் பக்கம் வரமாட்டேன். மறுபடி காலேஜ் திறந்த பின்னர் இடைவேளையின்போது வந்து பார்க்கிறேன். சரிதானே!” என்று கேட்டாள்.

“அப்படியே செய். ஆமாம். உங்கப்பாவிற்கு உடம் பிற்கு என்ன?” என்னையுமறியாது ஏற்பட்ட கவலையில் விசாரித்தேன்.

“பிஸினஸ் பிஸினஸ் என்று ஓடோடி அதை விருத்தி செய்யும் ஆத்திரத்தில் அப்பா தன்னைக் கவனித்துக் கொள்ள மறந்துவிட்டார். அதன் வினையை இப்போது அனுபவிக்கிறார். சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், இருதய பலவீனம் போதாதற்கு இப்போது கண்களில்கூடக் காட்டராக்ட் வேறு வந்திருக்கிறது. ஆள் வந்து எதிரில்

நின்றாக்கூடத் தெரிவதில்லை. நோய்களின் வேதனை தாளாது அடிக்கடி எரிந்து விழுகிறார்'' என்றாள்.

அண்ணன் மயூரவாகனை என்னால் நோயாளியாக நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. வாட்டசாட்டமாக ஆரோக்கியத்தின் உருவமாக எப்படி அலைந்து கொண்டிருந்தார் அந்தக் காலத்தில்! அந்த வலுமிக்க கரத்தால் ஓங்கி என் கன்னத்தில் அன்று அறைந்தபோது வலியில் என் உயிரே போனமாதிரி இருந்ததே! இன்று நினைத்தாலும் பயங்கரமாக இருக்கிறது. நோய்களினால் ஒன்றும் அவர் குணம் கெட்டுவிட வில்லை. எனக்கு தெரிந்த நாள் முதற் கொண்டு பெரிய முன்கோபி. பணத்திமிர் பிடித்தவர். சின்ன விஷயத்திற்கெல்லாம் ருத்ரதாண்டவம் ஆடுவார். இப்போது பல் பிடுங்கப்பட்ட கிழச் சிங்கமாக வியாதியுடன் படுத்துக் கிடக்காரா? இப்படி ஓடியது சிந்தனை.

''அத்தை! அதற்குள் தூக்கம் வந்துவிட்டதா?'' விஷமமாகச் சிரித்தாள் மறுபுறத்திலிருந்து அந்தக் கள்ளி.

''இல்லையம்மா உன் தாயாருக்குப் பாவம் எத்தனை பொறுப்பு என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''இப்பொழுதுதான் அப்பா நோயாளியாகி விட்டார். அம்மாவுக்கு இன்னும் கொஞ்சம் வேலை அதிகரித்து விட்டது. அப்பா நல்ல ஆரோக்கியத்துடன் தமது வேலை களைத் தாமே கவனித்துக் கொண்டிருந்தபோது கூட அம்மா ரொம்ப பிஸி லேடியாகத்தான் இருந்தார்கள். எல்லாம் தானே இழுத்துப் போட்டுக் கொள்ளும் வேலைகள், அத்தை! உண்மையைச் சொல்லப்போனால் அம்மாவுக்கு மேடை மோகம் அதிகம். ஊரில் நடக்கும் பல விழாக்களிலும் அம்மா கலந்து கொள்வது வழக்கம். வேண்டுமானால் பத்திரிகையை எடுத்துப் புரட்டிப் பாருங்கள். 'ரேவதி

மயூரவாகன் இப்படிச் சொன்னார்' என்று ஏதாவது ஒரு செய்தி இருந்து கொண்டே இருக்கும். 'அம்மாவுக்குக் கடிதம் போட வேண்டுமென்றால் விலாசத்திற்கு அலைய வேண்டாம். ரேவதி மயூரவாகன், கேர் ஆப் ப்ளாட்பாரம் என்று போட்டு விட்டால் வந்து விடும்' என்று நானும் தம்பியும் பேசிச் சிரிப்பது வழக்கம்' என்று கூறிவிட்டு அவள் கலகலவென்று நகைத்தாள்.

''போக்கிரிப் பெண்ணே! இது மரியாதையா? உன் தாயாரை நீ பரிகாசம் செய்கிறாயே?''

''நமது தவறுகளை நாமே உணர்ந்து கொண்டு சிரிக்க முடிந்தால் நாம் அறிவில் முதிர்ச்சி அடைந்து விட்டோம் என்று பொருள் அல்லவா?''

''அடியம்மா வாயாடி! உன்னுடன் தர்க்கிக்க என்னால் முடியாது'' என்றேன் சிரித்துக் கொண்டு.

அண்ணி ரேவதி பெரிய சமூக சேவகி என்ற விஷயம் மிக்க ஆச்சரியத்தைக் கொடுத்தது. இருக்கலாம் நான் போன பின்பு இந்தப் பித்து எல்லாம் புதிதாக ஏற்பட்டிருக்க வேண்டும். புருஷன் பணத்தைத் தேடிக்கொண்டு போனால் மனைவி புகழைத் தேடிக்கொண்டு போவது சரிதானே? எனக்குள்ளே சிந்தித்தேன்.

''அத்தை! கேட்கிறீர்களா?'' மறுபுறமிருந்து அவள் என்னை அதட்டினாள்.

''கேட்டுக் கொண்டேயிருக்கிறேன் அம்மா'' என்று உற்சாகப்படுத்தியதும் அவள் மேலே பேச ஆரம்பித்தாள்!

''அத்தை! ஒரு விஷயம் நடந்தது. அம்மா அதிகம் என் அறைக்குள் வருவதில்லை. காலையில் கார் விஷயமாக என்னைக் கோபித்துக் கொள்ள உள்ளே வந்தார்கள்.

அப்போது மேஜைமீது நான் வைத்திருந்த என் அத்தையின் போட்டோவை உற்றுப் பார்த்தார்கள். அதற்கு என் கையால் டிஸம்பர் பூமாலையை அலங்காரமாகப் போட்டிருந்தேன். ''மனிதர்கள் படத்திற்கு மாலை போட்டு வணங்குவது அப்பாவுக்குப் பிடிக்காது'' என்றார்கள்.

''நீ என்ன சொன்னே?'' என்றேன்.

''மனிதர்கள் தெய்வமாகி விட்டால் போடுவதில் தவறில்லை. அத்தை இறந்து போய்த் தெய்வமாகத் துணையிருக்கிறார்களே' என்றேன் நான். அம்மா பதில் சொல்லவில்லை. வேகமாக வெளியே சென்றார்கள். வராந்தா வின் வழியே தனது அறையை நோக்கிச் செல்லும்போது ஏதோ முணுமுணுப்பது கேட்டது. ஆவலுடன் எட்டிப் பார்த்தேன். ''பேச்சு, ஜாடை பழக்க வழக்கமெல்லாம் அவளேதான். இவள் உருவில் வந்திருக்கிறாள்'' என்று கேட்டது. அவர்கள் அறைக்குள் நுழையும் முன் புடவைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டதை கவனித்து நான் திடுக்கிட்டேன். அம்மாவின் கண்களில் நீர் வரவேண்டுமானால் அவருக்கு என் அத்தைமீது ரொம்ப அன்பு இருக்க வேண்டும் என்றுதானே பொருள்? அத்தை இறந்து போய் எத்தனையோ ஆண்டுகள் ஆகியும் அவளை அம்மா மறக்கவில்லை என்றுதானே அர்த்தம்? அதைப் பார்த்ததும் என் மனது ரொம்ப கஷ்டப்பட்டது'' என்றாள் கன்யாகுமாரி.

என் தொண்டையை என்னவோ ஒன்று அடைத்துக் கொள்ளவே என்னால் பேசமுடியவில்லை. கண்களில் நீர் பனித்தது. ஆமாம், உண்மைதான். என் அண்ணிக்கு அந்தஸ்து மீது ஆசை என்றாலும் என்மேல் ரொம்பப் பாசம் உண்டு. அந்தக் குடும்பச் சண்டையின்போது அண்ணன்,

பெண் என்றுகூட மதிக்காமல் ஆத்திரம் தாங்காது பிரம்பை எடுத்துக் கொண்டு என்னை அடித்து நொறுக்கத் தொடங்கியதும் அண்ணி தாங்க முடியாமல் கதறிக்கொண்டு குறுக்கே விழுந்து பல அடிகளைத் தன் முதுகில் வாங்கிக் கொண்டவளாயிற்றே. அண்ணி பாவம் எனக்காக எத்தனையோ விதத்தில் போராடினாள். அவளை நினைத்துக் கொண்டதும் கண்ணீர் கரை புரண்டது.

''என்ன அத்தை, பதிலே இல்லை?'' என்று கன்யா மறுபுறமிருந்து அதட்டினாள்.

''உன் அம்மாவைப்பற்றி எண்ணிப் பார்த்தேன். பரிதாபமாக இருக்கிறது. அவ்வளவுதான்'' என்று கூறி விட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டேன்.

''விஷயம் அவ்வளவுடன் நின்று விடவில்லை. அப்பா அம்மாவுடன் டாக்டரைக் காண வெளியே சென்றவுடன் நான் எங்கள் வேலைக்கார முத்துசாமியைக் கூப்பிட்டு அனுப்பினேன். ஓ! மறந்துவிட்டேன் சொல்ல, முத்துசாமி என்பவர் எங்கள் வீட்டில் வேலை செய்கிறாரே ஒழிய அவர் இந்த குடுமபத்துடன் ஒன்றியவர். ஒரு சொந்தக்காரர் போல. அவருக்கு எங்கள் குடும்பத்தைப் பற்றித் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை.''

இதைக் கேட்டவுடன் என் உடல் திகிலில் நடுங்கியது. வெட்கத்தினால் குப்பென்று ரத்தம் முகம் காதுகளில் பாய்ந்து நெருப்பாக எரித்தது.

''அவரைப் போய் என்னம்மா கேட்டாய்?'' கலவரத்துடன் வினவினேன்.

''அவரைக் கேட்டால் உடனே சொல்லிவிடுவாரா? ஆசாமி ரொம்ப அழுத்தமானவர். எங்கள் குடும்பத்தின் மீது

பற்றுதல் உடையவர். குழந்தைப் பருவத்தில் எனக்குச் சாதம் ஊட்டி வளர்த்தவர் என்ற அந்த உரிமையில் அவரை தாத்தா என்று அன்புடன் அழைத்து அவருடன் வாயாடுவேன். விளையாடுவேன். அதனால் அவரைக் கேட்டேன். தாத்தா, அத்தையின் போட்டோவைப் பார்த்துவிட்டு இன்று அம்மா அழுதுவிட்டார்கள் என்றேன்.

அவள் முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டேன். என் உடலெல்லாம் வியர்த்துவிட்டது. கிலியில் இதயம் படபடத்தது. டெலிபோனைப் பிடித்துக் கொண்டிருந்த கை நடுங்கியது. ''அவர் என்ன சொன்னார்?'' கேட்பதற்குள் நா வறண்டது.

''அவர் சட்டென்று ஒன்றும் சொல்லவில்லை. என்னை ஏற இறங்கப் பார்த்தார். 'இந்த வீட்டிலிருந்து போகும் போது உன்னைவிடச் சற்றுப் பெரியவள் உன் அத்தை. ஆனால் தோற்றத்தில் உன்னைப்போல் இருப்பாள். அதனால்தானோ என்னவோ நீ எத்தனை குறும்புகள் செய்தாலும் உன்மேல் எனக்குக் கோபம் வருவதேயில்லை என்று தழுதழுத்த குரலில் சொன்னார். சின்னப்பெண் நான், அவர் கண் கலங்குவதைப் பார்த்துவிடக் கூடாது என்ற எண்ணம் போலிருக்கிறது. முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார்.''

என் உடல் நடுங்கியது. என் நினைவு பின்னோக்கி ஓடியது. முத்துசாமியை அடிநாளில் நான் முத்தண்ணா என்று செல்லமாக அழைப்பது வழக்கம். அவர் எங்கள் குடும்பத்தில் அரை நூற்றாண்டு காலத்திற்குமேல் உழைத்துக் கொண்டிருப்பவர். அவருக்குத் தெரியாத சங்கதி வீட்டில் எதுவும் கிடையாது. கைகளும் மனமும் சுத்தமான விசுவாசமிக்க அவரிடம் எங்கள் எல்லோருக்கும் மதிப்பும்

அன்பும் உண்டு. தாயும் தந்தையுமில்லாத நான் இளவயதில் என் கவலைகளை யெல்லாம் அவரிடம் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லி ஆலோசனை கேட்பது உண்டு. என் கணவருடன் நான் வெளிப்பட்டு ஊரைவிட்டுப் போகும் போது ரயில்வே ஸ்டேஷனில் என் கைகளைப் பிடித்துக் கொண்டு ''பாப்பா கடிதம் போடாமல் இருந்துவிடாதேயம்மா! உன்னை மகளாக அடையும் பாக்கியம் இல்லாவிட்டாலும் இந்தக் கைகளால் உன்னைத் தூக்கி வளர்த்த பாக்கியம் செய்தவன் அம்மா. யாரை மறந்தாலும் என்னை மறந்துவிடாதேம்மா. இந்தப் பூவை வச்சுக்கோ! எங்கே இருந்தாலும் நல்லா சுகமாக இரு'' என ஆசீர்வதித்துக் குண்டு மல்லிகைச் சரமொன்றை என்னிடம் கொடுததார். வண்டி நகரும்போது கூடவே ஓடிவந்து, 'மறந்துவிடாதேயம்மா. இந்த ஏழை அண்ணனை மறந்துவிடாதே' என்று குலுங்க அழுதார். அவரைப் பிரிகிறோமே என்று அன்று நான் அழுத அழுகை... அப்படியிருந்தும் அன்று காய்கறிக் கடையில் அவரைப் பார்த்துவிட்டு எப்படிப் பதுங்கி ஓடினேன்! நான் மகாகோழை.

கன்யா தொடர்ந்து பேசினாள். ''அவரை நான் விடவில்லை. தாத்தா எனக்கு மட்டும் சொல்லுங்கள். நான் யாரிடமும் மூச்சுவிட மாட்டேன். அத்தைக்கும் அப்பாவுக்கும் மனஸ்தாபம் ஏன்? எனக்கு விஷயம் அரைகுறையாகத்தான் தெரியும்'' என்று கெஞ்சினேன்.

''சொன்னாரா?'' கேட்டு முடிப்பதற்குள் எனக்கு உயிரே போய்விடும்போல் அவமானமாக இருந்தது.

''அந்தப் பொல்லாத கிழமா சொல்லும்? 'சமயம் வரும் போது சொல்கிறேன்' என்று தொடர்கதை சஸ்பென்ஸ் போல் விட்டு விட்டார். இந்தக் கேள்வியை நான் ஏன் அவரிடம் கேட்டேன் என்றால் அத்தையின் போட்டோவை எனக்குக்

கொடுத்தவரே அவர்தான். குழந்தைப் பருவத்திலேயே எனக்கு அத்தை ஒருத்தி இருந்தாள் என்பது தெரியும். ஆனால் அவளைப் பற்றி யாரும் அதிகம் ஏன் பேசுவதில்லை என்பதுதான் பெரிய புதிர். வீட்டில் என் பாட்டன் பாட்டி இன்னும் தூர தூர உறவினர்கள் போட்டோக்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அத்தையுடையது மட்டும் இல்லை. இது ஆச்சரியமாக இருக்கவே விஷயம் தெரிந்த முத்து தாத்தாவைப் பிடித்து, கேள்விகள் கேட்டுத் துளைத்து விட்டேன். ஒருநாள் அவர் சகிக்க முடியாமல் தமது பெட்டிக்குள் ஒளித்து வைத்திருந்த ஒரு போட்டோவை எடுத்து என்னிடம், 'இவள்தான் உன் அத்தை. வீட்டில் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு வெளியே போய் விட்டாள். அதனால் என்னைத் தவிர யாரும் அவளை நினைப்பதில்லை. பத்திரமாக வைத்துக் கொள் என்று கடிந்து கொண்டு கொடுத்தார். அதைத்தான் என் மேஜை மீது வைத்துக் கொண்டிருக்கிறேன். அப்பாவின் கண்களில் கோளாறு ஏற்படுமுன் ஒருநாள் அதைப் பார்த்துவிட்டார்.'

எனது உடல் பதறியது. ''உன்னை ரொம்பக் கோபித்துக் கொண்டாரா?''

பதிலுக்கு அவள் சிரித்தாள்.

''நான் மயூரவாகன் மகளாயிற்றே! எனக்கும் அவரது துணிச்சல் கொஞ்சமாவது இருக்காதா? போட்டோவைப் பார்த்துவிட்டு அவர் என்னை முறைத்துப் பார்த்தார். பதிலுக்கு நான், ''என்னப்பா! உங்கள் தங்கையின் போட்டோ ஏதோ பார்த்திராத அதிசயம் போல் அப்படி விழிக்கிறீர்களே?'' என்று வேடிக்கையாகக் கேட்டுக் கொஞ்சலாக அவர் கன்னங்களை வருடினேன். அவர் பேசவேயில்லை வெளியே போய்விட்டார்!''

தங்கையை அதட்டி, அடித்து, அட்டகாசங்கள் செய்து தனது வழிக்குக் கொண்டுவர முயன்ற மயூரவாகனின் ஜம்பம் சொந்தப் பெண்ணிடம் பலிக்கவில்லையா? ஏளனமாக எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்.

"தூங்கிவிட்டீர்களா?" அந்தத் துணிச்சல்காரி என்னை மீண்டும் மறுபுறமிருந்து அதட்டினாள்.

"இல்லை, வெகுநேரம் பேசுகிறாயே, உன் தாயார் உன்னை அழைத்தால் லைன் கிடைக்காது போய்விடுமே" என்று கவலைப்படுகிறேன்" என்றேன்.

"அத்தை! கவலையை விடுங்கள். எங்கள் வீட்டில் மூன்று தனி போன்கள் இருக்கின்றன. மேலும் என் சிநேகிதிகளிடம் நான் போனில் மணிக்கணக்கில் பேசுவேன் என்று அம்மாவுக்குத் தெரியும்".

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. அப்ப போனை வச்சுடட்டுமா?" என்றேன் முடிவில்.

"இருங்கள் உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும் என்று நினைத்தேன். ஆமாம், அத்தனைப் பெரிய வீட்டில் தனியாகவா இருக்கிறீர்கள்? உங்களுக்கு பயமாக இல்லை?"

எனக்குப் பதிலளிக்கக் குழப்பமாக இருந்தது. "கூடத் துணைக்கு இருக்க ஓர் ஆளை என் எஜமானி ஏற்பாடு பண்ணிவிட்டுப் போயிருக்கிறாள். அந்த ஆசாமி தற்சமயம் வெளியூருக்குப் போயிருப்பதால் நான் தனியாகத் தானிருக்கிறேன்" என்றேன்.

"நான் ஊகித்துக் கொண்டேன். உங்கள் வீட்டு ஆபீஸ் அறையில் ஒரு படுக்கையைப் பார்த்தேன். அருகில் ஒரு நாற்காலி மீது சில ஷர்ட்டுகள் அழகாக அடுக்கி வைத்திருந்தது."

இவளுக்கு ஆயிரம் கண்கள் போலும். பார்வைக்கு வெகுளிபோல் தோன்றினாலும் கண்களும் கருத்தும் நாலா பக்கமும் வட்டமிடுகின்றனவே.இந்த நினைவு எனக்கு ஒரு பயத்தை உண்டு பண்ணியது.

தினேஷ் பார்வைக்கு மிகவும் வசீகரமான வாலிபன். கன்யாவோ தன் அழகாலும் பேச்சாலும் என் உள்ளத்தையே வாரிச் சுருட்டிக் கொண்டு விட்டவள். இவர்கள் சந்தித்தால் எனக்கு வேறு அபாயம் தேவையில்லை. கூடவே கூடாது. பஞ்சும் நெருப்பும்போல் இவர்கள். இவர்களைச் சந்திக்கவே அனுமதிக்கக் கூடாது. நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் போதும். அண்ணன் வீட்டு வம்பு எனக்குத் தேவையே இல்லை....

இனி எனக்குத் தூக்கம் ஏது?

## 10. அண்ணனுடனே மோதுகிறேனே!

அன்று விடியற்காலை வேளை, வாசலில் ஆட்டோ ரிக்ஷா நிற்கும் சப்தம் கேட்டது. எழுந்தோடிச் சென்று கதவைச் திறந்தேன்.

ஒரு கையில் பெட்டியும் மற்றொரு கையில் ஒரு தார் வாழைக் காய்களுமாக உள்ளே வந்தான் தினேஷ். என் மகிழ்ச்சியெல்லாம் அவன் முகத்தைப் பார்த்ததும் பறந்து விட்டது. தூக்க முடியாத சாமான்களுடன் கனத்த ஜுரத்தையும் சுமந்து கொண்டு அவன் வந்திருந்தான்.

கையிலிருந்த பெட்டியைச் சட்டென்று வாங்கிக் கொண்டு ‘‘என்ன தம்பி இது?’’ என்று கேட்டேன் கவலையுடன்.

நிற்க முடியாமல் சோர்வுடன் அவன் முன்னறை சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தான். ''லேசானஜுரம் தான். நேற்றுவரை நன்றாகத்தானிருந்தேன். இரவில் இரயில் வண்டியில் தலைவலியுடன் காய்ச்சல் ஆரம்பித்து விட்டது. நல்லவேளையாக எனக்கு லீவு அடுத்த வாரம் வரை இருப்பதால் நான் பிழைத்தேன்'' வறட்சியாக அவன் சிரித்தான்.

''லேசான காய்ச்சலா?'' நான் நம்பவில்லை. அருகில் சென்று உரிமையுடன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன். அனலாகக் காய்ச்சல் கையைச் சுட்டது. ''தம்பி! நான் சொல்வதை நீ கேட்க வேண்டும். முகத்தைக் கழுவிக் கொண்டு,வேறு உடை மாற்றிக் கொண்டு ஆபீஸ் அறையில் உள்ள உன் படுக்கையில் போய் நீ உடனே படுக்க வேண்டும். நான் டாக்டருக்குப் போன் செய்து அழைக்கிறேன்'' என்று உத்தரவிட்டேன்.

சென்னை வீட்டில் குடியேறிய சில தினங்களிலேயே நோய் ஏற்பட்டால் கவனிக்க டாக்டர் உதவி தேவை என்று தீர்மானித்து நண்பர்கள் மூலம் ஒரு டாக்டரைத் தேர்ந் தெடுத்து வைத்திருந்தாள் என் எஜமானி திருமதி ஜோஷி. ''நீலு! உடம்புக்கு ஏதாவது என்றால் மீனமேஷம் பார்க்காதே. உடனே டாக்டர் ஹர்கோவிந்தை வரவழைத்துப் பார்த்துக் கொள். இந்த ஊரில் அவர்தான் இனி நமது குடும்ப டாக்டர். தனியாக இருக்கிறாய். உடம்புக்கு எதையாவது வரவழைத்துக் கொண்டு திண்டாடாதே டாக்டர் பில் பற்றி உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம். அது என் பொறுப்பு'' என்று பலமுறைகள் எச்சரித்துவிட்டுப் போயிருந்தாள்.

ஆபீஸ் அறைக்குள் கட்டிலின்மீது விரித்திருந்த படுக்கையைத் தட்டிச் சரிப்படுத்திவிட்டு தினேஷை அதில்

வற்புறுத்திப் படுக்க வைத்தேன். நான் போன் பண்ணிய சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் ஹர்கோவிந்த் வந்து விட்டார். நான் எதிர்பார்த்ததற்கு மேல் அவர் வயதானவராக இருந்தார். அவர் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டேன்.

''நீதான் திருமதி ஜோஷியின் வலது கையோ?'' என்று வேடிக்கையாக என்னைப் பார்த்துக் கேட்டுவிட்டு உரத்துச் சிரித்தார்.

எனது எஜமானி தன்னைக் கவனித்துக் கொள்ள இவரிடம் சென்றபோது என்னைப்பற்றி ஏதோ புகழ்ச்சியாகப் பேசியிருக்க வேண்டும் என்று ஊகித்த நான் வெட்கத்துடன் முக்காட்டை இழுத்துவிட்டுக் கொண்டு நின்றேன்.

''ஆமாம்! உன் உடம்புக்கு என்ன?'' என்று அதட்டினார் அன்புடன் அவர்.

''எனக்கொன்றும் இல்லை. இதோ ஆபீஸ் அறையில் படுத்திருக்கிறானே, அந்தப் பையனுக்குக் காய்ச்சல்'' என்று தினேஷின் அறையைக் காட்டினேன்.

நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, ''கடுமையான புளூ ஜுரம். நெஞ்சில் நல்ல கபம். ஜாக்கிரதையாப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று முனகிக் கொண்டே ஊசி மருந்தைச் செலுத்தினார்.

மேலே கொடுக்க வேண்டிய மருந்துகளை ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார்.

''என் பெட்டியில் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன் பெரியம்மா. மருந்துக்கு அதை எடுத்து...!'' என்று தினேஷ் அரற்றி முடிக்குமுன், ''நீ பேசாமல் தூங்கு. என்ன செய்ய

வேண்டும் என்று எனக்குத் தெரியும்'' என்று அதட்டி விட்டு வெளியே வந்தேன்.

எனது பர்சிலிருந்து தேவையான பணத்தை எடுத்துத் தோட்டக்காரனை அழைத்து உடனே மருந்து வாங்கி வர ஏற்பாடு செய்தேன்.

நோயாளியைக் கவனித்துப் பணிவிடை செய்வது என்றால் எனக்கு மிகவும் பிடித்தமான காரியம்.

அன்று முழுவதும் நான் கருத்துடன் தினேஷைக் கவனித்துக் கொண்டேன். வேளை தவறாது மருந்தை வற்புறுத்தி உட்செலுத்தினேன். கவனத்துடன் நான் தயாரித்த கஞ்சியை ஸ்பூனில் எடுத்துக் குழந்தைக்கு ஊட்டுவது போல் வாயில் ஊற்றி அவனைச் சாப்பிடச் செய்தேன். இந்தப் பணிவிடைகள் எல்லாம் என் துயரமான உள்ளத்திற்கு மிக்க ஆறுதலாக இருந்தன. ஆயிரம் பேருக்கு அன்னமிட்டு விட்டது போன்ற ஓர் ஆனந்தத்தில் அவனது கட்டில் அருகேயே நாள் முழுவதும் உட்கார்ந்திருந்தேன்.

மருந்தும் நல்ல கவனிப்பும் அவனது காய்ச்சலை விரைவில் கீழே இறக்கிவிட்டது. அன்று இரவு நான் கட்டாயப்படுத்திக் கொடுத்த பாலைப் பருகிவிட்டு மருந்து மயக்கத்தில் அவன் சற்றே கண்ணயர்ந்தபோது போர்வையை இழுத்திப் போர்த்தி விட்டு மின்விளக்கை அணைத்தேன். ஆபீஸ் அறைமீது கண்ணோட்டமாக இரவு வெகு நேரம் முன்னறை தரையில் சுவரில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தேன்.

என் சிந்தனை பல வருடங்களைத் தாண்டிக் கொண்டு பின்னால் ஓடிவிட்டது. நெஞ்சத்தைக் கனமான துன்ப எண்ணங்கள் வந்து அடைத்துக் கொண்டன.

இப்படித்தான் ஒருநாள் இரவு நோயாளியாகப் படுத்துக் கிடந்த என் கணவரைக் கவனித்தபடி தூங்காமல் நான் உட்கார்ந்திருந்தேன். வாய் ஓயாது இருமிவிட்டு, 'நீலு!' என்று திணறியபடி என்னை அருகில் அழைத்தார். எலும்பும் தோலுமாக இருந்த அவரது உடலை அறையின் மங்கிய விளக்கொளி என் கண்களுக்கு இன்னமும் பயங்கரமாகக் காட்டியது.

''இருமி இருமி நெஞ்செல்லாம் வலிக்கிறது நீலு! என்னால் தாங்க முடியவில்லை. ஏழையாகவே பிறக்கக் கூடாது. பிறந்தாலும் இந்தக் கொடிய நோயின் வாயில் விழக்கூடாது. சாவு சீக்கிரம் வராதா என்று ஏங்குகிறேன். கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடு'' என்று புலம்பினார்.

அவர் படும் வேதனையைக் காண என்னால் சகிக்க முடியவில்லை. கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு பிளாஸ்கிலிருந்த வெந்நீரை டம்ளரில் ஊற்றி அவரிடம் கொடுத்தேன்.

ஆமதாபாத்திலிருந்த ஒரு மில்லில் அவர் அப்போது குமாஸ்தாவாக வேலை செய்து கொண்டிருந்தார். எழுபது ரூபாய்தான் மாதச் சம்பளம். அவர் பொருட்டு நான் எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருந்தேன். பங்களா பணம் தந்த சுகங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அந்தத் தொகையில் எளிமையாக அவருடன் வாழ என் வீட்டு அந்தஸ்துப் பீடத்திலிருந்து இறங்கி வந்தேன். ஆனால் விதி எங்கள் வாழ்க்கையை அமைதியாக இருக்க விடவில்லை. ஏழ்மை காரணமோ பற்றாக்குறையின் காரணமோ தெரியாது. எங்கள் மணவாழ்க்கை தொடங்கிய மறுவருஷமே என் கணவருக்கு க்ஷயநோய் வந்து விட்டது. கொஞ்ச காலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதற்கு பின்னர்

மிகவும் பலஹீன நிலையில் வீட்டிலே படுத்த படுக்கையாகி விட்டார். கையிலிருந்த பணம் எல்லாம் செலவாகிவிட்டது. என் மேலிருந்த இரண்டொரு நகையும் அடமானத்தில் மூழ்கிவிட்டன. கையில் பணமில்லை. வேலையுமில்லை. இந்த பயங்கர நிலையில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். என் கணவருக்குத் தெரியாமல் என் அண்ணனுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதினேன்.

''நடந்ததையெல்லாம் மறந்து என்னை மன்னித்து எனக்கு உதவுவீர்கள் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன். என் கணவர் நோயாளியாகப் படுக்கையில் இருக்கிறார். உண்மையை உங்களிடம் சொல்வதில் எனக்கு வெட்க மில்லை. நான் சில நாட்கள் இரவில் சாப்பிடாமல் பட்டினியாகப் படுத்து விடுகிறேன் என்றால் நம்புவீர்களா? வறுமை எங்களை இவ்விதம் வாட்டுகிறது. இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் என்மீது கருணை காட்டி தந்தி மணியார்டரில் ஏதாவது பணம் அனுப்பினால்தான் என் கணவர் பிழைப்பார். நானும், உயிருடன் இருக்க முடியும். அண்ணா! என்னை மன்னித்து விடுங்கள்...''

அழுதுகொண்டே அந்தக் கடிதத்தை எழுதினேன். வெளியே கடைக்குச் சென்றபொழுது தபாலில் சேர்த்து விட்டு பதிலுக்காகக் காத்திருந்தேன். ஒரு வாரம் ஓடிச் சென்றது. பதிலை எதிர்பார்த்து நான் ஏமாந்து போனேன். ஒரு நாள் காலை வழக்கம்போல் நான் கடைத்தெருவுக்குப் போயிருந்தேன். திரும்பி வந்த பொழுது சாய்வு நாற்காலியில் படுத்திருந்த என் கணவர் கோபாவேசமாகக் காணப்பட்டார்.

மெலிந்த அந்த உடலிலிருந்து எப்படித்தான் உரத்த குரல் எழுந்ததோ தெரியாது. ''நீலு!'' என்று இரைந்து கத்தினார். நான் கையில் பிடித்திருந்த கடைச்சாமான்களைப்

போட்டுவிட்டுப் பயத்துடன் அவர் அருகே ஓடினேன். என்னைக் கேட்காமல் உன் அண்ணனுக்கு கடிதம் போட்டாயா! நீ வீணாக அவமானப்படுவாய் என்று எத்தனை முறை எச்சரித்திருக்கிறேன். இதோ பார். அவரிடமிருந்து வந்த பதிலை!'' உரக்கக் கத்திக் கொண்டு ஒரு கடிதத்தை என்முன் வீசி எறிந்தார்.

நடுங்கிக் கொண்டே அதைக் கையில் எடுத்தேன். கடிதம் என் கணவருக்கு எழுதப்பட்டிருந்தது.

''ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்றச் சக்தியில்லாத கோழை நீ என்று ஆரம்பத்திலிருந்து அறிவேன். நோய் என்றும் பட்டினி என்றும் பொய் சொல்லி என் தங்கையைத் தூண்டி என் மனத்திலே மாற்றம் உண்டாக்க முயற்சிக்கும் உன் திட்டம் என்னிடம் பலிக்காது. மயூரவாகன் இதற்கெல்லாம் மசிந்து விடமாட்டான். என் தந்தையின் பிடிவாதகுணம் எங்கள் எல்லோருக்கும் உண்டு. பட்டினியில் மடிந்தாலும் மடிவாளே ஒழிய என் தங்கை வெட்கத்தைவிட்டு என்னைக் கெஞ்சி இந்தக் கடிதத்தைத் தானே முன்வந்து எழுதியிருக்கமாட்டாள். மனைவியை ஏவி, என்னிடம் பிச்சை கேட்கும் நீயும் ஒரு மனிதனா? உன் மானம் கெட்ட மன நிலைக்கு நான் வெட்கித் தலைகுனிகிறேன்...''

கடிதத்தைப் படித்த எனக்கே ஆத்திரத்தில் உடல் நடுங்கியது. சுயமரியாதையைப் போற்றிய என் கணவர் கோபத்தில் கொதித்தெழுந்தது வியப்பில்லை. உக்கிரமாக என்னை வெறித்துப் பார்த்த என் கணவர், என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியாது. தமது சினத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அன்புடன் என் முதுகை தடவிய அவர் ''நீலு, எழுந்திரு. உன்னிடம் ஒன்று பேச வேண்டும்'' என்றார். அதற்குள் அந்த பாழாய்ப் போன இருமல் அவரது

தொண்டையைப் பிடித்துக் கொண்டது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து அருகில் உட்கார்ந்தேன். அவர் மெல்லிய குரலில் என்னிடம் சொன்னார். ''நீலு, நான் இனி பிழைக்க மாட்டேன். எனக்குத் தெரியும். ஆனால் இளம் விதவையாக உன்னை தனியே தவிக்க விட்டு நான் போக மாட்டேன். என் நண்பனின் சகோதரியிடம் உனக்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்கள் உதவியால் நீ மானத்தோடு வாழ முடியும். கவலைப்படாதே. எக்காரணம் கொண்டும் நீ இனி உன் அண்ணன் தயவை எதிர்பார்க்காதே'' பேசாமல் திணறினார்.

''சத்தியம்! சத்தியம்! நான் எந்த நிலை வந்தாலும் அண்ணன் வீட்டு உப்பைக்கூடத் தொடமாட்டேன்'' என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு கதறினேன்.

என் தோள்மீது சாய்ந்துகொண்டு அவரும் விக்கிவிக்கி அழுதார். அதற்கு அடுத்த நாள் அவர் என்னை இவ்வுலகில் தனியே விட்டு மறைந்துவிட்டார்.

ஒருநாள் கவனிப்பிலேயே தினேஷ் காய்ச்சல் குறைந்து தெளிவுடன் காணப்பட்டான்.

விரைவாக அவன் தேகநிலை விருத்தி அடைந்துள் ளதைக் காண டாக்டருக்கு மெத்த வியப்பு. நோயாளியை பரிசோதித்துவிட்டு, ''இனி நான் வரத் தேவையில்லை. தொடர்ந்து கவனித்துக் கொள்'' என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தார்.

தேநீரைக் கோப்பையில் வார்த்து எடுத்துக் கொண்டு வந்து, அவர் முன் வைத்தேன். என்னைக் கனிவுடன் பார்த்து விட்டு அவர், ''தோற்றத்தில் நீ குஜராத்தி பெண் போல் காணப்பட்டாலும் நீ உண்மையில் ஒரு தமிழ்ப்பெண் என்று நினைக்கிறேன்'' என்றார்.

நான் ஒரு கணம் அசந்துவிட்டேன். திருமதி ஜோஷி ஏற்கனவே என்னைப்பற்றி இவரிடம் பேசியிருப்பதால் இவரிடம் பொய் சொல்வது சாத்தியப்படாது என்று தோன்றியது. ''ஆமாம். நான் ஒரு தமிழ்ப்பெண்தான். குஜராத்திரியரிடையே பல ஆண்டுகள் வாழ்ந்துவிட்டதால், அவர்களது பழக்க வழக்கங்களில் பிடிப்பு ஏற்பட்டுவிட்டது'' தடுமாறினேன்.

பெட்டியை வாங்கிக் கொண்டு வெளியே புறப்பட்ட அவர் திரும்பி, ''ஆமாம்! உனக்கு இங்குள்ள பிரபல வி'பாபாரி மயூரவாகனைத் தெரியுமா?'' என்று விசாரித்தார்.

அதிர்ச்சி தாளாமல் ஒரு கணம் அப்படியே நின்று விட்டேன். பின்னர் சமாளித்துக் கொண்டு, ''நான் பிறந்தது திருநெல்வேலி. வளர்ந்தது சூரத், இடையே சென்னைவாசி களைப் பற்றி எனக்கென்ன தெரியும்?'' என்று ஒரு போடு போட்டேன்.

''ஏன் கேட்டேன் தெரியுமா? மயூரவாகன் மனைவிக்கு நான்தான் டாக்டர். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருக் கிறாள். படு சுட்டி. நான் நேற்று உன்னைப் பார்த்தபோது ஆச்சரியப்பட்டு விட்டேன். சாயலில் அவள் உன்னைப் போல் இருக்கிறாள். ஏதாவது உறவு முறை இருக்குமோ என்பதற்காகத் தான் கேட்டேன்'' என்று கூறியபடி அவர் காரில் ஏறிக்கொண்டார்.

நெற்றியிலிருந்து வடிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டேன்.

அன்று ஜனவரி மாதம் முதல் தேதி. விடிவதற்கு முன்பே எழுந்து ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வாயிலில் வந்து நின்றேன். கீழ்வானம் வெளுத்துக் கொண்டு வந்தது.

வழக்கமாக இரைந்து கூப்பிட்டுக் கொண்டு அடுத்த வீட்டிற்கு வரும் பால்காரன் குரல்கூட அன்று கேட்கவில்லை. மோகன் காலனி அமைதியில் மூழ்கிக் கிடந்தது. என் மனத்திற்கு அது மிக்க ஆனந்தமாக இருந்தது.

# 11. முத்தண்ணா, சொல்லிவிடாதே!

பம்பாயில் திருமதி ஜோஷியுடன் இருந்திருந்தால் புது வருடம் இப்படிச் சப்தமிடாது வந்துவிட முடியுமா? முதல் நாள் மாலையே வீட்டு இளைய பட்டாளங்கள் விதவிதமாக உடுத்திக் கொண்டு முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்த நகரத்து ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களுக்குச் சாப்பிடவும் டான்ஸ் ஆடவும் கிளம்பி விடுவார்கள். என் எஜமானி தன் நண்பர்களுக்கெல்லாம் வீட்டில் பெரிய விருந்தளிக்க ஏற்பாடு செய்து விட்டிருப்பாள். அவ்வளவுதான். விதவித மாகச் சமைக்கக் காலையில் நான் பிடித்த கரண்டியை கீழே வைக்க இரவு பன்னிரண்டு மணியாகி விடும். விருந்தினர் போன பின்புகூட என் எஜமானி என்னை விடமாட்டாள் - "புது வருடத்தை வரவேற்றுப் புதிதாக உன் கையால் ஒரு கப் டீ போட்டுக் கொண்டு வா நீலு" என்பாள். நடு இரவில் தேனீரை அருந்திவிட்டு "ஹாப்பி நியூ இயர் டு யூ நீலு!" என்று வாழ்த்திவிட்டுத்தான் தூங்கச் செல்வாள். உடனே உறங்கி விட முடியுமா? வெளியே சென்று இருக்கும் அவரது பேரன் பேத்திகள் பழைய வருடத்தின் கழுத்தைப் பிடித்துத் தள்ள உற்சாகமாக உடுத்திக்கொண்டு போனவர்கள் புது வருஷம் வந்ததைக்கூட உணராமல் தூக்கக் கலக்கமும், களைப்பும், சலிப்புமாகப் படுக்கை மீது விழுவார்கள். அவர்களது தேவைகளையெல்லாம் கவனித்துவிட்டு என் அறைக்குள் நுழைவதற்குள் விடிந்து விடும். என் வரை புது வருடம் சிவராத்திரியாக இருக்கும்.

''பெரியம்மா!'' தினேஷின் குரல் என் சிந்தையைக் கலைத்தது. உள்ளே வந்தேன். என் போலவே விடியு முன் எழுந்துவிட்ட அவன் குளித்துவிட்டுச் சுத்தமாக உடுத்திக் கொண்டு இருந்தான். இந்தச் சில நாட்களில் அவன் பூரண குணமடைந்து விட்டான். மறுபடி அவன் முகத்தில் அந்தப் பழைய களை வந்துவிட்டது.

''புது வருட வாழ்த்துக்கள் உங்களுக்கு. என்னையும் ஆசீர்வதியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு என் கால் களைத் தொட்டுக் கும்பிட்டான். அவனது பணிவும் அன்பும் என் மேனியைப் புல்லரிக்கச் செய்தன. பூஜையறையி லிருந்து குங்குமத்தைக் கொண்டு வந்து அவனுக்குத் திலகமிட்டேன். ''புவனேஸ்வரி உனக்கு எல்லா நிறைவு களையும் கொடுப்பாள்'' மனம் நிறைந்து ஆசீர்வதித்தேன்.

காலை உணவருந்திய பின்னர் அவன் வெளியே புறப்பட்டான். ''பெரியம்மா, பங்களா வாழ்வும் நல்ல சாப்பாடும் கிடைக்கிறதென்று நான் என் குடிசையை மறந்து விடக்கூடாது. என் வீட்டைத் திறந்து சுத்தம் செய்து பூட்டி விட்டு நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று அவன் கிளம்பினான்.

''காய்ச்சலில் குணமடைந்த உடம்பு வெய்யிலில் அதிகம் அலையாதே சீக்கிரம் வந்துவிடு'' என்று எச்சரித் தேன். பின்னர் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தேன்.

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. நான் நினைத்த படியே மறுபக்கத்தில் கன்யாவின் குரல் உற்சாகமாக ஒலித்தது. ''ஹலோ! அத்தை! ஹாப்பி நியூ இயர்!'' கொஞ்சினாள் அவள். ''உனக்கும் எனது புது வருஷ நல் வாழ்த்துக்கள்'' என்றேன் நான். ''அத்தை ஒரு விஷயத்தை

நான் உங்களிடம் கேட்க மறந்துவிட்டேன். அதனால்தான் காலை வேளையில் போன் பண்ணினேன். ஆமாம், உங்கள் பெயர்? எனக்குச் சொல்லவில்லையே?'' மிக்க மனத்தாங் கலுடன் அவள் கேட்டாள்.

விடிந்ததும் விடியாததுமாக இவள் எந்த ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறாள்? எனக்குச் சற்று கவலை உண்டாயிற்று. ''நீலாவதி'' என்றேன்.

''என்ன ஆச்சரியம்! பெயரில்கூட ஒற்றுமை இருக்கிறதே. என் அத்தையின் பெயர் நீலாம்பிகை'' என்றாள் அவள். ''அப்படியா? ஆச்சரியம்தான்'' என்றேன்.

''எங்கள் வீட்டில் சுத்தமான நெய்யில் தயாரித்த பல காரங்களில் கொஞ்சம் எடுத்து உங்களுக்கென்று பார்சல் செய்து வைத்திருக்கிறேன். நேரில் கொண்டுவந்து கொடுக்க முடியவில்லை. எங்கள் வீட்டு முத்து தாத்தாவிடம் கொடுத்த னுப்பலாமா என்று யோசிக்கிறேன். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்'' என்றாள்.

திடுக்கிட்டுப் போனேன் நான். ''கன்யா! நான் சொல்வதைக் கேள். இந்த வீட்டுக்கு உங்கள் வீட்டு ஆட்கள் யாரையும் அனுப்பாதே. என் போன்ற வேலைக்காரர்களுடன் என்ன சிநேகிதம் என்று உன் தாயார் கோபிக்கலாம். வேண்டாம் அம்மா வம்பு'' என்றேன் கலவரத்துடன்.

அவள் பதிலுக்குக் கலகலவென்று சிரித்தாள். ''நீங்கள் பெரிய பயந்தாங்கொள்ளி. இதில்தான் உங்களுக்கும் என் அத்தைக்கும் வித்தியாசம். அவள் ஒரு ப்ரேவ் உமன்''.

''கன்யா மன்னித்துக்கொள் அம்மா. ரொமப நேரம் பேச எனக்கு அவகாசமில்லை'' என்று நா்ன் முடிப்பதற்குள் அவள் குறிக்கிட்டாள். ''அத்தை ப்ளீஸ்! ஒன் மினிட் ஒன்லி. நானே

பார்சலை நேரில் கொண்டு வந்து உங்களுக்குப் புது வருஷ வணக்கம் சொல்லியிருப்பேன். வீட்டைவிட்டு என்னால் இன்று கிளம்ப முடியாது. அம்மா இன்று முழுவதும் வீட்டிலேயே இருப்பார்கள். எங்கள் கம்பெனி ஆட்கள் பூமாலையும் பூச்செண்டுமாக அப்பாவைக் கண்டு வாழ்த்துக் கூற இன்று முழுவதும் வந்து கொண்டே இருப்பார்கள். வீட்டிலே இன்று குவியும் ரோஜாப்பூ மாலைகளை வைத்துக்கொண்டு...'' அவள் பேசுவதற்குள் இடை மறித்தேன்.

''ஒரு ஜாடி குல்கந்த் செய்துவிடலாம் அல்லவா?'' நான் சிரித்தேன். அவளும் சேர்ந்து கொண்டு குளு குளுவென்று நகைத்தாள்.

''அப்போது நான் உங்களை எப்போது பார்ப்பது?'' ஆவலுடன் கேட்டாள் அவள்.

''இன்றும் நாளையும் நான் வீட்டில் இருக்கமாட்டேன். எங்கள் உறவினர் வீட்டில் விசேஷம். அதனால் வீட்டைப் பூட்டிக்கொண்டு இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிடுவேன். மூன்றாம் தேதி வீட்டில் இருப்பேன். நீ வரலாம். காலேஜிலிருந்து இடைவேளையின்போது வந்து விட்டுப் போ. உனக்கும் சௌகரியம். எனக்கும் பேச நேரம் இருக்கும். ..'' அரைமனத்துடன் சொன்னேன்.

முத்துசாமியைச் சந்திக்க நான் விரும்பவில்லை. கன்யா தினேஷைச் சந்திப்பதையும் நான் விரும்பவில்லை.

போனை வைத்துவிட்டுச் சமையலறைக்குள் புகுந்தேன். கைகள் தாமாகவே வேலையைச் செய்தனவே ஒழிய என் சிந்தனை கொடிகட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டது.

பூமாலை, மிட்டாய்பெட்டிகள் இவைகளுடன் ஆட்கள் வந்து அண்ணனைக் கண்டு வாழ்த்தி விட்டுப் போவது புதிதான ஒரு பழக்கம் இல்லை. எனக்குத் தெரிந்த நாள் தொட்டு நடந்துவரும் ஒரு வைபவம். அப்பொழுது அண்ணா வியாபாரத் துறையில் இவ்வளவு பிரபலமாகவில்லை. எங்கள் தந்தை விட்டுப் போயிருந்த 'ஜகதா டிம்பர் - வொர்க்ஸ்' எனும் வியாபாரத்தை மிகவும் திறமையுடன் நடத்திக் கொண்டிருந்தார். பண்டிகை நாட்களில் அவரைக் காணத் தொழிலாளர்கள் வந்து வாயிலில் காத்துக் கிடப்பார்கள். அண்ணா சீக்கிரம் படுக்கையை விட்டு எழுந்திருக்க மாட்டார். கொஞ்சநேரம் அவர்களைக் காக்க வைத்துவிட்டு, பின்னர் தமது தரிசனத்தைத் தருவதில் அவருக்கு ஒரு தனி திருப்தி. தன் அந்தஸ்திற்கு கீழ் உள்ளவர்களைத் துச்சமாகக் கருதும் அண்ணாவின் இந்த மனப்போக்கை நான் உள்ளூர வெறுத்தேன்.

ஜனவரி முதல் தேதியன்றுதான் நான் 'அவரை' முதல் முதலாக சந்தித்தேன். அண்ணா வழக்கம்போல் காலை வெகு நேரமாகியும் உறங்கிக் கொண்டிருந்தார். அண்ணி குளியலறையி லிருந்தாள். எங்கள் வீட்டு வேலையாள் முத்துசாமியும் பின்பக்கத் தோட்டத்தில் ஏதோ காரியமாக இருந்தார். மாடியிலிருந்து நான் மெல்ல படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தேன். உட்காருவதா நிற்பதா என்று புரியாது குழப்பத்துடன் கையில் ஒரு பெரிய ரோஜா மாலையைச் சுமந்து கொண்டு வரவேற்பறையில் தத்தளித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார் ஒரு வாலிபர். அவரைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. வேகமாக படிகளைத் தாண்டி கீழே வந்தேன்.

''உட்காருங்கள். அண்ணா வந்துவிடுவார்'' என்று உபசரித்தேன்.

‘‘இதை இங்கே வைக்கலாமா?’’ என்று கேட்டுவிட்டு அறையின் நடுவே கிடந்த மேஜையைத் தவிப்புடன் பார்த்தார்.

‘‘இப்படிக் கொடுங்கள்’’ என்று மிகவும் துணிச்சலாக மாலையை நான் கையை நீட்டி வாங்கிக் கொண்டேன். என்ன ஆச்சரியம். என்னையும் மீறிய ஆனந்த பரவசத்தில் ஒரு கணம் அசந்து நின்றேன். மணமாலையை ஏற்றுக் கொண்டதுபோல் ஒரு மயக்கம்.

அருகிலிருந்த மேஜைமீது அதை வைத்துவிட்டு நான் திரும்பினேன். ‘‘தாங்க்யூ’’ என்று கூறிவிட்டு அவர் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார். பதிலுக்கு நானும் புன்னகைத்தேன். ‘‘கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறீர்களா?’’ கேட்டுக்கொண்டே அவரை மீண்டும் கண்களால் ஏறிட்டுப் பார்த்தேன். ‘‘இளவயது, களையான முகம், தீர்க்கமான பார்வை’’ என்று கணத்திலே கணக்கிட்ட என் கண்கள் அவரும் என்னை அதேசமயம் ஊடுருவிப் பார்த்துக் கொண்டு நிற்பதை உணர்ந்து மருண்டன.

‘‘இப்பத்தான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். தாங்க்யூ!’’ அவரது பணிவான குரல் பட்டுப்போல் மென்மையாக என் காதுகளைத் தழுவியது. பல ஆண்டுகள் பழகியவர்களைப் போல் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு செயலற்று நின்றோம். வரவேற்பறை ரேடியோவிலிருந்து நாதஸ்வர இசை ஒலித்தது. பூஜை அறையினின்று வெளிப்பட்ட ஊதுவத்தியின் மணம் என்னை ஒரு கனவுலகிற்கு இழுத்துக்கொண்டு சென்று விட்டது.

பின்னால் யாரோ இருமும் சப்தம் கேட்டது. திகைப்புடன் திரும்பினேன். ‘‘உனக்கு ஏன் பாப்பா சிரமம். இவங்களை நான் பார்த்துக்கிறேன்’’ கனிவாக முத்துசாமி உத்தரவிட்டாலும் அவரது கண்டிப்பான பார்வை என்னை

உடனே உள்ளே போகச் செய்தது. நாட்கள் பல சென்றன. மாதங்கள் உருண்டோடின. வரவேற்பறையில் அன்று ஏற்பட்ட எங்கள் சந்திப்பு அத்துடன் நின்றுவிடவில்லை. இன்பமாக ஆனால் ரகசியமாகத் தொடர்ந்து கொண்டு போயிற்று.

இப்பொழுது என் அண்ணி ஒரு பெரிய சோஷல் ஃபிகராகப் போய்விட்டாள். அதனால் வீட்டில் தங்குவதில்லை என்று கன்யாமூலம் அறிந்தேன். நான் சிறு பெண்ணாக இருந்த அந்தக் காலத்திலும் அவள் வீட்டில் அதிகம் தங்கியது கிடையாது. சினிமா, கச்சேரி, கல்யாணம் என்று மாலைவேளைகளில் அவள் வெளியே கிளம்பி விடுவாள். அன்றைய தினம் அண்ணன் ஊரில் இல்லை. வியாபார விஷயமாக டெல்லிக்குப் போயிருந்தார். அண்ணி ஒரு பாட்டுக் கச்சேரிக்குச் சென்று விட்டாள். வீட்டில் யாரும் இல்லை என்ற துணிவில் நான் அன்று இருட்டிய பின்புதான் வீடு திரும்பினேன்.

முத்துசாமி முன்னறையில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தார்.

''பாப்பா! காலேஜில் இத்தனை நாழி என்னம்மா செஞ்சுட்டிருந்தே?''

அவர் கேள்வி எனக்குக் கோபத்தை உண்டாக்கியது. என்றாலும் எங்கள் எல்லோருக்கும் அவரிடம் கொஞ்சம் பயம் உண்டு. அவர் அண்ணாவின் வலது கையாயிற்றே.

''ஒரு டிபேட் இருந்தது. நாழியாயிற்று'' சுருக்கமாக ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு உள்ளே மறைந்துவிட்டேன். அன்று ஆரம்பித்த பொய்... இன்று வரை முடிவில்லாமல் நீண்டு கொண்டு போகிறதே, கடவுளே!

கொஞ்ச நாட்களாக என் மனம் ஒரு நிலையிலும் இல்லை. சஞ்சலத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தேன். அண்ணியிடம் மனம் விட்டுப் பேசத் துணிவில்லை. அண்ணனுக்குத் தெரிந்து விடுமோ என்ற பயம். எனக்குள்ளே சிந்தித்து மனம் புழுங்கிய நான் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தேன். என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கிய முத்து சாமியை நான் அண்ணனுக்கு ஒப்பாக மதித்து வைத்தி ருந்தேன். எத்தனையோ விஷயங்களுக்கு அவரை நாங்கள் எல்லோரும் ஆலோசனை கேட்பது வழக்கம். என் மனத்தை வருத்தும் விஷயத்தை ஒளிவு மறைவின்றி இவரிடம் சொன்னால் என்ன?

''உங்களிடம் நான் ஒன்று பேச விரும்புகிறேன். முத்தண்ணா, நீங்கள் இதைப்பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது'' என்றேன் ஒருநாள்.

அவர் சிரித்தார் வறட்சியாக. ''பாப்பா, நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும், வீணான ஆசை, தப்பான காரியம்.''

''என்ன சொல்றீங்க முத்தண்ணா?'' பதைபதைத்தேன் நான் திகிலுடன்.

''எனக்கு எல்லாம் தெரியும் பாப்பா. நீயும் அந்தப் பையன் சங்கரனும் அடிக்கடி கண்ட இடத்தில் சந்திக்கிறீங்க. நேரம் போவது தெரியாது பேசுறீங்க. எல்லாம் எனக்குத் தெரியும். அவன் யாரென்று எனக்குத் தெரியும்'' பெருமூச்சு விட்டார் அவர் துயரத்துடன்.

''உண்மையாகவா முத்தண்ணா'' திகைப்புடன் கேட்டேன்.

''உங்கண்ணன் கம்பெனியில் போன வருஷம் ஒரு

குமாஸ்தாவாகச் சேர்ந்தான். அவனது விதவைத் தாயார் கூட இரண்டு வருஷத்துக்கு முந்திதான் காலமானாங்க. மாமன் ஒருத்தர் பக்கத்து வள்ளிமலை கிராமத்தில் பயிர் பண்ணிக் கிட்டிருக்கிறார். அவனது தாயார் சாகும்வரை அண்ணனுக்கு தெரிஞ்சவங்க வீட்டிலே சமையல்காரியாக இருந்தாங்க. போதுமா விவரம்-'' கோபத்துடன் கேட்டார்.

''முத்தாண்ணா, இதெல்லாம் அண்ணனுக்குத் தெரியுமா?'' கிலியுடன் கேட்டேன்.

''உங்கண்ணா உன்னைப் பெரிய இடத்தில் கட்டிக் கொடுக்கப் பேசிக் கொண்டிருக்கிறார். இந்த வீண் விவகாரம் வேண்டாம்மா. பின்னாலே பெருத்த அவமானம் ஏற்படும்'' எச்சரித்தார் தாழ்ந்த குரலில்.

''அண்ணா ஒத்துக் கொண்டால் அவமானம் ஏற்பட என்ன இருக்கிறது'' என்று கேட்டேன்.

''ஏன் வீண் ஆசை? உங்க அண்ணன் ஒத்துக்க மாட்டார். என் பேச்சைக் கேள். இந்தப் பையனை மறந்துவிடு. நீ எப்படியோ வாழ வேண்டிய பெண். வீணா, உன் வாழ்க்கையை நாசமாக்கிக்காதே'' உணர்ச்சி வசத்தில் அவர் வார்த்தைகள் தடுமாறின.

''இல்லை முத்தண்ணா. அது முடியாத காரியம். என்ன எதிர்ப்பு ஏற்பட்டாலும் இவரையே நான் கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானித்துவிட்டேன்'' பிடிவாதமாக நான் சொன்னேன்.

முத்துசாமி துயரத்துடன் மீண்டும் பெருமூச்செறிந்தார். ''உங்கம்மா உசிரோட இருக்கச்சே உன் ஜாதகத்தை ஒரு சோசியரிடம் காட்டினாங்க. உனக்கு வாழ்க்கையில் சுகம் இல்லைன்னு அவர் அப்பவே சொல்லிவிட்டார். உன் விதி

எப்படியோ அப்படி நடக்கட்டும். தீர்மானிச்ச பின் மறுப்பு சொல்ல என்ன இருக்கு?'' வெறுப்பாக பேசி விட்டு அவர் எழுந்து துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டார். என்னை இரக்கமாகப் பார்த்தார். ''ஆனால் இது சாதாரணமாக நடக்கிற காரியமில்லை. ஞாபகத்தில் வச்சுக்கோ'' என்றார். எனக்குப் பரிந்து ஒரு வார்த்தை கூட அவர் சொல்ல வில்லையே என்று ஏமாற்றமும் துக்கமும் என்னால் தாளமுடியவில்லை.

''முத்தாண்ணா! தயவு செய்து அண்ணன்கிட்டே இதைப் பற்றி சொல்லிடாதீங்க'' என்று கிலியுடன் கெஞ்சினேன்.

''நான் சொல்லமாட்டேன். ஆனால் இது மறைக்கிற காரியமில்லை. நான் இல்லாட்டி இன்னொருத்தன் வந்து உங்க அண்ணன்கிட்டே சொல்லுவான். அப்போ பார்க்கப்போரே உன் பிடிவாதத்தின் விளைவை'' அவர் மேலே பேசப் பிடிக்காது உள்ளே போய் விட்டார்.

அவர் கூறியதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு வெகு நேரம் நின்றேன். மனிதன் வாழ்க்கையில் விரும்பியதைத் திறமையினால் தேடிக்கொள்ள முடியும். ஆனால் விதி ஒவ்வொன்றிற்கும் ஒரு விலை வைத்திருக்கிறது. ஆமாம், என் ஆசைக்கு என்ன விலை?

## 12. என்னிடமே என் கதையா!

**மூ**ன்றாம் தேதி கன்யா என்னைப் பார்க்க வந்தாள். ஆனால் குறிப்பிட்ட நேரத்திற்கு வரவில்லை. பிற்பகல் மூன்று மணிக்கு மேல்வாயில் மணியை அடித்தாள். ''பிடிவாதக்காரி'' என்று முணுமுணுத்துக் கொண்டே

கதவைத் திறந்தேன். ''மன்னிக்கவும் அத்தை, நேரமாகி விட்டது. பிசகு என்னுடையதில்லை. உங்களைப் பார்க்க வருவதென்றால் ஸ்லாக் ஸூட்டில் வர பயமாயிருக்கிறது. இந்தப் புடவையைக் கட்டிக் கொள்வதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது. விஷமமாகச் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தாள் அவள்.

''இரண்டு நாட்களாக உங்களுக்கு என்று நான் எடுத்து வைத்திருந்த இந்தப் பலகார பார்சலை முதலில் உள்ளே வைத்துவிட்டு வந்து பேசுகிறேன்' கண்களை சிமிட்டியபடி அவள் சுவாதீனமாகச் சமையலறைப் பக்கம் சென்றாள். எங்கள் வேலைக்காரி பூமாவுக்கு நல்லயோகந்தான். நெய்யில் சுட்ட பணியாரம் கிடைக்கப்போகிறது' என்று எண்ணியபடி கதவைத் தாளிட்டுவிட்டு நானும் உள்ளே வந்தேன். ஆரஞ்சு நிற பனாரஸ் பட்டு புடவைக்கேற்ப, பின்னலிட்ட கூந்தலில் அவள் அணிந்து கொண்டிருந்த கனகாம்பர பூச்சரம் தோள் பட்டைகள் வரை தொங்கி இரு பக்கமும் அசைந்தாடிக் கொண்டிருந்தது. உடலை இறுக்கமாகத் தழுவிக் கொண்டு அவள் அணிந்திருந்த ஆரஞ்சு நிற ரவிக்கையின் மேலும் கீழும் தெரிந்த அவளது தளிர்மேனி தங்கம்போல் பளபளத்ததை வியப்புடன் பார்த்துக்கொண்டு நான் பின் தொடர்ந்தேன்.

''அதிருக்கட்டும், என்னைப் பார்க்க வர ஏன் விசேஷ அலங்காரம்?'' கொஞ்சம் அதட்டியே கேட்டேன்.

''நான் இன்று காலேஜுக்கு மட்டம். அம்மா இன்று ஒரு பர்த் டே பார்ட்டியில் எம்.சி.யாக இருக்கிறாங்க. டிரைவர் வர நாழியானதால் நானே அவர்களுக்கு சாரத்தியம் பண்ணி னேன். என்னையும் பார்ட்டிக்கு வரச் சொல்லிவற்புறுத்தி னதால் இந்த அலங்காரம். கொஞ்ச நேரம் அங்கு தலையைக்

காட்டிவிட்டு நழுவி இப்படி ஓடி வந்துவிட்டேன்'' கன்னங் குழியச் சிரித்துக்கொண்டு வேகமாகச் சென்று வரவேற்பறை ஆசன மொன்றில் தொப்பென்று அவள் சாய்ந்து கொண்டாள். அப்பொழுதுதான் அவளது அலங்காரம் முழுவதையும் என்னால் பார்க்க முடிந்தது.

அவளது நெஞ்சுக்குழியுடன் கொஞ்சிக்கொண்டு தங்கச் சரட்டில் ஆடிய அந்த வைரப் பதக்கத்தைப் பார்த்ததும என் உள்ளம் துணுக்குற்றது. என் தாயார் எனக்கென்று செய்து போட்ட நகை அது.

கட்டின புடவையுடன் உடைமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு அண்ணன் போட்ட உத்தரவுப்படியே புறப்பட்டுப்போன நான் பலமுறை என் செய்கைக்கு வருந்தியது உண்டு. அம்மா கொடுத்த அந்த ஒரு நகையையாவது கூட எடுத்துச் செல்லாதது எத்தனை பெரிய தவறு! விலை உயர்ந்த அந்தப் பதக்கத்தை விற்றாவது கணவருக்குத் தக்க வைத்தியம் செய்து நோயினின்று அவரைக் காப்பாற்றி இருப்பேனல்லவா? அப்படிப் பட்டினியாலும் நோயாலும் அவர் வாடி மடிந்திருக்க அவசியம் ஏற்பட்டிருக்காதே?'' என்று எண்ணுவேன்.

''அத்தை! உங்களிடம் பேச வேண்டும் என்று இரண்டு நாட்களாக நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். வெளிப் பார்வைக்கு நான் சிரித்துக்கொண்டு மகிழ்ச்சியாக இருப்பதுபோல் காண்கிறது. ஆனால் உண்மையில் அயாம் வெரி அன்ஹாப்பி.''

திடுக்கிட்டுப் போன நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். தங்கச் சரட்டில் தொங்கிய அந்த வைரப் பதக்கத்தை விரல்களால் அவள் வருடிக் கொண்டிருந்தாள். இது உங்களுக்குப் பிடிக்கிறதா? இந்த நகை என்

அத்தையுடையது. அம்மாவின் பெட்டியிலிருந்தது. தெரிந்தவுடன் நான் எனக்கு வேண்டுமென்று எடுத்துக் கொண்டுவிட்டேன். பொதுவாக எனக்கு நகை, புடவைகள் இவை மீது அத்தனை ஆசை கிடையாது. ஆனால் இதை நான் அணிந்து கொண்டால் என் அத்தையின் அருகிலிருப்பது போல் ஒரு பாதுகாப்பு உணர்ச்சி ஏற்படுகிறது. அதனால் இதை என் உயிர் போல பத்திரமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

இந்தப் பெண் கன்யா தன் அத்தையை முன்பின் பார்த்ததில்லை.இருந்தும் அவள்மீது இவளுக்குத்தான் எத்தனை அன்பு! பார்த்துக்கொண்டே நிற்கிறேன் என் அண்ணன் மகளை நான்! எனக்கு ஏன் இந்தப் பொறாமை? இந்த ஆத்திரம்? சே! சே! இந்தச் சின்னப் பெண் முன் நான் எவ்வளவு தாழ்ந்து விட்டேன்! என் உள்ளம் என்னை இடித்தது. வெட்கத்துடன் தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

''முதல் தேதி மாலை அமைதியில்லாமல் நான் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். வெளியே போயிருந்த முத்துசாமி கையில் ஒரு மருந்து பாட்டிலுடன் உள்ளே வருவதைக் கவனித்தேன். எனக்குக் கவலை ஏற்பட்டது. ஓடிப்போய் ''தாத்தா? உடம்புக்கு என்ன?'' என்று விசாரித்தேன். ''ரெண்டு நாளா காய்ச்சல். தாங்க முடியலை'' என்று கூறிவிட்டு அவர் தள்ளாடிக் கொண்டு தமது அறைப்பக்கம் போனார்...

அவள் முடிக்கும் வரை கேட்க எனக்குப் பொறுமை இருக்கவில்லை. ''அவருக்கு உடம்பு இப்போது எப்படியிருக்கு அம்மா?'' என்று அனுதாபத்துடன் கேட்டேன்.

''அத்தை! அவர் எங்கள் வீட்டிற்கு மாடாக உழைத்துக் கொண்டிருக்கிறார். இன்னமும் நாய்க்குமேல் நன்றியுடன்

எங்களை ஒட்டிக்கொண்டு வாழ்கிறவர். அவருக்குக் காய்ச்சல் என்றால் என்னால் அமைதியாக இருக்க முடியுமா? நான் கூடச் சென்று அவரது படுக்கையைத் தட்டிப் போட்டு மருந்து கொடுத்து அவருக்கு உதவி செய்தேன். சமையல்காரர் கொடுத்த கஞ்சியை வாங்கிக் கொண்டு நானே என் கையால் உபசரித்துச் சாப்பிடச் செய்தேன்....''

கன்யாவின் இரக்க சிந்தனை என் மேனியைப் புல்லரிக்கச் செய்தது. இந்தப் பெண் பார்க்க மட்டும் அழகியல்ல. குணத்திலும் பேரழகி என்று நினைத்துப் பெருமிதம் கொண்டேன்.

''இப்போது அவருக்குக் காய்ச்சல் குறைந்து விட்டதல்லவா?'' கவலையுடன் கேட்டேன்.

''நேற்றுக் காலை அவரை மீண்டும் பார்க்கப் போனேன். தாத்தா படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தார்.''

''என் செல்லக்கிளி! குணத்திலேயும் நீ உன் அத்தையைப் போலவே இருக்கேம்மா. அதிர்ஷ்டத்தில் மட்டும் அவளைக் கொண்டுவிடாதே'' என்றார்.

''அப்படியென்றால் தாத்தா, அத்தை ரொம்பக் கஷ்டப்பட்டாங்களா?'' என்று சந்தர்ப்பத்தை விடாது அவரைத் துளைத்தேன். ''ஒருவேளை சாப்பாட்டுக்குகூட இல்லாமல் வறுமையில் வாடினாள். அவள் புருஷன் நோயாளியாகப் பட்டினியில் செத்துப்போனான்'' என்று சொல்லி விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டார். அதைக் கேட்க எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

''தாத்தா, அத்தையும் பட்டினிக் கொடுமைக்கு இரையாகித்தானே இறந்து போனாங்க?'' என்று துக்கத்துடன் கேட்டேன். அவர் சொன்ன பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

''இல்லையம்மா. உன் அத்தை சாகவில்லை. உன் அப்பா சொல்வது பொய். அவள் எங்கேயோ வாழ்க்கையுடன் போராடிக் கொண்டு கிடக்கிறாள்'' என்றார். அதைக் கேட்ட எனக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.

''நாம் தேடிக் கண்டுபிடித்தால் என்ன தாத்தா?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''நம்மைச் சந்திக்கப் பிரியப்படாமல் எங்கேயோ ஒளிஞ்சுக்கொண்டு வாழறவங்களை எப்படியம்மா தேடுவது? இதைப்பத்தி நீ உன் அப்பாகிட்ட பேசி எதுவும் கலாட்டா பண்ணாதே'' என்று என்னை எச்சரித்தார். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டதிலிருந்து என் மனம் படும் வேதனையை உங்களிடம் எப்படி விவரிப்பது என்றே தெரியவில்லை. இரவு நான் சாப்பிடாமல் பட்டினியாகவே படுத்துக்கொண்டு வெகு நேரம் அழுது கொண்டிருந்தேன்'' கூறி முடித்தாள் கன்யா.

அவள் குரல் உணர்ச்சி குழப்பத்தில் தடைப்பட்டது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. என்னாலும் தாள முடியவில்லை. ''அடுப்பு வீணாக எரிகிறது. இரு, பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று போக்கு காட்டிவிட்டுச் சமையலறைக்குள் புகுந்து கொண்டேன். பொங்கிப் புறப்பட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டேன். உணர்ச்சிகளை அலைமோத விடாது கட்டுப்படுத்திக் கொண்டேன். பொய்யான ஒரு சிரிப்பை முகத்தில் படரவிட்டுக் கொண்டு வெளிவந்தேன்.

தரையில் விரித்துக் கிடந்த கம்பளத்தையே பார்த்தபடி தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த கன்யா என்னைக் கண்டு நிமிர்ந்தாள். சோகத்தைப் பிரதிபலித்த கண்களால் என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''முழுக்

கதையையும் நீங்கள் கேட்டால் மிகவும் வருந்துவீர்கள். இத்தனை நாளும் சொல்ல மாட்டேன் என்று மூடி மறைத்து வைத்திருந்த முத்து தாத்தா நேற்று மாலை என்னிடம் ஒன்று விடாமல் அத்தையைப் பற்றிச் சொல்லி விட்டார். அதைச் சொல்கிறேன். பிறகுதான் எனக்கு நீங்கள் சில ஆலோசனைகள் சொல்ல வேண்டும்.''

என் வாழ்க்கையின் கதையை இந்தச் சின்னப்பெண் எனக்கே எடுத்துச் சொல்ல, நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? இப்படிக்கூட என் வாழ்வில் ஒரு நிலை வந்ததா?

கன்யா சொல்ல ஆரம்பித்தாள்.

''என் அத்தைக்கு இந்தக் கதை நடந்த சமயம் என்னை விட வயது சற்று கூடுதலாக இருக்கும். வெகுநாள் படிக்காது வீட்டிலே இருந்து விட்டார்கள். அண்ணா தலையெடுத்த பின்தான் அத்தைக்கு ஆங்கிலப் படிப்பு படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்தை கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த சமயந்தான் ஒரு காதல் விவகாரத்தில் சிக்குண்டு விட்டார்கள்...''

அவள் பேசிக் கொண்டே போனாள். அதைக் கேட்க வெட்கமாக எனக்கு இருந்ததனால் அடிக்கடி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் தொடர்ந்தாள்.

''அப்பாவுக்கு வெகு நாட்கள் இந்த விஷயம் தெரியாதிருந்தது. ஒரு நாள் அத்தை பஸ் நிலையமொன்றில் இருட்டும் சமயம் ஒரு வாலிபனுடன் பேசிக்கொண்டு நிற்பதை அப்பா நேரில் பார்த்துவிட்டார். அவன் வேறு யாருமல்ல. அப்பாவிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கிப் பிழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளி. அவனது

நேர்மையைக் கண்டு அப்பா அவனிடம் தொழிற்சாலையை தினமும் திறக்கும்படி நம்பிக்கையுடன் சாவிக்கொத்தை கூடக் கொடுத்து வைத்திருந்தார். மறுநாள் அப்பா பிறந்தநாள். பல தொழிலாளிகள் அப்பாவைப் பார்த்து வாழ்த்துக்கூறிவிட்டுப் போக வந்த வண்ணம் இருந்தார்கள். அநேகமாக எல்லோரும் வந்து போன பின்பு அந்த வாலிபன் ஒரு பெட்டி மிட்டாய் பார்சலுடன் அப்பாவைக் காண வந்தான்...''

கன்யாகுமரி தொடர்ந்து கதையைச் சொல்லிக் கொண்டிருந்தாள். என் சிந்தனை அந்த நாளை நோக்கிப் பறந்து விட்டது...

கொண்டு வந்த பார்சலை மேஜை மீது வைத்து விட்டு அண்ணனுக்குக் கை கூப்பி வணங்கினார் அவர். பதிலுக்கு அவரை உறுத்துப் பார்த்த அண்ணன் சினம் பொங்கிய குரலில், ''நான் கொடுத்த தொழிற்சாலை சாவிக்கொத்தை எடு. எங்கே அது'' என்று கத்தினார். தமது சட்டைப் பையி னின்று அதை எடுத்துக் கலக்கத்துடன் மேஜைமீது வைத்த அவர் மௌனமாகத் திகைத்தார்.

''திரும்பிப் பார்க்காமல் இங்கிருந்து நட'' என்று அண்ணா கடுமையாக இரைந்தார்.

''என் வேலையில் தப்பு ஏதும் நான் செய்ய வில்லையே?'' அவர் பயத்துடன் குழறினார். எனது நெஞ்சு பக்பக் என்று அடித்துக் கொண்டது.

''உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த அயோக்கியப் பதரே! பதில் பேசிக்கொண்டா நிற்கிறாய்?'' அண்ணா சீறிக்கொண்டு எழுந்திருந்தார். அவர் கொண்டு வந்த மிட்டாய் பெட்டியை தூக்கி ஒரு மூலையில் விசிறினார். ஒரே

எட்டலில் அவரை அணுகி முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டார். வலுவான அந்தத் தாக்குதலைத் தாளாது சுருண்டு தடுமாறி அருகிலிருந்த சுவரில் மோதிக் கொண்டு அவர் விழுந்து விட்டார். நெற்றியிலிருந்து குபுகுபுவென்று ரத்தம் பெருகி வருவதைக்கண்ட நான் பயத்தில் அலறி விட்டேன்.

''அண்ணா! அவரைக் கொன்று விடாதீர்கள்'' என்று கிரீச்சிட்டுக் கொண்டு ஓடி வந்தேன்.

ஓடி வந்த அண்ணி குறுக்கிட்டு அழுது கொண்டே அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு விட்டாள். தரையில் கிடந்த அவரை முத்துசாமி தூக்கி நிறுத்தி மெல்ல வெளியே அழைத்துச் சென்று விட்டார். வேலையாட்கள் ஆளுக்கொரு மூலையாக ஓடி மறைந்து கொண்டார்கள். அன்று எங்கள் வீடு யுத்தகளமாகக் காட்சியளித்தது...

கன்யா இப்போது இதையெல்லாம் என்னிடமே சொல்லிக் கொண்டிருந்தாள். அவளது கண்களும் கலங்கி விட்டிருந்தன.

''இதற்குப் பின்னரும் அத்தை தொடர்ந்து அந்த வாலிபனைச் சந்தித்துக் கொண்டிருந்தாள். உலகமே எதிர்த்தாலும் இவனையே நான் மணந்து கொள்வது என்று முடிவும் செய்திருந்தாள். அத்தையின் யோசனைப்படியே அந்த வாலிபனும் மாமனும் சில உறவினர்களும் வந்து முறைப்படி பெண் கேட்டார்கள். அன்றும் எங்கள் விட்டில் ஒரு பெரு யுத்தம். ''என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் என் வீட்டிற்குள் வந்து பெண் கேட்பாய்?'' என்று கத்திக் கொண்டு அப்பா வந்தவர்களை அடிக்கப் போய்விட்டார். தன்னை மணக்க விரும்பிய வாலிபன் பல வழியாலும் துன்பப்படுவதைக் காண அத்தைக்குச் சகிக்க வில்லை. உள்ளே இருந்து விடுவிடுவென்று வந்து எல்லோர் முன்னிலையிலும் நின்றாள்.

''அண்ணா! நீங்கள் என்ன மறுத்தாலும் நான் கேட்கப் போவதில்லை. நான் இவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன். சாவு கூட என் மனத்தை மாற்ற முடியாது'' என்று துணிவுடன் கத்திவிட்டாள். அப்பா அப்படியே அசந்து விட்டார், ஒரு கணம். பின்னர் மிக்க கோபத்துடன் ''அப்படியானால் இந்த நிமிஷமே இவனுடன் இந்த வீட்டை விட்டு நட. என் வரைக்கும் நீ இன்றோடு செத்துப் போனவள்'' என்று உக்கிரமாக உத்திரவிட்டார்.

''உன் அத்தை உடனே வெளியே நடந்து விட்டாளா?'' ஆச்சரியப்படுகிறவள் போல் நடித்தேன்?

''பின்னே வேறென்ன செய்வாள்? அப்படியே அவர்களுடன் அத்தை அழுதுகொண்டே போய்விட்டாள். அந்த வாலிபனின் மாமன் எளிய முறையில் அவர்களிருவருக்கும் திருமணம் செய்து வைத்தார். பின்னர் பிழைப்பைத் தேடிக் கொண்டு அவர்கள் வடநாட்டிற்குப் போய் விட்டார்கள்...'' கன்யா கதையை முடித்துவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்துச் சோகமாய்ப் புன்னகைத்தாள்.

வரவேற்பறை கடியாரம் ஐந்தடிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் தினேஷ் வந்து விடுவானே?

புடவையைத் தட்டிச் சரிப்படுத்திக் கொண்டு அவளும் எழுந்து நின்றாள். ''அத்தை! இத்தனையும் நான் ஏன் உங்களிடம் சொன்னேன் தெரியுமா? என் வாழ்க்கையிலும் ஒரு பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது'' என்றாள் மெல்லிய குரலில்.

என்ன சொல்லப் போகிறாளோ என்ற கவலையுடன் அவள் முகத்தைப் பார்த்தேன்.

''அப்பா கேள்விப்பட்டால் கொதித்து எழுவார். சரித்திரம் திரும்பிவிட்டது என்று அம்மா அலறுவாள். மறுபடி எங்கள் வீட்டில் ஒரு பூகம்பம் ஏற்படப் போகிறது. ஆனால் நான் எதற்கும் தயார். நானும் என் அத்தையைப் போல் ஒரு ஏழைப் பையனைக் காதலிக்கிறேன்'' அவளது கண்கள் மீண்டும் கலங்கின.

## 13. கடவுளே! தினேஷைக் காப்பாற்று

**சி**றிது நேரத்தில் தினேஷ் வந்தான். என் உள்ளத்து உணர்ச்சிப் போராட்டத்தின் கொந்தளிப்பு என் முகத்தில் தெரிந்திருக்க வேண்டும். ''பெரியம்மா! உங்களுக்கு உடம்பிற்கு என்ன?'' மிகவும் அனுதாபத்துடன் விசாரித்தான்.

''ஒன்றுமில்லை. எஜமானியிடமிருந்து கடிதம் வர வில்லை. அந்தக் கவலை'' பதிலளித்துவிட்டு நான் வேகமாக உள்ளே வந்தேன்.

''இது என்ன பார்சல்?''

அவனது அடுத்த கேள்வி என்னை வியப்படையச் செய்தது. இந்த இளைய வட்டாரத்தினர் வெளிப் பார்வைக்கு ஒன்றிலும் பட்டுக் கொள்ளாதவர்கள் போல் காணப்படு கின்றனர். ஆனால் கண்ணும் கருத்தும் சுற்றுப்புறத்திலே நன்றாக உலாவிக் கொண்டிருக்கின்றனவே?

''என் எஜமானியின் நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பிய புது வருஷப் பரிசு, கொஞ்சம் தாமதமாகக் கிடைத்திருக்கிறது. நீயும் அதைக் கொஞ்சம் ருசி பார்க்கலாம்'' என்று விளை யாட்டாகக் கூறிக் கொண்டு பார்சலுடன் சமையலறைக்குள் நுழைந்தேன்.

கொஞ்சம் பலகாரங்களை எடுத்து வந்து சூடாகத் தேநீருடன் அவனுக்குப் பரிமாறினேன். அண்ணன் வீட்டுச் சாப்பாட்டிற்கு நான் கொடுத்துவைக்காதவளாகி விட்டேன் இவனாவது அனுபவிக்கட்டுமே என்று ஓடியது என் எண்ணம்.

''நன்றாக இருக்கிறதே, நீங்களும் உட்கார்ந்து என் கூட இருந்து சாப்பிடுங்கள்'' அவன் என்னை உபசரித்தான்.

''எனக்கு இன்று விரதம். நீ சாப்பிடு. நாளைக்குப் பார்க்கலாம்'' என்று கூறினேன் அவன் முகத்தை நேரே பார்க்காமல்.

அன்று இரவு நான் நெடுநேரம் உறங்கவில்லை. ஏன்? சென்னைக்கு வந்த பிறகு பல இரவுகள் எனக்குத் தூக்கமே கிடையாது. 'தனியாக இருக்கச் சிரமமாக இருக்கிறது' என்று எஜமானிக்குக் கடிதம் போட்டுவிட்டு பம்பாயில் உள்ள அவளது மகன் வீட்டுக்குப் போய் விட்டால் என்ன?

இல்லை! இல்லை! என்னை நம்பி பெரிய வீட்டையும் அதிலுள்ள பொருள்களையும் ஒப்படைத்து விட்டுப் போயிருக்கிறாள். அவள் வரும்வரை கொஞ்ச நாட்கள் பொறுமையாகத் தானிருக்க வேண்டும்... சிந்தனையில் சிக்குண்டு படுக்கையில் புரண்டேன்.

அன்று மாலை கன்யா கூறிய என் கதையில் எவ்விதமான கலப்படமும் இல்லையென்றாலும் அவள் முழுவதையும் சொல்லவில்லை. முத்துசாமி அவளிடம் எல்லாவற்றையும் சொல்லவில்லை. நான் செய்ததாக அண்ணன் கருதிய அந்த மாபெரும் குற்றத்திலே முத்துசாமிக்கும் கொஞ்சம் பங்கு இருந்தது. அதனால்தான் அவர் பற்றிய விஷயம் முழுவதையும் கன்யாவிடம் சொல்லி விடவில்லை.

சங்கரனைத் தவிர வேறு யாரையும் நான் மணக்கப் போவதில்லை என்று என் பிடிவாதமான மனநிலையைத் தெரிந்து கொண்டவுடன் முத்துசாமி என்னுடைய கட்சிக்கு வந்துவிட்டார். வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த அவரால் வாயைத் திறந்து பேசி அண்ணனிடம் எதையும் ஜெயிக்க முடியவில்லை. அதனால் அவர் ரகசியமாக எனக்குப் பல வழிகளிலும் உதவினார்.

சங்கரனை வேலையினின்று நீக்கியவுடன் அண்ணன் என்னையும் படிப்பிலிருந்து நிறுத்திவிட்டார். வீட்டை விட்டு வெளியே நகரக் கூடாது என்று கடும் உத்தரவும் பிறப்பித்தி ருந்தார். ஆனால் எங்களுக்குள் கடிதப்போக்கு வரத்து முத்துசாமியின் உதவியால் நடந்து கொண்டிருந்தது. அவரது தூண்டுதலின் பேரில்தான் சங்கரனின் மாமன் துணிவுடன் பெண் கேட்க எங்கள் வீட்டிற்குள் வந்தார். எங்கள் திருமணத்தின்போது எங்கள் குடும்பத்தின் சார்பாக வந்திருந்து வாழ்த்திவிட்டுப் போன ஒரே ஆசாமியும் முத்துசாமிதான்.

கொஞ்ச நாட்கள் வேலையின்றிச் சிரமப்பட்ட என் கணவர் முடிவில் வேறு ஒரு கம்பெனியில் குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்ந்தார். எங்கள் திருமணம் நடந்த பின்னர் முத்துசாமியின் உதவியால் அவருக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வீட்டில் ஒரு பகுதியில் நாங்கள் வசித்துக் கொண்டிருந்தோம்.

''உங்களுக்கு கல்யாணமாகி ஆறு மாசத்துக்கு மேலாகி விட்டது. இனியும் உங்கண்ணன் கோபமாக இருப்பார்னு நான் நினைக்கலை. அதனாலே நீங்க ரெண்டு பேரும் வந்து செஞ்சது தப்புனு அவர் காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டுடுங்க. பிறகு எல்லாம் சரியாகிவிடும்''

என்று முத்துசாமி ஒரு நாள் எங்களுக்கு ஒரு யோசனை சொல்லி வைத்தார்.

அதற்கு என் கணவர் உடனே ஒப்புக் கொள்ள வில்லை. என்னைத் திருப்தி செய்யும் பொருட்டு முடிவில் ஒருநாள் அவர் என்னுடன் கிளம்பினார்.

‘‘வா! பாப்பா! வா உள்ளே. தம்பி நீங்களும் வாங்க’’ என்று உரத்த குரலில் எங்களை வரவேற்று முத்துசாமி தமக்கு ஒன்றும் தெரியாததுபோல் ஒரு நாடகம் போட்டார்.

அவர் போட்ட சப்தத்தைக் கேட்டு உள்ளேயிருந்து என் அண்ணி பரபரப்பாக ஓடி வந்தாள். இடையில் நூல் சேலையும், கையில் கண்ணாடி வளைகளும், கழுத்தில் பாசிமணி மாலையுமாக நின்ற என் எளிய தோற்றத்தைக் கண்டதும் அவளுக்கு பகீர் என்றிருந்தது. ‘‘பட்டும் பனாரசுமாகக் கட்டி அழகு பார்த்த உன்னை நான் இப்படியா பார்க்கணும்! கதறிக் கொண்டு என்னைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

எங்கள் இருவரையும் உட்கார வைத்துச் சாப்பிடும்படி வற்புறுத்தினாள். தலைவாழை இலைகளைக் கொண்டு வந்து பரப்பினாள். சமைத்திருந்த பதார்த்தங்களைத் தன் கையினாலே ஆசையுடன் பரிமாறினாள். ‘‘சீரும் சிறப்புமாகக் கல்யாணம் செய்து கொடுக்கவும், உங்களுக்கு விருந்து படைக்கவும் நான் கொடுத்து வைக்கவில்லை. இன்றைக் காவது என் கையால் போட்ட சாதத்தை ஒரு வாய் சாப்பிடுங்கள். அப்பத்தான் என் மனம் ஆறுதலடையும்’’ என்று துக்கத்துடன் திணறிக் கொண்டு எங்களை உபசரித்தாள்.

ஒரு கவளம் உணவை வாயில் வைக்க கையால் எடுத்த நான் அருகில் காலடி ஓசை கேட்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தேன். இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு அண்ணன் ருத்ரமூர்த்தியாக எதிரில் நின்று கொண்டிருந்தார். என்ன ஏது என்று யோசிக்கு முன்பு ஒரே தாவலில் என் கணவரை நெருங்கிய அண்ணன் அப்படியே ஒரு பிடியில் அவரைத் தூக்கி நிறுத்தினார். ''என் வீட்டிற்குள் புகுந்து என் சோற்றைத் தின்ன உனக்கு வெட்கம் இல்லை?'' கேட்டுக் கொண்டே ஓங்கி அவர் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

எல்லாம் ஒரு கணத்தில் நடந்தது. சுருண்டு கீழே விழுந்துவிட்ட என் கணவரிடம் ஓடி அவரைத் தாங்கிக் கொண்டேன். மறுபடி கையை ஓங்கிக் கொண்டு அருகில் வந்த அண்ணனைக் காளிபோல் உறுத்துப் பார்த்தேன். ''நிறுத்துங்கள் அண்ணா! எங்களை அடித்துக் கொன்று விட்டால் கேட்க ஆளில்லை என்று நினைக்க வேண்டாம். உங்கள் வீட்டுச் சாப்பாட்டுக்கு நாங்கள் ஓடி வரவில்லை. அண்ணி வற்புறுத்தினார்கள். ஒப்புக் கொண்டோம்'' ஆத்திரத்துடன் கத்தினேன்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் அண்ணன் சற்று அசந்துவிட்டார். ''பேசக் கற்றுக் கொண்டுவிட்டாயா? வளர்த்த கடா மார்பில் பாய்கிறது. அவனுக்குப் பேச வாயில்லை. நீ வந்து விட்டாயா?'' மீண்டும் அண்ணன் கர்ஜித்தார்.

''உங்களிடம் கை நீட்டிப் பணம் வாங்கிவிட்ட கொடுமைக்கு அவர் வாயடைத்து நிற்கிறார். வார்த்தைகளைக் கொட்டிவிட முடியும். அள்ளமுடியாதே என்று கவலைப் படுகிறார்'' என்றேன் பதிலுக்கு.

''ஷட் அப் அண்ட் கெட் அவுட்!'' கோபம் தாளாது அண்ணன் கூக்குரலிட்டார்.

அன்று எப்படித்தான் எங்கள் வீட்டிற்கு வந்தோமோ தெரியாது. அடுத்த நாள் வேலையிலிருந்து வந்த என் கணவர் மிகவும் மனச்சோர்வுடன் சுவரில் சாய்ந்தபடி வீட்டுத் தாழ்வாரத்திலேயே உட்கார்ந்துவிட்டார். நான் அவருக்குப் பல வகையிலும் ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்றேன்.

''நாமிருவரும் குழந்தைகள் அல்ல. இந்தத் திருமணத்தினால் ஏற்படப் போகிற விபரீதங்களைப் பல கோணத்திலும் ஆராய்ந்து விட்டுத்தான் சம்மதித்தோம். இனி நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும்'' ஆறுதலாக நான் சொன்னேன்.

''இனி என்ன செய்வது என்பதை பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் வேலை செய்து கொண்டிருக்கும் கம்பெனியின் முதலாளி உன் அண்ணனுக்கு வேண்டியவர். உன் அண்ணன் அவரிடம் என்ன சொன்னரோ தெரியாது இன்று காலை முதலாளி எனக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டார். இந்த மாதக் கடைசியுடன் என் வேலை தீர்ந்துவிட்டது'' என்றார் மிகவும் ஏக்கத்துடன்.

இந்தப் புண்ணிய காரியத்தை என் அண்ணனா செய்தார்! கேட்கவும் எனக்கு வெட்கமாக இருந்தது. கோபம் தாங்க முடியவில்லை.

''அதற்கு நாம் பயந்துவிடுவதா? இந்த நகரத்தை தவிர இந்தப் பரந்த பாரதத்தில் நமக்கு வேறு இடம் கிடைக்காதா? கையிலிருப்பதை எடுத்துக்கொண்டு நாம் ஊரைவிட்டே போய்விடுவோம். மனம் கலாங்காதீர்கள்'' என் கணவருக்கு ஆறுதல் சொன்னேன். உற்சாகப்படுத்தினேன்.

அந்த மாத இறுதியில் எங்கள் கையில் அதிகப் பணம் இருக்கவில்லை. கையிலிருந்த பணத்திற்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு வடக்கே வேலையைத் தேடிக்கொண்டு கிளம்பிவிட்டோம். அங்கு வேலை கிடைக்கும்வரை தங்கியிருக்க செலவிற்குப் பணம்?

இந்தச் சமயத்தில்தான் தெய்வமாக வந்து உதவினார் முத்துசாமி. நாங்கள் ஊருக்குக் கிளம்பும் முன்தினம் முத்துசாமி எங்களைக் காண வந்தார். அடுத்த பகுதி வீட்டாரிடமிருந்து ஒரு தட்டை வாங்கி தாம் கொண்டு வந்த பொருள்களை அதில் வைத்து, ''உன் தகப்பன் கொடுக்கும் சீதனம் எடுத்துக்கொணடு எங்கேயாவது போய்ச் சுகமாக இரு'' என்று தழுதழுத்த குரலில் ஆசீர்வதித்தபடி என்னிடம் கொடுத்தார்.

வெற்றிலை பாக்கு பழங்களின் மேல் ஒரு நூல்புடவையும், ஒரு கடித உறையும் இருந்தன. அதைப் பிரித்துப் பார்த்தேன். நோட்டுகளாக இருநூறு ரூபாய்கள் இருந்தன.

''முத்தண்ணா என்ன இது! உங்களது உழைப்பின் சேமிப்பை எல்லாம் எங்களுக்கு கொடுக்கிறீர்களே, இதை நான் எப்படி ஏற்பது?'' துக்கத்துடன் கேட்டேன்.

என் கணவரும் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். 'கடனாக வேண்டுமானால் வாங்கிக் கொள்கிறோம். நீங்கள் மறுத்தால் நாங்கள் ஏற்க முடியாது'' என்றார் கண்டிப்பாக.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள். போற இடத்தில் செலவிற்கு இது உதவும். என் பேச்சைக் கேளுங்கள்'' என்று கெஞ்சினார் முத்துசாமி.

அந்தப் பணம் எங்களுக்கு மிகவும் உதவியது உண்மை. அவர் மட்டும் அன்று கொடுத்திராவிடில்

ஆமதாபாத்தில் வேலை வேலையில்லாது திண்டாடிய சில நாட்களிலேயே நாங்கள் பட்டினியால் செத்து விட்டிருப்போம், ஆமாம். முத்தாண்ணாவின் கடனை நான் திருப்பிக் கொடுத்தேனா?--.

தலையணை மீது பதிந்திருந்த என் கன்னத்தில் சில்லென்று உணர்வு ஏற்படுவதை அறிந்து எழுந்திருந்தேன். என்னையறியாது உணர்ச்சி வசத்தில் நடந்ததையெல்லாம் நினைத்து வடித்த கண்ணீர், தலையணையை நனைத்திருப் பதைத் தொட்டு உணர்ந்து கொண்டேன். திடீரென்று ஒரு நினைவு என்னைக் குலுக்கியது. எழுந்து அறையின் மின் விளக்கைப் பொருத்தினேன். சுவருடன் பதித்திருந்த அலமாரியைத் திறந்து என் ஆடைகளுக்கு அடியில் நான் வைத்திருந்த அந்தப் புடவையை எடுத்தேன். பச்சைக் கரை போட்ட சிவப்பு நிற சேலை அது. அதை இன்னமும் பத்திரமாக நான் வைத்திருந்தேன். அண்ணன் வீட்டில் எத்தனையோ விலை உயர்ந்த புடவைகளை அணிந்து வளர்ந்தவள் நான். எனது எஜமானி திருமதி ஜோஷியும் எத்தனையோ புடவைகள் வாங்கி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவை ஒன்றும் முத்துசாமி அளித்த அந்த அன்புப் பரிசிற்கு ஈடாகாது. அதை என் மார்புடன் இறுக அணைத்துக் கொண்டேன்.

அமைதியாக அதற்குப் பின் சில தினங்கள் கழிந்தன. பொங்கல் பண்டிகையைக் குறித்து தினேஷிற்குத் தொடர்ந்து மூன்று நாட்கள் விடுமுறை.

"பெரியம்மா! இன்று காணும் பொங்கல். கடற் கரையைக் காண வருகிறீர்களா? அழைத்துக்கொண்டு போகிறேன்" உற்சாகமாக அவன் கேட்டான்.

நானும் கட்டுச் சாத மூட்டையுடன் கிளம்பிவிட்டேன். கடலுக்கு அருகே மணல் மீது அமர்ந்து கொண்டு நாங்கள் இருவரும் பல விஷயங்களைப் பேசி சிரித்து இனிதாகப் பொழுதைக் கழித்தோம்.

''பெரியம்மா! என் வயிறு சாப்பாட்டினால் நிறைந்திருக்கிறது. இது சமயம் உங்களிடம் ஒன்று சொல்லி ஆலோசனை கேட்க ஆசைப்படுகிறேன்'' என்றான்.

''கேள். தெரிந்தால் பதில் சொல்கிறேன்.''

''நேர்மையான உழைப்பினால் பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். என் நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று எனக்கு ஒரு பெரிய அம்பிஷன்.''

''நல்லதுதானே? உன்னையொத்த வயதுடைய புத்திசாலியான படித்த இளைஞர்கள் இப்படித்தான் நினைப்பார்கள், இயற்கையானதுதான். தப்பில்லையே'' என்றேன்.

''தப்பு அதில் இல்லை பெரியம்மா. என் ஆசை இந்த அளவையும் மீறி விட்டிருப்பதால் கவலைப்படுகிறேன்.''

''புரியும்படி சொல்லேன் தினேஷ்.''

''நான்·மேலே படித்து என் நிலையை உயர்த்திக் கொள்ள விரும்புகிறேன். அந்த முயற்சியில் ஈடுபட்டும் இருக்கிறேன். இதற்கிடையில் என் தகுதிக்கு ஒவ்வாத ஒரு பெரிய இடத்துப் பெண்ணை நேசிக்கிறேன். அவளும் என்னை மிகவும் விரும்புகிறாள். இந்தக் காதல் எங்களை எங்கே கொண்டு விடுமோ என்ற ஒரு பயங்கர உணர்ச்சி இரவும் பகலும் என்னை வாட்டி வதைக்கிறது. நீங்கள் தான் இதற்கு ஒரு முடிவு சொல்ல வேண்டும்'' அவனது குரல் துயரத்தில் கம்மியது.

பேரிடி ஒன்று தாக்கிவிட்டது போல் எனக்கு ஒரு பெரும் அதிர்ச்சி. என்னால் உடனே பேச முடியவில்லை. கடவுளே! கள்ளங் கபடமற்ற இந்தப் பையனுக்குக் கஷ்டகாலம் ஆரம்பமாகி விட்டதா?

''தினேஷ்! யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டிய முடிவு இது'' என்றேன். என் உள்ளம், உடல், உணர்ச்சிகள் யாவும் நடுங்கின.

## 14. அண்ணா, என்ன செய்யப் போகிறீர்கள்!

**சென்னையில்** நானும் என் கணவரும் தனியே வாழ்ந்து கொண்டிருந்த அந்த நாட்களில் எங்களைக் காண வந்த முத்துசாமி அடிக்கடி எனக்கு ஒரு புத்திமதியைத் திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''தண்ணீர் மூணுபிழை பொறுக்கும் என்பாங்க. முழுகப் போகிறவன் தப்பிக் கரையேறி ஓடும்படி மூன்று முறை தண்ணீர் சந்தர்ப்பம் கொடுக்கும். இயற்கையினிடத்தி லேயே இத்தனை கருணை இருந்தால் மனுசப் பிறவி நம்மகிட்ட மன்னிக்கிற குணம் எவ்வளவு இருக்கவேணும்? அண்ணன் பிடிவாதமாக இருக்கிறார்னு நீயும் பிடிவாதமாக இருந்துவிடாதே. இரண்டு பக்கமும் முரண்டால் ஒரு நாளும் உங்களுக்குள் பழைய உறவு ஒட்டாது பிரிஞ்சே போயிடுவீங்க. நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ. அண்ணனுக்கு கோபம் ஆறக் கொஞ்சம் அவகாசம் கொடு. நீ முயற்சி பண்ணலைன்னு தப்பு உன் பக்கம் இருக்கக் கூடாது. மறக்காதே.''

அவர் பின்னிப்பின்னி இதையே எனக்குப் போதித்துக் கொண்டிருந்தார். நானும் தண்ணீரைப்போல் தயாள மனப்பான்மையுடன் என் அண்ணனுக்கு மூன்று சந்தர்ப்பங்கள் கொடுத்தேன். முதல் தடவை கணவனும் மனைவியுமாக அவரிடம் மன்னிப்புக் கேட்டு ஆசி பெற வீட்டிற்குள் சென்று அவமானப் பட்டோம். இரண்டாம் முறை, என் கணவரையும் கேட்காமல் அவர் உடல் நலமில்லாத போது உதவி வேண்டி அண்ணனுக்கு கடிதம் எழுதி அவமானப்பட்டேன்.

மூன்றாவது முறையும் முயற்சித்தேன். ''வருஷங்கள் இரண்டு ஆகிவிட்டது. அதுவும் இந்தச் சந்தர்ப்பத்திலா அண்ணன் அசட்டை செய்வார்?'' என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன்.

அப்போது என் கணவர் இறந்து இரண்டு வாரங்கள் சென்றுவிட்டிருந்தன. உற்றார் உறவினர் இன்றி வேறு ஓர் ஊரில் இளம் விதவையாகக் கையில் காசில்லாது நான் தவித்துக் கொண்டிருந்தேன். இம்மாதிரி நிலைமை ஏற்படும்போது சாதாரணமாகப் பெண்கள் பிறந்த வீட்டின் தயவைத்தானே எதிர்பார்ப்பது வழக்கம்? வெட்கத்தை விட்டு கணவனுக்குச் செய்து கொடுத்த வாக்கையும் மறந்து மன்னிப்பைக் கோரி அண்ணனிடம் அடைக்கலம் வேண்டி ஒரு கடிதம் எழுதினேன்.

''சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த என் கணவர் கடந்த பத்தாம் தேதி காலமாகி விட்டார். என் கணவருக்கு நீங்கள் முடிவாக எழுதியிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகும் இதை எழுதுகிறேன் என்றால் என் நிலை அத்தனைப் பயங்கரமாகி விட்டது என்று பொருள். நேரில் என்னை நீங்கள் பார்த்தால் தாங்க மாட்டீர்கள். தரித்திரத்தின் உருவமா,

பட்டினியின் பிரதி பிம்பமா என்று பயந்து விடுவீர்கள். இளம் விதவை என்ற கொடிய நிலை வேறு. இனி தனியே வாழ எனக்குப் பயமாக இருக்கிறது. உங்கள் வீட்டில் எனக்குத் தங்கை என்ற பதவி வேண்டாம். ஒரு வேலையாளைப்போல் ஒண்டி ஒதுங்கி வாழ ஒரு இடம் கொடுங்கள். இது சமயம் உங்கள் பாதுகாப்பு மிகவும் தேவை. காலடியில் விழுந்து கண்ணீர்விட்டு வேண்டுகிறேன். அண்ணா, என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள்...''

பதிலுக்காக நான் காத்திருந்தேன். காத்திருந்தேன். அண்ணன் இந்தச் சமயம் கைவிடமாட்டார் என்ற ஒரு அல்ப ஆசை. என்ன இருந்தாலும் நான் அவரது தங்கை அல்லவா என்ற முட்டாள்தனமான நம்பிக்கை. அண்ணன் உதவுவார் என்ற துணிவில் தொடர்ந்து கடன்பட்டுக் கொண்டு தனியே அந்த வீட்டில் காத்துக் கொண்டிருந்தேன்.

பல நாட்களுக்குப் பின்னர் அண்ணனிடமிருந்து பதில் வந்தது. ஆவலுடன் உணர்ச்சியில் விரல்கள் நடுங்க அவசரமாக உறையைப் பிரித்துக் கடிதத்தை எடுத்தேன்.

''வாழ்ந்து காட்டுகிறேன் என்ற துணிவுடன் புறப்பட்டுப் போன உனக்கு வெளி உலகத்தைக் கண்டு பயமா? வேடிக்கை தான். யூ மேட் த பெட், நெள லை ஆன் இட். நீயே தேடிக் கொண்ட கஷ்டத்தை நீதானே அனுபவிக்க வேண்டும். உனது அனுபவங்கள் உன் போன்ற புத்தி தடுமாறிக் குடும்பத்திற்கு அவமானம் கொண்டுவரும் பெண்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். நாமிருவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பது உண்மையானால் எனக்கிருக்கும் தன் மதிப்பு உனக்கும் இருக்கும். இனி என்னிடம் யாசிக்க மாட்டாய். ''காலடியிலிருந்து பூமி நழுவி முடிவில்லாத ஒரு பள்ளத்திலே நான் வீழ்ந்து கொண்டிருப்பது போன்ற ஒரு

பயங்கரத் திகிலை, துக்கத்தை அந்தக் கடிதம் கொடுத்தது. படித்து முடித்ததும் என் நிலையை எண்ணித் துக்கம் தாளாது தேற்றுவார் இன்றி அழுதேன். மூன்றாவது சந்தர்ப்பமும் முடிந்துவிட்டது. இனிமேலே நான் என்ன செய்வேன்? எனது ஆற்றலை நம்பி நான் வாழ வேண்டும். வேறு வழி? இரவும் பகலும் பல நாட்கள் இதைப் பற்றி சிந்தித்தேன். சிந்தித்தேன். சிந்தித்தேன்...

அண்ணனது கோபம் ஒரு வழியில் நல்லதாயிற்று. இல்லாவிட்டால் எப்படியாவது வாழ்ந்துவிடுவது என்ற துணிச்சலும் வைராக்கியமும் ஏற்பட்டிருக்குமா? ஆனால் அதற்குப் பின் எத்தனை அனுபவங்கள்!

இறுதியில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். வீட்டிலிருந்து சாமான்களை விற்றுக் கடனை அடைத்தேன். வாடகைப் பாக்கியைக் கொடுத்துவிட்டு எனது துணிகள் சிலவற்றை ஒரு சிறு பெட்டியில் வைத்துக் கொண்டேன். என் கணவர் விட்டுப்போன அந்தச் சிபாரிசுக் கடிதத்தை எடுத்துக் கொண்டு சூரத்திற்குப் புறப்பட்டேன். பிருந்தாவன் ஆசிரமத்தின் தலைவி சாயாதேவியைத் தேடிக்கொண்டு அலைந்தேன். நான் எதிர்பார்த்ததற்கு மாறாக சாயாதேவி வயதான பெண்மணி. நான் போன சமயத்தில் அவள் இருதய நோய் காரணமாகப் படுத்த படுக்கையில் இருந்தாள். எங்கள் குடும்ப நண்பரின் பெயரைச் சொல்லிச் சிபாரிசுக் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன்.

''என் சகோதரன் உன்னைப் பற்றி முன்னமேயே சொல்லி இருக்கிறான். ஆனால் நீ காலங்கடந்து வந்து விட்டாய். போன மாதம் வரை நான் ஆசிரமத்துத் தலைவியாக இருந்தேன். சில நாட்களுக்கு முன்புதான் ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டேன்'' என்று பெருமூச்செறிந்தாள் அவள்.

“அப்படிச் சொல்லாதீர்கள். எனக்குப் போக்கிடம் வேறு கிடையாது? உங்கள் சிபாரிசில் ஆசிரமத்தில்எனக்கு ஏதாவது ஒரு வேலை” என்று முடிக்காது துக்கத்துடன் அவளது காலடியில் உட்கார்ந்து விட்டேன் என் நிலை அந்த அம்மாளின் மனத்தை மிகவும் உருக்கிவிட்டது. “ஓய்வு பெற்றபின் எனக்கு ஆசிரமத்தில் செல்வாக்கு குறைந்துவிட்டதே,பல இடங்களில் உன்னுடன் அலைந்து ஒரு நல்ல வேலை உனக்குத் தேடிக் கொடுக்க முடியாத நோயாளியாக இருக்கிறேன். வேலை கிடைப்பது என்பது அத்தனை சுலபமா? கொஞ்ச நாட்கள் என்னுடன் இங்கேயே தங்கியிரு. பிறகு பார்க்கலாம்” என்று எனக்கு இருக்க இடம் கொடுத்தாள்.

“புவனேஸ்வரி தாயே! என்னைக் காப்பாற்று” என்று இரவும் பகலும் என் இஷ்ட தெய்வத்தை நான் மனம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டது வீணாகவில்லை. சாயாதேவி என்னிடம் தாயைப் போன்ற அன்புடன் நடந்து கொண்டாள். நானும் பெற்ற மகளைவிட பாசத்துடன் நோயாளியான அவளுக்குச் சலிக்காது பணிவிடைகள் செய்தேன். ஆறுமாத காலம் இவ்வாறு சென்றது. சாயாதேவியின் உடல்நிலை மிகவும் நலிந்து கொண்டு வந்தது. ஒருநாள் மருந்து வாங்கி வர வெளியே கடைக்குச் சென்ற நான் பரபரப்புடன் ஓடிவந்து எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைக் கூறினேன்.அவள் பதறிப்போனாள். மெலிந்த உடல் நிலையையும் பொருட்படுத்தாது கோபத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

“நீலு! இந்த உலகில் உன் போன்ற அழகான பெண்கள் தனியே விடப்பட்டால் என்னவிதமான ஆபத்துக்கள் காத்திருக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒன்று சொல்வேன், கேட்பாயா?” ஆவலுடன் கேட்டாள் அவள்.

''சொல்லுங்கள். உங்கள் ஆலோசனையை நான் எப்பொழுதும் கேட்கத் தயார்'' என்றேன்.

''படித்தவள். செல்வமான நிலையில் இருந்தவள் என்பதையெல்லாம் அடியோடு மறந்துவிடு. தற்சமயம் உனக்கு வேண்டியது ஒரு நல்ல பாதுகாப்பு. அதைக் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல குடும்பத்தார் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். அவர்கள் வீட்டில் உன்னைச் சேர்த்துவிடுகிறேன். என் உடல் நிலையை இனி நம்ப முடியாது'' என்றாள் திணறிக்கொண்டு.

''அப்படியே செய்யுங்கள் அம்மா'' என்றேன் நான்.

''நீ படித்தவள். ஏதாவது ஆபீசில் குமாஸ்தாவாகப் பணி புரிய உன்னால் முடியும். ஆனால் உன் இளமை, அழகு, தனிமை இவை உன் எதிரிகளாக உள்ளன. தனியே நீ வெளி உலகில் வாழத் தொடங்கினால் எங்கேயோ போய்த் துன்பத்தின் முடிவில் நிற்பாய். ஆசிரமத் தலைவியாக இருந்த எனக்கு அனுபவங்கள் அதிகம். நான் சொல்கிற இடத்தில் உனக்குப் பெரிய வேலை ஒன்றும் கிடையாது. வேலைக்காரியாக ஏற்றுக் கொள்வார்கள். யோசித்துச் சொல். உனக்குத் தேவை பதவியா பாதுகாப்பா?''

மயூரவாகன் தங்கையான எனக்கு இந்த நிலையா? வேலைக்காரர்களை ஏவிப் பழக்கப்பட்ட நான் இடம்மாற வேண்டிய துர்ப்பாக்கியமா? துக்கம் நெஞ்சை அடைத்தது. நான் மௌனமாக இருப்பதைக் கண்டதும், சாயாதேவி வறட்சியாகச் சிரித்தாள். ''எனக்குத் தெரியும். வாழ்க்கையின் உயரத்திலிருந்து கீழே இறங்கி வருவது சிரமம். எனக்கு ஏதாவது நடந்துவிட்டால் உன் கதி என்னவாவது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு'' என்றாள்.

இதைக் கேட்டு என் நெஞ்சு துணுக்குற்றது. அவளது கரங்களைப் பிடித்துக் கொண்டேன். ''அம்மா, நீங்கள் சொன்ன இடத்தில் ஏற்பாடு செய்யுங்கள். எனக்கு வேண்டியது பாதுகாப்புத்தான்!'' என்று கூறிவிட்டு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாது கண்ணீர் வடித்தேன்.

சில நாட்களுக்குப்பின் அவளைக் காண வந்த பத்திரபால அம்மாள் திரும்பிப் போகும்போது என்னை அழைத்துக் கொண்டு சென்றாள். அவர்கள் வீட்டில் பொறுப்பு மிக்க ஒரு வேலைக்காரியாக நான் மாறிவிட்டேன். அந்த ஆரம்ப நாட்களில் நான் பட்ட மனவேதனை எனது இழி நிலையை என்னால் சட்டென்று ஏற்கவே முடியவில்லை. மனம் பல தடவைகள் புரட்சி செய்தது. வேறு வகையில்லாது சிறைப்பட்ட ஒரு பறவைபோல் எண்ணங்கள் பல அலைமோதும் உள்ளத்துடன் வாழ்க்கையை அவர்களுடன் ஆரம்பித்தேன். பல வருடங்கள் வரை அண்ணனது ஆறாத கோபத்தை எண்ணி நான் வடித்த கண்ணீர்.. என் உள்ளத்தில் அண்ணன் மீது வளர்ந்துகொண்டு வந்த வெறுப்பு கொஞ்சமா?

துன்பச் சிந்தனைகளை உதறிவிட்டு அறையின் கடிகாரத்தைப் பார்த்தேன். பிற்பகல் இரண்டுமணி நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சமையல் ஆகவில்லையே, என்ற கவலையில் எழுந்து உள்ளே சென்று விட்டேன். அன்று மாலை நிம்மதியை வேண்டித் தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு இருந்தேன். தோட்டக்காரன் கவனிப்பில் மலர்ச் செடிகள் மிகவும் செழிப்பாக வளர்ந்து கொண்டிருப்பதைக் காண எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எஜமானி திரும்பி வருவதற்குள் எல்லாம் பூத்துக் குலுங்கும் என எண்ணி உவகையுடன் நாட்டு ரோஜாச் செடியொன்றை

பார்த்தபடி நின்று கொண்டிருந்தேன். ''அத்தை!'' அந்தக் குரல் என்னைத் திடுக்கிட வைத்தது.

சிவப்பு நிறச் சுங்கடிச் சேலையில் சிங்காரியாக கன்யாகுமரி என் அருகில் வந்து நின்றாள். அவள் அணிந்து கொண்டிருந்த மிட்நைட் செண்டின் மனம் என் முகத்தில் வந்து மோதியது. ''கார் வந்த சப்தம் கேட்கவில்லையே?'' ஆச்சரியப்பட்டேன் - அவளது அழகை ரசித்துக்கொண்டு.

''அப்பாவின் ஆட்டோமாடிக் பென்ஸ் - அது தரையில் ஓடாது. ஆகாயத்தில் மிதக்கும்'' குறும்புடன் சிரித்தாள் அவள். அருகில் நெருங்கி என்னை ஆசையுடன் அணைத்துக் கொண்டாள். நான் மெய் மறந்து போனேன். இவளது கொஞ்சல் என் காதுகளுக்கு எத்தனை இனிமையாக இருக்கிறது!

''யூ ஆர் டிரீமிங்'' என்று அவள் என்னை விளை யாட்டாக உலுக்கினாள்.

''கனவுகள் காண வேண்டியவள் நீ. நாட்டி கேர்ள்!'' என்று செல்லமாக அவளைக் கடிந்துகொண்டு ''வா, உள்ளே போவாம்'' என்று அழைத்தேன்.

அவசரமாகச் சில காரியங்களைச் சமையலறையில் நான் கவனித்து வருவதற்குள் வரவேற்பறையிலிருந்து பாட்டுக் கேட்டது. வேகமாக வெளியே ஓடி வந்தேன். என்னைக் கண்டதும் அவள் மெல்லச் சிரித்தாள். ''டோண்ட் கெட் எக்ஸைட்டட். உங்கள் ரேடியோ கிராமை நான் உடைத்துவிட மாட்டேன். எப்படி உபயோகிப்பது என்று எனக்குத் தெரியும். இந்தப் பாட்டைக் கேளுங்கள் என்றாள் அந்த துணிச்சல்காரி. என் உத்தரவை கேட்காமல் என் எஜமானியின் ரேடியோ கிராமில் ஒரு இசைத்தட்டைப் பாட

விட்டிருந்தாள். ''லவ் இஸ் எ பியூட்டிஃபுல் ஸாங்'' என்ற பாட்டு இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தது.

''காதல் ஒரு அழகான காவியம். இல்லையா அத்தை?'' அவள் என்னைக் கேட்டுவிட்டுப் பார்த்தாள். அவளது நீண்ட விழிகள் உணர்ச்சியில் ஒளிவிட்டன.

''ஆமாம். இந்த வயசில் அப்படித்தான் தோன்றும்'' என்றேன் நான் வேடிக்கையாக. அது சமயம் மணி ஓசையிட்டது.

கதவைத் திறந்தேன். வேலை செய்த களைப்புடன் தினேஷ் உள்ளே வந்தான். இவ்வளவு நாட்களாக நான் தள்ளிப்போட்டுத் தடுத்து வந்த அந்த நிகழ்ச்சி இன்று நடந்துவிட்டது. அவர்கள் இருவரும் சந்தித்தனர். ஆனால் அதில் எனக்குத்தான் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது.

''ஹாய்!'' என்று ஏககாலத்தில் ஒருவரையொருவர் வரவேற்றுக் கொண்டனர். பின்னர் யுகயுகமாக உறவு கொண்டவர்கள் போல் தம்மை மறந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

கணப்பொழுதில் எனக்கு எல்லாம் புரிந்து விட்டது.

அவள் சொன்ன ஏழைப்பையன்!

அவன் சொன்ன பெரிய இடத்துப் பெண் இவள் ''இதோ வருகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே விரைந்தேன். என் உள்ளத்தில் அது சமயம் கொந்தளித்த உணர்ச்சியை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உடல் கிடுகிடு வென்று ஏனோ ஆடியது. பின் வராந்தாவில் போய் நின்று கொண்டேன். திடீரென்று என்னையறியாது உரத்துச் சிரித்து விட்டேன்.

அண்ணா! இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் அந்தஸ்தைக் கவிழ்க்கப் போகிறவள் உங்கள் பெண்!

என் உள்ளம் அறை கூவியது.

## 15. சந்திப்பு

**கொ**ஞ்ச நேரம் சென்றபின் நானும் மறுபடியும் வரவேற்பறைக்குள் வந்து நின்றேன். ரேடியோகிராம் மீண்டும் அதே பாட்டை ஒலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சப்தம் பாட்டையும் மீறி வீடு முழுவதும பரவி எதிரொலி செய்து கொண்டிருந்தது. சோபா ஒன்றின்மீது அருகருகே அமர்ந்திருந்த அந்த இளம் ஜோடியினரைக் கண்டபோது எனக்கேற்பட்ட ஆனந்தம்...! கொடுமையான கோடை வெப்பத்திலே ஓடும் நதியில் மூழ்கிக் குளிரக் குளிர திளைத்தாடும் மகிழ்ச்சியில் உள்ளம் குளிர்ந்து போனேன். பாராதவள் போல் அவர்களை மீண்டும் பார்த்து பரவசமாய் நின்றேன்.

என்னைக் கண்டதும் தினேஷ் சட்டென்று எழுந்து வந்தான்.

''பெரியம்மா! இப்படி வாருங்கள்'' என்று தாழ்ந்த குரலில் அழைத்த வண்ணம் என் அறை வாயிலருகே சென்றான். நானும் பின் தொடர்ந்தேன்.

''நேற்று கடற்கரையில் உங்களிடம் சொன்னேனே? நானும் ஒரு பெண்ணை விரும்புகிறேன் என்றேனே அவள் தான் இவள். மயூரவாகன் என்ற பிரபல மனிதரின் செல்லப்பெண்'' பெருமிதமாகக் கிசுகிசுத்தான். பின்னர்

உரத்த குரலில் "கன்யா" எக்ஸ்க்யூஸ்மீ ஒரு நொடியில் வந்து விடுகிறேன். ப்ளீஸ் வெயிட் ஃபார் மி என்று கூறி விட்டுக் குளியலறையை நோக்கி விரைந்தான்.

ரேடியோகிராமை நிறுத்திவிட்டுக் கன்யாவும் எழுந்து வந்தாள். கன்னங்களும் முகமும் சிவக்க ஒளி வீசிய அந்த நீண்ட விழிகளில் நூறாயிரம் கனவுகள் மிதக்க அவள் என்னைப் பார்த்து மோகனமாக முறுவலித்தாள்.

"அத்தை நீங்கள் ஒரு கிளவர் லேடி! விஷயத்தைப் புரிந்து கொண்டுதானே அப்படி ஜாடையாகப் பின்பக்கம் சென்றீர்கள்?"

இனம் விளங்காத ஒரு இன்பத்திலே என் இதயம் படபட வென்று துடித்தது.

"எனது ஊகம் சரியோ தப்போ என்று ஒரே குழப்பமாக இருக்கிறதே?" விட்டுக் கொடுக்காது நான் பதில் அளித்தேன்.

"உங்கள் ஊகம் கரெக்ட் அத்தை! இந்தத் தினேஷைத் தான் நான் காதலிக்கிறேன். அவர் அழகாயில்லை?" கொஞ்சியபடி அவள் கேட்டாள்.

"இப்படி உட்கார். தினேஷ் சாப்பிடத் தயாராகி விடு வான். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்றேன்.

"நானும் உங்களுக்கு உதவி செய்கிறேன் அத்தை" குழைந்துகொண்டு அவள் என்னைத் தொடர்ந்து சமையல றைக்குள் வந்தாள். "ஆமாம்! ஆபீஸ் அறையில் படுத்துக் கொண்டு காவல்காத்து வரும் ஆசாமி இந்தத் தினேஷ் தானே. ஏன்? எனக்கு இதுவரை சொல்லவில்லை?" சிணுங்கினாள் அவள் பொய்யான கோபத்துடன்.

''உனக்கும் இவனுக்கும் உள்ள தொடர்பு பற்றி எனக்கென்ன தெரியும்?'' நானும் போலியான கோபத்துடன் அதட்டினேன்.

கன்யா உதவி செய்ய, சாப்பாட்டு மேஜை மீது பதார்த்த பாத்திரங்களைக் கொண்டு வந்து வைத்து இலைகளைப் பரப்பினேன்.

''அத்தை, எனக்கு ஒரு சந்தேகம். பெரியம்மா என்று தினேஷ் உங்களை அழைக்கிறதைக் கேட்டேன். எப்படி இந்த உறவு முறை?'' குறும்பாகக் கேட்டுவிட்டு அவள் கண்களைச் சிமிட்டினாள். அதே சமயம் பின்னால் காலடி ஓசை கேட்கவே இருவரும் திரும்பிப் பார்த்தோம். குளித்து விட்டு உடுத்திக் கொண்டு தினேஷ் சாப்பாட்டு அறைக்குள் வந்து நின்றான். பழுப்பு நிற பாண்ட்டும் இளம் பச்சை நிற ஷர்ட்டும் அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தன.

'கன்யா மேல் தப்பில்லை. பையன் உண்மையாகவே பார்க்க அழகானவன்தான். மயங்கிவிட்டாள் இவள்...'' என்று ஓடியது என் சிந்தனை.

''பெரியம்மா! நானும் கேட்கத்தான் நினைத்தேன். இந்தப் பெண்ணை உங்களுக்கு எப்படித் தெரியும்? அத்தை என்று அழைக்கிறாளே, என்ன உறவுமுறை?'' அவனும் கேட்டான்.

''இரண்டு பேரும் என்னைப் பிடித்துக் கொண்டு விட்டீர்கள். இனி நான் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்? நீங்களாக விரும்பி வைத்துக் கொண்ட உறவு இது. பெரியம்மா என்று கூப்பிட நீ ஆசைப்பட்டாய். அத்தை என்று உறவுகொள்ள இவள் ஆசைப்பட்டாள், விரும்பினாள் நான் உங்களுக்கு நெருங்கிய உறவினள். வேண்டா

மென்றால் வேற்று மனுஷி. உன்மையில் உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டேன். ஏதோ துக்கம் என் தொண்டையை அடைத்தது.

''அப்படிச் சொல்லாதீர்கள். வீ லைக் யூ வெரிமச்?'' என்று ஏக காலத்தில் இருவரும் கூவி என் இரு பக்கத்திலும் வந்து நெருங்கி நின்று கொண்டனர்.

''இருவருடைய சிநேகிதமும் எனக்கு ஏற்பட உதவியது ஒரு விபத்து'' மர்மமாகப் பதிலளித்துவிட்டு நான் சிரித்தேன். ''உட்காருங்கள். உங்கள் இருவருக்கும் இன்று என் கையால் சாப்பாடு போட விரும்புகிறேன். நீங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு விட்டால் என் போன்ற ஏழை வீட்டுக்கு விருந்து சாப்பிட வருவீர்களா?'' என்று விளையாட்டாகப் பேசி உணவு வகைகளை இலையில் பரிமாறியபடி, அவர்களை நான் முதன் முதலாகச் சந்தித்த போது நேர்ந்த நிகழ்ச்சிகளை விவரித்தேன். ''வாட் எ கோயின்ஸ்டன்ஸ்'' என்று வியந்தாள் கன்யா. ''ஒரு விபத்து செய்திருக்கும் வேடிக்கையைப் பார்த்தீர்களா? கால் வழுக்கி நீங்கள் கீழே விழுந்தீர்கள். அந்தச் சிறு விபத்து நம்மைச் சந்திக்க வைத்தது. உங்கள் ஸீஸர் கன்யாவின் காரில் வந்து மோதிக்கொண்டு விழுந்தது. அந்த விபத்து கன்யாவை உங்களுக்கு அறிமுகப்படுத்தியது. ஆச்சரியம்!'' என்றான் அவன்.

'விபத்து செய்த வேடிக்கை இல்லை தம்பி! என் அண்ணன் மயூரவாகனிடம் நான் மறுபடியும் மோத வேண்டும் என்பதற்காக விதி உங்களை என்னிடம் கொண்டுவந்துவிட்டு வேடிக்கை பார்க்கிறதே!'' என்று எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன்.

சிரிப்பும் விளையாட்டுமாக இருக்கும் இந்த கன்யா வெடித்தெழப்போகும் அந்த எரிமலையின் கோபத்தைத் தாங்குவாளா? இது சமயம் அண்ணனைப்பற்றி நினைக்கவும் எனக்குப் பயங்கரமாக இருந்தது.

உணவிற்குப் பிறகு கையைக் கழுவிக்கொண்டு வந்த கன்யா மறுபடியும் எனக்கு உதவி புரியச் சமையலறைக்குள் வந்தாள். ''அத்தை! இனிதான் உங்களுக்கு முக்கியமான வேலை இருக்கிறது. உங்களிடம் அடிக்கடி ஓடி வந்ததன் ரகசியம் என்ன தெரியுமா?'' எனக்கு உங்கள் ஆலோசனையும் உதவியும் தேவை'' என்றாள் தாழ்ந்த குரலில்.

எனக்கு அவள் பேச்சு எதுவும் ஒன்றும் பிடிபடவில்லை. ''என்னம்மா சொல்கிறாய்?'' குழப்பத்துடன் கேட்டேன்.

''நீங்கள் ஓரளவு என்னைப் பற்றியும் எங்கள் குடும்பத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். அதனால் நான் இப்பொழுது கேட்கிறேன். தயங்காமல் உண்மையைச் சொல்லுங்கள். நான் தினேஷை விரும்புவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

திகைப்புடன் அவள் முகத்தைப் பார்த்தேன். ''இதில் என் அபிப்ராயத்திற்கு என்ன இடம் இருக்கிறது?''

''நிறைய இருக்கிறது. என்னைவிட நீங்கள் உலக அனுபவம் உடையவர்கள். என்மேல் உண்மையான அன்பு கொண்டிருக்கிறீர்கள். அந்த நம்பிக்கையில் கேட்கிறேன். என் அத்தை ஒரு ஏழையை விரும்பி மணந்துகொண்டு பல கஷ்டங்களை அனுபவித்தாள். அவளைப்போல் நானும் ஒரு எளிய குடும்பத்துப் பையனைத்தான் காதலிக்கிறேன். எனது வருங்காலம் எப்படி இருக்கும்?''

'உன் பெற்றோரைப் பொறுத்திருக்கிறது. உன் வருங்காலம்' என்று சொல்ல வாயெடுத்தேன். பின்னர் அதை உள்ளே அடக்கிக்கொண்டு, ''கன்யா, மனதைக் குழப்பிக் கொள்ளாதே. கொஞ்சம் பொறுமையாக இரு. இதெல்லாம் தீர ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டிய விஷயம். நேரமாகி விட்டது. உன் தாயார் உன்னைத் தேடக்கூடும். புறப்படு' கண்களில் நீர் பளபளத்தது.

''குட் பை தினேஷ். ஸீ யு லேட்டர்!'' என்று கூவி விட்டு ஒரே பாய்ச்சலில் வாயிலுக்குள் மறைந்தாள். அவளது கார் தெருமுனையினின்று மறைந்தபின்னர் நான் உள்ளே வந்தேன். வரவேற்பறையில் தினேஷ் நின்று கொண்டிருந்தான்.

''பெரியம்மா நான் இந்த வீட்டில் தங்கியிருப்பதை அறிந்த கன்யா மிகவும் ஆச்சரியப்பட்டு விட்டாள். ஏன் இதைப்பற்றி சொல்லவில்லை என்று சண்டைக்கே வந்து விட்டாள்'' என்று கூறிவிட்டு சங்கோஜத்துடன் தனக்குள்ளே மெல்லச் சிரித்துக் கொண்டான்.

நான் பேசவில்லை. உண்மையைப் புரிந்து கொண்டதும் அண்ணன் வீட்டில் வீசப்போகும் புயலை எண்ணிக் கலக்க மடைந்திருந்தேன். ''பெரியம்மா! கடந்த இரண்டு வருஷ காலமாக நாங்கள் ஒருவரையொருவர் அறிவோம். வெளியே பல இடங்களில் இரகசியமாகச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். கன்யாவின் குடும்பத்தில் நடந்த ஒரு துன்ப சம்பவத்தை எண்ணி நான் மிகவும் தயங்குகிறேன். அவளது அத்தையின் வாழ்க்கை ஒரு பெரிய டிராஜடியாகப் போய்விட்டது. என் சுயநலத்திற்காக நான் கன்யாவின் வாழ்க்கையைப் பலியிட விரும்பவில்லை. என்னை மறந்து விடும்படி நீங்கள் ஏன் கன்யாவுக்குப் புத்தி

சொல்லக் கூடாது? அவள் நன்மைக்காக நான் இந்தக் காதலைத் தியாகம் செய்யத் தயார்...''

''தினேஷ்! பொறுமையாக இரு. இது மிகவும் ஆலோசிக்க வேண்டிய காரியம்'' என்றேன்.

நாட்கள் ஓடின. தினேஷ் எங்கள் வீட்டில் தங்கியிருப்பதைத் தெரிந்துகொண்ட நாள் முதல் கன்யா அவனை வெளியிடங்களில் சந்திப்பதை நிறுத்திக் கொண்டு விட்டாள். அவள் தாயாருக்கு என்ன பதில் சொல்லுவாளோ தெரியாது நாள் தவறாது மாலை ஐந்து மணி சுமாருக்கு ஏதாவது ஒரு காரில் என் வீட்டுக்கு வந்து இறங்கத் தொடங்கினாள். ஸீஸரின் குரைப்பைத் தவிர நாள் முழுவதும தூங்கி வழிந்து கொண்டிருந்த எங்கள் வீட்டில் திடீரென்று ஒரே கலகலப்பு. மாலை ஐந்து மணியானதும் ரேடியோ கிராம் பாடலைப் பொழிந்தது. தொடர்ந்து சிரிப்பும் பேச்சும் தெருவரை ஒலித்தது. ஆனால் அதே சமயம் என் உள் மனத்தில் ஒரு உருத்தல்... இவர்கள் காதல் விஷயத்தில் நான் இப்படி சம்மந்தப்பட்டிருப்பது சரியா?... அண்ண னுக்குத் தெரிந்து என்னைக் கண்டு கொண்டு விட்டால்? ஒரு கலக்கமும் அச்சமும் ஊடே என்னை அரித்துக் கொண்டிருந்தன.

ஒரு மாத காலம் விரைவில் சென்று மறைந்தது. தினேஷ் ஆபீஸ் காரியமாக இரண்டு வாரங்கள் திருச்சிக்குச் செல்ல நேர்ந்தது. அன்று மாலை ஏதோ காரணமாக கன்யா வர முடியவில்லை. மனமே இல்லாது அவன் திருச்சிக்குப் புறப்பட்டான். அவளுக்காக அவன் வைத்து விட்டுப்போன கடிதத்தை மறுநாள் கன்யா வந்தபொழுது அவளிடம் கொடுத்தேன். அவளுக்கு ஒரே ஏமாற்றம். கடிதத்தைப் படித்துவிட்டு வரவேற்பறையில் மௌனமாக வெகு நேரம்

உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணங்களைக் கலைக்க மனமின்றி நானும் பேசாமலிருந்தேன்.

முடிவில் விடுக்கென்று எழுந்து என் அருகில் ஓடி வந்தாள்.

"என் தாயாரைச் சந்தித்து எங்கள் விஷயத்தை நீங்கள் தான் எடுத்துச் சொல்ல வேண்டும் அத்தை. அவர்களிடம் பேச எனக்குப் பயமாக இருக்கிறது...." அவள் குரல் தடைப்பட்டது. முத்தாகக் கண்ணீர்த் துளிகள் கன்னங்களில் உருண்டோடின.

"ஐயோ" என்று பயத்தில் நான் உரக்கக் கூவிவிட்டேன். "கன்யா, அது எப்படி முடியும்? முன்பின் தெரியாத என்னை இதில் நீ சம்மந்தப்படுத்துவது முறையா?"

"அத்தை! என் கதையை எடுத்துச் சொல்ல எனக்கு யாரும் இல்லை. நீங்கள் மறுத்தால் எனக்கு வழியே இல்லை... சரி, பிறகு உங்களை வந்து பார்க்கிறேன்" என்று அவள் அவசரமாகச் சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராது பறந்துவிட்டாள்.

அதற்குப் பின்னர் கன்யா வரவேயில்லை. ஒரு வாரமாக அவளைப் பார்க்காமல் என் மனம் சஞ்சலத்தில் தவித்தது. ஏன் வரவில்லை? என் மேல் கோபமா?

அன்று இரவு நான் படுக்கும்போது டெலிபோன் மணி அடித்தது. மறுபடியும் கன்யாவின் குரல் கேட்டது. ஆவலுடன் கேட்டேன் நான்.

"என்னம்மா கன்யா, உன்னை இந்தப் பக்கம் காணவே இல்லையே?"

"அத்தை, நான்கு நாட்களாக எனக்குக் காய்ச்சல்.

இப்போது தேவலை. அம்மா இன்னும் வீட்டிற்கு வரவில்லை. அப்பா தூங்கிக் கொண்டிருக்கிறார். யாரும் இல்லாததால் உங்களைக் கூப்பிட்டேன். மிகவும் முக்கியமான சங்கதி'' என்று கூறி முடிப்பதற்குள் அவள் விம்மும் குரல் கேட்டது.

பதறிப்போனேன்.

''கன்யா, அழுகிறாயா? என்னம்மா? விஷயத்தைச் சட்டென்று சொல்லேன்.''

''டெலிபோனில் பேசி முடிக்கிற காரியமல்ல அத்தை. நீங்கள் மறுக்காது நாளை மாலை ஐந்து மணிக்குமேல் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். மிக முக்கியம். நான் வீட்டைவிட்டு எங்கும் நகரக்கூடாது என்று அம்மா கடும் உத்திரவு போட்டிருக்கிறாள். அவர்களுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. அத்தை! ப்ளீஸ் கம் ஹியர். உங்களிடம் பேச வேண்டும். உங்களைத் தவிர எனக்கு யாரும் இல்லை.''

''கன்யா! வருத்தப்படாதேயம்மா...'' என்று நான் முடிக்கு முன் அவள் டக்கென்று போனைக் கீழே வைத்து விட்டாள்.

என் தலை சுற்றியது. நெஞ்சு படபடத்தது. கன்யா என்னைச் சிங்கத்தின் குகைக்கல்லவா கூப்பிடுகிறாள்!

## 16. அண்ணன் வீட்டுக்குள்ளே

அன்று காலை தபாலில் என் எஜமானியின் கடிதம் வந்தது. வழக்கம்போல் பல பக்கங்கள் எழுதியிருந்தாள். முடிவில், 'நீலு! உன் கையில் குழந்தையாக வளர்ந்த என் பேத்தி இன்று ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். காலத்தின் ஓட்டத்தைக் கண்டு நான் மலைக்கிறேன்.

ஆஸ்திரேலியாவுக்கு வந்து போகும்படி வினு அழைத்திருக்கிறான். ஏஜ் இஸ் காச்சிங் அப். என் பொருட்டு நீ அந்த வீட்டைக் கட்டிக் கொண்டு கைதிபோல் தனியே தவிப்பதை எண்ணி வருந்துகிறேன். கொஞ்சம் பொறுமையாக இரு. விரைவில் வந்துவிடுவேன்.

கடிதத்தைப் படித்துவிட்டுப் பெருமூச்செறிந்தேன். ''உங்கள் நீலு தனியே தவிக்கவில்லை. இரண்டு இளங் காதலர்களிடையே சிக்கிக்கொண்டு வெளிவரத் தெரியாது முழிக்கிறாள்'' என்று என் வாய் முணுமுணுத்தது.

என் எஜமானியின் கடிதம் வழக்கம்போல் உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. என் தலை பாரமாகக் கனத்தது. கன்யா எனக்கு விடுத்திருந்த வேண்டுகோள் என் உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது. விளக்கம் கொடுக்க முடியாத ஒரு திகில் வயிற்றைப் பிசைந்தது.

'வர முடியவில்லை' என்று தட்டிக் கழித்து விட்டா... கோழையான என் உள்ளம் குழம்பிக் கொண்டிருந்தது. ஆனால் கன்யா என்னைச் சுலபத்தில் விடுகிறவளாக இல்லை. சிறிது நேரத்தில் அவள் என்னை டெலிபோனில் அழைத்தாள்.

''சாயங்காலம் ஐந்து மணி சுமாருக்கு வந்து விடுங்கள். டாக்ஸியில் வந்தால் சுலபமாக இருக்கும். அப்போது அம்மா வீட்டிலிருக்க மாட்டார்கள். அப்பா மருந்து சாப்பிட்டுவிட்டு ரெஸ்டாகப் படுத்திருப்பார். பகல் முழுவதும் எங்கள் வீட்டு நாய்கள் கட்டப்பட்டிருக்கும். அதனால் பயம் இல்லை. வேலையாட்கள் யாராவது கேட்டால், காயத்திரி வீட்டிலிருந்து வருகிறேன்'' என்று சொல்லுங்கள். எனக்கு அந்த பெயரில் ஒரு சிநேகிதி இருப்பது இங்கு எல்லோருக்கும் தெரியும்' என்று படபடவென்று உத்தரவுகள் போட்டாள்.

''உங்கள் வேலையாள் முத்துசாமி - அவர் இருப்பாரா?'' கவலையுடன் நான் விசாரித்தேன்.

''அவர் சாயங்கால வேளைகளில் வெளியே போய் விடுவார். இருட்டிய பின்தான் வருவார். உங்களை அவருக்கு முன்பின் தெரியாதே. ஏன் இந்தக் கவலை?''

அவளது கேள்வி என்னை திடுக்கிடச் செய்தது. ''சரி'' என்று அரை மனத்துடன் பதிலளித்தேன்.

''வரும்பொழுது கையில் ஏதாவது எடுத்து வாருங்கள். காயத்திரி எனக்கு என்னவோ அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறாள் என்று அம்மாவிடம் ஏற்கனவே சொல்லிவிட்டி ருக்கிறேன்'' நான் மேலே எதுவும் கேட்குமுன் அவள் போனை வைத்துவிட்டாள்.

நிமிஷம் யுகமாக நகர, அன்று எப்படியோ மாலை ஐந்து மணிப் பொழுது முடிவில் வந்தது. நான் வீட்டைப் பூட்டிக்கொண்டு நெஞ்சில் துணிவை ஏற்றிக்கொண்டு கிளம்பினேன். என்னைத்தான் என் அண்ணன் வெறுங்கை யுடன் வெளியே விரட்டினார். அவர் மகளை அவர் வீட்டில் முதன் முதலாகப் போய் பார்க்கும்போது நான் வெறும் கையுடன் போக விரும்பவில்லை. முதல்நாள் இரவு படுக்கப் போகும்முன் கொஞ்சம் பர்பியும், சௌடாகவும் தயாரித்துப் பார்சல் செய்து வைத்திருந்தேன். காலையில் வாசலில் வந்த கூடைக்காரனிடம் பழங்கள் வாங்கிச் சேர்த்திருந்தேன். இவைகளையெல்லாம் ஒரு பிளாஸ்டிக் கூடையில் வைத்து வெள்ளைத் துணியால் மூடிக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

டாக்ஸியை அனுப்பிவிட்டு மெல்ல அண்ணன் வீட்டு வாயிலை நோக்கி நடந்தேன். என் கால்கள் தரையில் பாவாது

தடுமாறின. நெஞ்சு பயத்தில் திக் திக் என்று அடித்துக் கொண்டது.

"என்ன வேண்டும்?" அதட்டினான் வாசலில் நின்று கொண்டிருந்த கூர்க்கா சேவகன்.

"காயத்திரி அம்மாள் வீட்டிலிருந்து வருகிறேன்" என்று இந்தி மொழியில் மெல்லிய குரலில் சொன்னதும் உள்ளே போக அவன் எனக்கு வழிவிட்டான்.

முன்பக்கத் தோட்டத்தின் அழகு என்னை மயக்கியது. நாய்களுக்கு அடுத்தபடி அண்ணனுக்குத் தோட்டக்கலை மீது அதிக மோகம்.

நடைபாதைக்கு இரு பக்கமும் வெல்வெட்டைப் போன்ற பசும் புல் தரை. நடுநடுவே அழகான பூச்செடிகள். பார்த்து ரசிக்க நேரம் இன்றிச் சேணம் கட்டிய குதிரை போல் நேரே உள்ளே சென்றேன். மிகப் பெரிய வரவேற்பறை. என் எஜமானியின் மலபார்ஹில் வீட்டில்கூட இத்தனை அலங்காரமான அறையை நான் பார்த்ததில்லை. தலைக்கு மேல் தொங்கிய அந்தக் கண்ணாடிச் சர விளக்கை வியப்புடன் பார்த்துக் கொண்டு கால்புதையும் வண்ணம் மெத்தென்று தரையில் விரித்துக் கிடந்த கம்பளத்தின் மீது நின்று கொண்டிருந்தேன்.

அதற்குள் உள்ளேயிருந்து ஒரு வேலைக்காரி வெளிப் பட்டாள். "சின்னம்மா மாடியிலிருக்காங்க. இந்தப் பக்கம் படி" என்று அசட்டையாகச் சுட்டிக்காட்டி விட்டு அவள் என்னை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள். பின்பு உள்ளே சென்று விட்டாள்.

மாடிப்படிகள் மீது ஓசையின்றி மெல்ல நடந்து சென்றேன். பூனைபோல் சப்தமிடாது வராந்தாவைக் கடந்து

கன்யா குறிப்பிட்ட ஹாலுக்கு வந்தேன். அதன் இடதுபுற மிருந்த அறையின் வாயிற்படி அருகே நெருங்கி பதை பதைத்த உள்ளத்துடன் மெதுவாகத் தட்டினேன்.

''கம் இன் ப்ளீஸ்''

கன்யாவின் குரல் கேட்டதும்தான் எனக்கு உயிர் வந்தது. மெல்லக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன்.

நீல நிற இரவு உடையில் கன்யா சாய்ந்த வாக்கில் படுக்கை மீது உட்கார்ந்திருந்தாள். நான்கு நாட்களாக வீசிய காய்ச்சலில் அவள் உடல் பாதியாக இளைத்து விட்டிருந்தது. கதவை மூடிவிட்டு நான் கொண்டு வந்த கூடையை அங்கிருந்த மேஜை ஒன்றின்மீது வைத்துவிட்டுத் திரும்பினேன். ஒரே பாய்ச்சலாகப் படுக்கையிலிருந்து ஓடி வந்து என் கழுத்தைக் கட்டிக் கொண்ட கன்யா ''அத்தை!'' என்று கூவிவிட்டு விம்மி அழுதாள்.

''கன்யா! நீ ரொம்ப தைரியசாலியாயிற்றே. இப்படிக் கலங்கலாமா? அழாதே. விஷயத்தைச் சொல்'' என்று ஆறுதலாகச் சொல்லியபடி அவளது முதுகைத் தடவினேன். வெகு நேரம் உடல் குலுங்க நெஞ்சு வெடித்துவிடும் போல் அழுது கொண்டிருந்தாள்.

ஒருவாறு அழுது ஓய்ந்த கண்களைத் துடைத்துக் கொண்ட அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு படுக்கையில் அருகில் உட்கார வைத்தாள்.

''அத்தை, யாரிடம் போய்க் கேட்பது, யாரைக் கலந்து யோசிப்பது, எவரிடம் முறையிடுவது என்று புரியாமல் பலவும் எண்ணித் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களாவது உதவுவீர்களென்ற நம்பிக்கையில்தான் உங்களைக் கூப்பிட்டேன்'' என்று துக்கத்துடன் திணறினாள். ''அத்தை,

எனக்கு கல்யாணம் பண்ண அம்மா ஒரு இடம் பார்த்து வைத்திருக்காங்க. இந்த வீட்டில் எல்லாம் அம்மா வைத்தது தான் சட்டம். பிள்ளை டெல்லியில் ஏதோ கம்பெனியில் பெரிய நிர்வாகப் பதவியில் இருக்கிறானாம். இன்னும் சில தினங்களில் அவங்க வீட்டிலிருந்து என்னைப் பார்க்க வரப்போகிறார்களாம்'' என்று கூறிவிட்டு விக்கி அழுதாள்.

சட்டென்று பதில் சொல்ல முடியாமல் எனக்கு ஒரே குழப்பம். பல வருடங்களுக்குப் பின்னர் இந்த வீட்டில் இதே பிரச்சினை மறுபடியும் எழ வேண்டுமா?

''எனக்கு இந்த இடத்தில் கல்யாணம் வேண்டா மென்று நான் மறுத்தேன். அம்மாவுக்குச் சந்தேகமாகி விட்டது. கேள்விக்குமேல் கேள்வி போட்டுத் துளைத்தார்கள். முடிவில் உண்மையைக் கூறிவிட்டேன்.

''அம்மா என்ன சொன்னாங்க?''

''தினேஷை நான் காதலிக்கிறேன் என்பதைக் கேட்டதும் அம்மாவுக்குக் கோபம் தாங்கவே முடியவில்லை. கண்டபடி இரைந்தார்கள். அப்பா காதில் பட்டால் தோலை உரித்துவிடுவார் என்று பயமுறுத்தினாங்க. நான் ஒரே பிடிவாதமாக, தினேஷைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொன்னதைக் கேட்டதும் அம்மாவுக்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. கையை ஓங்கி என்னை அடி அடி என்று அடித்து'' துக்கம் தாளாது மேலே சொல்ல முடியாது விக்கினாள்.

என் நெஞ்சு பதைபதைத்தது. கன்னங்களின் மீது வழிந்த அவளது கண்ணீரை என் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டேன். என் நெஞ்சோடு அவளை அணைத்துக் கொண்டேன். ''கன்யா, தைரியமாயிரும்மா அழாதே கண்ணே'' என்று ஆறுதல் பல சொன்னேன்.

‘‘உங்கள் ஆலோசனை , உதவி இரண்டும் எனக்குத் தேவை. அதனால் அவசரமாகக் கூப்பிட்டேன்.’’

‘‘என்னால் என்ன உதவி செய்ய முடியும்?’’ கலக்கத்துடன் கேட்டேன்.

‘‘முடியும் அத்தை, உங்களுக்கு என் அம்மாவைப் பற்றித் தெரியாது. என் சொந்த அத்தைமீது அவளுக்கு மிக அன்பு உண்டு. அது அம்மாவின் வீக் பாயிண்ட். சாயலில் நீங்கள் என் அத்தையைப் போல் இருக்கிறீர்கள். நீங்கள் அம்மாவைச் சந்தித்து எனக்காகப் பரிந்துபேசினால் உங்களைப் பார்த்து மனம் குழைந்து போய்விடுவார்கள். மேலும் உங்களுக்கு தினேஷைத் தெரியும். அவரைப் பற்றி இரண்டு நல்ல வார்த்தை சொன்னால் ஒருசமயம் அம்மா மனம் மாறாதா?’’

‘‘இது எங்கள் குடும்ப விஷயம். இதில் வேற்று மனுஷி நீ என்ன தலையிடுகிறாய் என்று உன் தாயார் சீறினால்...’’

‘‘என் வரையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மூன்று வழிகள் உள்ளன. எது என் புத்திக்குச் சரி என்று படுகிறதோ அதை எடுத்துக் கொள்கிறேன்’’ பிடிவாதமாக அவள் ஆத்திரத்துடன் பதிலளித்தாள்.

‘‘மூன்று வழிகள் என்றால் என்ன? புரியும்படி சொல். எனக்குத் தெரிந்த ஆலோசனையையாவது சொல்கிறேன்’’ கெஞ்சிக் கேட்டேன்.

‘‘முதலாவது, அம்மா பிடிவாதமாக மறுத்தால் நானும் பிடிவாதமாக மறுத்துவிட்டு இந்த உலகத்தை விட்டே போய் விடுவது.’’

"கேட்டதும் பயத்தில் உடல் சில்லிட்டுப் போனேன். "சே! கோழைகள் செய்யும் காரியம். உன்போன்ற துணிச்சல் நிறைந்த பெண்ணுக்கு ஒவ்வாத செய்கை. இந்த எண்ணத்தை உடனே மனசிலிருந்து உதறிவிடு" அன்புடன் அவளை அதட்டினேன்.

"கோழைகள் செய்யும் காரியம் என்றாலும் அதற்கும் ஓரளவு துணிவு வேண்டும். அந்தத் துணிவு எனக் கில்லையென்றால் இரண்டாவது வழி... தினேஷும் நானும் இந்த ஊரைவிட்டே போய்விடுவது."

திடுக்கிட்டேன் நான். "கன்யா! அப்படிச் செய்தால் உனக்கும் சரி, உன் குடும்பத்துக்கும் சரி எத்தனை அவமானம்!" கடிந்து கொண்டேன் அவளை.

"மூன்றாவது துணிவாக இங்கிருந்து கொண்டே பெற்றோர்கள் உத்தரவுக்குக் காத்திராமல் நானும் தினேஷும் கல்யாணம் செய்துகொண்டு அவர்கள் கண் முன்னே வாழ்ந்து காட்டுவது" கண்ணீருக்கிடையே பிரதிபலித்த பிடிவாதத்துடன் அவள் என்னை விறைத்துப் பார்த்தாள்.

"அதுவும் சரியல்ல. அப்படிச் செய்த உன் அத்தையின் வாழ்க்கை என்னாயிற்று, நீ சொல்லும் மூன்று வழிகளில் நீ எதைப் பின்பற்றினாலும் உன் பெற்றோர்களுக்கு மறக்க முடியாத துன்பம்தான் வந்து சேரும்" என்றேன் முடிவாக.

"அவர்கள் வழி போனால் என் வாழ்வு நாசமாகி விடுமே? இஷ்டமில்லாத ஒருத்தனை நான் மணந்து கொண்டு எப்படி வாழ முடியும்? இம்பாஸிபிள். நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது."

"ஒரு வாரம் அவகாசம் கொடு. தினேஷ் வந்து விடுவான். ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த முயற்சிக்கிறேன்.

அவசரப்பட்டுக் கொண்டு எதுவும் செய்துவிடாதே. பிராமிஸ் மி ப்ளீஸ்'' அவளது கரத்தை அன்புடன் பிடித்துக் கொண்டு கேட்டேன்.

அவள் உறுதி கொடுத்தாள்.

இருட்டி விடவே நான் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன். மெல்ல கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்குள் வந்தேன். சப்தமிடாது அதைத் தாண்டி மங்கலாக விளக்கு எரிந்து கொண்டிருந்த வராந்தாவில் நுழைந்தேன். வராந்தா கைப்பிடி மீது சாய்ந்து கொண்டிருந்த வாட்டசாட்டமான உருவத்தைக் கண்டு அப்படியே செயலற்று நின்று விட்டேன். காலடி ஓசை கேட்டு என் பக்கம் நிமிர்ந்து நின்றார் அண்ணன் மயூரவாகன்.

பல ஆண்டுகளுக்குப் பின் நேருக்கு நேர் ஏற்பட்ட சந்திப்பு இது. குபீரென்று என் உள்ளத்திலே எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் நெஞ்சு பதை பதைத்தது. துக்கம் தொண்டையை இறுக்கியது. கண்களில் நீர் மல்கியது. எப்படி மாறிவிட்டிருந்தார் என் அண்ணன். செக்கச் செவேலென்ற அந்த முகம் கறுத்துக் காணப்பட்டது. தலை வெளுத்து உடல் தளர்ந்து, வியாதியால் நலிந்து கிழட்டுச் சிங்கமாக அவர் நின்று கொண்டிருந்தார்.

''யாரது?'' அதட்டினார்.

அந்த மிடுக்கு மட்டும் மாறவில்லை.

''காயத்திரி அம்மாள் வீட்டிலிருந்து சின்னம்மாவுக்குப் புத்தகம் கொண்டு வந்தேன்'' குழறினேன்.

''கேட்ட குரலா இருக்கே. சற்று நில்லும்மா....'' ஒளி மங்கிய கண்களால் என்னை மீண்டும் பார்க்க முயன்றார்.

‘‘அண்ணா! நான்தான் உங்கள் தங்கை நீலு!’’ என்று கதறி அழவேண்டும்போல் துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. ‘‘காயத்திரி வீட்டு வேலைக்காரின்னு சொன்னேனே’’ என்று கூறிவிட்டு வேகமாக வராந்தாவைத் தாண்டி மாடிப்படிகளில் இறங்கி ஓடினேன்.

பயத்தில் உடம்பு வியர்த்துவிட்டது. நெஞ்சு வெடித்து விடும்போல் துடித்துக் கொண்டது. முக்காடு நழுவி தோள் மீது விழுந்தது.

தோட்டத்துக்குள் புகுந்த பின்தான் நிதானமாக மூச்சு விட்டேன்.

‘‘நில்! அப்படி ஏன் ஓடுறே? யார் நீ?’’ என்ற குரல் பின்னாலிருந்து அதட்டியதும் பதறிப் போனேன்.

அடுத்த கணம் என் கையை யாரோ பற்றுவதை உணர்ந்து நடுங்கிவிட்டேன்.

தோட்டத்து நடுவில் பிரகாசமாக எரிந்த விளக்கின் ஒளியில் என் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்றார் முத்துசாமி.

‘‘நீ! நீ!’’ என்றார் ஆச்சரியத்தில்.

கையை அவரது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டே, ‘‘முத்தண்ணா! அண்ணாவுக்கு சொல்லாதீர்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். கன்யாவைப் பார்க்க வந்தேன்’’ கரம் குவித்து அவரைக் கும்பிட்டேன்.

அவர் பதில் பேசுமுன் விர்ரென்று இருட்டில் மறைந்தேன்.

# 17. மாறவில்லை, மறக்கவில்லை

மறுநாட் காலை, எதிலும் எனக்கு உற்சாகம் இருக்க வில்லை. பல நாட்கள் நோயாளியாக இருந்தது போன்று உடலும் உள்ளமும் சோர்ந்து விட்டிருந்தன. வேலைக்காரி கிளம்பிய பின் விரைவில் குளியலை முடித்துக்கொண்டு பூஜையறையில் வந்து உட்கார்ந்து கொண்டேன். 'கிர்' என்று வாயில்மணி ஓசையிட்டது.

கதவைத் திறந்தேன். ஒரு கணம் திடுக்கிட்டுப் போனேன். வாயிலில் முத்துசாமி நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் என்னையறியாது என் உள்ளமும் உடலும் பதைபதைத்தன. துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களில் நீர் பெருகியது.

''முத்தண்ணா! உள்ளே வாங்க. உட்காருங்கள்'' நாத் தடுமாற உபசரித்தேன். வரவேற்பறையில் வந்து அமர்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தார். பின்பு என்னை ஏற இறங்கக் கவனித்து விட்டு, ''பாப்பா! ரொம்ப மாறிவிட்டிருக்கிறாய் அம்மா. நம்பவே முடியவில்லை. கூட்டத்தில் எங்கேனும் அசப்பில் பார்த்திருந்தால் அடையாளம் கண்டு கொண்டி ருக்க மாட்டேன்'' என்றார் வியப்பும் ஏக்கமும் கலந்த குரலில்.

''முத்தண்ணா, நீங்களும் ரொம்ப மாறிவிட்டிருக் கிறீர்களே'' என்றேன் பதிலுக்கு அனுதாபத்துடன். நல்ல வெளிச்சத்தில் இப்போது நான் பார்க்க முடிந்தது. அவர் எத்தனை கிழவராகி விட்டிருந்தார்.

''பாப்பா என்னைக் கண்டதும் நிக்காம கொள்ளாம பேயைக் கண்டதுபோல் ஓடினியே அம்மா. ஏன்? உன்னை மறுபடி உயிரோட பார்ப்போமான்னு நான் எவ்வளவு ஏங்கிக்கிட்டிருந்தேன். தெரியுமா?'' அவர் குரல் நடுங்கியது. கண்களில் நீர் தளும்பியது.

''வாட்டசாட்டமான ஆரோக்கியத்தின் இலக்கணமாக இருந்த அண்ணனை வருஷங்கள் உருக்குலைத்து விட்ட கோலத்தை நேரில் பார்த்ததும் அதிர்ச்சியடைந்து போனேன். கன்யாவுக்கு உதவி செய்வதாக வாக்களித்து விட்டு எப்படிச் சாதிக்கப் போகிறோம் என்று உள் மனத்தில் கலங்கி விட்டிருந்தேன். அது சமயம் உங்களையும் நேருக்குநேர் சந்திக்க நேர்ந்ததும் என்னை நன்றியற்றவள் என்று நினைப்பீர்கள் என்று வெட்கமடைந்தேன். பயம், கவலை, அவமானம் இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து என்னை அப்படி ஓடச் செய்தன. முத்தண்ணா, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுத் துக்கம் தாள முடியாது விக்கி அழுதுகொண்டு அவர் அருகே தரையில் உட்கார்ந்து விட்டேன்.

அவர் தடுமாறிக் கொண்டு எழுந்து அருகில் வந்தார்.

''அழாதே பாப்பா! வாழ்க்கையில் நீ இதுவரை விழுந்தது போதும். எழுந்து இப்படி நாற்காலியில் உட்கார். நீ கீழே உட்கார்ந்திருக்கும்போது நான் எப்படி இதில் உட்கார முடியும்?'' என்றார்.

''முத்தண்ணா! இப்போது அந்தஸ்தில் நாம் இருவரும் சமம். கவலைப்படாதீங்க'' என்று கூறிவிட்டு நான் புன்னகை செய்ய முயற்சித்தேன்.

அவர் என்னைத் துக்கத்துடன் பார்த்தார். தலையை ஆட்டினார். என்னவோ சொல்ல வேண்டும் என்று அவரது உதடுகள் துடித்தன. முடிவில், ''ஆமாம்! என்னை இங்கே பார்த்ததும் ஆச்சரியப்பட்டுவிட்டாயில்லையா?'' பேச்சை வேறு திக்கில் மாற்றிவிட்டுத் திரும்ப ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்.

•

''நீங்கள் வராது இருந்தால்தான் ஆச்சரியப்பட்டி ருப்பேன். முத்தண்ணா! உங்களுக்கு என் மீது உள்ள பாசத்தின் ஆழம் எனக்குத் தெரியும். சென்னையில் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்துவிட்டால் கடலுக்கு அடியில் நான் ஒளிந்து கொண்டிருந்தாலும் தேடிக் கொண்டு வந்திருப்பீங்க'' என்றேன்.

''கன்யாவிடம் கேட்டேன் விலாசத்தைக் குழந்தை கொடுத்தது. என் மனசு ரொம்ப கஷ்டப்படுகிறதம்மா, உன்னைப் பத்தியும், கன்யாவைப் பத்தியும் நினைக்க ரொம்ப வருத்தப்படறேன்'' என்று தடுமாறினார் மேலே பேச முடியாது.

''முத்தண்ணா! கன்யா உங்களிடம் விஷயம் எல்லாவற்றையும் சொல்லியிருப்பாள் என்று நினைக்கிறேன். இப்போது கன்யா தவிப்பதுபோல் பல வருடங்களுக்கு முன் நானும் அன்பின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு தவித்தேன். அப்போது உங்களால் ஒன்றும் உதவி செய்ய முடியவில்லை. இப்போது உங்களுக்கு அண்ணனிடம் சலுகைகள் அதிகம் இருக்குமே. கன்யாவுக்காகப் பரிந்து அண்ணனிடம் நீங்கள் பேச முடியாதா?'' மெல்லக் கேட்டுப் பார்த்தேன்.

கிழவர் துக்கத்துடன் தலையை அசைத்தார். உன் அண்ணனுக்கு இப்போது வீட்டில் அதிகாரம் ஏதும் கிடையாது. பிசினசிலிருந்து சகலமும் இப்போது உன் அண்ணி கையில்தான் இருக்கிறது. பெண்பிள்ளைகிட்ட நான் போய் இதெல்லாம் எப்படிப் பேச முடியும்? மேலும் உங்க அண்ணிக்கு அந்தஸ்துதானே உயிர்? அதை விட்டு சட்னு கீழே இறங்கி விடுவாங்களா? கன்யா சங்கதி எப்படி முடியப்போகிறதோ தெரியாது'' கிழவர் பெருமூச்சு விட்டார்.

"அண்ணன் இப்படி மாறிவிடுவார்னு நான் நினைக்கவே இல்லை."

"சொன்னால் நீ நம்புவாயோ என்னவோ அம்மா உன் அண்ணன் பல வருஷங்களாக ரொம்ப மாறிவிட்டார். உன்னைப் பத்தி அடிக்கடி நினைச்சு மனசு கஷ்டப்படுகிறார். நேத்து ராத்திரி நீ போன பிறகு நான் அவருக்கு மருந்து எடுத்துகிட்டுக் கொடுக்கப் போனேன். "முத்து! சித்த முன்பு இங்கிருந்து போனாளே ஒரு பெண், அவளை நீ பார்த்தி யான்னு கேட்டார்..." அவர் முடிக்கு முன் கலவரத்துடன் நான் குறுக்கிட்டேன்.

"முத்தண்ணா! நீங்க என்ன சொன்னீங்க? என்னைப் பார்த்ததாகச் சொல்லி விட்டீர்களா?" பயத்துடன் கேட்டேன்.

"இல்லையம்மா. நீ கேட்டுக் கொண்டபின் உன் உத்தரவு இல்லாமல் சொல்லமாட்டேன். 'ஒரு குஜராத்திப் பொண்ணு கன்யாவைப் பார்க்க வந்தது. ஏன் கேக்கறீங்க என்று புரியாதவன் போல் கேட்டேன். உங்கண்ணா என்ன சொன்னார் தெரியுமா?" 'முத்து அந்தப் பெண் குரலைக் கேட்டதும் என் உடம்பை என்னவோ செய்தது. நம்ப நீலுவின் குரல் போல் அப்படியே இருந்தது. இந்தப் பாழும் கண்கள் மோசம் பண்ணியதால் அவளை நன்றாகவே பார்க்க முடியவில்லை' என்று சொல்லிவிட்டு பச்சைக் குழந்தை போல் முகத்தைக் கையால் மூடிக்கொண்டு குமுறி அழுதார். அம்மா... என்ன இருந்தாலும் ரத்தபாசம் விட்டுப் போகுமா?" இதைக்கூறி முடிப்பதற்குள் முத்துசாமியின் தொண்டை கரகரத்தது.

"முத்தண்ணா! நீங்கள் இப்போது என்னைப் பார்க்க வந்தீங்களா? அல்லது அண்ணனுக்கு தூதாக வந்திருக்கி றீர்களா?" சற்று காரமாகவே கேட்டேன்.

''இரண்டுந்தான் என்று வச்சுக்கோயேன்'' கிழவர் ஏக்கத்துடன் கெஞ்சினார்.

''அண்ணன் மாறிவிட்டிருக்கலாம். ஆனால் நான் மாற வில்லை. எல்லாவற்றையும் மறக்கவில்லை'' கோபத்துடன் சொன்னேன்.

தள்ளாடிக் கொண்டு எழுந்து அருகில் வந்து நின்றார் முத்துசாமி. ''பெத்த மகளிடம் கேட்பது போல் கேட்கிறேன் பாப்பா. எல்லாத்தையும் மறந்துவிடு. அழாதே. கண்களைத் துடைச்சிக்கோ. உன் வீட்டிற்கு நீ திரும்பி வந்துவிடுன்னு கேட்டுப் போகத்தான் வந்தேன்.

''முத்தண்ணா! என்னுடைய வீடு இதுதான். எனக்கு இனி அங்கே உங்களிடம் ஏது இடம்?'' வெறுப்போடு சொல்லிவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன்.

''குழந்தை கன்யா என்னிடம் எல்லாம் சொன்னாள். ஆனால் உண்மையில் நீ யார் என்பது அவளுக்கு இன்னமும் தெரியாது. உன் உத்தரவின்றி நான் வாயைத் திறக்க மாட்டேன். தினேஷ் உன்னுடன்கூடத் தங்கியிருக்கிறான். என்றும் நீ இந்த வீட்டில் ஒரு வேலைக்காரியாக இருக்கிறாய் என்றும் அவள் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன். பல வேலையாட்கள் உனக்கு சேவை செய்தது போக நீ ஒருத்தருக்கு வேலையாளாக மாறி உழைக்கணுமா? இப்படி நீ நிலையில் தாழ்ந்திட்டியேன்னு நான் பட்ட மன வேதனை...'' கிழவர் வார்த்தைகளுக்குத் தடுமாறினார்.

''முத்தண்ணா! இன்று என் குரலைக் கேட்டுக் குமுறியழுத அண்ணன் அன்று என் கடிதத்தைக் கண்டு எப்படி ஆத்திரத்தில் வெடித்தார்! எக்கேடு கெட்டுப்போ

என்று கையை உதறிவிட்டாரே. அவர் கொஞ்சமாவது யோசித்தாரா? கவலை இருந்ததா? சின்னஞ்சிறு பெண். விதவை தனியா என்ன செய்வாள்? நினைத்துப் பார்த்தாரா? இரைந்து கேட்டேன்.

"அண்ணனுக்கு அப்போது இளம் வயசு. முன்கோபம் அதிகம். ஆனால் அதுக்குப் பிறகு அவர் வருந்தினார். அம்மா உன்னைத் தேடாத இடம் இல்லை. நான்கூட ஒரு பயணம் அலகாபாத்திற்கு உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன். முடிவில் உன்னிடமிருந்து எந்தச் செய்தியும் கிடைக்காததால் நீ இறந்து விட்டியோன்னு அண்ணா சந்தேகப்பட்டு அழுதார். துன்பப்பட்டார். தன்னையே நொந்து கொண்டார். முன் கோபக்காரரே ஒழிய உன் மேல் ரொம்பப் பாசம் அம்மா."

"முத்தண்ணா! என்னைப் பற்றிப் பின்னால் பேசுவோம். இப்போது நாம் கவனிக்க வேண்டியது கன்யா பிரச்னை. அதற்கு நீங்கள்தான் ஏதாவது யோசனை சொல்ல வேண்டும்."

"உன் அண்ணன் ஒப்புக்கொண்டு விடுவார். அவர் மனம் மாறிவிட்டிருப்பதால், உனது அண்ணி? அவர்கள் என்ன முடிவு செய்வார்களோ தெரியாது." அவர் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்.

"பாப்பா, உன்னைப் பார்த்ததிலே என் மனசு ரொம்பச் சந்தோஷப்படுகிறது. உன் கையால் சமைச்ச சாப்பாட்டை உண்டு என் வயிறு குளுந்து போச்சு. திரும்ப நீ உன் வீட்டிற்கு வந்து என் அண்ணனுடன் சேர்ந்து வாழ்கிறதை கண்ணாலே பார்த்துட்டா எனக்கு நிம்மதி உண்டாகிவிடும்."

அவர் போக எழுந்த சமயம் என் மூளையில் பளிச் சென்று ஒரு யோசனை கொடிவிட்டது.

"முத்தண்ணா! ஒரு காரியம் செய்யுங்கள். தினேஷ் இங்கேதான் தங்கியிருக்கிறான். அவனது கார்டியனாக ஒரு குஜராத்திப் பெண் இருக்கிறாள் என்று மட்டும் நீங்கள் அண்ணியிடம் சொல்லுங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றேன். எனக்கென்னவோ திடீரென்று ஒரு துணிவு ஏற்பட்டுவிட்டது. கன்யாவின் பிரச்சினைக்கு நான் ஒரு முடிவு கண்டுவிடுவது என்ற ஒரு ஆவேசம்.

கிழவர் விடைபெற்றுக் கொண்டு கேட்டைத் தாண்டி வெளியே சென்றார். பிறகு சட்டென்று என் பக்கம் திரும்பித் தாழ்ந்த குரலில், "அந்தப் பையன் தினேஷ் எப்படிப் பட்டவன்?" என்று கேட்டார்.

"முத்தண்ணா! அவனைக் கல்யாணம் செய்து கொள்ளும் பாக்கியம் கன்யாவுக்குக் கிடைத்தால் அவளை விட அதிர்ஷ்டசாலி யாருமில்லை" என்றேன் பதிலுக்கு.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தேன். கடந்த கால சம்பவங்களை மறந்து முத்துசாமி சொல்லிய படி மீண்டும் நான் என் பிறந்த வீட்டுக்குத் திரும்பி விட்டால்? வருங்காலம் எனக்கு எப்படியிருக்கும்? நிம்மதியும் மகிழ்ச்சியும் கொடுக்குமா? மனம் குழம்பியது.

## 18. பாசம் என்பது இதுதானா?

அன்று காலை, வெளியே வெய்யில் கடுமை யாகக் காய்ந்து கொண்டிருந்தது. குளியலை முடித்துக் கொண்டு கூந்தலைக் காய வைத்துக் கொள்ள வாயிற் தோட்டத்திற்குள் வந்தேன். மோகன் காலனிக்குள் அந்த பென்ஸ் திரும்பிக் கொண்டிருந்தது. கன்யா கூறியதுபோல் அது சப்தமிடாது வேகமாகப் பறந்து வந்து கேட்டருகில்

நொடியில் நின்றது. முத்துசாமி இவ்வளவு வேகமாக வேலை செய்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. மயூரவாகன் மனைவியின் வருகைக்காக வாயிற்கதவைத் திறந்த படியே விட்டுவிட்டு என் பின்னால் ஓடிவந்த ஸீஸரைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினேன். பின் வராந்தாவில் அதைக் கட்டிவிட்டு நான் உள்ளே வருவதற்கும் திருமதி ரேவதி மயூரவாகன் புயல்போல் ஆவேசத்துடன் வரவேற் பறைக்குள் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

நான் அவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததனால் சில தினங்களாக என் மனதிற்குள் பேசவேண்டியதை ஒத்திகை செய்து வைத்திருந்தேன். முக்காடு இன்றி, விரித்த கூந்தலுடன், பிறந்த வீட்டின் மீது ஏற்பட்ட கோபம் உள்ளத்திலே திரண்டு வர, காளிபோல் நான் காணப் பட்டேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பின் ரேவதி என்னை இந்த இடத்தில் எதிர் பார்க்கவேயில்லை. அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி! "நீ! நீ! நீலு! நீயா..." பேச முடியாது குழறினாள். அவளது ஆத்திரம் ஒரே நொடியில் தவிடு பொடியாகியது. தாங்க முடியாத துக்கத்துடன் ஒரே பாய்ச்லில் அருகில் வந்தாள். "நீலு நீ உயிரோடு இருக்கிறாயாம்மா! எங்களை எல்லாம் எப்படி மறந்து விட்டாய்?" குமுறியபடி என்னைக் கட்டிக்கொண்டு கதறி விட்டாள். எனது கோபம் பஞ்சாகப் பறந்தோடிவிட்டது. "அண்ணி! அண்ணி!" என்று கண்ணீருடன் நானும் அரற்றினேன். பாசத்தின் பிடியில் கட்டுண்டு, வினாடிகள் கரைந்து நிமிடங்களாக நீண்டன. ஓரளவு நாங்களே சமாதானப்படுத்திக் கொண்டு விலகிக் கண்களைத் துடைத்துக் கொண்டோம்.

"முத்துசாமி எனக்குச் சொல்லவேயில்லையே? நீ இங்கிருப்பது எனக்குத் தெரியாது. ரொம்ப மாறிவிட்டி ருக்கிறாயே நீலு!" துக்கத்துடன் திணறினாள் என் அண்ணி.

அவள் மட்டும் என்ன? மிகவும் மாறிவிட்டிருந்தாள்.

அந்தக் காலத்தில் அவள் ஒடிய ஒடியக் கொடிபோல் இருப்பாள். தாழம்பூ நிறம். இப்போது? காலம் அவளது இளமையைக் குடித்து விட்டிருந்தது. அந்த அழகையும் அள்ளிக் கொண்டு விட்டிருந்தது. எத்தனைதான் ஒப்பனைக்குள் அவள் ஒளிந்து கொண்டிருந்தாலும், குறுக்காகப் படர்ந்துவிட்ட உடலும், கவலை திரையிட்ட முகமும் அவளது வயதைப் பறையறைவித்துக் கொண்டிருந்தன. ''நீங்களும் மாறிவிட்டிருக்கிறீர்கள்'' என்றேன் நான். என் கண்கள் அவள் மீது ஓடின.

''வயதாகிவிட்டது. என்ன செய்வது?'' அலுத்துக் கொண்டு பெருமூச்செறிந்தாள்.

''உட்காருங்கள் அண்ணி. உங்களிடம் அதிகம் பேச வேண்டும்'' உபசரித்தேன் நான்.

காஞ்சிபுரத்துப் பச்சைப் பட்டுச் சேலை சரக் சரக்கென்று ஆரப்பரிக்க வந்து அருகிலிருந்த சோபாவின் மீது சாய்ந்து கொண்டாள்.

''முத்துசாமி சொன்ன அந்த குஜராத்திப் பெண் எங்கே?'' கோபமாகத் தலையை ஆட்டிக் கேட்டாள். அவள் கொண்டை மீது சுற்றிக் கொண்டிருந்த மல்லிகைச் சரத்திலிருந்து மலர்கள் சில உதிர்ந்து அவள் தோள்மீது விழுந்தன.

''என் எஜமானி கடந்த சில மாதங்களாக இங்கே இல்லை. வெளியூரில் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கோ எனக்கோ இந்த சங்கதியில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆத்திரப்படாது பொறுமையாகக் கேளுங்கள்'' என்றேன்.

"இந்தப் பெண் கன்யாவை நான் எத்தனை செல்லமாக வளர்த்தேன். எத்தனை சலுகைகள், எவ்வளவு சுதந்திரம் கொடுத்தேன். இப்படி எங்களை அவமானப்படுத்தக் கிளம்பிவிடுவாள் என்று கனவிலும் நினைக்கவில்லை!" சோகத்துடன் கூறிவிட்டு மறுபடியும் ரேவதி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அந்தக் காலத்தில் நான் உங்களை அவமானப்படுத்தி விட்டேன். இப்போது உங்கள் பெண் அவமானப்படுத்து கிறாள். இப்படிச் சரித்திரம் திரும்பிவிடும் என்று நினைக்க வில்லையே என்று ஏன் சொல்லக்கூடாதென எண்ணினேன்.

"நாங்கள் பார்த்த இடத்தில் நீ கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால், இப்ப உன் வாழ்வு சீர் குலைந்திருக்குமா? எஜமானியின் வீடு இது என்கிறாய். அப்படியென்றால் நீ ஒரு வேலைக்காரியா? எவ்வளவோ சிறப்பாக வாழ வேண்டியவள். கேட்கவும் பார்க்கவும் மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது. கோபமும் துக்கமுமாக அவள் என்னைப் பார்த்து மீண்டும் பெருமூச்செறிந்தாள்.

"அண்ணி! விதி என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? இருந்தால் இப்படி பேசமாட்டீர்கள். என் வாழ்க்கை இப்படித்தானிருக்க வேண்டுமென்று விதியி ருந்தால் நீங்கள் எத்தனை பாடுபட்டிருந்தாலும் மாற்றி அமைத்திருக்க முடியாது. மயூரவாகனின் தங்கை ஒரு வேலைக்காரியாக இருப்பது உங்களுக்கு வெட்கமாக இருக்கலாம். எனக்கு இல்லை. உங்கள் உதவியின்றி, அண்ணன் தயவின்றி என் உடல் உழைப்பால் நேர்மையாக வாழ்கிறேன். அதைப்பற்றிப் பெருமைப்படுகிறேன். என்னை விட்டுத் தள்ளுங்கள். இப்போது உள்ள பிரச்சினை கன்யாவைப் பற்றியது. அவளது காதல் விவகாரத்திற்கும்

எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று மீண்டும் கூறுகிறேன்?'' என்று படபடவென்று பேசினேன். அவள் குறுக்கிடுமுன் நடந்த எல்லாவற்றையும் விரிவாகக் கூறினேன்.

ரேவதி கேட்டுவிட்டு யோசனையுடன் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் பதிலளிக்க நான் இடம் கொடுக்க வில்லை. ''அண்ணி! நீங்கள் இப்போது பெரிய சோஷல் ஃபிகராகப் போய்விட்டிருக்கலாம். பிசினஸை நிர்வகிக்கும் திறமைசாலியாக இருக்கலாம். அன்றும் சரி, இன்றும் சரி, நீங்கள் ஒன்றை மறந்து விட்டீர்கள். வீட்டிலே வளர்கிற ஒரு சிறு பெண்ணைத் தனியே அவளது உணர்ச்சிக் குழப்பத்திலே தவிக்கவிட்டு வெளியே ஓடிக் கொண்டிருந்தது தவறு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வில்லை. தாயற்ற நான் என் மனப்போராட்டங்களைப் பயமின்றி உங்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை. முடியாது தவித்தேன் அப்போது. இன்று உங்கள் மகள் அதைப்போல் அன்பைத் தேடிக்கொண்டு மனம் திறந்து பேசமுடியாது தவிக்கிறாள். அதிலே ஏற்பட்டதுதான் இந்தக் காதல் விவகாரம்'' என்றேன் காரமாக.

''இப்போது உண்மை தெரிந்துவிட்டது. அதைத் தவிர்த்து அவளது வாழ்க்கையை சீராக்கத்தான் இங்கே ஓடி வந்திருக்கிறேன்'' என்றாள் கோபத்துடன் என் அண்ணி.

''காலங்கடந்த யோசனை இது. கன்யா மன உறுதியுடன் இருக்கிறாள். உங்கள் முயற்சி அவளிடம் பலிக்காது'' என்றேன் பதிலுக்கு ஏளனமாக.

''அந்தப் பையனைச் சந்தித்து அவனிடம் பேசி மனதை மாற்றிக் கொள்ளப் பணம் ஏதாவது கொடுத்து....''

ரேவதி பூராவும் சொல்லுமுன் கோபத்துடன் நான் கத்தினேன். ''எத்தனை கேவலமான பேச்சு! அப்படிச் செய்தால் நீங்கள் உங்களது மகளின் அன்பை இழப்பதுடன் அவளையும் இழந்து விடுவீர்கள்.''

''என்ன, ஒரேயடியாக பயமுறுத்துகிறாயே நீலு. நாங்கள் பார்த்த இடத்துப் பையனைத்தான் நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி எங்கள் இஷ்டப்படி முடித்தால்...'' பல்லைக் கடித்தாள் ரேவதி ஆத்திரத்துடன். கையை மடக்கி சோபாமீது ஓங்கிக் குத்தினாள். ''ஒரு சின்னப் பெண்ணுக்கு இத்தனை பிடிவாதமா? ஐ கான்ட் அண்டர்ஸ்டாண்ட்!''

''ஆமாம். உங்களுக்குப் புரியாது. அன்று என் விஷயத்தில் நீங்களும் அண்ணனும் விட்டுக் கொடுக்க மறுத்தீர்கள். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டிருக்கிறது. கன்யாவிடம் நீங்கள் கடுமையாக இருக்க முயன்றால் என்ன நடக்கும் தெரியுமா?''

''என்ன நடந்து விடும்? பூச்சாண்டி காட்டுகிறாயா நீலு? சொல்கிறேன் என்று வருத்தப்படாதே. அன்று எங்கள் பேச்சைக் கேட்டிருந்தால் நீயும் கஷ்டப்பட்டிருக்கவே மாட்டாய்.''

அந்த வார்த்தை என்னைச் சுரீர் என்று தாக்கியது. கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது எனக்கு. ''நான் சாதுவான பெண். உங்களுக்கு ஒன்றும் சங்கடம் கொடுக்காமல், போ என்றதும் புறப்பட்டுப் போய்விட்டேன். கன்யாவை நீங்கள் அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் தப்புக் கணக்குப் போட்டவர்களாவீர்கள். அவள் உங்களை எதிர்த்துப் போராடுவாள்! துணிந்தவள். தனக்குச் சொத்தில் சேரவேண்டிய பங்கைக் கேட்டு வழக்காடுவாள். எத்தனை

கோர்ட்டுகள் வேண்டுமானாலும் ஏறுவாள். அப்போது உங்கள் அந்தஸ்து எங்கே போகும். இந்தக் காதல் விஷயத்தில் அவள் பிடிவாதமாக இருக்கிறாள். அவள் எப்படிப்பட்ட முடிவு எடுத்தாலும் கஷ்டப்படப்போகிறவர்கள் நீங்கள்தான். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறிப் படபடத்தேன்.

''நீ பேசுவதைக் கேட்டால் ஒரு வழியில் நீ இதைப் பற்றி சந்தோஷப்படுவதுபோல் காண்கிறதே'' குரோதமாக அண்ணி என்னைப் பார்த்தாள்.

''கன்யாமீது எனக்கு உறவு தெரியாததற்கு முன்பே அன்பு ஏற்பட்டது. தெரிந்ததும் வளர்ந்துவிட்டது. அவள் கண் கலங்கக்கூடாது என்று எனக்கு ஒரு அனுதாபம் அவள்மீது அண்ணி! உங்களை நான் அன்றும் இன்றும் நேசிக்கிறேன். மதிப்பு வைத்திருக்கிறேன். வயதுக் காலத்தில் உங்கள் வாழ்க்கையில் சங்கடங்கள் ஏற்படக்கூடா தென்ற ஆதங்கம் எனக்கு. இதைத்தவிர வேறு எந்தவித நோக்கமும் இல்லை. அதனால்தான் உங்களுக்கு இந்தச் சிக்கலைப் புரியவைக்க இப்படிப் பாடுபடுகிறேன்'' என்றேன் தடைப்பட்ட குரலில்.

''கன்யா பக்கமே பரிந்து பேசுகிறாயே. என் நிலைமை யைப் பற்றிச் சிந்தித்தாயா?''

''அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. எனக்குக் காட்டாத பரிவை உங்களுக்குக் காட்டும்படி உங்களிடம் கெஞ்சிக் கேட்கத்தான் இந்த விவாதம். அன்று மனம் போல் என்னை வாழவைத்துப் பார்க்க மறுத்தீர்கள். கன்யாவையாவது அவள் மனம்போல் வாழவைத்து ஆசீர்வதியுங்கள் அண்ணி. அத்தை என்ற உறவின் பேரில் அவளுக்காக உங்களிடம் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ப்ளீஸ் அண்ணி!

அந்தப் பெண் இஷ்டப்பட்ட அந்தப் பையனை மணந்து கொண்டு சந்தோஷமாக இருக்கட்டும். ஒத்துப்போங்கள். ப்ளீஸ்...'' உணர்ச்சி பொங்கும் குரலில் உள்ளம் நடுங்க, நாக்குழற அண்ணியிடம் மன்றாடினேன். என் கண்கள் பனித்தன.

''அவன் எப்படிப்பட்டவனோ! பணக்காரப் பெண் அகப்பட்டாள் என்று வலைபோட்டுப் பிடிக்கும் வஞ்சகனோ என்னவோ,யார் கண்டார்கள்?''

தினேஷைப் பற்றி ரேவதி கொண்டிருந்த எண்ணம் எனக்கு எரிச்சலை உண்டாக்கியது. ''ஒரு வாரத்தில் இந்தப் பிள்ளை இங்கே வருவான். நீங்கள் சிந்தித்துப் பேசிப் பாருங்கள். அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாம். நான் ஒன்று கேட்கிறேன். கோபிக்க மாட்டீர்களே! நீங்கள் பார்த்து வைத்திருக்கும் அந்த வரன் - அவன் எப்படிப்பட்டவன்?''

''பெரிய இடத்துப்பிள்ளை. நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான்'' என்றாள் பெருமையுடன்.

''குணத்தில் அவன் தகாதவனாக இருந்தால்? உங்கள் பெண்ணைச் சந்தோஷமாக வைத்திருப்பான் என்பதற்கு ஏதாவது காரண்டி உண்டா?''

''மயூரவாகன் மகளை ஒரு ஏழைப் பையனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள் என்று உறவினர்களும் நண்பர்களும் கேவலமாகப் பேச மாட்டார்களா?''

''ஏன் பையன் படித்தவன். சாமர்த்தியசாலி. என் கணவருக்கு உடம்பு சுகமில்லை. என்னால் பிசினசைக் கவனிக்க இயலவில்லை. என் மகள் சின்னவள். இந்த நிலையில் நாங்களே தேடி இந்த வரனைத் தேர்ந் தெடுத்தோம். கல்யாணத்திற்குப் பிறகு மருமகன்தான்

எங்கள் பிசினசில் உதவி செய்யப்போகிறான் என்று நீங்களே சொல்லிவிட்டால் அதற்குமேல் யார் பேசுவார்கள்? தினேஷ் உண்மையிலேயே நல்ல பையன். கெட்டிக்காரன். படித்தவன். நேர்மையானவன். நீங்கள் பெண்ணைக் கொடுத்து மேலே படிக்க வைத்து, பணத்தின் உதவியால் அவன் அந்தஸ்தை உயர்த்திவிட முடியாதா? அண்ணி, நன்றாக யோசித்துப் பாருங்கள். மொத்தத்தில் கல்யாணம் என்பதே ஒரு 'காம்பிள்' தானே? துணிந்துதானே அதில் இறங்க வேண்டும்?''

அவளைச் சிந்திக்கும்படி விட்டுவிட்டு நான் உள்ளே சென்றேன். என் அண்ணியின் பழக்க வழக்கங்கள் எனக்கு நன்றாகத் தெரியுமே. ஒரு கண்ணாடி டம்பளரில் எலுமிச்சம் பழ ரசத்தை ஊற்றிக் கொண்டு ஐஸ் துண்டுகளை மிதக்க விட்டு எடுத்துக் கொண்டு வந்தேன்.

''உன் அண்ணனிடம் கேட்க வேண்டும். பையனைப் பார்க்க வேண்டும். எத்தனையோ இருககிறது. அவசரமாக முடிவெடுகக முடியுமா?'' அவள் பானத்தைப் பருகியபடி என்னைப் பார்த்தாள்.

''அவசரம் வேண்டாம். கன்யாவிடம் ஒரேயடியாக மறுக்காமல் சிந்தித்துப் பார்க்கிறேன் என்று சொன்னால் கூடப் போதும். அந்தக் குழந்தை மன அமைதி அடைவாள்'' என்றேன் நான்.

பிறகு வெகுநேரம் நாங்கள் பலவும் பேசிக்கொண்டிருந்தோம். அவள் வீட்டிற்குப் போக எழுந்திருந்தாள்.

''அண்ணி, ஒரு வேண்டுகோள்'' என்று அவளது கையைப் பற்றினேன். அவள் என் முகத்தைப் பார்த்தாள்.

''கன்யாவின் பிரச்சினைக்கு முடிவு காணும்வரை

என்னைப் பற்றி அண்ணனிடமோ, கன்யாவிடமோ வேறு யாரிடமோ சொல்லக்கூடாது. தயவு செய்து உறுதி கூறுவீர்களா?'' கவலையுடன் கேட்டேன்.

''இதென்ன நிபந்தனை! நீ உயிருடன் இருப்பது தெரிந்தால் உன் அண்ணன் எத்தனை மகிழ்ச்சியடைவார் தெரியுமா? கன்யாவுக்கு உண்மை உறவு நிலை தெரிந்தால் பூரித்துப் போவாளே!'' ரேவதி ஆச்சரியப்பட்டாள்.

''நானே வேளை வரும்போது அறிமுகம் செய்து கொள்ள விரும்புகிறேன். அதுவரை யாரும் என்னைப்பற்றி அறியக்கூடாது என்பது என் ஆசை. எனக்குக் கட்டாயம் இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும்'' பிடிவாதமாகப் பேசினேன்.

சற்று யோசித்துவிட்டு அவள் தலையை ஆட்டினாள். ''ஆகட்டும். உன் இஷ்டப்படியே நான் மௌனமாக இருக்கிறேன். ஆனால் நீயும் என் இஷ்டப்படி இனி நடக்க வேண்டும் என்று வற்புறுத்துவேன். நடந்ததையெல்லாம் நீ மறந்துவிடு. நாங்களும் அதை ஒரு கெட்ட கனவாக ஒதுக்கி விடுகிறோம். பல வருஷங்கள் பிரிந்து இருந்தோம். இனியாவது ஒன்றாக இருப்போம். உன் நிலையில் இனி நீ எங்களுடன் வந்து வாழ்வதுதான் முறை. அதற்கு விரைவில் ஏற்பாடு செய்'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

''அண்ணி! இன்னும் ஒன்று. உங்கள் வீட்டிற்குள் நான் வந்தபோது உங்களுக்குத் தெரியாமல், திருடிபோல் வந்தேன். என் செய்கை எனக்கே அவமானமாக இருக்கிறது. உங்கள் வீட்டிற்குள் இச்சைபடி வந்துபோக நீங்கள் உத்தரவு கொடுக்க வேண்டும். விரைவில் வந்து மறுபடியும் பார்க்கிறேன் என்று கன்யாவுக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்'' குழைவாகக் கேட்டேன்.

"நீலு! இந்தக் கேள்வி அவசியமா? அது உன்னுடைய வீடல்லவா? உனக்கில்லாத உரிமையா?" தடைபட்ட குரலில் கேட்டுவிட்டு என்னைத் துயரத்துடன் அவள் பார்த்தாள்.

"தாங்க்யூ அண்ணி" என்றேன் மன எழுச்சியுடன்.

"நீலு, உன்னைப் பார்த்தபின் விட்டுப்போக மனமில்லை. ஆனால் பல வேலைகள் இருககின்றன. போக வேண்டும். தினேஷ் வந்ததும் எனக்குப் போன் பண்ணு. மற்றவைகளைக் கவனிப்போம்" விடை பெற்றுக் கொண்டு வெளியேறினாள் அண்ணி.

கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தேன். நான் மீண்டும் எங்கள் வீட்டிற்குப் போக ஏன் ஆசைப்பட்டேன்? யாரையெல்லாம் பார்க்கக்கூடாதென்று மிரண்டு கொண்டு ஓடினேனோ அவர்களையெல்லாம் மீண்டும சந்தித்தேன். முத்துசாமியுடன் மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தேன். அண்ணியுடன் மறுபடியும் அளவளாவ வாய்ப்புக் கிடைத்தது. அண்ணனை மீண்டும் ஒருமுறை கண்களால் நன்றாகப் பார்க்கும் பாக்கியம் கிட்டாதா? இந்த ஆசைதான் காரணம்.

என்ன ஆச்சரியம்! நோயினால் தளர்ந்துவிட்ட அண்ணனைக் கண்டதிலிருந்து என் மனம் இப்படி மாறிவிட்டதே! என் கோபம், வெறுப்பு இவை போன இடம் தெரியவில்லை. நன்றாகப் பார்க்க முடியாது தவிக்கும் அண்ணனது கையைப் பிடித்துக்கொண்டு, "அண்ணா! உங்கள் நீலு வந்திருக்கிறேன்" என்று கூவ வேண்டும் என்ற துடிப்பு - ஆவல், ஏன் இந்த உணர்வு? இதற்குப் பெயர்தான் பாசமா?

# 19. காந்தத்தின் முன் இரும்பானேன்!

என் அண்ணனைப் பற்றி நான் கொண்டிருந்த பயம் வீண் பிரமை. அவரது வெறுப்புக்கு ஆளாகி விட்டோமே என்ற ஏக்கம் இப்படி அச்சமாக உருவெடுத்து என்னை இத்தனை ஆண்டுகளாக ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

அவர் சிங்கமுமல்ல, புலியுமல்ல, வயதினால் தளர்ந்து பார்வை குறைந்து நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய ஒரு மனிதர்.

இந்த உண்மை என் உள்ளத்தை எப்படித்தான் மாற்றிவிட்டது! அடி மனநிலையில் ஒளிந்து கொண்டிருந்த அந்தப் பாசம் பொங்கி புறப்பட்டுவிடவே அண்ணனைப் பார்க்க வேண்டும், ஒரு முறையேனும் அவரிடம் பேச வேண்டும் என்று துடியாத் துடித்துப் போனேன்.

நாட்கள் வேகமாக ஓடின. நானும் என் பிறந்த வீட்டிற்கு தினசரி ஒருமுறையேனும் போய் வந்தேன். அண்ணி வந்து ஆசையுடன் அழைத்துக் கொண்டு போனார்கள். முத்துசாமி வந்து கூட்டிக் கொண்டு போனார். கன்யா காரை அனுப்பி என்னை வரச்சொல்லி வற்புறுத்தினாள். அன்பும் பரிவும் காட்டி அவர்கள் என்னை ஈர்த்தார்கள். காந்தம் நெருங்கியதும் கடுகி ஒட்டிக் கொள்ளும் இரும்புத் துண்டைப்போல் நான் பிறந்த வீட்டுப் பாசப் பிணைப்பிலே கட்டுண்டேன், களிப்புற்றேன்.

அண்ணன் வீட்டுக்குச் சென்ற ஒவ்வொரு முறையும் சற்றுத் தொலைவில் நின்றாவது அண்ணனை ஒருமுறை பார்த்து விட்டுத்தான் வந்தேன். ஆனால் பேசவோ என்னை அறிமுகம் செய்து கொள்ளவோ நான் முயற்சிக்கவில்லை.

எனக்கு அந்தத் துணிவு இருக்கவில்லை. அண்ணியும் முத்துசாமியும் இதுபற்றி என்னை வற்புறுத்தவில்லை. விட்டுப்பிடிப்போம் என்று இருந்துவிட்டார்கள்.

பிறந்த வீட்டு உறவின் இன்பத்தில் நாட்கள் பறந்தன.

தினேஷ் அன்று காலைதான் திருச்சியிலிருந்து திரும்பி வந்தான். அவசரமாக ஆபீசிற்கு கிளம்பிக் கொண்டிருந்த அவனிடம் நான் ஏதும் சொல்லவில்லை. அண்ணி கேட்டுக் கொண்டபடி அவன் வந்துவிட்டதை போன் மூலம் அவளுக்கு உடனே தெரிவித்துவிட்டேன்.

மாலை வீடு திரும்பிய தினேஷ் குளித்துவிட்டுச் சுத்தமாக உடுத்திக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். வழக்கம் போல் நான் கதைகள் பேசாது வேகமாகப் பரிமாறிவிட்டு வெளியே கிளம்ப ஆயத்தமாவதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஜன்னல் வழியே பார்த்தேன். அண்ணனது பென்ஸ் தெருவுக்குள் நுழைவதைக் கண்டு பிளாஸ்டிக் கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு தயாராக நின்றேன்.

காரிலிருந்து இறங்கி மிகவும் பரபரப்பாக ரேவதி உள்ளே வந்தாள். வருங்கால மருமகனைச் சந்திக்க வேண்டும் என்று அவ்வளவு ஆவல் அவளுக்கு!

''இவன்தான் தினேஷ். இங்கு என்னுடன் தங்கி இருக்கிறான்'' என்று ரேவதிக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர், ''தினேஷ் கன்யாவின் தாயார். உன்னைப் பார்க்க வந்திருக்காங்க'' என்று கூடமாகச் சொல்லிவிட்டு வாசல் பக்கம் திரும்பினேன். வருங்காலத்து உறவினர்களான அவர்கள் தாமே பேசி அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைத்தெரிந்து கொள்ளட்டும் என்று நினைத்தேன்.

''நான் கடைத்தெரு வரை போய்விட்டு இதோ வந்து விடுகிறேன்'' என்று மெதுவாகச் சொல்லிவிட்டு வேகமாக வெளியே நடந்தேன்.

திடீரென்று என் வயதெல்லாம் கரைந்தோடி நான் சின்னஞ்சிறு பெண் போல் உற்சாகத்திலே நடந்தேன். உணர்வில் சிறியவள் ஆனேன். அவர்கள் இருவரும் சந்தித்தபோது இருவர் முகத்திலும் ஏற்பட்ட மாறுதல்களை எண்ணிப் பார்த்தேன். பையன் பார்வைக்கு நன்றாகவே இருக்கிறான், பேஷ்!'' சொல்லாமலே சொல்லின ரேவதியின் கூரிய கண்கள்.

பிசாசைக் கண்டவன்போல் மிரண்டுபோய் வெல வெலத்து எழுந்து நின்றான் தினேஷ். பாவம் கபடமில்லாத வாலிபன். வருங்கால மாமியாரைப் பார்த்து நடுநடுங்கி விட்டானே? இவர்கள் எப்படித்தான் பேச ஆரம்பித்தி ருப்பார்கள்? என்ன பேசியிருப்பார்கள்? குறும்புத்தனமாகச் சிந்தனையை ஓடவிட்டு கால் போன வழியில் கடைத் தெருவில் அலைந்து பொழுதைக் கழித்துக் கொண்டி ருந்தேன்.

முடிவில் சில வேண்டாத சாமான்களுடன் நான் வீடு திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. வரவேற்பறை விளக்கை தினேஷ் எரிய விட்டிருந்தான். பளிச்சென்று வீசிய அதன் ஒளியில் அண்ணியின் முகத்தைப் பார்த்தேன். விளக்கைவிட அவள் முகம் பிரகாசமாகக் காணப்பட்டது. என் நெஞ்சம் மகிழ்ச்சியில் படபடத்தது.

என்னைக் கண்டதும் அண்ணி வீட்டிற்குக் கிளம்பி னாள். ''நாழியாகிவிட்டது. உனக்காகக் காத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, தினேஷ் பக்கம் திரும்பினாள். ''போய் விட்டு வருகிறேன்'' என்றாள் புன்முறுவலுடன். கூடவே

நான் அவளுடன் வெளியே வந்தேன். காரை நெருங்கு முன் தாழ்ந்த குரலில். ''நைண்டிநைன் பர்சண்ட். ஓ.கே.'' என்றாள்.

''அந்த ஒன் பர்சண்ட் ஏன் துண்டு விழவேண்டும்?'' வேடிக்கையாக, ஆனால் மகிழ்ச்சியுடன் கேட்டேன்.

''அதை உன் அண்ணன் எஸ் என்று சொல்லுவதற்காக விட்டு வைத்திருக்கிறேன். நீ பொல்லாதவள். உன் கட்சியை எப்படியோ ஜெயித்துவிட்டாய்'' என்று கூறினாள். பின்னர் அர்த்த பாவத்துடன் என் கரத்தைப் பிடித்து அழுத்திவிட்டுக் காரில் ஏறிக்கொண்டாள்.

இரண்டு தினங்கள் சென்றன. அண்ணன் வீட்டிலிருந்து எந்த விதமான தகவலும் இல்லை. எனக்கும் தினேஷிற்கும் இது ஒரு பெரிய ஸஸ்பென்ஸ்.

மூன்றாவது நாள் காலை, வழக்கம்போல் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். வாசல் மணி கிணுகிணுத்தது. தாங்க முடியாத ஆவலுடன் ஓடிச்சென்று கதவைத் திறந்தேன். ரோஜா, மல்லிகை, முல்லை, சந்தனம், ஊதுவத்தி எல்லாம் கலந்த ஒரு கதம்ப வாசனை குபீரென்று வந்து முகத்தில் மோதியது. ஒரு பெரிய தட்டை கையில் சுமந்து கொண்டு கன்யா நின்று கொண்டிருந்தாள். இடையில் ரோஜா வண்ண நூல் சேலை. நெற்றியில் பளிச்சிட்ட குங்குமப் பொட்டு, அந்த எளிய கோலத்தில் அவள்தான் எத்தனை அழகாக இருந்தாள். சிவந்து விட்டிருந்த அவளது கன்னங்களையும் மோகனமாகச் சிரித்த கண்களையும் உற்றுப் பார்த்தேன். விஷயம் புரிந்து விட்டது. ''கல்யாண களை கட்டிவிட்டதே! உள்ளே வா!'' வேடிக்கையாக உபசரித்தேன்.

''எனக்கு மணமாலை அருளிய புவனேஸ்வரிக்கு மலர்மாலை காணிக்கை கொண்டு வந்தேன். உங்களை நேரே பார்த்து எல்லாம் சொல்லிவிட்டு வரும்படி அம்மா உத்தரவிட்டாங்க'' புன்னகையுடன் அவள் பூஜையறைக்குள் சென்றாள்.

கொண்டு வந்த ரோஜா மாலையைத் தேவியின் படத்திற்குச் சாத்திவிட்டு விழுந்து கும்பிட்டாள். எழுந்து ஒரே தாவாக ஓடிவந்து என்னை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் என் கண்கள் ஆனந்தக் கண்ணீரைக் கொட்டின. ''மகராசியாக இரும்மா'' ஆசி வழங்கினேன் தழுதழுத்த குரலில். பின்னர் சமாளித்துக் கொண்டேன். ''கன்யா இப்படி உட்கார். இந்த மங்கலச் செய்தியைப் பாலும் பலகாரங்ளுமாக நாமிருவரும் கொண்டாடுவோம். எனக்கு எல்லாம் விவரமாகச் சொல். ஆவலில் தலை வெடிக்கிறது'' என்றேன் வேடிக்கையாக.

''காரை அனுப்பி இன்று காலை தினேஷை ஆபீஸில் இருந்து கூட்டி வரும்படி அப்பா ஏற்பாடு செய்தார். வெகுநேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு அவர் திரும்ப ஆபீஸிற்குப்போய்விட்டார். உடனே அப்பா என்னைக் கூப்பிட்டு அருகில் உட்காரச் சொன்னார். கண் பார்வை குறைந்து போனதால் என் முகத்தைத் தடவித் தொட்டுப் பார்த்தார். உன் இஷ்டப்படியே உன்னைத் தினேஷிற்குக் கொடுக்க அம்மாவும் நானும் சம்மதிக்கிறோம். அவன் நல்லபிள்ளை. உனக்கு சந்தோஷந் தானே?'' என்று கேட்டுவிட்டுப் பேச முடியாமல் அப்பா தடுமாறினார். ''தாங்க்யூ அப்பா'' என்று நான் அவர் கையைப் பிடித்துக் கொண்டேன். எனக்கேற்பட்ட சந்தோஷத்தில் அழுகையே வந்துவிட்டது.

''அந்தக் காலத்தில் இந்த மனம் இருந்திருந்தால் உன் அத்தையின் வாழ்க்கையே வேறாகி விட்டிருக்கும். அப்போது பணத் திமிரும், கர்வமும் என் அறிவை மறைத்துக் கொண்டிருந்தன. என் ஒரே தங்கை. அவளை நான் வாழ விடவில்லை. அந்த பாவத்தை இப்போது அனுபவிக்கிறேன்? வாழப்போகும் என் செல்வ மகளைக் கண் குளிரப் பார்க்க முடியவில்லையே? இதைவிட எனக்கு வேறு என்ன தண்டனை வேண்டும்?'' என்று கூறிவிட்டு அப்பா குலுங்கக் குலுங்க அழுதார். அவர் பட்ட வேதனையைப் பார்க்க என்னால் தாங்க முடியவில்லை. நானும் அழுதுவிட்டேன்'' என்றாள் கன்யா.

உடலும் உள்ளமும் உணர்ச்சிக் குமுறலில் நடுங்க நான் மவுனமாக நின்றேன்.

''நீங்களே சொல்லுங்கள். என் அத்தை உயிருடன் இருந்தால் என் தந்தை மீது இன்னமும் கோபமாக இருப்பார்களா?'' திடுக்கிட்டுப் போனேன். இந்தச் சின்னப் பெண் ஒரு கேள்வியில் என்னை மடக்கிவிட்டாளே!

''நல்லவர் கெட்டவர் இருவரையுமே நோயும் மரணமும் பாதிக்கும். அதனால் இவைகள் எப்படி தண்டனை யாகும்? மேலும் உன் அத்தை மிகவும் நல்லவள். அண்ணன் மீது மட்டற்ற பாசம் கொண்டவள். அன்பு உள்ளத்திலே கோபத்திற்கு இடமில்லை. அப்படிக் கொஞ்சம் இருந்திருந் தாலும் அவள் உன் அப்பாவை எப்பவோ மன்னித்தி ருப்பாளே?'' என்று கூறிவிட்டு வேகமாக உள்ளே சென்றேன். பொங்கி வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிரித்த முகத்துடன் பலகாரத் தட்டுடன் வெளியே வந்தேன். ''கன்யா, கமான்! லெட் அஸ் செலிபிரேட்'' என்று அவளை அழைத்தேன்.

அன்று மாலை தினேஷ் வீடு திரும்பிய பொழுது மலர்ந்த முகத்துடன் காணப்பட்டான். கையிலிருந்த சாக்லெட் பொட்டலத்தை என்னிடம் நீட்டிவிட்டு, ''பெரியம்மா என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று என் காலைத் தொட்டுக் கும்பிட்டான்.

மனம் நிறைந்து அவனை ஆசீர்வதித்தேன். ''எல்லாம் எனக்குத் தெரியும். அந்த அவசரக்காரி உன்னை முந்திக் கொண்டு ஓடிவந்து விவரமாகச் சொல்லிவிட்டுப் போனாள். மெத்த மகிழ்ச்சி'' என்றேன்.

''நாட்டி கேர்ல்! எனக்குச் சான்ஸ் கொடுக்க வில்லையே! பிறகு பேசிக் கொள்கிறேன் அவளை...'' உரிமையுடன் பொய்யாகக் கடிந்து கொண்டு சிரித்தான்.

மகிழ்ச்சியில் துள்ளல் நடையிட்டுக் கொண்டு குளியல் அறைக்கு விரைந்தான். நானும் மகிழ்ச்சியுடன் என் காரியங்களைக் கவனிக்கலுற்றேன்.

முடிவில் அந்த நாள் வந்தது. ஆர்ப்பாட்டங்கள் இன்றி ஆனால் அழகாகத் திருமணம் நடந்தேறியது. பந்தலில் மணக்கோலத்துடன் மேடையில் அமர்ந்திருந்த அந்த இளம் ஜோடியரைப் பார்த்து நான் பூரித்துப் போனேன். அவர்களது காதல் வெற்றி என்னுடைய வெற்றியல்லவா!

அன்று மாலை ரிசெப்ஷன் தோட்டத்திலே நடந்து கொண்டிருந்தது. யாரோ பிரபல சகோதரிகள் இன்னிசையை வழங்கிக் கொண்டிருந்தனர். அண்ணி நிற்க நேரமின்றி இங்குமங்கும் பந்தலுக்குள் வளைய வந்து கொண்டிருந்தாள். முத்துசாமி ஓடிஓடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டி ருந்தார். சொந்தப் பேத்தியின் கல்யாணம் என்ற நினைவு அவருக்கு!

உடல் நலக்குறைவு ஏற்பட்டுவிட்ட அண்ணனைக் கல்யாணச் சந்தடியில் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ள ஒரு தனி நர்ஸை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவள் யாரையும் அருகில் நெருங்கவிடாமல் கட்டிக் காத்துக் கொண்டிருந்தாள். என்னால் அன்று அண்ணனை அருகில் நின்று பார்க்கக்கூட முடியவில்லை.

இசைக் கச்சேரியைக் கேட்டுக்கொண்டு பந்தலில் அமர்ந்திருந்த எனக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. கைப்பையை மாடியறையில் ஞாபக மறதியாக விட்டுவிட்டு வந்திருந்தேன். அவசரமாக எழுந்து மாடிக்கு விரைந்தேன். அதை எடுத்துக் கொண்டு திரும்பும் பொழுது வராந்தாவில் அண்ணா ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தோட்டத்தில் நடக்கும் கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்தார். அந்த நர்ஸை அருகில் காணவில்லை. சந்தர்ப்பத்தை நழுவவிட மனமின்றி வேகமாக அவர் அருகே சென்றேன். காலடி ஓசை கேட்டதும் அவர் திரும்பி, ''யாரது?'' என்று கேட்டார்.

''நான்தான்'' என்று பதிலிறுத்துவிட்டு, மிகவும் அருகில் வந்து நின்றேன்.

''ஓ! காயத்திரி வீட்டு வேலைக்காரம்மாவா? அந்தக் குரல் எங்கே கேட்டாலும் மறக்க முடியாதே!'' அந்த முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி!

''காலை முகூர்த்தத்திற்கு வந்திருந்தாயா? முக்கியமாக உங்களையெல்லாம் நன்றாகக் கவனித்துச் சாப்பாடு போடச் சொல்லியிருந்தேன். நீ சாப்பிட்டாயா அம்மா?'' கனிவுடன் விசாரித்தார்.

''நன்றாகக் கவனிச்சாங்க'' என்றேன் மெல்லிய குரலில்.

"கொஞ்சம் உரக்கப் பேசும்மா. அந்தக் குரலைக் கேட்க ஆசையாக இருக்கு. தப்பாக நினைச்சுக்காதே. என் தங்கச்சி ஞாபகம் வருகிறது."

அனல்பட்ட மெழுகாக என் நெஞ்சு உருகியது. என் வைராக்கியமெல்லாம் பொடிப் பொடியாகத்தகர்ந்தது. "அண்ணா... நான் தான் உங்கள் தங்கை நீலு" என்று உரக்கக் கூவி என்னை அறிமும் செய்து கொள்ள நாவு துடித்தது. நான் வாயைத் திறகுமுன் அவர் குறுக்கிட்டார். "மணப்பெண் இன்று ரொம்ப அழகாயிருந்தாள் இல்லையா? அவளைப் போலத்தான் என் தங்கையும் ரொம்ப அழகானவள்."

"உங்கள் தங்கை கூடக் கல்யாணத்திற்கு வந்திருப்பார்களே?"

"வந்திருப்பாள், ஆன்மீகமாக"

"அப்படீன்னா புரியலையே"

"அவள் எப்படி வரமுடியும்? அவள் இறந்து போய்ப் பல வருஷங்கள் ஆகிவிட்டனவே."

"சின்ன வயசிலே போய்விட்டாங்களா, பாவம்?"

"வெளியில் இப்போ சொல்ல எனக்கு வெட்கமாக இல்லை. பல வீடுகளில் நடக்கும் சம்பவந்தான். எனக்கும் என் சகோதரிக்கும் மனஸ்தாபம். புருஷனுடன் புறப்பட்டுப் போனவள் திரும்பவில்லை" துக்கத்துடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

இரண்டாவது முறையாக நான் பதிலளிக்க வாயைத் திறந்தேன்.

"யாரது அங்கே? கதை பேசி பேஷண்டைத் தொந்தரவு செய்கிறது?" வேகமாக அருகில் வந்த நர்ஸ் அதட்டினாள்.

நான் நிற்கவில்லை. தோட்டத்திற்குள் வந்தேன். "கோல மயிலும் கூர்வேலும் துணை கொண்டேன், குறையேது குமரா..." சங்கீத சகோதரிகள் பக்திப் பரவசமாய் பாடிக் கொண்டிருந்தனர். காற்று ஜில்லென்று வீசிக் கொண்டிருந்தது. இருக்கப் பிடிக்கவில்லை. வேகமாக வெளியே வந்து ஒரு டாக்ஸியில் ஏறிக் கொண்டேன்.

வீட்டின் கதவைத் தாளிட்டுவிட்டு வரவேற்பறைக் கம்பளத்தின் மீது அப்படியே உட்கார்ந்து விட்டேன். தலைக்கு மேல் விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. ஆனால் என் உள்ளத்திலே ஏன் அந்தத் துன்ப இருள்? நாடக மேடையில் காட்சியாகத் திரை கீழே விழுந்து விட்டதும் நடிகனுக்கு ஏற்படும் உணர்வு, நடிப்பு முடிந்தது-வேஷத்தைக் கலை.

என்னால் எப்படி முடியும்? என் அண்ணன் நினைவில் தான் நான் செத்துவிட்டேனே!

தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டு ஓவென்று கத்தி நான் அழுதேன். காணச் சகிக்காததுபோல் டெலிபோன் மணி கிர்கிர் ரென்று அடித்தது.

## 20. குத்து விளக்கு

மறுநாட் காலை, எனக்குப் பல அலுவல்கள். பாத்திரக் கடையிலிருந்து வந்த சிறுவன் அந்த விளக்கைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனான். இது முத்துசாமியின் வேலை. பிறந்த வீட்டில்போய் உறவாடிய போது ஒரு நாள் அவரிடம் சொல்லி யிருந்தேன். "கும்பகோணத்திலிருந்து

அம்மா எனக்கென்று வாங்கி வந்த அந்த குத்துவிளக்கைத் தேடி எடுத்துக் கொடுங்கள் அண்ணா'' என்றேன். காலத்தால் களிம்பேறிக் கறுத்து உருமாறிவிட்டிருந்த அந்த விளக்கை அவர்தேடி எடுத்து விட்டார் கடையில் கொடுத்து மெருகிட்டு எனக்கு அனுப்ப ஏற்பாடும் செய்துவிட்டார்.

நான் எதிர்பார்த்ததற்குச் சற்றுத் தாமதமாக அது வந்து சேர்ந்தது. புது மெருகில் தங்கமாக மின்னிய விளக்கைக் கையில் எடுத்துப் பார்த்தேன். அடிப்பாகத்தில் ''நீ'' என்ற எழுத்தைப் பொறித்து மகளுக்காகப் பத்திரப்படுத்தியிருந்த என் தாயின் நினைவு கண்களைப் பனித்தன. அவர்கள் அழகுபார்த்து எனக்காக வாங்கிய சீதனப் பொருள்களில் அது ஒன்று. விளக்கை ஏற்றி வைத்து வாழ எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. கன்யாவுக்காவது அந்த பாக்கியம் கிட்டட்டும். அந்த விளக்கின் வெளிச்சம்போல் அவளது வருங்காலம் ஒளிமயமாக இருக்கட்டும். மனத்திலே அவளை வாழ்த்திக்கொண்டு வண்ணக் காகிதத்தில் விளக்கைச் சுற்றி அழகாக பார்சல் செய்தேன். அத்துடன் ஒரு கடிதம் எழுதினேன்.

அன்புள்ள கன்யாவுக்கு,

உங்கள் இருவருக்கும் என் மங்கல நல்வாழ்த்துக்கள். இத்துடன் உங்களுக்கு ஒரு சிறு கல்யாண பரிசு அனுப்பி யிருக்கிறேன். உன் பூஜை அறையில் இந்த அத்தையின் ஞாபகமாக இந்த விளக்கு எரியட்டும்.

உன் அத்தை நீலாவதி

அதற்குப் பின் எனக்கு நிற்க நேரமில்லை. முதல்நாள் இரவு பம்பாயிலிருந்து டெலிபோன் வந்தது. திருமதி ஜோஷியின் மகன் பிரான்லால் கவலையில் கனத்த குரலில்

பேசினார். "நீலு, அவசரம். நாளை மறுநாள் பிளேனுக்குப் பம்பாய் புறப்படத் தயாராக இரு. டிக்கெட்டிற்கு ஏற்பாடு செய்துவிட்டேன்."

'நமது சென்னை நண்பர் கைலாஸ்நாத் வந்து உன்னை வழியனுப்புவார். வீட்டுச் சாவியையும் ஸீஸரையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு நீ உடனே கிளம்பு."

பிற்பகல், வெளியே கடுமையாக வெயில் காய்ந்து கொண்டிருந்தது. வாயிற் கதவைத் திறந்து வைத்திருந்தேன். பெட்டி, துணிக்குவியல், புத்தகங்கள் முதலியவை வரவேற் பறையில் பரவிக் கிடந்தன. முக்கியமானவைகளைப் பொறுக்கிப் பெட்டிக்குள் அடுக்கிக்கொண்டு நான் கம்பளத்தின் மீது உட்கார்ந்திருந்தேன்.

அது சமயம் வாயிலில் கார் வந்து நின்றது. நான் நினைத்தபடியே அதிலிருந்து அண்ணி ரேவதி, முத்துசாமி பின் தொடர இறங்கி உள்ளே வந்தாள். வேகமாக வரவேற்பறைக்குள் நுழைந்த அவள் கோபாவேசமாக இருந்தாள். "வாங்க, உட்காருங்க" என்று கைவேலையி னின்று எழுந்து அவர்களை உபசரித்தேன்.

தொப்பென்று ஓர் ஆசனத்தில் சாய்ந்துகொண்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள் அண்ணி. அவளுக்கு மூச்சு வாங்கியது.

"எல்லாம் நல்லபடியாக நடக்கட்டும். பிறகு பேசிக் கொள்வோம் என்று பொறுமையாக இருந்தேன். கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் கன்யாவும் தினேஷும் தேன்நிலவுக்கு மைசூருக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவர்களை அனுப்பிவிட்டு நேரே இங்கே ஓடிவந்தேன். நீ செய்தது உனக்கே நன்றாக இருக்கிறதா?" படபடவென்று அவள் பேசினாள்.

நான் அவளை வியப்புடன் பார்த்தேன்.

"இவ்வளவு நாட்கள் நம் வீட்டுக்கு நீ வந்து போனாய். ஒரு நாள் கூட ஒரு டம்ளர் பச்சைத் தண்ணீரைக் கூட நீ சாப்பிட்டதில்லை. சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்தாய். உன் பிடிவாதம் தானே மறையட்டும் என்று நானும் வற்புறுத்தவில்லை. நேற்று, அதுவும் உன் முயற்சியால் நடந்த இந்தக் கல்யாணம். அதில் உனக்கு எத்தனை பங்கு உண்டு? இருந்தும், கல்யாணச் சாப்பாட்டைக் கையால் தொடாது - ஏன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்தாய்? நாங்கள் என்ன அத்தனை பாவம் செய்துவிட்டோம்?"

கோபத்துடன் இரைந்தாள் அண்ணி.

"பாவம் செய்தவள் நான். பிறந்த வீட்டில் செய்த கூழ் என்றாலும் பெண்களுக்கு பெருமை தரும் விஷயம். அந்தப் பெருமைக்கு நான் கொடுத்து வைக்கவில்லை" என் குரல் தடைப்பட்டது.

"தெரியும். பாதிச் சாப்பாட்டில் துரத்திய அண்ணன் வீட்டில் கை நனைப்பதில்லை என்ற வைராக்கியம். நீலு இது உனக்கு ஆகாது."

"என் கணவனுக்கு நான் கொடுத்த வாக்கு. அதைக் காப்பாற்ற நான் கடமைப்பட்டவள்" என்றேன் மெல்லிய குரலில்.

அண்ணி ரேவதி என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"இப்படியே குற்றம் பார்த்துக் கொண்டுபோனால் நாம் எல்லோரும் எப்பொழுதுதான் ஒன்றுபட்டு வாழ்கிறது" முத்துசாமி குறுக்கிட்டார்.

நான் உள்ளே சென்றேன். அவர்கள் வந்தால் கொடுக்க வேண்டும் என்று ஒரு புறமாக எடுத்து வைத் திருந்த சாமான்களை எடுத்து வந்தேன்.

''முத்தண்ணா, இந்தப் பார்சலில் கன்யாவின் கல்யாணப் பரிசும், ஒரு கடிதமும் இருக்கின்றன. அவள் வந்ததும் என் சார்பில் அவளிடம் கொடுத்துவிடுங்கள். இந்தப் பெட்டி தினேஷுடையது. இந்த வீட்டைக் காலி செய்து யாருக்கோ வாடகைக்கு கொடுக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அதனால் இதை அவனிடம் ஒப்படைத்து விடுங்கள். கடைசியாக இது உங்களுக்கு என்று நான் எடுத்து வைத்திருந்தது காலந்தாழ்ந்து விட்டது. மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு ஒரு கடித உறையை அவர் கையில் வைத்தேன். கிழவர் அதைப் பிரித்தார். உள்ளே பண நோட்டுக்களைக் கண்டதும் அவரது கரங்கள் நடுங்கின. ''என்னம்மா இது?'' பதறினார்.

''ஆமாம். அண்ணா! அன்று நீங்கள் எங்களுக்குக் கடனாக உதவிய பணம், முதலை மட்டும் திரும்பி யிருக்கிறேன். வட்டியை அடுத்த பிறவியில் உங்களுக்குக் குழந்தையாகப் பிறந்து கழித்துவிடுகிறேன்'' விளையாட்டாக நான் சிரித்தேன். அவர் கண்கலங்கிப் போனார்.

அண்ணி என்னை மனத்தாங்கலுடன் பார்த்தாள். ''சரி உன் இஷ்டப்படியே இரு. நமது பங்களாவில் உள்ள கெஸ்ட் ஹவுசில் எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கிறேன். அங்கே தனியே சமைத்து சாப்பிட்டுக் கொள். எங்கள் வீட்டுச் சாப்பாடு வேண்டாமென்றால் வற்புறுத்த மாட்டோம். எங்களுடன் நீ மறுபடி வந்துசேர்ந்து விட்டால் அது ஒன்றே போதும்'' என்று பெருமூச்செறிந்தாள்.

"அந்தச் சிரமம் தேவையில்லை அண்ணி. நாளை நான் பம்பாய்க்குப் புறப்படுகிறேன். என் எஜமானி நோய் வாய்ப்பட்டுக் கனடா ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப் பட்டிருக்கிறாளாம். நான் அருகிலிருந்தால் தான் பிழைப்போம் என்ற நம்பிக்கை. என்னை உடனே பார்க்க வேண்டும் என்று புலம்பிக் கொண்டிருக்கிறாளாம். அங்கே என்னை அனுப்ப அவசர ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன" என்றேன்.

அண்ணி திடுக்கிட்டு விட்டாள். "அப்படி யென்றால்?" திகைப்புடன் கேட்டாள்.

"உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். அவ்வளவுதான்."

"ஏன் இப்படி ஒரு வெடிகுண்டு? உன் அண்ணன் உடம்புக்கு முடியாமல் இருக்கிறார். இன்னும் இரண்டு நாளில் அவரை நர்ஸிங் ஹோமில் அனுமதித்து அறுவை சிகிச்சை செய்து ஆரோக்யத்தைச் சீராக்க வேண்டும் என்று ஏற்பாடு. அண்ணனைப் பற்றி யோசித்தாயா?" வருத்தமாகக் கேட்டாள் அண்ணி.

"ராத்திரி பூராவும் யோசித்தேன். வலிய வந்த இந்த முடிவுதான் மிகவும் சிறந்தது என்று புத்திக்குப்பட்டது. திருமணம் ஆனதும் ஒரு பெண் கணவனைத் தொடர்ந்து அவள் சென்ற இடத்தில் துணையாக இருந்து வாழக் கடமைப்பட்டவள் இல்லையா? பிறந்த வீட்டுடன் பிரிவு ஏற்பட்டாலும் மண வாழ்க்கையில் அவள் அமைதியும் இன்பமும் காண்கிறாள். ஏன் தெரியுமா? உடம்பினால்தான் அவள் தன் உற்றாரிடமிருந்து பிரிகிறாள். எங்கிருந்தாலும் அவள் உள்ளத்தால் எப்பொழுதும் பிறந்த வீட்டாருடன் தொடர்பு கொண்டிருக்கிறாள். எனக்கு அந்தப் பாக்கியம் இதுவரை இருக்கவில்லை" அண்ணன் வெறுப்புக்கு

ஆளானோமே, உள்ளத்தாலும் பிரிந்து விட்டோமே!' என்று இத்தனை ஆண்டுகள் நான் புலம்பித் துடித்தேன். அமைதியின்றித் தவித்தேன். இப்போது? 'அன்புத் தொடர் அறுகவில்லை. காலம் உறவைத் துண்டிக்கவில்லை' என்பதைப் புரிந்து கொண்டுவிட்டேன். இதுவரை யில்லாத மகிழ்ச்சியும் அமைதியும் என் நெஞ்சில் நிறைந்து விட்டது. இனி நான் எங்கிருந்தால் என்ன? யாருமற்ற அனாதை என்று தவித்தபோது ஆதரவு கொடுத்தாள் என் எஜமானி. என் இளமைக்குப் பாதுகாப்பு அரணாக இருந்து இத்தனை காலம் என்னைக் கட்டிக்காத்தாள். இப்போது என் உதவி அவளுக்குத் தேவையாக உள்ளது.'

''இது உன் தீர்மானமான முடிவா? அண்ணனைப் பற்றிக் கடுகளவாவது சிந்தித்தாயா? நீ உயிரோடு இருப்பது அவருக்குத் தெரிந்தால் ஆனந்தப்பட மாட்டாரா?'' அண்ணி ஆதங்கத்துடன் கேட்டாள்.

''அண்ணனுக்கு ஆனந்தம் ஏற்படாது. தாங்க முடியாத பெரும் துக்கமும் அதிர்ச்சியும்தான் ஏற்படும். இறந்து விட்டதாக இதுவரை நினைத்திருந்த தங்கை உயிருடன் திரும்பி வந்திருக்கிறாள் என்பதைக் கண்ணால் பார்க்க முடிய வில்லையே என்று அவர் மகத்தான துக்கம் அடைவார். அண்ணன் வரைக்கும் நான் இறந்தவளாகவேதான் இருக்க வேண்டும்.''

''எங்களை எல்லாம் நீ தண்டிக்கிறாய். நாங்கள் செய்த தவறுக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்கிறாய்'' அண்ணி பதட்டமாகக் கேட்டாள்.

''இல்லை அண்ணி. நீங்கள் பூவும் பொட்டுமாக வெகுகாலம் சுகமாக வாழவேண்டும் என்பதற்காக நான் செய்யும் ஒரு சிறு தியாகம் அவ்வளவுதான்.''

கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் கிளம்பி னாள். கிழவர் மௌனமாக என்னைப் பார்த்து விட்டுப் பின் தொடர்ந்தார். "ஒரே ஒரு வேண்டுகோள் அண்ணி!" என்றேன். அவள் நின்றாள். "உங்கள் இருவருக்கு மட்டுமே தான் நான் உங்கள் நீலு. அண்ணா, கன்யா, தினேஷ் இவர்களுக்கு நான் யாரோ வேற்று மனுஷி. இந்நிலை இப்படியே இருக்க வேண்டும்."

"உனக்கு நான் இதுவரை ஒன்றுமே செய்யவில்லை. இதையாவது நிறைவேற்றுகிறேன்!" கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு அண்ணி வெளியேறினாள்.

அன்று அமெரிக்காவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த பிரபல நடிகையை வழியனுப்ப வந்த கூட்டம் விமான நிலையத்தில் வழிந்து கொண்டிருந்தது. என்னை அனுப்பி வைக்க ரேவதியும், முத்துசாமியும் வந்திருந்தனர். நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன். அண்ணி என்னை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டாள். விம்மலில் அவள் உடல் குலுங்கியது. அவள் உகுத்த கண்ணீர் என் கழுத்தின் மீது சூடாக உதிர்ந்தது. "நோ, நோ அண்ணி! இது கூடாது. என்னைச் சந்தோஷமாக அனுப்புங்கள். தாழ்ந்த குரலில் ஆறுதல் கூறி விடை பெற்றுக் கொண்டேன். உடலும் உள்ளமும் பதறியபடி அருகில் நின்ற முத்து சாமியின் கரங்களைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

"இண்டியன் ஏர்லைன்ஸ் அன்னௌன்ஸஸ் த சர் அஃப் பிளைட் நம்பர்..." காரகர சப்தமிடையே ஒலிபெருக்கி முழங்கியது.

தோளில் பையைச் சுமந்து ொகண்டு விமானத்தை நோக்கிச் சென்ற நான் பலமுறை திரும்பிப் பார்த்து கையை

ஆட்டினேன். சிறிது பொழுதில் "ஃபார் .... ஸீட் பெல்ட்..." என்று விமானப் பணிப்பெண்ணின் மெல்லிய குரல் ஒலித்தது. மெல்ல ஊர்ந்து வேகமாக ஓடி .... என்று விமானம் வானத்திலே தாவியது.

சென்னைக்கு வந்தபோது உள்ளத்திலிருந்த திகில் துயரம் இவைகளுக்குப் பதில் இப்போது எனக்குப் பெரும் மன அமைதி. வேகமாக நான் விட்டுப் போய்க் கொண்டிருந்த என் பிறந்த மண்ணை நன்றியுடன் ஜன்னல் வழியே பார்த்தேன்.

வான்முகில் மீது துள்ளி ஏறி விமானம் வேகமாகப் பறக்கத் தொடங்கியது. அதைவிட வேகமாக என் மனம் என் உதவியை நாடிக் காத்திருக்கும் திருமதி ஜோஷியிடம் பறந்தோடியது.

முற்றும்